www.padippakam.com

சனவரி
2005
ரூ.15

# புதிய கோடாங்கி

அரசியல் கட்சிகளை நிராகரித்து

## தலித் தனி ஊராட்சி

அமைப்போம்



படிப்பகம்

www.padippakam.com

# அறிவிப்புகள்

**தலித் நில உரிமை அறப்போராட்டக் குழு கூட்டம்**

நாள் : 5.1.2005
நேரம்: பிற்பகல் 2.00 மணி
இடம்: ICSA, எழும்பூர், சென்னை

ஒருங்கிணைப்பாளர் : நாகன்

தொடர்புக்கு

சன்னா, குடியரசன் (94441-58240)

**புதிய கோடாங்கி தலித் கிராம மக்கள் எழுச்சி முகாம்**

நாள் : 16.1.2005
இடம் : கருப்பன்னசாமி திடல்
வேப்பங்குடி, (காணியூரனம்பட்டி அருகில்)
கரூர் மாவட்டம்

ஒருங்கிணைப்பாளர் : சரவணன், பொறியாளர்,

தொடர்புக்கு
04298-245 644, 94439-41157

**புதிய கோடாங்கி தலித் இளைஞர் எழுச்சி முகாம்**

நாள் : 6.1.2005
இடம் : புளியந்தோப்பு, சென்னை

ஒருங்கிணைப்பாளர் : நாகன்

தொடர்புக்கு
தய். கந்தசாமி
சட்டக்கல்லூரி விடுதி, சென்னை

**புதிய கோடாங்கி தலித் இளைஞர் எழுச்சி முகாம்**

நாள் : 26.1.2005
இடம் : சோளிங்கர்

ஒருங்கிணைப்பாளர் : நாகன்

தொடர்புக்கு
0498-240375

**புதிய கோடாங்கி தலித் கிராம மக்கள் எழுச்சி முகாம்**

நாள் : 12.1.2005
இடம் : புதுச்சேரி

ஒருங்கிணைப்பாளர் : ப. லலிதா

தொடர்புக்கு
0413 - 2344 807.

Published, Printed and owned by Audrey Jannet joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, 20 Big Street, Anakaputhur - 600 070, Editor : AUDREY JANNET JOSEPH

படிப்பகம்

www.padippakam.com

புதிய
கோடாங்கி

மலர் 4 - இதழ் 7
ஜனவரி 2005

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு ஓவியம்*
சந்ரு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்.- ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
**தனி இதழ் US $ 2**

ஆண்டுக் கட்டணம்
**US $ 20**

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204
**kodangi@hotmail.com**

## *தலையங்கம்*

புதிய கோடங்கியின் இரண்டாவது மாநில மாநாடு தேனியில் வரும் ஜனவரி 22, 23 தேதிகளில் நடைபெறவிருக்கிறது. அழைப்பிதழ் இந்த இதழில் அச்சாகியுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கிறோம். சுமார் நானூறு பேர் தங்குமளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகையால் முன்பதிவு செய்துகொள்வது நல்லது. இம்மாநாட்டின் மையக்கருத்து தலித்துகளுக்கு தனி ஊராட்சி என்பதாகும். எனினும் அரவாணிகள், பழங்குடிகள், சிறுபான்மையினருக்கு தனி அமர்வுகள் ஏற்படுத்தி, தலித் ஒற்றுமைக்கு வழிகாணும் வண்ணம் ஒடுக்கப்பட்டோரின் பல்வேறு பிரச்சினைகள் முன்னெடுக்கப்படும். புதிய கோடாங்கி வாசகர்கள் ஒத்துழைப்பும் நன்கொடையும் தந்து உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

முனைவர் ராஜ்குமார் மாநாட்டை ஒருங்கிணைக்கின்றார். திரு. கிறித்துதாசு காந்தி மாநாட்டைத் துவக்கி வைக்கின்றார். பங்கேற்பாளர்கள் தங்கள் கட்டுரைகளை ஜனவரி 10-ஆம் தேதிக்கு முன்பாக அனுப்பிவைத்தால், மாநாட்டின்போது மாநாட்டு மலர் வெளியிட உதவியாக இருக்கும். அவைகள் பிப்ரவரி மாத இதழில் மாநாட்டுச் சிறப்பிதழாக வெளிவரும்.

இவ்விதழில் பழங்குடி மலையாளிகள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன. எஞ்சியவை அடுத்த இதழிலும் வரும்.

புதிய கோடாங்கி தொடர்ந்து அருந்ததியர் - பறையர் - பள்ளர் ஒற்றுமையை முன்வைத்து விவாதம் நடத்திவருவது வாசகர்கள் அனைவரும் அறிந்ததே. இப்பிரிவுகளில் உள்ளோரிடம் பொதுவான கருத்தியலில், அதாவது இடஒதுக்கீடு, இரட்டை வாக்குரிமை, அம்பேத்கரியம், பொருளாதார முன்னேற்றம் என்பதன் அடிப்படையில் ஒற்றுமையுள்ளது. முரண்கள் மிக மிகக் குறைவு. ஆனால் இப்பிரிவுகளில் மிகவும் சிறுபான்மையிலுள்ளவர்கள் அங்குள்ள பெரும்பான்மை தலித் சமூகத்தால் இழிவுபடுத்தப்பட்டு வருகின்றனர். அவர்கள் பெரும்பாலும் சக்கிலியர்கள் மற்றும் புதிரை வண்ணார்கள்.

சமீபத்தில் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகிலுள்ள எஸ். காவனூர் என்னும் சிறு கிராமத்தில் பள்ளர் - சக்கிலியர் மோதல்கள் சக்கிலியர் சமூகத்தின்மீதான பயங்கரமான வன்முறைத் தாக்குதலாக முடிந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த முருகேசன் என்பவர் சக்கிலியத் தெருவில் சக்கிலியருக்குச் சொந்தமான வீட்டுமனையை கிரயத்திற்கு வாங்கியுள்ளார். இதனால் சக்கிலிய சமூகத்தினர் நிலம் விற்ற சக்கிலியரை ஒதுக்கி வைத்துள்ளனர். கிரயத்திற்கு வாங்கிய முருகேசனுக்கு வழிவிடாமல் தடுத்துள்ளனர். வீட்டு மனையை வாங்கியவர் பாதையையும் கிரயத்திற்கு வாங்கியிருக்க வேண்டும். மாறாக பள்ளருக்கு பாதையை மறுப்பதா, அப்படியானால் பொதுப்பாதையில் சக்கிலியரை நடக்கவிடமாட்டோம் எனத் தடுத்துள்ளனர். ஆத்திரமடைந்த சக்கிலியர் பேருந்தில் பயணம் செய்த பள்ளருடன் கைகலப்பு நிகழ்த்தியுள்ளார்கள். பதிலுக்கு பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சக்கிலியர் ஒருவரை மண்டையை உடைத்து முகத்தைச் சிதைத்து, இன்னொருவரை கண்பார்வை தெரியாத அளவிற்கு பலமாகத் தாக்கியதோடல்லாமல், முன்னூறு பள்ளர் குடும்பத்தினர் அனைவரும் திரண்டு வந்து நாற்பது சக்கிலிய குடும்பத்தினரை மூர்க்கத்தனமாகத் தாக்கி, வீட்டு ஓடுகளை உடைத்து, கூரைகளுக்கு தீ வைத்து, உடைமை களை சூறையாடி, சுடுகாட்டில் நடப்பட்டிருந்த சிலுவை களைக் கூட பிடுங்கி எறிந்திருக்கிறார்கள். இந்த வெறித் தனமான தாக்குதல் நடக்கும்போது சக்கிலியச் சமூகத்தினர் செய்வதறியாது எல்லோரும் கூட்டமாக ஒரு பெரிய வீட்டினுள் அடைந்துகொண்டு அல்லேலுயா என்றும் கர்த்தரே என்றும் கதறி அழுதிருக்கிறார்கள்.

ஆதித் தமிழர் பேரவை அதியமான் மற்றும் சக்கிலிய சமூகத்தின் இயக்கத் தலைவர் எஸ்.டி. கல்யாணசுந்தரம் ஆகியோர் உடன் விரைந்து சென்று பயத்தில் வாழும் சக்கிலியர்களுக்கு ஆறுதல் கூறியுள்ளனர். எஸ்.டி. கல்யாணசுந்தரம், கருப்பன் இ.ஆ.ப., பாஸ்கரன், சிவகாமி போன்றோர் அங்கு சென்று இரண்டு சமூகத்தையும் விசாரித்து, பள்ளர்களே முன்வந்து தங்கள் தவறை உணர்ந்து குற்றவாளிகளை காவல்துறையில் ஒப்படைப்பதுடன், சக்கிலியர்களுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டும், அவர்களை மேலும் துன்புறுத்தவோ பகைமை பாராட்டவோ கூடாது எனத் தெரிவித்தனர். மேலும் ஊர்த் துணைத் தலைவர் (பள்ளர்) பள்ளர் தரப்பில்தான் தவறு உள்ளது என்று கூறி, உணர்ச்சி வசப்பட்டு பள்ளர்கள் இவ்வாறு நடந்து கொண்டதற்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்ததோடு, எதிர்காலத்தில் இவ்வாறு நேரா வண்ணம் எச்சரிக்கையாக இருப்போம், ஒற்றுமையாக இருப்போம் என்றார். வரும் ஏப்ரலில் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை இரண்டு சமூகத்தினரும் சேர்ந்து கொண்டாடுவோம் என வாக்குறுதியும் அளித்தார்.

நடந்த சம்பவங்கள் கடுமையான கண்டனத்துக் குரியன. இருதரப்புமே பகைமையின்றி நெருங்கிவர வேண்டும். கள்ளக்குறிச்சி அருகில் பறையர்கள் சக்கிலியர் களை சில மாதங்களுக்கு முன் தாக்கியுள்ளனர். ஆகையால் இச் சமூகங்களின் முன்னோடிகள், சிந்தனையாளர்கள் இவர்களின் ஒற்றுமையை நோக்கி செயல்படவேண்டிய அவசியமுள்ளது.

பிப்ரவரி மாதத்தில் புதிய கோடாங்கி தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பழங்குடி மக்கள் குறித்த பதிவுகளை மேற்கொள்ளும். தர்மபுரியில் உள்ள புதிய கோடாங்கி வாசகர்களும், எழுத்தாளர்களும் இம்முயற்சியில் இணைந்து செயல்பட வேண்டுகிறோம். ●

www.padippakam.com

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| எதிர்கொள்ளலில் உடைபடும் முரண்கள் | ... | அபிமானி | 4 |
| நிகழ்காலத்தில் பெரியார் | ... | அ. ராமசாமி | 9 |
| கேள்வி பதில் | ... | முனிமா | 11 |
| சுமை - கவிதை | ... | சத்யானந்தன் | 12 |
| முச்துச்சாம்பான் - சிறுகதை | ... | கோவேத. சுவாமிநாதன் | 13 |
| கவிசங்கர் கவிதைகள் | ... | ... ... ... ... | 16 |
| கணிதம் நம் உடைமை - தொடர் | ... | குடியரசன் | 17 |
| காவியின் முகம் - கவிதை | ... | சேக்கிழார் | 18 |
| சமூக மாற்றத்தில் நாட்டுப்புறக் கலைகளின் பங்கு | ... | கே.ஏ. குணசேகரன் | 19 |
| கவிதை இதழ்கள் | ... | ரவிகெங்கன் | 22 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | ... | குடியரசன் | 23 |
| அரங்க மல்லிகா கவிதைகள் | ... | ... ... ... ... | 24 |
| தமிழ் தேசியம் யாருக்கு பயனளிக்கும் | ... | தி. ஸ்டாலின், | 26 |
| நாவலாசிரியை மாதவிக் குட்டியின் இலக்கியத் தடம் | ... | எ.எம். சாலன் | 29 |
| இரட்டை வாக்குரிமையின் அவசியம் | ... | வி. கருப்பன் | 34 |
| தமிழ்மகன் கவிதைகள் | ... | ... ... ... ... | 36 |
| மலையாளிகள் | ... | கௌதம சன்னா | 38 |
| மலையாளிகள் | ... | குடியரசன் | 42 |
| வில்லியம் அந்தோணி கவிதைகள் | ... | ... ... ... ... | 44 |
| கனவின் தூரம் - நூல் மதிப்புரை | ... | அன்பாதவன் | 45 |
| தினசரி கொஞ்சமாவது - நூல் மதிப்புரை | ... | பொன். குமார் | 46 |
| தொழுவு - நூல் மதிப்புரை | ... | மகாராசன் செல்வம் | 47 |
| 2005-ஆம் ஆண்டின் தலித்திய அரசியல் இலக்குகள் | ... | ஆ. வெங்கடேஷ் | 48 |
| புரட்சி விதை - கவிதை | ... | வீ. ஏழுமலை | 50 |
| புதிய மாதவியின் கவிதைகள் | ... | ... ... ... ... | 52 |
| ஊடறுப்பு | ... | பாரி. செழியன் | 53 |
| தவறிப் பிறந்துவிட்டோம் அரவாணிகளாய் - கவிதை | ... | செல்வகாந்தன் | 53 |
| சாதியும் அதன் அழிவும் - எதிர் விவாதம் | ... | செங்கை ஜேம்ஸ் | 54 |
| உடைந்து சிதறிய சமூகத்திலிருந்து - கவிதை | ... | அன்பாதவன் | 59 |
| நானில்லா நான் - கவிதை | ... | எ.மு. இராதா | 59 |
| மூவேந்தர் மரபினர் தேவேந்திரகுல வேளாளர் | ... | முனைவர் குருசாமி சித்தர் | 60 |
| தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு | ... | தய். கந்தசாமி | 61 |
| தீட்சை பூமி - குறும்பட விமர்சனம் | ... | ஜெயபாலன் | 63 |


படிப்பகம்

www.padippakam.com

# எதிர்கொள்ளலில் உடைபடும் முரண்கள்

பின் நவீனத்துவத்தை முன்னிறுத்துகிற படைப்பாளர்கள், பெரியார் பற்றிய கட்டவிழ்ப்பைத் தலித்துகள் செய்கிறபோது தலித்துகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துக்கொள்ளத் துவங்கியிருப்பது முரண்பாடாக இருக்கிறது.

■ அபிமானி

அக்டோபர் மற்றும் நவம்பர் 2004, தமிழ் இதழ்களில் தலித்திய சொல்லாடல்களைப் பற்றிய விவரங்கள் மிகுந்து காணப்படுவதாக எனக்குத் தோன்றுகிறது. குறிப்பாக புதியபார்வை, தீராநதி மற்றும் புதிய காற்று இதழ்களில் விமர்சன வகைப்பட்டதாக அந்தச் சொல்லாடல்கள் பங்களிப்புச் செய்கின்றன. போகிற வழிகளில் தற்செயலாக ஒட்டிக் கொள்கிற புல் பூண்டுகளைப் போலல்லாது, தான் சென்றடைகிற வழியினை முறைப்படுத்தி அழைத்துச் செல்லும் நடு கல்லாக தலித்தியம் அழைத்துப் போனதாக அர்த்தப்படுத்திக் கொள்ள முடிகிறது. வர்க்க சிந்தனையாளர்களானாலும் சரி, முற்போக்குவாதிகளானாலும் சரி, தலித்தியத்தை சுவாசித்துக்கொள்கிறவர்களாக அல்லது நுகர்ந்து கொள்கிறவர்களாகவாவது அவர்கள் ஆட்பட வேண்டிய அவசியமாகிப் போகிறது. இத்தகையச் சூழ்நிலையை உருவாக்கித் தந்தது அம்பேத்கரின் நூற்றாண்டுக்குப் பிந்தைய தலித்திய எழுச்சியினாலும், போராட்டங்களினாலும்தான் என்பது மிகச் சரியாக இருக்குமென்று தோன்றுகிறது. சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அவர்களின் சொல்லாடல்கள் இருக்கலாம். ஆனால் தவிர்க்க முடியாத காலகட்டத்திற்குள் அவர்கள் தலித்தியத்தை உள்வாங்கிக்கொள்கிறவர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். மேலோட்டமாக தலித்தியம் பற்றிய வரையறைகளை அவர்கள் விவாதத்திற்கு உட்படுத்தினாலும், அவர்களின் ஆழ்மனத்தில் தங்களை தலித்தியத்திற்கு எதிராக நிறுத்திவிடுவார்களோ என்ற நடுக்க உணர்வும் அவர்களுக்குள் ஊடாடிக்கொண்டிருக்கிறது. இனிமேல் தலித் இதழ்களில் தலித் அல்லாத படைப்பாளர்கள் அவர்கள் பங்களிப்பைச் செலுத்தக் கூடாது என்று தோழர் அ. மார்க்ஸ் தலைமையில் ஒரு எழுத்தாளர் படை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிற அதே தருணத்தில், 'தலித்துகளுக்கு அரசியல் தளத்தில் ஏகபோக பிரதிநிதிகள் இருப்பது மாதிரி நாமாக யூகித்துக் கொள்ளக்கூடாது. அரசியல் தளத்தில் தலித்துகளோடு கூட்டு என்றால், அரசியல் தளத்தில் யார் தலித்துகளின் பிரதிநிதி?' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் தோழர் டி. ராஜா அவர்களால் ஒரு கருத்தாக்கமும் முன்வைக்கப்படுகிறது. (புதிய காற்று, நவம்பர் 2004)

பின் நவீனத்துவத்தை முன்னிறுத்துகிற படைப்பாளர்கள், பெரியார் பற்றிய கட்டவிழ்ப்பைத் தலித்துகள் செய்கிறபோது தலித்துகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துக்கொள்ளத் துவங்கியிருப்பது முரண்பாடாக இருக்கிறது. ஒரு ஆரோக்கியமான, புரட்சிகரமான சமூக மாற்றத்திற்காக தலித்துகள் அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துகிறார்கள் என்கிற நிதர்சன வெளிப்பாட்டுக்கு எதிராக தங்களைத் தகவமைத்துக்கொள்கிற அவர்களின் ஆதிக்க மனோபாவம், தலித்துகளை மேலும் கூர்மை அடையவே செய்விக்கிறது. பெரியாரென்ன, டாக்டர் அம்பேத்கரைக் கூட விமர்சனத்துக்கு உட்படுத்தலாம். அவரின் அந்தரங்க புத்தியில் முரண்பாடு தென்படும்போது. தலித்துகளுக்குள்ளான உட்கிளை முரண்பாடுகளையே தலித்துகள் விமர்சனத்துக்கு உட்படுத்தும்போது 'தலித்துகளின் எழுச்சிக்கு தலைமை தாங்கியதாக' கட்டமைக்கப்பட்ட பெரியாரை விமர்சனத்துக்கு உட்படுத்துவது ஒரு பாவச்செயலாகப் போனது எப்படி? இன்றுமட்டும் புதிதாக வந்துகொண்டிருக்கும் விமர்சனமா அது. பெரியவர் அன்பு பொன்னோவியத்தின் காலத்திலிருந்தே கிளைத்தெழுந்துகொண்டுதானே இருக்கிறது!. 'பெரியார் மட்டும் இந்த மண்ணில் பிறந்து தன் பங்களிப்பை செய்யாமல் இருந்திருந்தால் இன்று பெரியாரைக் கேவலப்படுத்த நினைக்கிறவர்களின் கைகளில் பேனா இருந்திருக்காது. அவர்களின் குலத்தொழில் கருவிகள்தான் இருந்திருக்கும் என்பதை மறந்துவிடுகிறார்கள்' (திரு. 'முகம்' மாமணி, காலச்சுவடு, நவ.2004) என்கிற வெளிப்பாடு எந்தப் பண்பாட்டு அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது? தலித்துகளால் பெரியார் விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவதென்பதே கேவலமானது என்பது பார்ப்பனியச் சிந்தனையின்றி வேறென்னவாக இருக்கமுடியும்? அந்தச் சிந்தனையை உறுதிப்படுத்தும் வகையில் 'அவர்களின் கைகளில் அவர்களின் குலத்தொழில் கருவிகள்தான் இருந்திருக்கும்' என்கிற பிரயோகம் கட்டியம் கூறி நிற்கிறது. தலித்துகளின் குலத் தொழில்கள் என்ன? அவர்களின் கருவிகள் தான் என்னென்ன? இந்திய பார்ப்பனியச் சமூகம் தலித்துகளின் தலைகளில் கிரீடத்தைச் சூட்டிவிட்டு அரசாளவா செய்தது? செங்கோலையும் அரியணையையும் தந்து கவுரவிக்கவா செய்தது? அதே சிந்தனையையும் வக்கிர



படிப்பகம்

www.padippakam.com

**எல்லோருடனும் அய்க்கியப் படத்தான் சிந்தனை துடிக்கிறது. அவர்களும் ஆதிக்கவாதிகள் என்பதை தெரிந்துகொண்ட பின்னே சினம் வெடிக்கிறது.**

உணர்வுகளையும்தானே இந்த எதிர்வினையாளர்கள் வெளிப்படுத்துகிறார்கள். 'சேலைத் துணிமணி விலைகள் ஏறிப்போனதுக்குக் காரணம், பறச்சிகள் எல்லாம் ரவுக்கைப் போடத் தொடங்கி விட்டதால்தான்' என்று பெரியார் சொன்னதற்கும், 'அவர்களின் கையில் குலத் தொழில் கருவிகள் இருந்திருக்கும்' என்பதற்கும் சிந்தனைத் தளத்தில் வேறுபாடு உண்டா?

பெரியார் ஒருவர் இந்த மண்ணில் பிறந்து பங்களிப்புச் செய்ததால்தான் தலித்துகளின் கைகளில் எழுதுகோல்கள் இருக்கிறதென்றால், டாக்டர் அம்பேத்கர் தலித்துகளுக்கு நல்வினை செய்யவில்லை என்பதாகப் பிரச்சாரம் செய்யத் துணிகிறார்கள் என்றுதானே உள்வாங்கிக்கொள்ள முடிகிறது. இதே பாவனையில்தான், பெரியாருக்கு முந்தைய காலகட்டத்திலே இந்துப் பார்ப்பனியத்தைத் தோலுரித்துக் காட்டிய அயோத்திதாசப் பண்டிதரின் செயல்பாடுகளையும், படைப்பாக்கங்களையும் திட்டம் போட்டு மறைத்து விட்டிருந்தார்கள்.

அரசியல் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே, அம்பேத்கர் அவர்களின் தீவிரமான கோரிக்கைகளாலும் தொடர்ந்த போராட்டங்களினாலும் பிரிட்டிஷ் அரசு முதன்முதலில் 1934-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து சிறிய அளவு தாழ்த்தப்பட்ட இனத்திற்கு ஒதுக்கீடு செய்தது. 1943-இல் தலித்துகளுக்கு 8.33 சதவிதமாகவும், 1946-இல் 12.5 சதவிகிதமாகவும், 1970-இலிருந்து தாழ்த்தப்பட் டோருக்கு 15 சதவீதமாகவும், பழங்குடியினருக்கு 7.5 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் அவர்களின் விடாப்பிடியான முயற்சியின் மூலமாகவே அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 16(4), 16(4)A, 46 மற்றும் 335 போன்றவை முறையே ஒதுக்கீடு, பதவி உயர்வில் ஒதுக்கீடு, ஒடுக்குமுறைக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள், நிர்வாகத் தகுதியைக் கருத்தில் கொண்டு உரிய நியமனங்கள் வழங்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டன. டாக்டர் அம்பேத்கர் அவர்களின் செயல்திட்டத்தினாலேதான் தலித்துகள் எழுதவும், படிக்கவும், அரசுப் பணிகளில் அமரவும் முடிந்தது என்பது வரலாற்று உண்மையாக இருக்கும்போது, அதைப் புறக்கணித்துவிட்டு பெரியாரால்தான் தலித்துகளின் கைகளில் எழுதுகோல்களைக் காண முடிந்தது என்று சுட்டிக்காட்ட எத்தனிப்பது வரலாற்று மோசடியாக வெளிப்படுகிறது.

தலித்துகளின் விடுதலைக்காக தலித்துகளிலிருந்தே உருவாகும் தலைவர்களில் உட்சாதி முரண்பாடுகள் இருந்திருக்கின்றன. அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் அருந்ததியர்களைப் பற்றி விமர்சித்தது, மாவீரன் ரெட்டமலை சீனிவாசன் அவர்கள் 'பறையன்' என்கிறகிளை சாதிப் பெயரிலே பத்திரிக்கை நடத்தியதை உதாரணங்களாகக் கொள்ளலாம். அவர்களெல்லாம் முதலில் தன் சுய்சாதி விடுதலையையே உள்வாங்கிக் கொண்டு பரிணாமம் பெற்று தலித்துகள் என்கிற மொத்தப் பரிமானத்திற்குள் தங்களைக் கட்டமைத்துக் கொண்டார்கள். அயோத்திதாசர், ரெட்டமலை சீனிவாசன் மற்றும் எம்.சி. ராஜா போன்ற தலைவர்கள் தங்கள் சுயசாதியைப் பிரதானமாகக் கொண்டிருந்தாலும், அந்த சுயசாதியும் 'தலித்துகள்' என்கிற பொதுப் பிரிவில் அடக்கம்தானே. அவர்களெல்லாரும் சுயசாதியில் நின்றுகொண்டு பிற தலித்துகளின் விடுதலைக்காக ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்தவர்கள். சான்றாக டாக்டர் அம்பேத்கர் அவர்களுடன் இணைந்து பூனா ஒப்பந்தத்தில் ரெட்டமலை சீனிவாசன் மற்றும் எம்.சி. ராஜா அவர்கள் கையொப்பமிட்டபோது தலித்துகளில் தன் சுயசாதிக்கு மட்டும் தனித்தொகுதிகள் கோரி நிற்கவில்லை என்பதே உண்மையாயிருக்கிறது. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூட தன் சுயசாதியான மகர்களைப் பிரதானப்படுத்திதான் முதன் முதலில் தனது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கத் துவங்கினார். ஆனால், தலித்துகளுக்குள் அடக்கம் பெறாத பெரியார் அவர்கள் தலித்துகளில் ஒரு பிரிவினரை (பறையன், பறைச்சி) தனது பரிகாசமான சொல்லாடல்களுக்குப் பயன்படுத்தியதன் மூலம் அவரின் அந்தரங்க புத்தியை கேள்விக்குட்படுத்துகிறார் என்பதுதானே நிதர்சனமாகிறது. பெரியாரை விமர்சனத்திற்கு உட்படுத்தியதன் மூலம் தற்போதைய நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதை அடையாளங்காண முடிகிறது என்பதே பயனுள்ளதாக இருக்கிறது. பெரியாருடன் முரண்பாடு கூடாது என்பதெல்லாம் பார்ப்பனீயச் சிந்தனையே. காரல் மார்க்ஸ் கூட 'எதையும் சந்தேகி' என்றுதான் கட்டளை இடுகிறார். பெரியாரும் 'நான் சொல்வதையெல்லாம் அப்படியே நீ கேட்டுக்கணும்கிற அவசியமில்லை; தனியா உட்கார்ந்து சிந்திச்சிப் பாரு; எது தேவையோ அத எடுத்துக்க! எது தேவையில்லையோ அத விட்டுடு' என்றுதானே முகவுரை தருகிறார். தலித்துகள் சுயமாக சிந்திப்பதால்தான் பெரியாரை விமர்சனத்துக்கு ஆளாக்க வேண்டியிருக்கிறது என்பதே உண்மை. பெரியாருடன் பகை முரண்பாடா நட்பு முரண்பாடா என்பதை அவரைப் பற்றின விமர்சனத்திற்கு விடை கிடைத்த பிறகுதான் தெளிவுபெற முடியும் என்று தோன்றுகிறது.

சமூகக் கட்டுமானத்தின் மேல்தளங்களாக கலாச்சாரம், பண்பாடு, சாதியமாக மார்ஸியம் கையளிப்புச் செய்ய, சமூகக் கட்டுமானத்தின் அடித்தளமாக சாதியத்தை முன்னிறுத்துகிறது அம்பேத்கரியம். இந்தியப்



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனியச் சமூகத்தில் அம்பேத்கரின் நிலைப்பாடே சாத்தியமாகிப் போனதை தெரிந்துகொள்ளமுடிகிறது. ஆயினும் மார்க்ஸியத்திற்கு எதிரான, மார்க்ஸியத்தை திட்டாந்தரமாய் புறக்கணித்துவிட்டு இந்திய சமூகத்தை புணரமைக்கும் பணியை அம்பேத்கர் மேற்கொள்ள வில்லை என்பதும் வெளிப்படையாகிறது. தொழில் சங்கங்களில் தொழிலாளர்களிடையே சாதிய முரண் பாடுகள் தலைதூக்கி நின்றதால் தலித்திய தொழி லாளர்களை ஒருங்கிணைத்து அம்பேத்கர் அவர்கள் சுதந்திரத் தொழில் சங்கத்தை வடிவமைத்தபோதும், மகாராஷ்டிரத்தில் தோழர் டாங்கே அவர்கள் தலைமை யேற்று நடத்திய தொழிற் சங்கத்துடன் அணியாக நின்று பலப்பல போராட்டங்களில் பங்களிப்பு செய்திருக் கிறார் அம்பேத்கர். அவரின் தத்துவக் கோட்பாடுகளாக முன்னிலைப்படுத்திய அம்சங்கள் 1. பார்ப்பனிய எதிர்ப்பு, 2. முதலாளித்துவ எதிர்ப்பு என்கிறதாகவே வெளிப்படுகின்றன. மார்க்ஸியம் வரையறை செய்யும் 1. ஏகாதிபத்திய எதிர்ப்பு, 2. முதலாளித்துவ எதிர்ப்பில் சற்று அம்பேத்கரியம் வேறுபட்டிருக்கலாம். இந்திய சாதியச் சூழலில் சாதியே சமூகக் கட்டுமானத்தின் மேல்தளமாகி நிற்பதால் ஏகாதிபத்தியம் என்பது டாக்டர் அம்பேத்கருக்கு அதிகபட்சமாகப் போயிருந் தது. ஏனெனில் அவருக்கு சர்வ தேசியத்தை விட தேசி யமே முக்கியமாகப்பட்டது. தேசியத்திற்குள்தான் சாதி யம் தலைவிரித்தாடுகிறது. தோழர் டி ராஜாவின் வியாக் கியானத்தின்படி (புதிய காற்று, நவம்பர் 2004) தலித்துகள் என்றால் ஒடுக்கப்பட்டவர்கள் என்பது அதன் மூலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக இருக்கலாம். அதே அர்த்தத்தின் அடித்தளத்தின் மீதுதான் மகாராஷ் டிரத்தில் தலித் சிறுத்தைகள் தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர், விதவைகள், குழந்தைத் தொழிலாளர் கள் சிறுபான்மையினரை உள்ளடக்கி தோழர் அர்ஜூன் டாங்கே தலைமையில் அந்த இயக்கத்தைக் கட்டமைத்தார்கள். இந்திய இந்துப் பார்ப்பனீயச் சமூகத்தில் தலித்துகள் என்பவர்கள் தீண்டாமைக்கு உட்படும் சாதியினரை மட்டுமே அர்த்தப்படுத்த நிறுத்துவது யதார்த்தமாகிப் போனது இப்போது. ஏனெனில் இங்கே ஒடுக்கப்பட்டவர்களிலும் (மேலே குறிப்பிடப்பட்ட பிரிவினர்கள்) சாதியே பிரிவினைக்கு ஊன்றுகோலாய் வழிகாட்டி நிற்கிறது. எப்படி தொழி லாளர் வர்க்கத்திலும் சாதியே பிரிவினைப் பங்காற்றுகி றதோ, அதுபோலவே சமூகத் தளத்திலும் சாதியே ஒடுக் கப்பட்டவர்களின் பிரிவினைக்கு காரணியாகிப் போகி றது. இது ஒடுக்கப்பட்ட பிரிவினரின் மீது செலுத்தும் பகை முரணுக்காக வைக்கப்படும் விமர்சனம் அல்ல. அவர்கள் மீது நட்பு முரணுக்காக வைக்கப்படும் யதார்த்தமே.

பொதுவுடைமை இயக்கம் வர்க்க அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதென்பதும் தலித்துகள் பாட்டாளி வர்க்கம்தான் என்பதும் மறுப்புக்கு உரியதல்லதான். ஆனால் பாட்டாளி வர்க்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடையே வர்க்கப் பாசத்தைவிட சாதிப் பாசமே தலைதூக்கி நிற்கிறபோது, அதனால் ஓரங்கட்டப்படுவது தலித்துகளாகத்தானே இருக்கிறார்கள். ஒருகாலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை 'பறையன் கட்சி, பள்ளன் கட்சி' என்று அடையாளப் படுத்திய சொல்லாடல்களை எல்லாம் தற்சமயம் மருந்துக்குக் கூட எங்காவது கேட்டுக்கொள்ள முடிகிறதா? வெண்மணியில் 44 தலித்துகள்தான் தீ யிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். ஒரு பிரசாதித் தோழர் கூடவா அந்த தலித்துகளுடன் அணிசேர முடியவில்லை? பொதுவுடைமை பதாகையின் கீழே தலித்துகள் கூலி உயர்வுக்குப் போராடினார்கள். ஆனால் கிருஷ்ணசாமி நாயுடுவின் கும்பல், 'இத்தனை நாளும் நம்மகிட்ட எச்சிக் கஞ்சி குடிச்ச பயலுக, இன்னிக்கு நம்மள எதிர்த்துக்கிட்டு நிற்கிறதா?' என் கிற சாதித் திமிரில்தான் தலித்துகளின் உயிர்களை எரியூட்டி நின்றது. பொதுவுடைமைவாதிகள் தலித்து களை வர்க்கத்தால் அணிமயமாக்க எத்தனிக்கும் போது, அவர்கள் சாதியர்களால் புறக்கணிக்கப்படுவ தும் அவர்கள் மேல் வன்முறைகள் நிகழ்த்தப்படுவதும் வரலாறு கற்றுத்தந்த பாடங்கள். திடகாத்திரமானவர் களோடு மெலிந்தவர்களையும் அணியம் சேர்த்து களத் தில் போட்டி நிகழ்த்தினால் யார் வெற்றி பெறுவார் கள், எவரின் கை ஓங்கி நிற்கும் என்பது எல்லோருக் கும் தெரிந்த உண்மையாகும். அதுபோலத்தான் வர்க்க ஒற்றுமை என்கிற நிழலுக்குள் தலித்துகளை குளிர் காய நிறுத்துவதும்.

'அரசியல் தளத்தில் தலித்துகளுக்கு ஏகபோகப் பிரதிநிதிகள் இருப்பது மாதிரி நாம் யூகித்துக்கொள் ளக்கூடாது' (புதிய காற்று, நவம்பர் 2004) என்கிறார் தோழர் டி ராஜா அவர்கள். அடுத்து, அரசியல் தளத்தில் யார் தலித்துகளின் பிரதிநிதி? என்கிற கேள்வியையும் முன்வைக்கிறார். இதிலென்ன சந்தேகங்கள். தலித்து களின் பிரதிநிதி தலித்திய உணர்வுள்ள ஒரு தலித்தாகத் தான் இருக்கமுடியும். தலித்துகளின் விடுதலைக்கு அல்லும் பகலும் பாடுபட்ட டாக்டர் அம்பேத்கர் தலித்துகளின் பிரதிநிதியாக இருக்கவில்லையா? அரசி யல் சட்டம் தலித்துகளுக்காக அங்கீகரித்திருக்கும் இடஒதுக்கீட்டுப் பிரச்சினைகளில் இடதுசாரிகள் என் றைக்காவது தலித்துகளுக்கு ஆதரவாய் குரல் கொடுத் திருக்கிறார்களா? இடஒதுக்கீடு என்றாலே அது சாதி யம் சம்பந்தப்பட்டது என்று 'ஜகா' வாங்கிக் கொள் கிறார்கள். அவர்கள் தலித்துகளின் பிரதிநிதிகள் ஆகிவிட முடியுமா? தோழர் ராஜாவின் வினாக்கள் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு அம்பேத் கருடன் முரண்டுபிடித்த காந்தியைத்தான் நியாயப் படுத்துகிறது. 'இந்தியாவில் தலித்துகளின் ஏகப் பிரதிநிதி நான்தான், அம்பேத்கர் அல்ல' என்று இந்துத்துவம் காக்கப் போராடினார் காந்தி. கம்யூனிஸ் டுகள், தலித்துகள் தனித் தனி அணிதான். விடுதலைக் கான போரில் அணிசேர்ந்து கொள்ளலாம். டாக்டர் அம்பேத்கரின் மறைவுக்குப் பிறகு நிகழ்காலத்தில் தலித்துகளை பிரதிநிதித்துவப்படுத்த வீரஞ்செறிந்த தலித் தலைவர்கள் இருக்கிறார்கள் இவர்கள்தான் தலித்துகளின் பிரதிநிதிகள். தலித்துகளாகப் பிறந்த தால் காயம்பட்டவர்கள். தலித்துகளின் உள்காயங் களை உணர்ந்துகொண்டவர்கள். பல தலைவர்கள் இருக்கிறார்களே, அவர்களில் யாரை ஒற்றைத் தலைமையாக ஏற்றுக்கொள்வது என வினா எழலாம்.



படிப்பகம்

www.padippakam.com

**ஜெயகாந்தனால் பிராமண வாழ்க்கையை விலாவாரியாக, உண்மையாக எழுதமுடிகிறதென்றால், அவர் தன்னை ஒரு பிராமணராக உள்வாங்கிக்கொண்டு, அவர்களைப் போலவே எல்லோரும் பிராமணர்களாகிவிட்டால் நாட்டில் சமத்துவம் மலர்ந்துவிடும் என்று நம்பிக்கை வைத்திருந்தார்**

பொதுவுடைமைக் கட்சிகளிலும் பல பிரிவுகள், பல தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்களோ அதுபோல தலித்துகளின் பிரதிநிதிகளை தலித்துகள் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அது ஒன்றும் தீர்த்துக்கொள்ள முடியாத விவகாரம் அல்ல. விவகாரமான விசயமே, ஆதிக்கச் சாதிக்கும் தலித்துகளுக்கும் இடையே முரண்பாடு முற்றி மோதலாக வெடிக்கும்போது பொதுவுடைமைவாதிகள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பதே. அதை சாதிக்கலவரமாக உள்வாங்கி திசைமாற்றிப் பேசுவதென்பது, பிரச்சினையைக் கையிலெடுக்க சரியான சித்தாந்தத் தெளிவு இல்லை என்பதே உண்மையாகிறது.

அரசியல் தளத்தில் மட்டுமல்ல, இலக்கியத் தளத்திலும் தலித்துகள் மீதான புறக்கணிப்புகள் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. மேட்டுக் குடிகளின் கலாச்சாரத்தை முன்னிறுத்திய படைப்புகள் ஆதிக்கம் செலுத்திக் கொண்ருந்த பார்ப்பனியத்தனத்தை தலித் எழுத்துக்களால் மட்டுமே விசாரணைக் குட்படுத்த முடிந்திருக்கிறது. தலித்துகளுக்கான மொழி, தலித்துகளுக்கான வாழ்க்கை, தலித்துகளுக்கான கலாச்சாரம், தலித்துகளுக்கான பண்பாடு, தலித்துகளின் வீரஞ்செறிந்த போராட்ட வரலாறுகளை தலித் படைப்புகளே வெளிக்கொண்டு வர முடிகின்றன. இந்தியாவின் இலக்கிய வட்டாரங்களின் அதிரடியாக ஒத்துக்கொண்டிருக்கிற - ஆதரவாகவோ, எதிராகவோ - குரல்களில் தலித்தியத்தைத் தவிர்த்துவிட்டு யாரும் இலக்கியம் பேசமுடியாத நிர்பந்தத்தை உருவாக்கி விட்டிருக்கிறது. விரும்பியோ விரும்பாமலோ சகல மட்டங்களிலும் ஒரு பிரதி சலசலப்பை ஏற்படுத்துகிறது என்பதால் அதில் பௌதீகத் தன்மை நிரம்பியிருப்பதாகவே கொள்ளவேண்டியிருக்கிறது. தலித் இலக்கியம் அத்தகைய சலசலப்பை ஏற்படுத்த முனைந்திருக்கிறது. சமூக மாற்றத்திற்கான, தலித்துகளின் விடுதலைக்கான பௌதீக மாற்றம் அதனுள் மிகுந்து கிடக்கிறது. தலித் படைப்பாளிகள் என்று பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொண்டவர்களானாலும் சரி அல்லது ஆதரவாளர்கள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டவர்களானாலும் சரி அல்லது தலித் படைப்புகள் மீது சாதகமான பார்வை இல்லாதவர்களானாலும் சரி, எல்லோருமே தலித் படைப்புகளை உருவாக்கி வெளிக்கொணர்வதிலே பெருமையடித்துக் கொள்கிற நிர்பந்தத்தை உருவாக்கி விட்டிருக்கிறது. இதில் எழுத்தாளர் பூமணி போன்றவர்கள் விதிவிலக்காக இருக்கலாம். 'சௌக்கியமா' என்று குசலம் விசாரிப்பது போல எல்லோரும் 'தலித் இலக்கியம்' பற்றி அவரிடம் இடைவிடாது கதையாடிக் கொண்டிருந்தாலும் 'தலித் இலக்கியம்' என்று பிரிப்பதில் அவருக்கு உடன்பாடு இல்லாதிருக்கலாம். ஆனால் தலித் இலக்கியத்தை அவர் தவிர்க்க முடியாதிருக்கிறார் என்பதே இதன்மூலம் ருசுவாகிறது. ஏனெனில் அவரின் 'பிறகு' நாவல் அம்பேத்கர் நூற்றாண்டு எழுச்சிக்கு முன்பே, தலித்தியக் கோட்பாடுகள் தமிழிலக்கியத்தில் ஆழமாகவும், தீவிரமாகவும் தன் வீச்சைப் பாய்ச்சுவதற்கு முன்பே - 1979இலேயே - வெளிவந்துவிட்டது என்பதை காரணமாகக் காட்டலாம். ஆனாலும் அவருக்குள்ளாக தலித்திய உணர்வுகள் ஆவேசங்களாகக் கனன்றுகொண்டிருப்பதைத்தான் அவரின் நேர்காணலிலிருந்து பூடகமாக அறிந்துகொள்ளமுடிகிறது. (தீராநதி, நவம்பர் 2004) சாதி இல்லாத ஒரு சமூகம் இருக்கமுடியாது என்று உறுதிகூறுகிற எழுத்தாளர்கள்தான் இன்றைக்கு மார்க்சியர்கள்கூட அவர் ஒரு 'தாழ்த்தப்பட்ட தோழர்' என்று பேசுகிறார்கள் என்பதையும் சாட்சியமாக வைக்கிறார். ஆக வர்க்கத்தை முன்னிலைப்படுத்துகிற மார்க்ஸியர்கள் கூட தலித்துகளை தரம் பிரித்து ஒதுக்குகிறபோது, தலித்துகள் யாருடைய அரசியலுக்குப் பின் நம்பகத் தன்மையுடன் அணிசேரமுடியும் என்ற கேள்வியையும் மறைமுகமாக இழையோடவிட்டிருக்கிறார் என்பதே உண்மையாயிருக்கிறது. எழுத்தாளரின் குற்றச்சாட்டுக்கு வலுசேர்க்கும் முனைப்பாக, புதியபார்வை (அக். 16-31 2004) இதழில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத்தலைவர் தோழர் ஆர். நல்லக்கண்ணு அவர்களின் நேர்காணல் இருந்தது. 1948 வாக்கில் நிகழ்ந்த தெலுங்கானா போராட்டத்தின் விளைவாக கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடைவிதிக்கப்பட்டபோது தமிழகத் தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கைக்கு ஆட்படுகிறார்கள். தோழர் பாலதண்டாயுதம் அவர்களை ஏர்வாடி அருகில் கொண்டுபோய் வைத்திருந்தார்கள். தோழர் நல்லக்கண்ணு அவர்கள் தான் ஒரு தலித் நண்பர் வீட்டில் தங்கியிருப்பதாக வெளிப்படுத்துகிறார். ஒரு இடதுசாரி சிந்தனையாளரின் உதடுகள் தலித் சாதியை தனிமைப்படுத்தி சுட்டிக்காட்டுவது எதன் பொருட்டு? தோழர் பாலதண்டாயுதம் அவர்களை ஏர்வாடிக்கு அருகில் வைத்திருந்தது எந்தச் சாதியைச் சார்ந்தவரின் இல்லத்தில் என்பதுபற்றி குறிப்பிடவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஒருவேளை அது தலித் அல்லாத வீடாக இருக்கலாம் என்று யூகித்துக் கொள்ள இடம் இருக்கிறது. இடதுசாரி தோழர்கள் கூட சாதியப் பாகுபாட்டில் தங்களின் அரசியலைக் கட்டமைத்துக்கொள்ளும் தந்திர யோகங்களை கைக்கொள்கிறபோது, தலித்துகள் தங்களுக்கான அரசியலை வடிவமைத்துக்கொள்வதில் தவறென்ன இருக்கிறது என்பதே இப்போதைய கேள்வி.

தலித்துகளுக்கு சுய அனுபவம் இருக்கும் என்பதை



படிப்பகம்

www.padippakam.com

ஒத்துக்கொள்ளும் எழுத்தாளர் பூமணி அவர்கள், தலித்துகள்தான் தலித் பற்றி எழுதவேண்டும், மற்றவர்கள் எல்லாம் எழுதக்கூடாது என்று தலித்துகள் கட்டுப்பாடு விதிப்பதாக குறைபட்டுக் கொள்கிறார். சுய அனுபவ வெளிப்பாடே ஒரு சிறந்த படைப்பை வெளிப்படுத்தும் என்பது அவர் அறிந்ததே. மேலும் தலித்துகளின் தலித் படைப்புக்களையும், தலித் அல்லாதவர்களின் தலித் படைப்புக்களையும் ஒப்பு நோக்கி பரிசீலிக்கும்போது சில உண்மைகள் அவருக்கு புரியாமல் போகாது என்றே சொல்லத் தோன்றுகிறது. தலித்துகளின் படைப்புக்களில் உலாவரும் கதாபாத்திரங்கள் இழிநிலைக்கு ஆட்படுத்தப்பட்டிருந்தாலும் பாசமுள்ளவர்களாக, வீரமுள்ளவர்களாக சித்தரிக்கப்படுவது கண்கூடு. தலித் அல்லாதவர்களின் தலித் படைப்புகளில் பாத்திரங்கள் அழுகுணிகளாகவும், அசிங்கமானவர்களாகவும், இரக்கமில்லாதவர்களாகவும், கோழைகளாகவும், அருவருக்கத்தக்க பட்டப் பெயர்களைக் கொண்டவர்களாகவும், தலித் உணர்வுகளையே கொச்சைப்படுத்துவோர்களாகவும் தோற்றம் தருகிறார்கள். படைப்பாளர்களின் உள்ளார்ந்த சிந்தனைகளே தலித்துகளை வடிவமைப்பதில் வெளிப்பட்டுவிடுகின்றன. தலித்துகளைப் பற்றிய அவதூறான அவர்களின் சித்தரிப்புகள் வாசகர் மனங்களில் அருவருப்பான பிம்பங்களைத்தான் தோற்றுவிக்கின்றனவேயன்றி தலித்துகளின் நிஜங்களைப் பதிய வைக்க மறுக்கின்றன. தலித் இலக்கியங்களை மற்றவர்கள் எழுதக்கூடா தென்று தடுத்து நிறுத்த முற்படுவது ஜனநாயகத் தன்மையன்று. ஆனால் எல்லா நிஜங்களையும் எழுதுங்கள் என்பதுதான் தோழமையான வேண்டுகோள். அரசாங்க ஆணைப்படி தலித் பட்டியல் சாதியினரிடையே முப்பதுக்கும் மேற்பட்ட உட்பிரிவுகள் இருக்கலாம். ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒரு கலாச்சாரம், மொழி, வாழ்வுமுறை இருக்கலாம். ஒவ்வொரு தலித் எழுத்தாளரும் அவர் சார்ந்திருக்கும் பிரிவு பற்றி மட்டும்தான் எழுத முடிவதாக இருக்கலாம். ஒரே பிரிவிவைச் சார்ந்தவர்கள் கோயமுத்தூர், கன்னியாகுமரி என்று பிரிந்திருக்கலாம். அவர்களிடையே பூகோள ரீதியாகவும் வேறுபாடு இருக்கலாம். உட்பிரிவுக்குள்ளும் கோயமுத்தூர்க்காரர் கன்னியாகுமரி பற்றி எழுதமுடியாது என்றுகூட ஆகலாம். இங்கே 'இருக்கலாம்' மற்றும் 'ஆகலாம்' என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'இருக்கிறது' என்கிற வார்த்தையைப் பதித்து பூர்த்தி செய்து பார்ப்பதால் கிடைக்கும் வாக்கியங்களே யதார்த்தமான உண்மை என்பது வெளிப்படும். கரிசல் எழுத்தாளர்கள் என்று ஒரு வட்டத்திற்குள் நின்று கரிசல் மண்ணின் வாழ்க்கையையும் மொழியையும் மட்டுமே படைப்பாக்கம் செய்கிறவர்களின் எழுத்துக்கள் கரிசல் மண்ணோடு மட்டுமே நின்றுவிடுகிறதில்லையே. அதுபோலத்தான் பூகோள ரீதியாக பிரிந்து நிற்கும் தலித்துகளின் உட்பிரிவினரின் படைப்பும். ஆனாலும் அனுபவ ரீதியாக உள்வாங்கிய பிற விசயங்களைக் கொண்டு சிறந்த படைப்புகளை உருவாக்க முடியும் என்பதும் சாத்தியமானவையே. தலித் படைப்புகளானாலும் சரி, பிற படைப்புகளானாலும் சரி எதையும் நேர்மையாக கையளிக்கும்போது மாசு மறுவற்ற படைப்புகளாக அவை பரிணமிக்கும். ஒரு படைப்பாளன் தன் பாத்திரங்களில் தன்னை வடிவமைத்துக் கொள்வதன் தராதரத்தைப் பொறுத்தே அவனின் படைப்புகளின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு ஜெயகாந்தனால் பிராமண வாழ்க்கையை விலாவாரியாக, உண்மையாக எழுதமுடிகிறதென்றால், அவர் தன்னை ஒரு பிராமணராக உள்வாங்கிக்கொண்டு, அவர்களைப் போலவே எல்லோரும் பிராமணர்களாகிவிட்டால் நாட்டில் சமத்துவம் மலர்ந்துவிடும் என்று பிராமணர் வாழ்க்கையின் மீது அலாதியான பிரியமும் நம்பிக்கையும் வைத்திருந்தார் என்பதே உண்மையாகும். அவரின் அன்றைய கால நேர்க்காணல்களில் அவரின் எண்ணத்தையும் நம்பிக்கையையும் இப்படித்தான் தெள்ளத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. தலித் அல்லாதாரின் சிந்தனைகளில் தலித்துகளாக உருமாறிக் கொள்ளும் அடிச்சுவடுகள் தென்படுமா?

ஆனாலும் எழுத்தாளர் பூமணி அவர்களின் இறுதி ஒப்பளிப்பு (நேர்காணலில்) தலித் படைப்பாளர்களுக்கு மனநிறைவு தருவதாகவே இருக்கிறது. அதை அவருடைய மொழியிலேயே எழுத்துப் பிசகாமல் அளிப்பதுதான் சரியாகப் பொருந்தும் என்று தோன்றுகிறது. 'இந்த மாதிரி இலக்கியங்கள் காலகாலமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற கசப்பான யதார்த்தமும், இலக்கியம் மேல் தட்டினருக்கானது என்ற பாரம்பரியமும் இருந்திருக்கிறது. எனவேதான் இந்த எதிர்ப்புணர்வு, கலகம் எல்லாம். கலகத்தில் ஒரு நியாயம் பிறக்கட்டுமே. நிச்சயமாக எல்லோருமே சோடை போய்விடமாட்டார்கள். உருப்படியான பங்களிப்பு ஒண்ணு ரெண்டு கிடைக்காமலா போகும்' என்பது அது.

நன்றி எழுத்தாளர் பூமணி அவர்களே! தலித் இலக்கியக் கோட்பாடுகள் பேசப்படுகிற அளவிற்கு இங்கே படைப்புகள் இல்லை என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் தலித் படைப்பாளர்கள் படையெடுப்பின் போர்வீரர்களைப் போல வீறுகொண்டு புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இதுகாறும் எண்ணற்றப் படைப்புக்களை போர் ஆயுதங்களாய் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் சாத்தியமான அம்சங்களாகும். தலித் எழுத்துக்கள் கலக எழுத்துக்களாக பரிணாமம் கொண்டு இருக்கின்றன. கலகம் செய்ய எத்தனிக்கிற வழிகளில் சகாக்களைப் போல பாசாங்கு செய்து நிற்கும் இருள் கூட்டத்தையும் ஆசை வார்த்தை கூறி அலைக்கழிக்க முயற்சிக்கும் சில பேனா மினுக்கிகளையும் புறந்தள்ளிவிட்டுத்தான் புறப்பட வேண்டியிருக்கிறது. நிஜமான எதிரிகள் யார், பொய்யான எதிரிகள் யார், நண்பன் யார், துரோகி யார் என்பதைத் தெரிந்துகொள்ள சில அவகாசங்கள் தேவைப்படுகின்றன. எல்லோருடனும் அய்க்கியப்படத்தான் சிந்தனை துடிக்கிறது. அவர்களும் ஆதிக்கவாதிகள் என்பதை தெரிந்துகொண்ட பின்னே சினம் வெடிக்கிறது. பரவாயில்லை; தாமதமானாலும் கூடிய விரைவில் சரியான இலக்கை எட்டிவிடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது! ●



படிப்பகம்

www.padippakam.com

■ அ. ராமசாமி

# நிகழ்காலத்தில் பெரியார்

**வரலாறு யாரை விடுதலை செய்யும்...?**

திரள் மக்களின் விடுதலைக்கும் வரலாற்றுக்கும் உள்ள உறவை யாராவது ஒருவர் எளிமையாக விளக்கிவிட முடியும் என்று முன் வந்தால் அவரை ஆச்சரியத்தோடு தான் பார்க்கத் தோன்றுகிறது. அதற்கு மாறாக விடுதலைக்கும் வரலாற்றுக்கும் ஒட்டும் இல்லை உறவும் இல்லை எனக்கூறி வரலாற்றை விலக்கிவைக்க முன்வந்தால் அவரையும் ஆச்சரியத்தோடு தான் பார்க்கத் தோன்றுகிறது. வரலாறு விளக்கவும் முடியாத விலக்கவும் முடியாத ஒன்றாக இருப்பது பேசுவதற்கான ஒன்று தான்.

உலகம் தழுவிய புரட்சிகளைப் பற்றிப் பேசும் சர்வதேச இயக்கங்கள் தொடங்கி, வட்டாரம் சார்ந்த தனி நபர்களின் / குழுக்களின் / சாதிகளின் அதிகாரத்திற்கு எதிராக இயங்கும் விளிம்புநிலை மக்களின் இயக்கங்களை முன்னெடுக்கும் போராட்டங்கள் வரை ‘வரலாறு’ ஒரு கருவியாகவோ அல்லது கருத்தியலாகவோ இருந்துகொண்டுதான் இருக்கிறது. உரிமைகளைப் பற்றிப் பேசுவதன் மூலமாகவோ, வெற்றிக்கான போராட்டங்களை நடத்துவதன் மூலமாகவோ, தோல்விகளில் துவண்டு மீள்வதன் மூலமாகவோ திரள் மக்கள் இயக்கங்கள் வரலாற்றைப் படைக்கின்றன; வரலாறாக ஆகின்றன. அந்த வரலாற்றில் ஒரு தலைவன் புனிதனாகக் காட்டப்படுவதும் இன்னொருவன் துரோகியாகச் சித்தரிக்கப்படுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வுகள். ஒரே தலைவனை வரலாற்றின் ஒரு கட்டம் புனிதனாகக் கொண்டாடுவதும் உண்டு. அடுத்த காலகட்டம் துரோகி எனத் தூற்றுவதும் கூட நடக்கத்தான் செய்துள்ளது. அவற்றை வரலாற்றின் பக்கங்கள் பதிவும் செய்துள்ளன. வெவ்வேறு இயக்கங்கள், வேறு வேறு காலகட்டங்களில் ஒரு தலைவரை இப்படி மதிப்பீடு செய்வது புரிந்து கொள்ளக்கூடியதுதான்.ஆனால் ஒரே இயக்கம் ஒரு கட்டத்தில் தலைவன் என்றும், மாபெரும் வழிகாட்டி என்றும், சமரசமற்ற போராளி என்றும் பாராட்டிய ஒருவரை, பத்தாண்டு இடைவெளிக்குள் துரோகி என்றும் சதிகாரன் என்றும் குற்றம் சாட்டுகிறது என்றால் அக்குற்றச்சாட்டைப் பொருட்படுத்தத் தேவையில்லை என விட்டுவிட முடியுமா...? யோசிப்பது நல்லது.

பெரியார் ஈ.வெ. ராமசாமி பற்றியும் அவரின் சூத்திர விடுதலை அரசியல் பற்றியும் அதற்கு அவர் கையாண்ட தந்திரோபாயங்கள் பற்றியும் இன்று நடக்கும் விவாதங்களை எப்படிப் புரிந்து கொள்வது என்று தெரியாமல் பலர் திகைத்துப் போய்த்தான் நிற்கின்றனர். அவர் தனது போராட்டங்களில் எதிரிகள் யார்? அல்லது எவை? என அடையாளப்படுத்திக் காட்டியதில் எந்தக் குழப்பமும் இருப்பதாக யாருக்கும் தோன்றவில்லை, பிராமணர்களும் பிராமணர்களின் மேலாண்மையை உறுதி செய்யும் சாதி அடுக்கும்தான் அவர் அடையாளப்படுத்திய எதிரிகள். மனிதர்களை நான்கு வருணங்களாகப் பிரித்து, நாலாவது வர்ணத்தவர்களாகிய சூத்திரர்களை ‘அடிமைகள்’ என்றும் ‘தேவதாசிகளின் பிள்ளைகள்’ என்றும் சொன்ன மனுஸ்மிருதியை நடைமுறை வாழ்க்கையின் வழிகாட்டியாகக்கொண்ட இந்துத்துவம் என்னும் கருத்தியல் தான் அவர் முதன்மையாகக் குறிவைத்த எதிரி. இந்துத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் இந்து மதம் எதிரியாகின்ற போது அதன் ஆதரவு சக்திகளான இந்து மதத்தின் கடவுள்கள், அவற்றிற்கான வழிபாடுகள், நம்பிக்கைகள், நம்பிக்கைகளைத் தோற்றுவிக்கும் சமய நூல்கள் என அனைத்துமே எதிரிகளாகத்தானே நிற்கும். ஈ.வெ. ராமசாமி அப்படித்தான் நிறுத்தினார். அவற்றின் கதைகளையும் உள்நோக்கங்களையும் முன்னோக்கிப் போகவிடாமல் பின்னுக்கு இழுக்கும் தந்திரங்களையும் அம்பலப்படுத்தினார். உதிர்க்கப்படும் ஒவ்வொரு வார்த்தையும் வர்க்கச் சார்புடையது என்பதுபோல இந்திய சமுதாயத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டிலும் பிராமண மேலாண்மையின் கூறுகள் உள்ளன என்பது அவரது வாதங்கள். வர்ணாசிரமத்தின் பிடிக்குள் வந்துவிட்ட இந்திய மொழிகளும் அவற்றில் தோன்றும் கலை, இலக்கியங்களும் பண்பாட்டுக் கூறுகளும் சாதி காப்பவை என்பது பெரியாரின் கண்டுபிடிப்புக்கள். அந்தக் கண்டுபிடிப்புக்களில் முரட்டுத்தனமும், எல்லாவற்றையும் நிராகரிக்கும் - வரலாற்றின் சேகரங்கள் அனைத்தையும் நிராகரிக்கும் - மனோபாவமும் இருந்தன என்பது உண்மை. தனிமனிதனின் விருப்பங்களுக்கும் அழகியலுக்கும் ஆன்மீகத்திற்கும் கூட இடமில்லைதான். தாய்மொழி, சொந்த பந்தம், எனது ஊர், எனது துயரமும் களியாட்டமும் என்றெல்லாம் பேசுவது கூட அவருக்கு உவப்பானது அல்லதான். இதற்காகவெல்லாம் தான் அவரது எதிரிகள் அவரை விமரிசனம் செய்தார்கள்; செய்கிறார்கள். ஆனால் இன்று தலித்துகள் விமரிசனம் செய்வது இவற்றுக்காக அல்ல என்பது உணரப்பட வேண்டும்.

திரள் மக்கள் விடுதலையை முன்னெடுக்கும் ஒரு போராளியின் இலட்சியமெல்லாம் அம்மக்களின் அடிமைத்தனத்தை ஒழிப்பதும் விடுதலைக் காற்றைச் சுவாசிக்கச் செய்வதும்தான் என்று ஆகிவிட்டால் அழகியல், ஆன்மீகம், தனி மனித மனம் என்பதெல்லாம் நிராகரிக்க வேண்டியனதான். நிகழ்காலம் அப்படித்தான் பார்க்கத் தூண்டுகிறது. ஆனால் வரலாறு அப்படிப் பார்க்கத் தூண்டுவதில்லை. ஈ.வெ. ராமசாமி எல்லாவற்றையும் அவரது நிகழ்காலத்தில் பொருத்திப் பார்த்துப் பேசியவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்



படிப்பகம்

www.padippakam.com

டும். நிகழ்காலப் பயன் மதிப்பீட்டின் பேரில் இயங்கிய பெரியாரை அவரது ஆதரவாளர்கள் - அவரைப் பின்பற்றுபவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள் - வரலாற்றில் வைத்து மதிப்பிட வேண்டும் என்கிறார்கள் என்பது ஒரு சுவையான முரண்பாடு. தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பெரும் கூட்டத்தின் முன்னேற்றத்திலும் உரிமைகளிலும் பெரியாரின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது என்கிறார்கள். 'நான் இன்று அதிகாரியாகியிருக்கிறேன்; அதற்குக் காரணம் பெரியாரின் போராட்டங்களும் தியாகமும் தான். அவர் மட்டும் தோன்றியிருக்காவிட்டால் ஒரு மலையோரக் கிராமத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருப்பேன்; அவரை விமரிசித்துக் கருத்துக் கூறும் தலித் சிந்தனையாளன், சேரியில் பன்றி மேய்த்துக் கொண்டிருந்திருப்பான்' என்றெல்லாம் தன்னிரக்கத்தையும் ஆதங்கத்தையும் கோபத்தையும் ஒரு சேர வெளிப்படுத்தும் குரல்கள் அவரை ஒரு புனிதராகவும், அவரது பிறப்பை ஒரு தெய்வத்தின் பிறப்பாகவும் காட்டிட விரும்புகின்றன. இத்தகைய பார்வைகள் எல்லாம் ஈ.வெ. ராமசாமிக்கே உவப்பானதல்ல. திரும்பவும் நினைவில் கொள்ள வேண்டியது அவர் கடந்த காலத்தின் மீது மரியாதையும் ஆறாக் காதலையும் கொண்டவரல்ல; நிகழ்காலம்தான் அவருக்கு முக்கியம்.

தலித் சிந்தனைகளினூடாக பெரியார் மீது வைக்கப்படும் விமரிசனங்கள் நிகழ்காலத்தின் மீது நின்று கொண்டு வைக்கப்படும் விமரிசனங்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நிகழ்காலம் அவர் மீது ஐயம் கொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முயல வேண்டும். பிராமணர்களை எதிரிகளாகச் சித்தரித்த அவரின் போராட்டங்களின் விளைவு பிராமணரல்லாதாரின் விடுதலை. பிராமணீயக் கருத்தியலிலிருந்து விடுதலை என்று பேசிய பெரியார் பெற்றுத் தந்தது விடுதலை அல்ல. கூடுதலான உரிமைகளும் சலுகைகளும்தான். இவை ஓரளவு கிடைத்திருக்கின்றன என்பதில் பலருக்கும் மகிழ்ச்சி. குறிப்பாக சூத்திர சாதிகள் என மனுஸ்மிருதியால் வருணிக்கப்பட்ட இடைநிலைச் சாதித் தலைவர்களுக்கும் அறிவாளிகளுக்கும் அதிக மகிழ்ச்சி. தங்கள் மகிழ்ச்சிக்குக் காரணமான பெரியாரை அவர்கள் கொண்டாடுகின்றனர். அந்தக் கொண்டாட்டங்கள் அவர்களைப் பொறுத்தவரை நியாயமானதாகக் கூட இருக்கலாம். ஆனால் தலித்துகளும் கொண்டாட வேண்டும் என எதிர்பார்ப்பதுதான் ஏனென்று புரியவில்லை.

பிராமணர் - பிராமணர் அல்லாதார் என்று கட்டமைக்கப்பட்ட முரணில் தலித்துகளின் இடம் எது என்ற கேள்விக்கு இடைநிலைச் சாதியினரின் பதில் பிராமணரல்லாதார் என்ற தொகுதிக்குள் சூத்திரர்களும் பஞ்சமர்களும் அடக்கம் தான் என்பதாக இருக்கிறது. அப்படி அல்ல என்பதை முன் வைக்கப்படும் பெரியாரின் மேற்கோள்களே காட்டுகின்றன. தான் சூத்திரர்களின் உரிமைகளுக்காகத்தான் பேசுகிறேன் எனப் பெரியாரின் கூற்றுகளே ஒப்புதல் வாக்குமூலம் தருகின்றபோது மற்றவர்கள் எப்படி மறுக்க முடியும்...? அதே போல் பெரியாரின் காலத்திலேயே அயோத்திதாசர் போன்ற தமிழகச் சிந்தனையாளர்களும் இரட்டைமலை சீனிவாசன், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் போன்ற தேசியத் தலைவர்களும் தலித்துகளின் விடுதலைக்கான போராட்டங்களையும் கருத்தியல்களையும் முன்னெடுத்திருக்கிறார்கள் என்ற வரலாறு அறியப்படும்பொழுது பெரியாரின் இடம் கேள்விக்குள்ளாக்கப்படுவது எப்படித் தவறாக இருக்க முடியும்...? இப்படிக் கேள்விக்குள்ளாக்கி பெரியாரின் வரலாற்றுப் பாத்திரத்தைத் தலித்துகள் நிராகரிப்பதே பிராமணர்களுக்கு ஆதரவாகப் போய்விடும் என்று இடைநிலைச் சாதிகளின் தலைவர்களும் அறிவாளிகளும் கருதினால் அதை மாற்றும் முயற்சிகளை அவர்கள்தான் மேற்கொள்ள வேண்டும்.

பெரியார் சொன்ன சூத்திர சாதித் திரளுக்குள் தலித்துகளும் அடக்கம் என்பதை இப்பொழுது கூட நிரூபிக்கலாம். அதற்கு ஒரே நிபந்தனை தங்களுக்குப் பிராமணீயக் கருத்தியல் வழங்கியுள்ள மேலாண்மையை இழக்கத் துணிவதுதான் ஒரேவழி. அதற்கு முதலில் எல்லாவற்றையும் வரலாற்றில் வைத்துப் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கைவிட்டாக வேண்டும். இன்று நடக்கும் விவாதங்களை நிகழ்காலத்தில் வைத்துப் புரிந்துகொள்ள முயல்வது நல்லது. நிகழ்கால வாழ்க்கை ஜனநாயகம் சார்ந்தது என்பதை இடைநிலைச் சாதிகள் உணரவேண்டும்; பெரியாரின் கருத்துக்களையும் அரசியலையும் பின்பற்றுவதாக நம்புபவர்கள் அதை உணர்த்த வேண்டும். அந்தப் பணிகளில் இறங்காமல் பெரியாரின் தேவை இன்றும் இருக்கிறது; இன்னொரு பெரியார் திரும்பவும் பிறக்கவேண்டும் எனக் கோரிக்கை வைத்துக் கொண்டிருப்பதில் எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகையதொரு முயற்சியில் விடுதலை நிச்சயம் கிடைக்கும் என உறுதியாகச் சொல்லலாம்.

> **தான் சூத்திரர்களின் உரிமைகளுக்காகத்தான் பேசுகிறேன் எனப் பெரியாரின் கூற்றுகளே ஒப்புதல் வாக்குமூலம் தருகின்றபோது மற்றவர்கள் எப்படி மறுக்க முடியும்...?**

அந்த விடுதலை தலித் இயக்கங்களிடமிருந்து பெரியாருக்குக் கிடைக்கும் விடுதலையாக இருக்கலாம். அல்லது பெரியாரிடமிருந்து தலித்துகளுக்குக் கிடைக்கும் விடுதலையாகவும் இருக்கலாம். இரண்டுமில்லையென்றால் வரலாற்றுக்குப் பெரியாரிடமிருந்தோ, பெரியாரிடமிருந்து வரலாற்றுக்கோ கூட விடுதலை கிடைக்கலாம். மொத்தத்தில் விடுதலை ஒன்று நிச்சயம் உண்டு.

'வரலாறு என்னை விடுதலை செய்யும்' எனத் தோழர் ஃபிடல் கேஸ்ட்ரோ சொன்னது அர்த்தமில்லாமல் போய்விடுமா... என்ன? அல்லது போகத்தான் விடலாமா...?



படிப்பகம்

www.padippakam.com

■ முனிமா

# கேள்வி – பதில்

✉ இரட்டை வாக்குரிமை கோரிக்கையை தலித்துகள் வலியுறுத்திப் போராடினால் அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உள்ளதா?

*- ஜே. சங்கர், அரும்பாவூர்*

தலித்துகளின் உண்மையான பிரதிநிதி இப்போதுள்ள தேர்தல் ஜனநாயகத்தில் தோன்ற வாய்ப்பில்லை என்பது உறுதியாகிவிட்டது. தலித்துகள் இருபத்தைந்து சதவிகிதமே உள்ள நிலையில், பெரும்பான்மையினரின் வாக்குகளைப் பெற்றே ஒரு தலித் சட்டமன்றத்தில் நுழையமுடியும். இந்தப் பெரும்பான்மை வாக்குகளும், செலவு செய்யும் சக்தியுள்ள அரசியல் கட்சியின் பிரமுகராவதாலேயே பெறமுடியும். தலித் இயக்கங்கள் தவிர பிற கட்சிகள் யாவும் சாதி ஒழிப்பில் அக்கறை காட்டாத சூழ்நிலையில் அக்கட்சித் தலைமையின் அரக்கப் பிடிக்குள் சிக்கியிருக்கும் தலித் பிரதிநிதியால் என்ன பெரிதாக செய்துவிட முடியும்? இதை உணர்ந்த அம்பேத்கர் இரட்டை வாக்குரிமையை முன்வைக்கின்றார். இதன்படி தலித்துகள் தங்கள் பிரதிநிதியோடு பொது பிரதிநிதியையும் தேர்ந்தெடுப்பார்கள். இரண்டு வாக்குகளைப் பயன்படுத்தி இரண்டு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவர்களாவர். தலித் விடுதலை இதன் மூலம் சாத்தியமாகும். அதையும் மீறி தலித் பிரதிநிதிகள் வாக்களிக்காமல் சட்டமன்றத்தில் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத சூழலும் உருவாகும். இதை தலித்தல்லாத பிறர் விரும்புவார்களா?

ஆனால் தலித்துகளுக்கு தனி ஊராட்சி என்பது சாத்தியமாகலாம். தலித் விடுதலைக்கு காலப்போக்கில் இது வழி வகுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. (பார்க்க: அப்னா பஞ்சாயத் by சிவகாமி அவர்கள்)

✉ ஜெயேந்திரர், அப்பு, ரவி சுப்ரமண்யம் என்று சுழன்று கொண்டிருக்கும் காற்று மு.க. ஸ்டாலின் மீது மய்யம் கொள்ளுமா?

*- சேகரன், பேர்ணாம்பட்டு*

விரைவிலே அது நடக்கும் என நாமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆமாம், அதுபற்றி உமக்கென்ன கவலை?

✉ எம்.எஸ். சுப்புலஷ்மி மறைவு தேசத்திற்கு பெரிய இழப்புத்தான், இல்லையா?

*- பிரமிளா, சென்னை*

புல்லின் இசையும், புலர்காலை புள்ளிசையும், களைவெட்டுப் பெண்களின் ஒப்பாரியும், ஏற்றப்பாட்டின் உழைப்பிசையும் கேட்டு வளர்ந்தவர்கள் நாம்! நமக்கேது இழப்பு! இன்னும் மக்கள் பயன்பாட்டிற்கு வந்து சேர்ந்திராத கணக்கு சூத்திரங்கள் ஏராளம் உண்டென கணிதமேதை குடியரசன் தெரிவித்தார். மக்களை நோக்கி வரட்டும் கர்நாடக இசை!

✉ 2005-இல் புதிய கோடாங்கியில் ஏதேனும் மாற்றம் எதிர்பார்க்கலாமா?

*- பிரகாசம், விழுப்புரம்*

2005 ஏப்ரல் முதல் புதிய கோடாங்கி மாதம் இருமுறை வரலாம் என ஆசிரியர் நம்பிக்கையுடன் கூறினார். விலையும் குறைக்கப்படலாம் என்கின்றார். நல்லதே நடக்கட்டும்.

✉ தலித் மாணவிகளுக்கான பயிற்சி முகாம் புதுக்கோட்டையில் டிசம்பர் 11, 12 தேதிகளில் நடக்கப்போவதாக அறிவித்திருந்தார்கள். எப்படி நடந்தது?

*- குமாரவள்ளி, பனைப்பட்டு*

பல் மருத்துவர் ஜெயராமன் மிகக் கடுமையாக உழைத்து பல்வேறு தலித் அமைப்புகளை ஒருங்கிணைத்து மிகச்சிறப்பாக நடத்தினார். அது குறித்த பதிவுகளை அவரே செய்யவேண்டும் என்ற வேண்டுகோள் வைக்கப்பட்டது. அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

✉ மின் ஆட்சி என்றால் என்ன? அதில் பெண்கள் எவ்வாறு பங்குகொள்ள முடியும்?

*- ரமா, துறைமுகம்*

ஆங்கிலத்தில் E - governance என்று சொல்கிறார்கள். e என்பது electronic (மின்) எனப் பொருள்படும். அரசு நிர்வாகத்தை மின் மயமாக்குவதன் மூலம் சிறப்பாக செயல்பட வைக்க முடியும். உதாரணமாக, இந்தியாவில் திருவாரூர் மாவட்ட நிர்வாகம்தான் முதன் முதலில் ஓரளவு மின்மயமானது. இதன்மூலம் நிலப்பட்டாவை மக்கள் எளிதாகப் பெறமுடிந்தது. அரசு தேர்வுத்துறை மின்மயமானதன் மூலம் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்கள் மதிப்பெண்களை உடனே பெறமுடிந்தது. திருவாரூர் மாவட்ட நிர்வாகத்தை மின்மயமாக்கியது யார் தெரியுமா? அந்தப் பெருமைக்குரியவர் உமாசங்கர், இ.ஆ.ப. என்பவர். இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். மின் ஆட்சி என்பது நிர்வாகத்தை மின்மயமாக்குவதன் மூலம் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காணுதல், எளிமை, ஊழலின்மை, பொதுமை, பன்மைத்தன்மை, அதிகாரப் பகிர்வு சாத்தியம் முதலியவைகளை உள்ளடக்கியது. மின் ஆட்சியில் பெண்கள் எவ்வாறு பங்குபெற முடியும் என்பது குறித்து சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கடந்த டிசம்பர்



படிப்பகம்

www.padippakam.com

20, 21 தேதிகளில் கருத்தரங்கு நடந்தது. அதில் சிலவற்றை மொழியாக்கம் செய்து புதிய கோடாங்கியில் வெளியிட வாய்ப்பு உள்ளது. இக்கருத்தரங்கை அனித்ரா ட்ரஸ்ட் என்ற தலித் தொண்டு நிறுவனமும் (ஹரிகுமாரி, இன்பக்குமார்), தலித் பன்னாட்டுக் கல்வி மய்யமும் இணைந்து நடத்தின.

**தலித் பட்ஜெட் குறித்த முன்விவாதத்திற்கு நிதியமைச்சர் பொன்னையன் அவர்கள் ஜனவரி 25-இல் தலித் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவார் என சென்ற புதிய கோடாங்கி தலையங்கத்தில் படித்தறிந்தேன். என்னைப் போன்றவர்களும் கலந்துகொள்ளலாமா?**

***- கோவிந்தன், தேனி***

இது மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் அல்ல. இதுவரை தலித்துகளுக்கு தனி பட்ஜெட் தேவை என்று பதிவு செய்து விவாதித்தவர்களும், தலித் சிந்தனையாளர்கள், தலித் இயக்கப் பிரதிநிதிகள் மட்டுமே அழைக்கப் பெறுவர். ஆனால் அதற்கு முன்னோடியாக டிசம்பர் 23 அன்று சென்னை எழும்பூர் ICSA-வில் சுமார் அறுபது பேர் கலந்துகொண்ட தலித் பட்ஜெட் முன்விவாதக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அமைச்சரை சந்திக்குமுன் ஒருமித்த கருத்து உருவாக்க இக்கூட்டம் நடத்தப்பட்டது. சிவகாமி, கிறித்துதாசு காந்தி, அருட்தந்தை மனு, அனித்ரா ட்ரஸ்ட் இன்பக்குமார், வாணிதாசன், அயன்புரம் ராஜேந்திரன், பேரா. கல்விமணி, தய். கந்தசாமி, சன்னா, வை. ஜெயராமன், சி. நிக்கோலஸ், சக்கிலியர் பேரவைத் தலைவர் காளிமுத்து போன்ற பலர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

**தாட்கோ மூலம் நிலமில்லாத தலித்துகளுக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவில் நிலம் வழங்கப்படுவதாக அறிகிறேன். இதில் ஒரு லட்சம் ரூபாயை வங்கிக் கடனாகப் பெறவேண்டும் என்று உள்ளது. இதனால் பலர் பயன்பெற முடியாமல் உள்ளனர். இத்திட்டத்தை மாற்றியமைக்க வழி உண்டா?**

***- ராஜேந்திரன், கல்பாக்கம்***

முதன் முதலில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆயிரத்து எட்டு நூறுகளில் அதாவது ஏறக்குறைய 175 ஆண்டுகளுக்கு முன்பாக ஆற்காடு நவாப்புகளிடமிருந்து பிரிட்டிஷ்காரர்களுக்கு ஆட்சி கைமாறியபோது, பிரிட்டிஷ்காரர்கள் ஜமீந்தாரி முறையைப் பின்பற்றித்தான் நிர்வாகம் நடத்திவந்தனர். பிறகு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நிலங்களைக் குத்தகைக்கு விடுக்கும் வழக்கமே இருந்து வந்திருக்கின்றது. 1812-இல் உழவர்களுக்கு (உழவு வாரி) நிலம் அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு பிறகு படிப்படியாக நிலம் பிரித்தளிக்கப்பட்டது. "It was now ordered that the ryots were everywhere to be freely allowed to take up or give up lands as they thought fit at the time of the jamabandhi every year. The settlement was to be made in all cause with persons who had a 'hereditary prescriptive right' to enter into direct engagement with the Government, and wherever there was over assessment, it was to be lowered" (pg. 399-400 Gazetteer of India, South Arcot, Publis[hed] by Government of Madras 1962, compiled by Dr. B.S. Ba[...] B.A. (Hons) Ph.D. (Lond.) Curator, Madras Record Office) தென்னாற்காடு மாவட்ட கெஸட்டியரில் காணப்படுவது யாதெனில், ஒவ்வொரு வருடமும் ஜமாபந்தி காலங்களில் உழவர்களின் வேண்டுகோள் கவனிக்கப்பட்டு, அவர்களுக்கு பாரம்பரியமாக இருந்து வந்த நிலவுரிமையின் அடிப்படையில் வரி குறைக்கப்பட்டு, நிலம் தானமாக வழங்கப்பட்டது என்பதாகும். யாருமே நிலம் சொந்தமாகக் கொண்டாட முடியாத காலத்தில், நிலத்தை பிரிட்டிஷாரிடமிருந்து ஓசியாகப் பிறர் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்று ஏழை தலித்துகள் ஒரு லட்சம் கடன்பட்டு நிலம் வாங்க வேண்டுமாம். ஒரு கண்ணுக்கு வெண்ணெய், இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பா? வரலாறு எதனால் மறைக்கப்படுகிறது என்பதை இப்போதாவது புரிந்துகொள்ளுங்கள். நிலமில்லாத தலித்துகள் ஆதி-திராவிடர்கள் என்ற பாரம்பரிய உரிமையின் அடிப்படையிலும், ஆதிவாசிகள் - பழங்குடிகள் காட்டுக்கும் மலைக்கும் சொந்தக்காரர்கள் என்ற அடிப்படையிலும் நிலத்தை தானமாகப் பெற எல்லா வகையிலும் தகுதி பெற்றவர்கள். ஆகையால் நிலவுரிமை கோரி அவர்கள் போராடவேண்டிய அவசியம் உள்ளது.

## சுமை

■ சத்யானந்தன்

அவன் அந்த சாலையைக் கடக்கிறான்
சாலையின் பெயர், பெயரின் காரணம்
தெரியாதவனாய்...

சாலையின் இருமருங்கும் நாட்டப்பட்ட
சுமை தாங்கிகள் சொல்லாத கதைகள்
நடப்பட்ட மரங்கள் சொல்லும்
கதைகள் அறியாதவனாய்...

சாலை தொடக்கம் முடிவு இடையே
விரையும் வண்டிகளின் பயணியில்லை
அவன் - கண்ணும் கருத்துமாய் எதன்
மீதும் உரசாமல் முதுகுச் சுமையைக் காத்தபடி...

அவனைக் கண்டும் காணாமல்
எல்லோரும் விரைகிறார்
அவன் சுமையை இறக்கினால் -
கட்டைப் பிரித்தால்
ஒரு நிலைக்கண்ணாடி இருக்கலாம் என்பதால்...



படிப்பகம்

www.padippakam.com

# முத்துச் சாம்பான்

■ கோவேத. சுவாமிநாதன்

தாளடி கிராமத்தில் பார்ப்பனர் சேரி, சேரியாக இல்லை. செல்வாக்குப் பெற்ற சாதியார் பலர் அதைப் பிடித்துக் கொண்டார்கள். பார்ப்பனர்களும் தங்களுடைய நிலங்களை மறவர்கள், வன்னியர்கள், வெள்ளாளர்கள், முதலியார்கள் போன்றோரிடம் உழவடைக்கு விட்டு அவர்களின் அடாவடித் தனத்திற்கும் தந்திரங்களுக்கும் மோசடித்தனங்களுக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் நிலங்களை அவர்களிடமிருந்து மீட்கத் தெம்புமில்லாமல் நலிந்து போனார்கள். படிப்பு, வேலை, அதிகாரம் என்று ஒவ்வொருவராககிராமத்தை விட்டு வெளியேறி திக்குக்கு ஒருவராய்க் குடிபெயர்ந்து விட்டார்கள். போனவர் போக எஞ்சியவர் ஒரு பத்து குடும்பத்தினர். அவர்கள் பார்ப்பனச் சேரியின் பழைய பெருமைகளை அசை போட்டபடி ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இராமசுப்பு அய்யர் ஊருக்கு மேற்கே மலையடிவாரத்தில் இரு நூறு ஆண்டுகள் பழைமை உடைய பெருமாள் கோவில் பூசாரி. அய்யரின் பூசாரித்தனத்திற்காக நிர்வாகம் பத்துக்குழி நிலத்தையும் மாதச் சம்பளம் என்று ஏதோ ஒரு சிறிய தொகையையும் அனுமதித்திருக்கிறது. மற்றபடி எப்போதாவது வந்து போகும் பக்தர்கள் திருநீறுத் தட்டில் போடும் காணிக்கைதான். இருப்பதைக் கொண்டு குடும்பம் நடத்தி வந்தவர் அவர். மூத்தாள் இறந்து போனபின் இரண்டாம் தாரம் கட்டினார்.

மூத்தாளுக்குப் பிறந்த மகன் செண்பகராமனோடு சேர்த்து ஆறு பிள்ளைகள். கடைசியில் இரகுராமன். இடையில் நான்கு பெண் பிள்ளைகள். அவர்கள் அவ்வளவாக படிக்கவில்லை. அவர்கள் படிக்க விரும்பினாலும் அவர்களை அய்யர் படிக்க வைத்திருக்க முடியாது. விரிக்க மடிக்க பெரிதாக அவரிடம் ஏதுமில்லை. அதனால் அவர்களின் தகுதிக்கேற்ற வகையிலும் தனது பொருளாதார நிலைமைக்கு பொருந்தி வருகிற வகையிலும் சொற்ப வருமானமுடைய வரன்களுக்குப் பிடித்துக் கொடுத்தார். பெண் பிள்ளைகளும் தமது வீட்டின் நிலைமையை அறிந்து மரியாதையாக குடும்பம் நடத்தி வந்தனர்.

இரகுராமன் செல்லமாக வளர்ந்தவன். தகப்பனின் கைக்குள்ளும் காலுக்குள்ளுமாக ஓடிக் கொண்டிருந்தவன். அதனால் "அவன்தான் தனக்குப் பின் கோயில் காரியங்களை கவனிக்க வேண்டும், அவன்தான் தனக்கு இறுதியாக காரியங்களைச் செய்யவேண்டும்" என்று நினைத்த இராமசுப்பய்யர் சிறுவயதிலிருந்தே அவனைக் கோயிலுக்கு அழைத்துப்போய் பூசாரித்தனத்திற்கான காரியங்களை பழக்கி விட்டார். அவனும் தந்தை சொல்லிற்குப் பிசகாமல் தொழிலைக் கற்றுக் கொண்டான். மூத்தாளோ தன் மகன் செண்பகராமனை நன்றாகப் படிக்கவைத்து பெரிய வேலையில் அமர்த்தவேண்டும் என்று ஆசைப் பட்டிருந்தாள். அதனால் அய்யர் தனது மற்ற குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் கூட ஒதுக்கிவைத்து விட்டு செண்பக ராமனின் கல்விக்கு அதிகம் செலவழித்தார். அவனுக்காக அதிக நேரம் ஒதுக்கி தகுந்த ஆசிரியர்களைக் கண்டு பிடித்து அவனைப் படிக்க வைத்தார். ஆனால் அவன் மேலே வருவதாகத் தெரியவில்லை. தத்தித் தத்தி நடந்து ஒருவாறு பள்ளி இறுதி வகுப்பைத்தான் அவனால் கடக்க முடிந்தது. எனவே கல்லூரியில் சேர்த்துவிட்டால் நன்றாகப் படித்துவிடுவான் என்ற நம்பிக்கை அய்யர்க்கு இல்லாமல் போயிற்று. செண்பகராமனும் படிப்பில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. அவன் தாய்வழிப் பாட்டனைப் போல் தந்திரமும் பிடிவாதமும் திமிர்வாதமும் பிடித்தவனாக இருந்தான். அதனால் அவனை எப்படியாவது வெளியூரில் வேலை ஒன்றினை வாங்கிக் கொடுத்து 'செட்டில்' பண்ணிவிட வேண்டும்; இல்லையென்றால் தன் கடைசி மகன் இரகுராமனை கழுத்தை நெறித்து விடுவான் என்று அஞ்சினார் அய்யர்.

இராமசுப்பையரின் சிற்றப்பா கும்பகோணத்தில் பெரிய மிராசுதார். அவர் வீட்டில் சம்பந்தம் செய்த ஒருவர் ஊட்டி அரவங்காட்டில் அமைந்திருக்கும் கருமருந்து தொழிற்சாலையின் நிர்வாகியாக இருந்தார். அது மத்திய அரசு நிறுவனம். இராணுவத்திற்கு வேண்டிய சில பொருட்களைத் தயாரித்து அனுப்புகிறது. அதற்குள் எப்படியாவது நுழைத்துவிட்டால் போதும் மகனின் வாழ்க்கை பிரச்சினை இல்லாமல் போகும் என்று கருதி அதற்கான ஆட்களின் கால்களில் விழுந்து செண்பகராமனுக்கு கிளார்க் உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். செண்பகராமன் பிரச்சினை ஏதும் இல்லாமல் பிழைப்பை நடத்துவான் என்று இராமசுப்பையர் நினைத்தது சரிதான். ஆனால் செண்பகராமனால் சக ஊழியர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளும் சோதனைகளும் கணக்கில் அடங்கா என்பது அய்யருக்கு அப்போது தெரிய நியாயமில்லை.

கருமருந்துத் தொழிற்சாலையில் கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் இருந்தும், வட இந்திய மாநிலங்களில் இருந்தும் ஊழியர்கள் பணிபுரிந்து வந்தார்கள். அனைவரும் தத்தம் துறைகளில் சிறப்பான பயிற்சியும் அனுபவமும் நிரம்



படிப்பகம்

www.padippakam.com

பியவர்கள். தொழில் திறமையில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை. அப்படி வளர்த்துக்கொண்டிருந்ததால்தான் அவர்கள் அங்கே தாக்குப் பிடித்து நிற்க முடிந்தது. ஏனோதானோவென்று இருந்தால் வருடக் கடைசியில் நாற்காலியை விட்டு வெளியே தூக்கிப் போட்டு விடுவார்கள் நிர்வாகத்தினர்.

அங்கே போய்ச் சேர்ந்த ஒரு மாதத்திலேயே 'நம்மால்' தாக்குப் பிடிக்க முடியாது என்று கண்டு கொண்டான் செண்பகராமன். இளம் வயது. துருதுருவென்று இயங்கவேண்டிய பருவம். அவன் தொழிலைக் கற்றுக்கொண்டிருக்க லாம். ஆனால் அது அவனால் முடிய வில்லை. அடிக்கடி நாற்காலியை விட்டு எழுந்து வெளியே போவான். பாத்ரூமிலும் கேண்டினிலும்தான் அதிக நேரத்தைக் கழித்தான். கண் காணிப்பாளர் அவனுக்குச் சதா அறிவுறுத்தவும் விளக்கஞ் சொல்ல வும் அவனைக் கண்டிக்கவும் எச் சரிக்கை செய்யவுமாய் இருந்தார். சர்வீஸில் இப்படிப்பட்ட மக்கு வையோ சண்டியையோ சந்திக்க வில்லை என்று அலுத்துக்கொண் டார். மேலதிகாரிக்குப் போய்ச் சேரவேண்டிய கோப்புகள் காலா காலத்தில்தயாரிக்கப்படாமல் தேங்கிக்கிடந்தன. அதனால் கண் காணிப்பாளர் அவனுக்கு எதிராக அறிக்கை தாக்கல் செய்தார். இரக சியக் கோப்புகளில் செண்பகரா மனுக்கு எதிராகக் குறிப்புகள் பதி வாயின. எப்படியோ அவற்றை அறிந்துகொண்ட அவன் கண் காணிப்பாளரைப் பற்றியும் ஏனைய ஊழியர்களைப் பற்றியும் மேலிடத் தில் போட்டுக் கொடுக்க ஆரம்பித் தான்.

நிர்வாகி தனக்கு ஒரு வகையில் உறவுக்காரர் என்பதைப் பயன்படுத் திக் கொண்டு அவர் பங்களாவிற் குப் போக்குவரத்து செய்து வாய்ப் புக் கிடைக்கும்போதெல்லாம் பற்ற வைத்தான். நிர்வாகிக்கு அது தேவையாகவும் இருந்தது. சுமார் ஐந்நூறு அறுநூறு பேர் வேலைசெய் யும் தொழிற்சாலையில் செண்ப கராமனைப் போல் ஓரிருவரை நிர்வாகிகளும் வைத்துக்கொள்ள வேண்டியவராயினர். செண்பக ராமன் சொற்களுக்கு மதிப்பு இருந் தது. செண்பகராமன் கண்காணிப் பாளரின் சொல்லை அசட்டை செய்து நாற்காலியை காலியாக விட்டுவிட்டு வெளியே போய் விடுவது, கோப்புகளைக் காலா காலத்தில் தயார் செய்யாமல் இருப் பது போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்து மேலிடத்துக்கு கொண்டு போகும் குறிப்புகள் வரவேற்கப் படுவதில்லை என்ற நிலை உரு வாயிற்று. கண்காணிப்பாளர்கள் அதிருப்தி அடைந்தார்கள். உடன் ஊழியர்களில் சிலர் செண்பகரா மனோடு பேசுவதைத் தவிர்த்தனர். சிலர் அவனைக் கண்டு பயந்தனர். சிலர் அவனை தாஜா செய்துகொண் டனர். கும்பகோணத்துச் சம்பந்த காரர் நிர்வாகியாக இருந்த வரை யில் செண்பகராமன் கொடிகட்டிப் பறந்தான். அவனைப் பற்றி இரகசி யக் குறிப்பேட்டில் சிறப்பாக எழுதி வைத்தார் அவர். அவனைப் பேக் கேஜிங் துறையில் இருந்து மாற்றி தலைமை அலுவலகத்தில் பொறுப் பான பதவியில் அமர்த்தினார். சகஜ நிலையில் அப்படிச் செய்ய முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். தொழிற் சங்கங்களுக்கும் தெரியும். ஆனால் நிர்வாகியின் முடிவு. யாரும் ஒன்றும் பேச முடிய வில்லை. விதிகளையும் மரபுகளை யும் மீறுவது என்று நிர்வாகம் முடிவு செய்துவிட்டால் அதற்கான நியாயங்களையும் தர்மங்களையும் பேசுவது அதற்கு ஒன்றும் கடின மல்ல.

இந்நிலையில் நிர்வாகி ஓய்வு பெற்றார். தனக்குப் பின் தானிருந்த இடத்திற்கு தன் சாதிக்காரனே வரவேண்டும் என்பதற்காக, தனக் குக் கீழே இருக்கும் எவரும் பதவி உயர்வு பெற்றிடக் கூடாது என்ப தைத் திட்டமிட்டு அவர்கள் மேல் மெமோக்களையும் பாதகமான இரகசியக் குறிப்புகளையும் அறிக் கைகளையும் தயார் செய்து வைத்து விட்டுத்தான் போயிருந்தார். அவர் நினைத்தபடியே கர்நாடகத்தில் இருந்து ஒரு ஐயரை தூக்கிக் கொண்டு வந்து போட்டது டெல்லி மேலிடம்.

கர்நாடக ஐயர் செண்பகராமன் நினைத்தது போல் வளைந்து கொடுப் பவராக இல்லை. கண்டிப்பானவர். கடினமாக உழைப்பவர்களையும், புத்திசாலித்தனமாக உழைப்பவர் களையும் அவருக்குப் பிடித்தது. கடமை தவறாத ஊழியர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கிய தோடு அவர்களுக்குச் செய்யவேண் டிய வசதிகளையும் செய்தார். பதவி உயர்வுக்கான வாய்ப்புகளை யும் ஏற்படுத்திக் கொடுத்தார். ஊழி யர்களின் ஒத்துழைப்பால் தொழிற் சாலையின் உற்பத்தி பெருகிற்று. கர்நாடகத்திற்கோ தமிழ்நாட் டிற்கோ வரும் மத்திய அமைச் சர்கள் கருமருந்துத் தொழிற்சாலை யைப் பார்க்காமல் போகமாட் டார்கள். அகில இந்திய அளவில் அதன் பெயர் பிரபல்யமானது.

உழைப்பாளர்களும் இயந்திரங் களும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தபோது செண்பக ராமனால் நாற்காலியில் அடங்கி வேலை செய்ய முடியவில்லை. கோப்பு களைச் சரிவரப் பைசல் செய்யத் தெரியவில்லை. இதுதான் நல்ல தருணம் என்று அவன் மீது புகார்ப் பட்டியல் தயார் செய்தனர் சக ஊழியர். விளைவு இரண்டு மாத காலத்திற்கு இடை நீக்கம் செய்யப் பட்டான் செண்பகராமன். அவன் கனவுகள் எல்லாம் நொறுங்கிப் போயின. இனி கருமருந்துத் தொழிற் சாலை என்னும் சொர்க்கபுரிக்கு அவன் நிர்வாகி ஆக முடியாது. எனவே எப்படியாவது கர்நாடக ஐயரை மடக்கிப் போட்டு இடை நீக்க உத்தரவை வாபஸ் செய்ய வேண்டும் என்று நினைத்துக் காய் களை நகர்த்தினான்.

தன் தந்தையை வரவழைத்தான். அவர் ஓய்வு பெற்றுப் போனவரும் கும்பகோணத்துச் சம்பந்தகார ருமான பழைய நிர்வாகியைப்போய்ப் பார்த்தார். அவரின் கால்களைப் பிடித்துக் கெஞ்சினார். தன் மகனின் எதிர்காலம் பாழாகிப் போய்விடக் கூடாது, அவனுக்கு ஏற்றது செய்ய வேண்டும் என்று மன்றாடினார். பழைய நிர்வாகி ஊட்டிக்குச் சுற் றுலா வருவதைப் போல் வந்து புதிய நிர்வாகியைச் சந்தித்துப் பேசி னார். அதற்கு கர்நாடக ஐயர் உடன் படவில்லை. ஆனாலும் தகுந்த உபசரிப்புக்களுடன் அனுப்பி வைத்



படிப்பகம்

www.padippakam.com

தார். அதில் பழைய நிர்வாகிக்கு படு கோபம். இந்த கர்நாடகக்காரன் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்... இவனை ஒரு வாரத்தில் மாற்றிக் காட்டுகிறேன் பார்... என்று சவால் விட்டார். "இவன் வாலை எப்படி நறுக்குவது என்று எனக்குத் தெரியும். நீங்கள் தைரியமாய் போங்கள்" என்று இராம சுப்பு அய்யரை அனுப்பி வைத்தார். அவர் சொன்னபடியே டெல்லியில் இருக்கும் தன் உறவுக்கார உயர் அதிகாரிக்குப் போன் செய்து மேலாளரை அசாமுக்கு மாற்றிக் காட்டினார். அதற்குப் பதிலாக அரியானாவில் இருந்து ஒரு ஐயர் வந்து பொறுப்பேற்றார். ஒருவர் போக ஒருவர் வந்தாலும் ஐயர்களே நிர்வாகிகளாக வருவது கருமருந்துத் தொழிற்சாலையின் ஏனையோருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு தொழிற்சாலைக்கு உள்ளே கூட ஏனையோர் திட்டமிட்டு நிர்வாகியாக வரமுடியாதபோது அகில இந்திய அளவில் இந்த ஐயர்களால் திட்டமிட்டு எவ்வாறு இயங்க முடிகிறது, பெரிய ஆச்சரியம்தான் என்பது ஊழியரின் எண்ணம்.

அரியானா ஐயர் அனுசரித்துப் போகிறவர். அதுவும் ஐயர்கள் என்று போய்விட்டால் பாசம் அவருக்குப் பொத்துக்கொண்டு வடியும். கைச்சுத்தம் இல்லாதவராகவும் இருந்தார். செண்பகராமனுக்கு நல்ல காலம். அடித்துப் போட்ட பாம்பு காற்றைக் குடித்துப் புத்துயிர் பெற்றதுபோல் புதுத்தெம்பு அடைந்தான். அரியானா ஐயரிடம் பல் காட்டினான். அவனது இடைநீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டது. மீண்டும் பணிக்குத் திரும்பினான். தன்னை எந்தக் கொம்பனாலும் வேலையை விட்டுப் போகச் சொல்ல முடியாது, போகவும் மாட்டேன் என்ற பிடிவாதம் அவனுக்கு. ஐயருக்குப் புதிய புதிய காண்ட்ராக்டர்களை அறிமுகப்படுத்தினான். ஒரு காற்றில் குங்கலிங்க மரங்கள் சாய்ந்து விழும். தொழிற்சாலையின் மேற்கோப்புகளும் சுற்றுச் சுவர்களும் நீர்த்தொட்டிகளும் ஏனைய கட்டுமானங்களும் உடைந்து நொறுங்கும்.சாய்ந்து விழுந்த மரங்களை அப்புறப்படுத்துவதற்கும் உடைந்து நொறுங்கியவற்றை மீண்டும் கட்டுவதற்கும் காண்ட்ராக்ட் விடப்படும். ஊட்டியில் அடிக்கும் பெருமழையும் வீசும் புயல் காற்றும் தொழிற்சாலையில் ஏராளமான நட்டத்தை ஏற்படுத்தும். வருடமெல்லாம் ஏதேனும் ஒரு காண்ட்ராக்ட் வேலை நடந்து கொண்டே இருக்கும். ஐயருக்குச் செண்பகராமன் காண்ட்ராக்டர்கள் மூலம் புதிய புதிய வசதிகளைச் செய்துகொடுத்தான். ஐயர் டெல்லியிலும் சண்டிகரிலும் முதலீடு செய்து கொண்டிருந்தார். வீட்டு மனைகளையும் விவசாய நிலங்களையும் வாங்கிப்போட்டுக் கொண்டிருந்தார். தன் மனைவிக்கு ஷேர் மார்க்கெட் பற்றிய பத்திரிக்கைகளையும் அறிக்கைகளையும் அறிமுகப்படுத்தி அவளைக் குஷிப்படுத்திக் கொண்டிருந்தார். சமைப்பதற்கும் ஏனைய வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் ஆட்களைப் போட்டுவிட்டு இடுப்பில் சாவிக் கொத்து 'சலுக் சலுக்' என்று குரல் கொடுக்க நடந்து எக்ஸிக்யூட்டிவ் ஸ்பெக்ஸ் அணிந்து கம்பெனிகளின் பைனான்சியல் ஸ்டேட்மெண்டுகளை விமர்சனம் செய்யத் தொடங்கி இருந்தாள் அவர் மனைவி.

சிற்சில நாட்களில் செண்பகராமன் தன் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பங்களாவிற்குப் போய் ஐயரையும் அவர் குடும்பத்தினரையும் விநாயகர் கோவிலுக்கு கூட்டிப் போவான். நாளாவட்டத்தில் செண்பகராமன் ஐயர் வீட்டு நிகழ்ச்சிகளில் முக்கிய ஆலோசகனாகவும் உதவியாளனாகவும் மாறினான். ஐயரும் அவனை தனக்குப் பிறகு நிர்வாகியாகப் பதவி உயர்வு பெறும் அளவிற்கு கோப்புகளை தயார் செய்து வைத்தார். அதிகாரத்தில் உள்ளவர்கள் நாயைச் சிங்கம் என்றும் சொல்லலாம், சிங்கத்தை நாயென்றும் சொல்லலாம் அல்லவா? செண்பகராமன் சிங்கமாக ஆக்கப்பட்டான். ஆம். அரியானா ஐயருக்குப் பிறகு கருமருந்துத் தொழிற்சாலையின் நிர்வாகியாக ஆனான்.

நிர்வாகியாக உயர்ந்து சம்பளமும் ஏனைய வசதிகளும் கைநிறைய கிம்பளமும் பெற்றுச் சுகபோகமாக வாழ்ந்துவரும் செண்பகராமனுக்குத் தன் தந்தையின் காலத்திற்குப் பிறகு கிடைக்க இருக்கும் புரோகித உரிமையையும் மானியமாக விடப்பட்ட பத்துக் குழி நிலத்தையும் விட மனமில்லை. அவை இரண்டும் தம்பி இரகுராமனுக்குப் போவதில் உடன்பாடு இல்லை. அதனால் செண்பகராமன் தன் தந்தையைப் பார்க்கவரும்போதும் அல்லது விடுமுறை நாட்களில் தன் குடும்பத்தோடு ஊருக்கு வரும்போதும் தன் தம்பியோடு புரோகிதம் பண்ணப் பெருமாள் கோவிலுக்குப் போனான். அவனுக்கு உரிமை இருக்கிறது என்றாலும் அதிகம் படிக்காமல் தன் காலடியிலேயே வளர்ந்து உள்ளூரிலே ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு தான் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழும்போதெல்லாம் மருத்துவம் பார்த்துச் சவரட்டணை செய்துவரும் தனது இளைய மகனுக்கு அந்த உரிமைகளை விட்டுக்கொடுக்க மனம் இல்லாதவனாக செண்பகராமன் இருக்கிறானே என்ற வருத்தம் இராமசுப்பையரின் மனத்தில் திரைகட்டலாயிற்று. தன் கவலையை ஒரு நாள் செண்பகராமனிடம் தெரிவித்தார். தம்பிக்கு அவ்வுரிமைகளை விட்டுக்கொடுத்துவிடு என்று கேட்டார். தந்தையின் வேண்டுகோளில் இருக்கும் நியாயத்தை அவன் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. அதற்குப் பிறகுதான் அவன் இன்னும் வேகமாக இயங்கினான்.

❑❑❑

அன்றொருநாள் மழை பொழிந்து கொண்டிருந்தது. நனைந்தபடியே புல்கட்டு ஒன்றைச் சுமந்து வந்து பின்கட்டில் கட்டியிருக்கும் பசுவிற்கும் கன்றிற்கும் புல்லைப் பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தான் முத்துச்சாம்பான்.கடந்த பத்துத் தினங்களாகவே இராமசுப்பையர் இளைப்பு நோயில் அவதிப்பட்டுத் தொழுவோரத்தில் கயிற்றுக் கட்டிலில் நுடக்கிப் படுத்துக்கிடந்தார். அவர் பேசி ஆறு மாதம் ஆகிறது. இளைய மகனும் அவன் குடும்பமும் நிர்க்கதி ஆகிவிடுமோ என்ற கவலை வேறு அவரை அரித்துக் கொண்டிருந்தது. முத்து அவரிடம் இருபது ஆண்டுகளாக வேலை செய்கின்றான்.அவனைப் பார்ப்பதில் அய்யருக்கு ஓர் ஆறுதல்.



படிப்பகம்

www.padippakam.com

வீட்டிற்குள் இருந்து காபி டம்ளரை ஏந்திக் கொண்டு பின் கட்டிற்கு வந்த செண்பகராமன்,

"ஏ... முத்து இன்னமும் நீதான் காட்ட உழுறையா?" என்று கேட்டான்.

"ஆமாங்க இருவது வருஷமா" பசுவின் முதுகையும் கழுத்தையும் தடவிக் கொடுத்தபடி இருந்தான். அது நாக்கைச் சுழற்றி புல்லை அள்ளுவதைப் பார்த்துக் கொண்டிருந்த முத்து பதில் சொன்னான். இராமசுப்பு அய்யரைக் காட்டிலும் ஒரு ஐந்து வயது குறைந்தவன் அவன்.

"ஏதாச்சும் எழுத்து இருக்கா?"

"ஆமாங்க பெரியவர் இருவது வருஷத்துக்கு முன்னால் எழுதிக் குடுத்த ஒழவடப் பத்திரம் இருக்கு"

"அது தப்புடா... பெரியவருக்கு வெவரம் இல்லைஅப்படியே விட்டுட்டாரு... நாளைக்கு உழுகிற வனுக்குதான் நிலம் சொந்தமின்னு கோர்ட்டுக்கு நீ போயிட்டா"

"நான் பெரியவரு முகத்துக்காக உழுதுகிட்டிருக்கேன். எனக்கும் சட்டம் தெரியும். இது வரையில் ஏதாச்சும் பிரச்சினை பண்ணி இருக்கேனா. பெரியவருக்கு நல்ல மனசு. என்னையும் என் குடும்பத்தையும் மதிப்பா வச்சிருக்காரு. அதுக்கு மேலையா இந்த காடுகர" என்றான் முத்து.

"நீ நல்லவன்தான். உன் பையனுக வில்லங்கம் பண்ணிட்டானுங்கன்னா? ஆனாலும் காட்ட நீயே உழு... பத்திரத்த என் சம்சாரம் பேருக்கு மாத்தி எழுதிக்கிருவோம்."

"நீங்க சந்தேகப்பட வேணாம். பழைய எழுத்த எடுத்து வந்து தந்திருறேன். கிழிச்சிப் போட்டுருங்க."

நல்லதாகப் போயிற்று என்று எண்ணியவனாக செண்பகராமன் சொன்னான்,

"போ... போ... எடுத்து வா..."

முத்துவின் வீடு இரண்டுதெருக்கள் தள்ளித்தான் இருந்தது. மழையில் நனைந்தபடியே விருட்டென்று ஓடி தகரக்குழல் ஒன்றினை எடுத்து வந்தான்.

"இந்தாங்க... இதுக்குள்ளதான் இருக்கு எக்ரிமண்டு. நீங்க நெலத்த யாருக்கும் விட்டுக்காதீங்க. ஐயர் சொத்துக்கு சாம்பான் பொறக்கல" என்று கொடுத்தான். கட்டிலில் வாய்பேச முடியாமல் படுத்துக் கிடந்த பெரியவரை நன்றிப் பெருக்குடன் பார்த்தபடியே கொட்டத்தை விட்டு வெளியேறினான் முத்து.

மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த இராமசுப்பையரின் மனதில் தூக்க முடியாத பாரம். கண்களில் இருந்து பொலபொலவென்று நீர்பெருகித்தலையணையை நனைத்தது செண்பகராமனைப் பார்த்தபடி.

"என்னையும் முத்துவையும் பிரிச்சிட்டையேடா பாவி" என்று எண்ணியவராய் கண்களை இறுக்கி மூடிக்கொண்டார். •

## கவிசங்கர் கவிதைகள்

கடைசியாய் முடியுமுன்
பார்வையில் தொடர்கிறது
என் தவிப்பு

நீ எதிர்படும்போது
தொலைந்து போகிறது
என் நிதானங்கள்

சூட்டின் தீவிரம் பொங்கி
உலைமூடி தள்ளும்
வெந்துபோன தண்ணியாய்
என் மனம்
நெருப்பாய் உன் நினைவுகள்...

குறைப்பானை
அதிர்வுகளாய்
அலைந்து அலைந்து போகிறது
என் உயிர்

முழுசாய் நிரப்பிவிடு
இல்லை முழுசாய் உடைத்துவிடு
பானையை...
•

உனக்கான தேடலை
செய்கிறது என் உடல்

உனக்கான அலங்காரத்தை
செய்கிறது என் கைகள்

உனக்கான நிம்மதி இருக்க
வாங்குகிறது என் மூச்சி

உனக்காக தொடங்கி
முடிகிறது என் பொழுதுகள்

எனக்கான...
எனது முகம்
எனது நாட்கள்
எனது அடையாளங்கள்
அடர்ந்து நிற்கிறது இருட்டாக.
•



படிப்பகம்.

www.padippakam.com


# கணிதம் நம் உடைமை

## 5

■ குடியரசன்

சதுரத்தின் பரப்பளவு $a^2$, செவ்வகத்தின் பரப்பளவு LB என நாம் வடிவ கணிதத்தில் படித்துள்ளோம். சதுரத்தின் ஒரு பக்கம் a ஆக இருக்கும்போது அதன் பரப்பளவு $a^2$ ஆகிறது. செவ்வகத்தின் நீளம் L ஆகவும், அகலம் B ஆகவும் இருக்கும்போது அதன் பரப்பளவு LB ஆக இருக்கிறது. இந்த கோட்பாடு 1000 ஆண்டுகளுக்கும் முந்தியது என இன்றைய கணித வல்லுநர்கள் அறுதியிட்டுள்ளனர். இம்முறையை விளக்கும் வகையை தொகையிடல் மூலமாக நிரூபித்துள்ளனர்.

கீழ்க்காணும் எளிய கணக்கைப் பாருங்கள்



(படம் I)

இங்கு 36 புள்ளிகள் உள்ளன. இந்த புள்ளிகளை எளிதாக எண்ணுவதற்கு நாம் இயல்பாக கையாளும் முறைதான் சதுரத்தின், செவ்வகத்தின் பரப்பளவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

⟷ இதை இடக்கை வழியாகவும்

↕ இதை நெட்டிய அளவாகவும், கொள்ளப்படுகிறது.


இடக்கை அளவை Row எனவும், நெட்டிய அளவை Column ஆகவும் கொள்ளலாம். இதன் அடுத்த வெளிப்பாடாக, 6 Row-வும், 6 Column-மும் உள்ளதால் மொத்த புள்ளிகள் 6 x 6 = 36 என எளிதாகக் கணக்கிடுகிறோம். அடுத்த உதாரணமாக,



(படம் II)

இங்கு Row -3; Colum 5.

எனவே மொத்தப் புள்ளிகள் 3 x 5 = 15. அதாவது Row-வையும், Column-த்தையும் பெருக்கினால் அங்கு இடையில் உள்ள மொத்தப் புள்ளிகள் நமக்குக் கிடைக்கும்.




(படம் III) (படம் IV)

சதுரத்தின் Row இங்கு a, Column-மும் a. எனவே சதுரத்தின் கோடுகளால் அடையப்படும் மொத்தப் பரப்பு a x a = $a^2$ என கொள்ளப்படுகிறது.

செவ்வகத்தின் Row இங்கு L; Colum இங்கு B. எனவே செவ்வகத்தின் கோடுகளால் அடையப்படும் மொத்தப்பரப்பு L x B = LB என கொள்ளப்படுகிறது.

படம் I மற்றும் படம் III ஆகியன நமக்கு ஒப்பீடாகக் காட்டுவது என்ன? படம் I மீதுள்ள 6 புள்ளிகளை மட்டுமே நாம் கணக்கிடுகிறோம். படம் III-இல் உள்ள அனைத்துப் புள்ளிகளையும் கணக்கிட்டு அவற்றின் அளவு a எனக் கொண்டு கணக்கை தொடர்கிறோம்.

இதை பவுத்த வல்லுனர்கள் விளக்கும்போது, புள்ளிகள் தொடர்ச்சியாகவும், சீராகவும் இருக்கும் பட்சத்தில் அவைகட்கு இடைப்பட்ட இடைவெளியும் சீராக இருக்கும் போது, அங்கு நிகழ்த்தப்படும் செயலி [+, -,÷,x] இடைவெளியையும் உள்ளடக்கிய தீர்வாக அமையும்.


இந்த பவுத்தக் கோட்பாடு, வடிவ கணித உலகத்தின் அனைத்து இரண்டு பரிமான, முப்பரிமான வடிவங்களின் பரப்பளவு, கொள்ளளவிற்கும் எளிதாக பொருந்துவதாக நம்மால் காண இயலுகிறது.

படம் II & படம் IV-இல் Row-வும் Column-ம் வெவ்வேறு அளவுகளாக இருப்பினும் எதிர்ப்பக்கங்கள் சமமாக இருப்பதால் சீராக உருவம் கிடைக்கிறது. இவை இணையெனவும் இணைப்பக்கங்கள் எனவும் கொள்ளப்படுகிறது. இணைப்பக்கங்களால் உருவாக்கப்படும் வடிவ கணித உருவம் நீளம் x அகலம் என்ற பரப்பை கைக்கொள்கிறது.



படிப்பகம்

கீழ்க்காணும் படங்களில்




(படம் V)



(படம் VI)

4 x 4 = 16 புள்ளிகள், 2 x 8 = 16 புள்ளிகள் என வடிவமைக்கப்பட்டுள்ளன. படம் V-இல் தொடர்ச்சியாக உள்ள 4 புள்ளிகள் (↓), படம் VI-இல் 2 புள்ளிகளாகக் குறைக்கப்பட்டு, மீதம் உள்ள → அடுக்குகள் ஏற்கனவே உள்ள அடுக்குகளோடு பொருத்தப்பட்டு 2 x 8 = 16 புள்ளிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனால் தொடரும், இணையும் (series & parallel) பரிமாற்றப் பண்பிற்கு உட்பட்டதாக அமைந்து விடுகிறது.

படம் V-இன் உருவம் சதுரம்




படம் VI-இன் உருவம் செவ்வகம்




ஆனால் இங்கு அடையப்படும் பரப்பு 16 சதுர அலகுகளாகவே அமைகிறது. இதன் வாயிலாக இணையும், தொடரும் ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்யத்தக்கன என்ற பவுத்த வரையறை நவீன கணித உலகம் பெற்ற கொடையாக அமைகிறது.

இதைத் தாண்டி முப்பரிமான வடிவங்களாக கனசதுரம், கனசெவ்வகம் குறித்தும் மகாயான பவுத்த மார்க்க கோட்பாடுகளுடன் நம்மால் ஒப்புமை செய்ய இயலுகிறது.



(படம் VII)



(படம் VIII)

சதுரத்தின்மீது சதுரம் நீட்டப்பட்டு அங்கு உருவாகும் முப்பரிமான வடிவம் கன சதுரமாகும் என்பது கணித விதி. அறகஹதர்கள் என்பவர்கள் தெளிந்த அறிவுபெற்ற பவுத்தத் துறவிகள். இவர்கள் வெவ்வேறு காலங்களில் அளித்த தத்துவக் கருத்துக்களை நீட்டி அங்கு ஈடுசெய்யப்பட்ட புதிய தத்துவம் படைக்கப்பட்டால் அதுவும் முன்பு சொல்லப்பட்ட தத்துவத்தின் கூடுதல் பரிமானமாக அமையும் என்பது ஹீனயான பவுத்த சமனின்மை விதி. இந்த சமனின்மை விதியினால் மட்டுமே இரண்டு மற்றும் முப்பரிமான அளவுகளின் தோற்றங்களையும் அவைகளின் கொள்ளளவுகளையும் நம்மால் விவரிக்க இயலுகிறது.

இந்த விதிகளை இணைகரம் மற்றும் இணைகர தின்மத்தின் முறையே பரப்பளவு மற்றும் கொள்ளளவு பற்றி வரும் கட்டுரையில். - தொடரும்

# காவியின் முகம்

■ சேக்கிழார்

புதிதாக முளைத்த கடவுளின்
கைக்கூலியாக தன்னை அறிவித்துக் கொண்டவன்
நீளமான பெயர் வைத்துக்கொண்டு
ஆசிவழங்கினான் அய்யோக்கியன்

ஆசிரமம் மடங்கள்
நவீன அந்தப்புரங்களென அறியாமல்
பக்தைகள் சூழ சுவாமிகள் பரவசநிலை
மலர்ப்படுக்கை பாதபூஜை பல்லக்கு சவ்வாரி
முற்றும் துறந்தவனுக்கு

எல்லாம் துறந்தவனின்
இலவம் பஞ்சு கட்டிலுக்குக் கீழே
முட்ஸ், கோகினூர், காமசூத்திரா அயிட்டங்கள்

எவ்வரம் கேட்டாலும் தவமிருக்கும் சுவாமி
பிள்ளைவரம் மட்டும் தாராளமாக...
சங்காரம் புரிவதிலும் சாகசக்காரன்
அடப்பாவி
காட்டுக்குப் போக வேண்டியதுதானே
அதவிட்டு கண்ட கருமாந்தரமெல்லாம்
ச்சேய்...

நீயேன் கோபப்படுற
அவனும் மனுஷன்தானே...
அப்புறம் ஏன்ட அவன கும்புடுறீங்க
அவரு கைபட்டா கால்பட்டா
கஷ்டமெல்லாம் போயிரும்
இப்ப அந்த காலும் கையும்
அவன்டதானே இருக்கு
இப்ப ஏன்ட அவனுக்கு இப்படியொரு கஷ்டம்.

என்னடா அறுக்கப் போற ஆடுமாதிரி முழிக்கிற
அய்யோக்கியனுக்கு வக்காலத்து வாங்கினா
தோத்துதாண்டா போவீங்க போங்கடா
நீங்களும் உங்க...



படிப்பகம்

www.padippakam.com

# 2 சமூக மாற்றத்திற்கு துணைநிற்கும் நாட்டுப்புறக் கலைவழவக் கூறுகள்

■ கே.ஏ. குணசேகரன்

காலந்தோறும் சமூக இயக்கங்கள் நாட்டுப்புறக் கலை இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி வருகின்றன. அவை சமூக விழிப்புணர்வுக்கும் சமூக மாற்றங்களுக்கும் வழிகள் அமைத்துத் தருகின்றன. பயன்பாட்டு நிலை நாட்டுப்புறவியல் வழிநின்று அணுகுவது இங்கு நோக்க மாகின்றது. நாட்டுப்புறக் கலைக்கூறுகளைக் கொண்டு அவை எவ்வாறு இயக்கங்களுக்கும் சமூக மாற்றத்துக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன என அறியலாம்.

பயன்பாட்டு நிலை நாட்டுபுறவியல் (Applied Folk Lore) எனும் தனித்த நிலைத் துறை வழிநின்று தொடர் நிகழ்வுகளை அறிவது கோட்பாட்டு வழி நின்று ஆரா யும் முறையாகும். இந்நோக்கில் சேவியர் அந்தோனி திரைப் படப்பாடல், ஆட்டல் போன்றவைகளில் நாட்டுப் புறக் கலைக்கூறுகள் பயின்று வந்துள்ளமை குறித்துச் செய் துள்ளார். லாரி ஹாங்கோ 'வழக்காறுகளின் தொடர் நிகழ்வு' எந்த ஒரு பண்பாட்டிலும் ஒரே மாதிரியாக (stereotype) நிகழும் நாட்டுப்புற வழக்காறுகளின் வாழ்க்கை வரலாறே வழக்காறுகளின் தொடர் நிகழ்வு என்பதாகும். வழக்காறு என்ற கருத்துருவம் பிறக்கும் முன்னிலிருந்துஆரம்பித்து, வழக்காறுகளின் பொருளை அந்தந்தப் பண்பாட்டில் திறனாய்வு செய்யும் தற்காலம் வரை அத்தொடர் நிகழ்வு தொடர்கிறது. அதை நாட்டுப் புறவியலின் ஒரு நன்னெறிக் கதை என்றும் அல்லது மரபு பற்றிய அறிவுத்துறை என்றும் கூறலாம். ஏனெனில் வெறும் ஆய்வுகளையெல்லாம் கடந்து, தொடர்ந்து நிக ழும் ஆய்வுகளின் உள்ளிருக்கும் நன்னெறிப் பிரச்சினை களை அது எழுப்புகிறது; தீர்வுகளை தேடுமாறு சவால் விடுக்கிறது.

லாரி ஹாங்கோ தரும் அத்தொடர் நிகழ்வு 22 படி நிலைகளைக் கொண்டது.[1] இயக்கப் போக்குகளில் நாட்டுப்புறவியற் கூறுகள் துணை செய்துள்ளமை குறித்து ஆராய சில கூறுகளை வரையறை செய்து அவற் றின் வழிநின்று அறிய முற்படலாம்.

தோழர் அ. மார்க்ஸ் நாட்டுப்புறக் கலை இலக்கிய உற்பத்தியை சிறுவீத உற்பத்தி என்கிறார். ஒரு சமூக உருவாக்கத்தில் எவ்வாறு பல பொருளுற்பத்தி முறை கள் ஒரே சமயத்தில் விளங்கினாலும் அவற்றில் ஏதே னும் ஒன்று ஆதிக்கம் செலுத்தும். பொதுக் கருத்தி யல், படைப்பாளியின் கருத்தியல், கலை இலக்கியக் கருத்தியல் போன்ற கருத்தியற் காரணிகள் நிர்ணயிக் கப்படுகின்றன. கலை இலக்கிய உற்பத்தி என விரிவாக எடுத்துக்கொண்டோமானால் சினிமா, வீடியோ, சபா நாடகங்கள், தொலைக்காட்சி போன்றவை ஆதிக்கக் கலை இலக்கிய வழி உற்பத்தி முறை வெளிப்பாடுகளாய்க் காணலாம். நாட்டார் கலை இலக்கிய உற்பத்தி என்பது இந்தப் பெருவீத உற்பத்தி முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சிறுவீத உற்பத்தி முறையாகும்.[2]

பெருவீத உற்பத்தி முறைகளுக்கு நாட்டுப்புறக் கலை இலக்கியக் கூறுகளைப் பயன்படுத்தி மிகவும் பரந்து பட்ட நிலைகளில் இன்றைய ஊடகங்களின் வழி விளம்பரம் செய்து பெரிய அளவில் விற்பனையாக்கம் செய்கின்ற பெரிய நிலைகள் இன்று அதிகரித்து வருகின்றன.

- கூற்றுமுறை
- இசை
- பாடல்
- எளிமை
- இசைக்கருவிகள்
- கதை
- குறியீட்டு முறை (உடை, ஒப்பனை)
- அரங்கும் நிகழ்த்தும் முறையும்
- சடங்குகளும் நிகழ்வுகளும்
- உடல்மொழி
- மொழிநடை
- மரபுக்கூறுகள்

இவ்வகைக்கூறுகள் வழிநின்று இடதுசாரி இயக் கங்கள், அறிவொளி இயக்கங்கள், தன்னார்வத் தொண்டு இயக்கங்கள் மற்றும் திரைத்துறை போன்ற ஊடகங் கள் சமூக மாற்றத்திற்குப் பயன்படுத்திவரும் விதங்களைக் கண்டறிவோம்.

### இடதுசாரி இயக்கம்

வே.நா. திருமூர்த்தி தானே இயற்றிய பாடல்களை மேடைகளில் பாடுவார். "எல்லாம் அறிவின் செயல்" என்னும் கொள்கையுடைய இவர் கொங்குச் சீமையில் சுதந்திர ஆவேசத்தை மூட்டியவர். அரசியல் சுதந்திரத் திற்குப்பின் நாடு பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும் என்னும் லட்சியத்திற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் நாடோடிப் பாடகனாக மாறினார்.[3] அவரே இடதுசாரி இயக்கத்தில் நாட்டுப்புறப் பாடல் இசைவடிவத்தை மேடைக்குப் பயன்படுத்திய முதல் முற்போக்குக் கலைஞன்.

1. ஏற்புவிசை (பயன்பாட்டு நாட்டுப்புறவியல் ஆய்வுகள்), சேவியர் அந்தோனி, சே.ச. வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல். ப.71,2002.
2. நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், கே.ஏ. குணசேகரன் ப. 9.
3. விடுதலைப் போராட்டகாலப் பாடல்கள், தொ.அ. அரந்தை நாராயணன், ப. 6-7, நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா 1998, புதுடில்லி.



படிப்பகம்

www.padippakam.com

கங்கை நதி பாயும் நாட்டில்
காவேரி பாயும் நாட்டில்
எங்கு பார்த்தாலும் பஞ்சம்
ஏன் வந்தது சொல் கொஞ்சம்

வறுமை மிகுந்த மக்கள் வாழும் நாடு இது. ஏன் வந்தது, யாரால் வறுமை நேர்கிறது. சுரண்டல், முதலாளித்துவம், ஆதிக்க வர்க்கத்தின் செயல் இவற்றையெல்லாம் மார்க்சிய சிந்தனையில் சிந்திக்கச் சொல்வதை கவிஞர் எளிய வழக்கு நடைச் சொற்களால் செய்து மக்களிசைப் பாடல்கள் வழியே மக்களைத் தட்டி எழுப்பினார். எளிய பதம், எளிய முறையில் வெளிப்பாட்டுத் தன்மை என்னும் கூறுகள் வழியே இடதுசாரி இயக்கங்கள் பயன்படுத்தின.இத்தன்மைக்கு உழைக்கும் மக்களின் கலைவடிவக் கூறுகள் கற்றுத்தந்த வழிமுறைகள் எனில் அவை மிகையல்ல.

வாழ்வியல் தன்மையின் ஊடாக பிரச்சினைகளை உணர்ந்து இயல்பு நிலையை அனைவரும் உணரத்தக்கதானமுறையில் பாடல் கேட்போர் மனங்களில் நடைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகள் காட்சிகளாக விரிந்து உணர்ந்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் துடிக்கும் எண்ணங்களை (Folk ways) நாட்டுப்புற வழி முறையில் கலைஞர்களும், கவிஞர்களும் பாடல்கள் செய்துள்ளனர்.

எளிமையான நடை, எளிய சொற்களால் புனையப்பட்ட கவிதை, மனத்திரையில் காட்சிப் படிமங்களாக விளைவிக்கத் தகுந்த வெளிப்பாட்டு முறைமை. உழைக்கும் மக்கள் இசை, எளிய சொல்நடை இவை யாவும் மண்ணின் கலை இலக்கியங்கள் கொண்டுள்ள கூறுகளாகும்.

கவிஞர் கலை இலக்கியப் பேராசான் என மக்களால் பேசப்பட்டதொழிற்சங்கப் போராளி, கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் வீரர் தோழர் ஜீவானந்தம் அவர்களது பாடல் ஒன்றை அறியும்போது மேற்குறிப்பிட்ட கூறுகள் பொருந்தி விளங்குவதை அவதானிக்கலாம்.

காலுக்குச் செருப்புமில்லை
கால்வயிற்றுக்குக் கூழுமில்லை
பாழுக்கு உழைத்தோமடா - என் தோழனே
பசையற்றுப் போனோமடா
குண்டிக்கொரு துண்டுமில்லை
கொல்வறுமை தாளவில்லை
ஒண்டக்குடிசையில்லை - என் தோழனே
உழைத்து இளைத்துப் போனோமடா
பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாயழுவாள்
வேலையின்றி நாமழுவோம் - என் தோழனே
வீடு முச்சூடும் அழும் தோழனே

எனும் ஜீவாவின் பாடல் மக்கள் மேடைகளில் இன்னும் ஒலித்துக் கொண்டுள்ளது.

இடதுசாரி இயக்கங்களில் தொடர்ந்து பாவலர் வரதராசன் சகோதரர்களின் பங்கு கணிசமானது. மதுரை பண்ணைப்புரத்துப் பாவலர் வரதராசன்

ஆண் : ஒத்த ரூபா தாரேன்
உப்புமா காபி தாரேன்
ஓட்டுப்போடும் பெண்ணே
எம் மாட்டப் பாத்துக் குத்து

பெண் : ஒத்த ரூபாயும் வேணாம்
ஒங்க உப்புமா காபியும் வேணாம்
ஓட்டுப்போட மாட்டேன்
மாட்டை வெறட்டப்போறேன் பாரு
ஏர் இருக்கும் நீர் இருக்கும்
நிலம் இருக்காது
ஏழை மகன்
உழவனுக்கு உணவிருக்காது

எனும் நாட்டுப்புறப் பாடல் அடிகளையே பின்பற்றி ஓட்டுக் கேட்பதாகவும் 'நீங்கள் மோசம் செய்த கூட்டம் உங்களுக்கு எங்கள் ஓட்டு கிடையாது' என்பதான நையாண்டித்தனம் மிக்க ஏசல் பாட்டான கிராமியப் பாடல் வடிவத்தைக் கையிலெடுத்து தேர்தல் பிரச்சாரத்துக்குப் பாட்டுக் கச்சேரிகள் நடத்தினார். பட்டி தொட்டிகளெல்லாம் பயணப்பட்ட பாவலர் வரதராசன் சகோதரர் கலைக்குழு இடதுசாரி இயக்கத்துக்கான உழைப்பைப் பின்னர் திராவிட இயக்கத்துக்கு என அளித்தனர்.

கணவனைப் பறித்ததாலே
கண்ணகி சீற்றம் நியாயம்
துணியினைப் பறித்ததாலே
திரோபதை சபதம் நியாயம்
மனைவியை இழந்ததாலே
ராமனின் யுத்தம் நியாயம்
அனைத்தையும் இழந்த நமது
ஆவேசம் நியாயம் நியாயம்...
உழைப்பவன் பறிக்கப்பட்டால்
உரிமைப்போர் முற்றும் நியாயம்
அறுபது கோடி மக்கள்
அனைத்துமே பறிக்கப்பட்டு
அழுகையில் சிரிக்கிறாயே
'அடி ஆத்தா' அது என்ன நியாயம் [4]

மக்களின் மரபு வழிக்கூறுகளில் மனந் தோய்ந்து போன கதைகள், அவை தரும் நியாயங்கள், அக்கதைகளைச் சடங்குகளாகவும் நிகழ்வுகள் என கூத்துக்களாகவும் நடத்துகின்ற தொல்மரபைக் கொண்டிருப்பது நம் நாட்டுப்புற மற்றும் உழைக்கும் மக்கள் மரபு. கண்ணகி, திரௌபதை, ராமன் என நம் தமிழ்ச் சமூக மரபுச் சிந்தனைகளின் அடியொற்றி புனையப்பட்ட சந்தமிகு கவிதைகள், இசை வடிவில் இடதுசாரி மாநாட்டு மேடைகளில் கவிஞர்கள்கலைஞர்களால் மக்கள் எழுச்சி கொள்ளப் பாடப்பட்டன. 'அடி ஆத்தா' எனும் கிராமிய வழக்குச் சொல் தரும் நையாண்டித்தனம் நமது மரபுக்கூறில் இரசனை கொள்ளச்செய்யும் உத்தி முறையைக் கொண்டுள்ளது.

சபரி மலையை விட்டு வாப்பா - வந்து
தமிழகத்துத் தலைவிதியைப்
பார்த்துப்புட்டுப் போப்பா

4. 'கவிதைகளில் அவன் மானிடன்' தணிகைச் செல்வன். தணிகை நூலகம், முதற்பதிப்பு, டிசம்பர் 2003.



படிப்பகம்

www.padippakam.com

அரசியலுக்கு முழுக்குன்னு
சொல்லுறார் - விடிஞ்சா
அப்படிச் சொன்னது எல்லாமே
வாபஸ் என்கிறார்
சினிமாவிலே நடிச்சா கவனி - நாட்டிலே
தனியாக் கட்சி கட்டிக்காரர் மேலே பவனி
மாமியாரைப் பார்த்துப்புட்டா
முழிக்குது - ஸ்டவ் அடுப்பு
மருமகளைப் பார்த்துப்புட்டு
டம்முன்னு வெடிக்குது
சைசு சைசா வேட்டியில் தவமிருக்குது சாமிகள்
சைடுவாங்கி பீடி சிகரெட் அடிக்குது குடிக்குது[5]

என்னம்மா தேவி சக்கம்மா - ஓலகம்
தலைகீழா தொங்குதே நியாயமா - இப்ப
சின்னஞ்சிறுசெல்லாம் சிகரெட்டுப் புடிக்குது
சித்தப்பன்மார்க்கிட்டே தீப்பெட்டி கேட்குது
கசாப்புக் கடையிலே தலைநீட்ட முடியலே
காய்கறிக் கடையிலே தலைநீட்ட முடியலே
ஏரப்புடிச்சவன் ஏழையா ஆயிட்டான்
ஏச்சுப் பொழச்சவன் எசமானா ஆயிட்டான்

என்பதான பாடல்கள் நாட்டுப்புறக் கூத்துகள், நாடகங்கள், ஆட்டங்கள் போன்ற கலைவடிவங்களில் கோமாளி கதைசொல்லிப் பாடிச் சமூகத்தை நையாண்டி செய்து பாடும் பாடல் அடிகளாகும். அவ்வழிநின்று பாடல்கள் செய்யப்பட்டு இடதுசாரி மேடைகளில் தன்னானே கலைக்குழுவின் கே.ஏ. குணசேகரன் குழுவினர் தவில், பம்பை, உடுக்கை, பறை, நாதஸ்வரம், உறுமி போன்ற இசைக்கருவிகளின் துணையோடு பாடினர். இடதுசாரி இயக்கங்கள் (சி.பி.ஐ. மற்றும் சி.பி.எம்) இவருக்கு மேடைகள் அளித்தன.

தன்னன்னே னானே னன்னே - சொக்கநாதா
தானே னன்னே னானே ன்னே - சோக்குதான்
குடிக்கக்கூட கஞ்சியில்லே சொக்கநாதா
சிலுக்க வந்து ஆடவிடு சோக்கு சோக்குத்தான்
நாடு பூராம் வெளைஞ்சிருக்கு சொக்கநாதா
நான் குடிக்க கஞ்சியில்லே சோக்கு சோக்குதான்
வெதவெதமா மீசை வச்சே சொக்கநாதா
வீரமெல்லாம் எங்கே வெச்சே
சோக்கு சோக்குதான்
(ப. 96, அக்னிஸ்வரங்கள்)

**கவிஞர் கந்தர்வனின் பாடல்**

மனுசங்கடா நாங்க மனுசங்கடா
ஒன்னப்போல அவனப்போல
எட்டுச்சானு ஒசரமுள்ள (மனுசங்க)
சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில் வேகுது - ஒங்க
சர்காரும் கோர்ட்டும் அதில எண்ணைய ஊத்துது
எதை எதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க
நாங்க எரியும்போது எவன் மசிரப்
புடுங்கப் போனீங்க - டேய் (மனுச)

**கவிஞர் இன்குலாபின் பாடல்**

வெள்ளைக்காரங்க ஆண்டபோதும்
அரிசனங்க நாம்
இப்போ டில்லிக்காரங்க ஆளும்போதும்
அரிசனங்க நாம்
கொள்ளக்காரங்க ஆளும்போதும்
அரிசனங்க நாம் - இவுங்களக்
கூண்டோடு ஒழிச்சாத்தான்
ஒரு சனங்க நாம்

கவிஞர் தணிகைச்செல்வன் போன்ற இடதுசாரி சிந்தனை கொண்ட கவிஞர்களின் பாடல்களுக்கு நாட்டுப்புற இசை அமைத்துப் பாடிய காலம் 1980 முதல் 1990-கள் வரையிலும் ஆகும்.

1985-1987களில் இடதுசாரிக் கட்சிகள் காவிரியில் நீர் இல்லாத பிரச்சினை குறித்து மனிதச்சங்கிலிப் போராட்டத்தை கிழத்தஞ்சை, மேலத் தஞ்சைப் பகுதிகளில் நடத்தின. (தஞ்சைப் பகுதிகளில் இன்றும் இந்நிலை தொடர்கிறது.)

காவிரி ஆத்தில தண்ணியில்லே - நம்ம
கண்ணில் கண்ணீரு மிச்சமில்லே
காவிரி அன்னையின் கையைக் கட்டி
காவலில் வச்சதைக் கேட்டீகளா (ப. 127)

**ஏசல் பாட்டு**

பெண் : காவேரித் தாயாரு
கண்ணீர் வடிக்க விடமாட்டாள்
ஆண்டவன் செய்த பாவமா
அரும்புமீசை மச்சான் - இல்லே
ஆண்டவுக செய்த மோசமா
ஆசை நேசமச்சான்
ஆண் : மாநில அரசு மந்தமாச்சு
மத்திய அரசு நந்தியாச்சு
ரொம்ப நாளா நாடகம் நடக்குது
டக்குமிக்குடிக்குதாளம் - இனி
நம்ப் வேணும் நம்ம கைகளை
கடேக்கு டிக்குத்தாளம்
(பக். 126-127, அக்னிஸ்வரங்கள்)

இம்மாதிரியான பாடல்கள் தன்னானே கலைக் குழுவினரால் பாடப்பட்டன.

விவசாயப் பிரச்சினை, கூலிப் பிரச்சினை, தீண்டாமைப் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, இளைஞர்கள் பிரச்சினை, அரசியல் பிரச்சினை எனப் பல்வேறு பிரச்சினைகளை 1960-கள் தொடங்கி 1980-கள் வரை இடதுசாரி இயக்கங்கள் உழைக்கும் மக்களிடம் சமூக மாற்றம் அரசியல் மாற்றம் ஏற்படத் தொடர்ந்து நாட்டுப்புறக் கலை வகைகளையும் வடிவக் கூறுகளையும் பயன்படுத்தின. இன்றும் பயன்படுத்தி வருகின்றன.

**அறிவொளி இயக்கம்**

புத்தகம் பேசுது
புத்தகம் பேசுது
புத்தகம் பேசுது
உலகை

5. கே.ஏ. குணசேகரன், அக்னிஸ்வரங்கள், ப. 102, தன்னானே வெளியீடு, புதுச்சேரி, 5-வது பதிப்பு 1997.



படிப்பகம்

www.padippakam.com

மனிதரை
இன்பத்தை துன்பத்தை
அழகிய மலரை அணுகுண்டை
வெற்றியை தோல்வியை
நேசத்தை நாசத்தை (புத்தகம்)[6]

எழுதப்படிக்கத் தெரிந்துகொள்
உழைப்பவனே நீ உணர்ந்துகொள்
தினம் தினம் பசியில் துடிப்பவனே நீ (எழுத)[6]

நாளைத் தலைவர்களாய் மாறவேண்டிய உங்களுக்கு
காலம் இன்னும் கடந்திடவில்லை
நீங்கள் படிக்கணும், நீங்கள் படிக்கணும்
அகரமுதல எழுத்தெல்லாம்
பாலபாடங்கள் படிக்கணும்
புரியாது போயினும் படிக்கணும்[6]

விதை, பூமி, சரஸ்வதி, ஏகலைவனின் பெருவிரல், கடிதம், புத்தகம் போன்ற வீதி நாடகங்கள் வழியாக வும், நாட்டுப்புறப் பாடல்கள், இசை, வட்டாரமொழி, கதைகூறுதல் வழியாகவும் "கற்போம் கற்பிப்போம்" எனும் கருத்தியல் பரப்பப்பட்டது. இவர்களது நாடகங்களில் பேச்சு மொழிநடைகளே பெரிதும் பயன்படுத் தப்பட்டன.

தமிழகம், புதுவைப் பகுதிகளில் அனைத்து மாவட் டங்களிலும், குக்கிராமங்களிலும் இக்கருத்து தெரிவிக் கப்பட்டது. 'கைநாட்டு' எனும் நிலை இல்லை எனும் நிலை உருவானமைக்கு நாட்டுப்புறக் கலை இலக்கியக் கூறுகளின் ஆளுமையை மறக்கவியலாது. இப்பயிற்சிப் பட்டறையில் நானும் பிரளயனும் ஆசிரியர்களாக இருந் தோம். இருவருக்கும் கர்நாடக இசை அறிவு இல்லை. மாறாக மண்ணின் கலை இலக்கிய அறிவு உண்டு. அது இப்பயிற்சிக்குப் பயன்பட்டது என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

பறை, தவில், பம்பை, சால்ரா எனும் சிங்கி போன்ற நாட்டுப்புற இசைக்கருவிகளையே அறிவொளி இயக் கக் கலைப்பயணத்தில் பயன்படுத்தினோம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திறந்தவெளி அரங்கு வட்ட வடிவத்தில் நின்று பாடல் பாடி கதை சொல்லியின் வரு கையில் தொடங்குவது கலைப்பயணத்தில் கடைப் பிடிக்கப்பட்ட வழக்கம்.

- தொடரும்

6 அறிவொளி இயக்கம், கலைப்பயணம், அக். 10-25, 1989, புதுவை அறிவொளி இயக்கம், புதுவை - 1.

# கவிதை இதழ்கள்

■ ரவிகெங்கன்

பேருந்திலிருந்து
இறங்கிவிட்டேன்
பயணச்சீட்டு
வீடுவரை வந்திருக்கிறது.

◆◆

வளர்ந்தது
கறந்த பாலில் நானும்
கவர் பாலில்
என் பிள்ளைகளும்.

◆◆

ஸ்கூட்டர் பில்லியன்
காலியாக கிடக்கிறது
மனைவி மாற்றலாகி
விட்டாள்.

◆◆

◆◆

ஹெல்மெட்
அணிந்து போகிறான்
பாதுகாப்பாக...
பின்னால் மனைவி
வெறுந்தலையுடன்.

◆◆

கொடிக்கம்பியில்
துணி உலர்த்தாதே
மழைநீர் கோர்த்த
முத்துக்கள் சிதறிவிடும்.

◆◆

திங்க மனசில்லை
கடற்கரையில்
வறுத்த மீன்களை.

◆◆

ஐஸ்க்கிரீம்
தின்று கொண்டிருந்தாள்
மனைவி.
உருகிக் கொண்டிருந்தார்
கணவர் வெய்யிலில்.



படிப்பகம்

www.padippakam.com

■ குடியரசன்

# மக்கள் அறியாத அம்பேத்கர்

**டிசம்பர்6, 1956-இல் அம்பேத்கர் பரிநிர்வானம் அடைந்த நாள். அன்றைய தினம் நடந்தவைகள் யாவை என்பதை மக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது**

16

டிசம்பர் 6, 1956 மதியம் 1 மணிக்கு அம்பேத்கரின் மரணச் செய்தி டில்லிக்குப் பரவியது. அம்பேத்கரின் வீடு ராஜ கிரஹா, இந்து காலனி, தாதர் ஆகிய இடங்களில் 50,000 மக்கள் உடனடியாகத் திரண்டனர். இதைப்போலவே சாந்தா குரூஸ் விமான நிலையத்திலும் மக்கள் பெருமளவு திரண்டிருந்தனர்.

விடியற்காலை 2 மணிக்கு சாந்தா குரூஸ் விமான நிலையத்தில் அம்பேத்கரின் உடல் கொண்டுவரப்பட்டது. உடன் சாரதா கபீர் என்ற சவிதா கபீர் (அம்பேத்கரின் மனைவி), சாந்தாராம் சாஸ்திரி, சோகன்லால் சாஸ்திரி, புத்த மகாஸ்வி சாஸ்திரியும் வந்திருந்தனர். மக்கள் அம்பேத்கரின் முகத்தைப் பார்க்க லட்சக்கணக்கில் கூடிவிட்டனர். தலைவர்கள் மாலை அணிவித்தனர். பின்னர் அம்பேத்கரின் உடல் ஆம்புலன்சில் ஏற்றப்பட்டு அவரின் வீட்டிற்கு மக்கள் திரட்சியுடன் கொண்டு செல்லப்பட்டது. இதில் அரசின் உளவுத்துறை அறிக்கையின்படி நான்கு லட்சம் மக்கள் கலந்துகொண்டனர்.

அம்பேத்கரின் உடல் லாரி ஒன்றின் மீது அனைத்து மக்களுக்கும் தெரியும் வகையில் மதியம் 1.40-க்கு வைக்கப்பட்டது. பின்னர் இது பேரணியாக கரேகாட் ரோடு, வின்சன்ட் ரோடு, தாதர் ரோடு, போய்பவாடி, எல்பின்ஸ்டன் பாலம், சயானி ரோடு, கோகலே ரோடு (வடக்கு மற்றும் தெற்கு), ரணடே ரோடு வழியாக சந்தன் வாடி சுடுகாட்டில் (சிவாஜி பூங்கா) வந்து சேர்ந்தது. பிக்கு ஆனந் கோசல் யாயன் தலைமையில் பவுத்த தத்துவங்கள் முழங்க போராளி அம்பேத்கரின் உடல் விறகுக் கட்டைகளின் மீது வைக்கப்பட்டது. தாதா சாகேப் கெய்க்வாட் அம்பேத்கரை புகழ்ந்து பேசினார் பம்பாயில் டிசம்பர் 16, 1956-இல் வெகுமக்களோடு பவுத்தம் தழுவுதல் நடத்த இருந்ததாகவும் அவர் இறுதி கிடக்கை ஈடேறும் வகையில் இங்குள்ள லட்சக்கணக்கான மக்களும் பவுத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். அம்பேத்கரின் இறந்த உடலை சாட்சியாக வைத்துக்கொண்டு நான்கு லட்சம் மக்கள் பவுத்தம் ஏற்றனர்.

திரு. அத்ரே மயானத்தில் பேசும்போது, அரசானது தனது மரியாதைக்காக சில குண்டுகள் முழங்கி இறுதி மரியாதை செய்ய உள்ளது. ஆனால் இங்கு அதையும் தாண்டி நான்கு லட்சம் மக்கள் தங்கள் உயிர்க் குரலெடுத்து அம்பேத்கரின் தத்துவத்தை இறுதி மரியாதையாக முழங்கி பவுத்தம் ஏற்றுள்ளனர். மயானத்தில் அரசால் முழங்கப்படும் தோட்டாக்களின் பலனைவிட இந்த லட்சக்கணக்கான பவுத்தர்களின் முழக்கம் கூடுதல் பலனையும் மரியாதையையும் வருங்கால சந்ததியினருக்கு வழங்கும் என குறிப்பிட்டார்.

அம்பேத்கரின் மகன் யஸ்வந் ராவ் அம்பேத்கர் உடலுக்கு மாலை 7.30-க்கு தீ மூட்டினார். இதில் 4 லட்சம் பவுத்தர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். அம்பேத்கரின் இழப்பையொட்டி, 12 டெக்ஸ்டைல் மில்களும் இயங்கவில்லை. ரயில்வே ஓர்க்ஸ், மாதுங்கா, பரேல், வாடிபந்தர், கர்ரி ரோடுகளில் தொழிலாளிகள் வேலைக்கு வரவில்லை. விடுப்பு அன்றைய தினம் இப்பகுதிகளில் விடப்பட்டது. பெரும்பாலான கல்விக்கூடங்கள் அன்றைய தினம் இயங்கவில்லை.

9.12.1956 அன்று இரண்டு பித்தளைப் பாத்திரத்தில் அம்பேத்கரின் அஸ்தி காவி (பவுத்த நிறம்) நிற துணியால் கட்டப்பட்டு திறந்த வேனில் ஊர் முழுவதும் பேரணியாக எடுத்துச் செல்லப்பட்டது. அன்றைய மாலை ஒரு லட்சம் மக்களுடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் திரு. M.V. தோண்டே, K.S. தாகரே (இவர் ஒரு மலைவாழ் பழங்குடியினர்), மதுக்கர் மகாஜன், நௌஷீர் பரூச்சா, B.C. காம்ளே, Dr. H.R. கார்னிக், Dr. T.R. நாரவானே, பகாரே, S.G. பட்கர், M. ஹரீஸ், A.S. பிடே, R.D. பந்தாரே, M.R. தாண்டவதே, ஆனந்த் மண்டேகர், கெய்க்வாட், அத்ரே உள்ளிட்டோர் பேசினர்.

போலீஸ் அறிக்கையின்படி பாம்பே டையிங் (டெக்ஸ்டைல்), தாதர் கோகினூர் மில்3, ரங்குவான்ஸி மில், விக்டோரியா மில், பிரகாஷ் காட்டன் மில், ஹிண்ட் மில், சென்சுவரி மில், மதுசுதன் மில் ஆகியன 7.12.56 அன்று முழு அடைப்புச் செய்தன. குறிப்பிடத்தகுந்த கட்சிகளான காங்கிரசு, சோசியலிஸ்ட் கட்சி, ஆரிய சமாஜ், மும்பாய் கொங்கன் மகாராஷ்ட்ரவாதி காங்கிரஸ் ஜன் பரிசத், AB ஜாது கம்கார் மற்றும் வால்மீகி ஹரிஜன் சேவா சமாஜ், ஜன் பரிசத், D.N. மந்தல், R.S. மந்தல், மகிம் தலித் சமாஜ், பிற்படுத்தப்பட்டோர் பட்டதாரிகள் சங்கம், கம்யூனிஸ்ட் கட்சிகள், SCF, S.M. சமீதி, தலித் வர்கம், K.A. கமிட்டி, BEST SC தொழிலாளர்கள், தலித் மகிலி சமாஜ், தலித் ஹத்வார்த்தா சபை, மகர் தியாகி பஞ்ராயட், பாரதீய பவுத்த ஜன சமீதி மற்றும் செட்யூல் காஸ்ட் பெடரேசனின் (SCF) பல்வேறு பிரிவுகள் அம்பேத்கருக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதாக போலீஸ் உளவுத்துறை குறிப்பிடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அம்பேத்கரின் அனைத்துத் தொகுதிகளையும் தொகுத்த திரு. வசந்த்மூன் அவர்களும் இதை உறுதி செய்கிறார்.

இந்திய குடியரசு கட்சி (RPI) முன்பிருந்த SCF-இன் பரிமான வளர்ச்சி என்றும், RPI 1957-இல் துவக்கப் பட்டதாகவும், SCF-ன் யானைச்சின்னம் RPI-யிடம் தற்போது உள்ளதாகவும் வசந்த்மூன் குறிப்பிடுகிறார்.

அம்பேத்கரின் இறுதி நிகழ்வில் ஏன் RPI கலந்து கொள்ளவில்லை என்ற வினாவிற்கு திரு. வசந்த்மூன் இவ்வாறாக பதில் அளித்தார்.

தமிழகத்தில் வெகு சிலர் குடியரசுக் கட்சியை அம்பேத்கர் தோற்றுவித்ததாக குறிப்பிடுவதை அடுத்து இந்த விளக்கம் திரு. வசந்த் மூன் அவர்களால் நமக்குத் தரப்பட்டது.

எனவே அம்பேத்கரின் மறைவிற்குப் பிறகு 1957-இல் துவக்கப்பட்ட குடியரசுக் கட்சி அம்பேத்கரின் மறைவில் ஏன் கலந்துகொண்டு இரங்கல் தெரிவிக்க வில்லை என்பது தேவையற்ற கேள்வியாகும் என்று வசந்த்மூன் தெரிவித்தார்.

சிறு சிறு தேர்தல்களிலும் மாநில, மாவட்ட, இந்திய அளவுத் தேர்தல்களிலும் SCF தன்னுடைய யானைச் சின்னத்தில் இதுவரை 80-க்கும் மேற்பட்ட தேர்தல்களில் பங்கெடுத்து வெற்றிபெற்றுள்ளது. அந்த விவரங்கள் இந்தக் கட்டுரையின் தன்மைக்கு தேவையில்லை என்பதால், நமது பாபா சாகேப் தன்னுடைய சட்ட அமைச்சர் பதவியைத் துறந்த பிறகு நின்று போட்டியிட்ட கட்சி SCF என்றும் அதன் சின்னம் யானை என்பதும் அனைவரும் அறிந்ததே.

வெகு மக்களின் உண்மைக்காகவும் களப்போரா ளிகளின் தேவைக்காகவும் இக்கட்டுரையில் இந்த விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

SCF-இன் செயல்பாடுகள் குறித்த கூடுதல் தகவல்களுடன் அடுத்த கட்டுரையில் சந்திப்போம். ●

---

■ அரங்க மல்லிகா

# கரு

அது
தன் வருகையை
நினைவுபடுத்தியது


நிலவேட்கைத் தீர்த்து
மண் வருடி வழிந்தது
மடைநீர்.

நீள்நதி பயணத்தில்
உயிரினம்
ஒன்றோடு ஒன்றாய்
கைச் சேர்க்கும்

வெப்பத்தின் கணச் சிறகில்
அடைகாத்திடும் கோழி
முட்டை ஓடு உடைத்து
மூக்கு நீட்டும் குஞ்சுகள்
சில கூமுட்டைகளாய்...

கோழிக்கும்
பன்றிக்கும் சாத்தியம்.

ஒவ்வொரு முறையும்
அரங்கேறும்
வேட்கைப் போரில்
இந்த முறையாவது கிட்டுமா?



# உனக்குத் தெரியுமா?

எனக்குப் பிடிக்கும்
அந்தக் கருவேல மரக்குடை
வியர்வைத் துளிகளின்
தேக்கத்தில்
தாகம் தீர்க்கப்படவில்லை.

உவர்ப்பானதுதான்
வியர்வை
சிலிர்க்கிறது மனது!

மண்வெட்டியும்
கடப்பாறையும்
கதைசொல்லிகளாய்ப் புறப்படும்.

எனக்கான தேடலை
எறும்பும் கற்றுக்கொடுக்கும்
இருந்தும்
உனக்குத் தெரியுமா?
குடிசைகளில்
எரிந்துபோனது
எங்கள் எதிர்காலமல்ல.

வளரத் துடிக்கும்
செடிகளுக்கு
மழைநீர்த் துளி தரும்
நம்பிக்கையில்தான்
நகர்கிறது வாழ்க்கை.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் விழிப்புணர்வு முகாம்

புதிய கோடாங்கி மற்றும் விடியல் மகளிர் சுய உதவிக்குழு இணைந்து நடத்திய மகளிர் விழிப்புணர்வு முகாம் 30.11.2004 காலை 11 மணிக்கு அரசம்பாளையம் (விழுப்புரம்) கிராமத்தில் தொடங்கியது. செல்வி அவர்கள் தலைமை தாங்க, ரூபாவதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பின்பு சன்னா அவர்கள் பேசும் போது "தலித் இயக்கங்களில் பெண்களின் பங்களிப்பு இல்லாததாலேயே பின்னடைவை சந்தித்திருக்கிறது. இதற்குக் காரணம் தலித் பெண் தலைவர்களின் வரலாற்றை நாம் யாரும் அறியாதது. தலித் பெண் போராளியான அன்னை மீனாம்பாள் நமக்கு முன்னோடி. அவரது வழிகாட்டுதலை நாம் கடைப்பிடிக்க வேண்டும்" என்றார்.

லெனின் அவர்கள் பேசுகையில் தலித் பெண்களை ஊடகங்கள் யோசிக்கவிடாதபடி செய்கின்றன. போராட்ட நேரங்களில் தலித் பெண்கள் மிளகாய்ப் பொடியை ஆயுதமாக பயன்படுத்துவதைப் போல உண்மையான பலத்தை பிரயோகிக்க வேண்டுமென்றார்.

குடியரசன் அவர்கள் பேசும்போது, அன்னை மீனாம்பாள் அவர்கள் தலித் அரசியலுக்கு மய்யமாவதைப் போல, அம்பேத்கரின் மனைவி அன்னை ரமாபாய் அவர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும், இவரது பணி அளப்பறியது என்று அவரது வாழ்வில் நடந்த சம்பவங்களை எடுத்துக்காட்டினார்.

பேராசிரியர் கல்யாணி அவர்கள் பேசுகையில் "பெண்களிடமிருந்து நாங்கள்தான் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் சிறுவயது முதலே பெண்களுக்கு பொறுப்பு வந்துவிடுகிறது. மேலும் சிறுவயது முதலே ஆண்களுக்கு சமையல் கற்றுத்தர வேண்டும். நான் பணிபுரிந்த கல்லூரியில் பெண்களை மானபங்கப் படுத்திய மாணவர்களுக்கு எதிராக போராட்டத்தை நடத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் செய்தோம். இதற்குக் காரணம் எனக்கு பெண்ணியத் தோழர்கள் கற்றுக் கொடுத்ததுதான்" என்றார்.

சிவகாமி அவர்கள் பேசுகையில் "பெண்கள் கணவனுக்கு பின்புலமாக இருப்பதைவிட தாங்களே தங்களை வெளிப்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும். ஆண்கள் பெண்கள் மேடையில் ஏறி அறிவுரை வழங்குவதைவிட ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும் மீனாம்பாள், ரமாபாய் போன்றோரின் வரலாறு நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை. அவர்களை முன்னோடிகளாக நாம் கருதினாலும் விவரம் தெளிவாக்கும் வேலையை நாம் மேற்கொள்ள வேண்டும். பெண்கள் ஒழுக்க விதிகளைக் குறித்து அச்சமடையாமல் மாற்று வழிகளுக்கான கல்வி, விளையாட்டு போன்றவை மூலம் மேம்பாடு அடைதல் வேண்டும். தலித் இயக்கங்களில் பெண்கள் புறக்கணிக்கப்படுவதால் தலித் பெண்களுக்கான அரசியல் இயக்கம் அவசியம்" என்று கூறினார்.

கூட்டத்தில் ராமமூர்த்தி முதலியோர் உரையாற்றினார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர். •

## நிகழ்வுகள்

28.11.2004 அன்று மாலை 3 மணி அளவில் LIC கட்டிட வளாகத்தில் தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் பேரவையுடன் இணைந்து LIC SC/ST நலச்சங்கம் ஏற்பாடு செய்த கருத்தரங்கம் துவங்கியது. கருத்துரை வழங்கிய குடியரசன் அரசியலமைப்புச் சட்டத்தையும் அது வழங்கும் அடிப்படை உரிமைகளையும் பொதுமக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய பணி நலச்சங்கங்களுக்கு உள்ளது என்பதைக் கூறி பல சான்றுகளை அம்பேத்கரின் வாழ்விலிருந்து எடுத்துக்காட்டினார்.

பின்பு சிவகாமி அவர்கள் தலைமையுரையாற்றினார். SC/ST நலச் சங்கங்கள் செய்யவேண்டிய பணிகள் ஏராளம். தலித் அரசியல் இயக்கங்களுக்கு நிதியுதவி செய்வதோடு நலச் சங்கங்களின் பணிகள் நின்று விடுவதில்லை. அதுதான் துவக்கம். தொடர்ந்து அரசியல் அதிகாரத்தை தலித் மக்கள் கையகப்படுத்துவதற்கான பணிகளில் நலச் சங்கங்கள் முயலவேண்டும். அதுமட்டுமின்றி எழுத்தாளர்களை தங்களின் செயல்பாட்டுக்கு ஆதாரமாக இணைத்துக் கொள்ள வேண்டும் என விரிவுரையாற்றினார். இக்கூட்டத்தில் LIC SC/ST நிர்வாகி அரிதாஸ் வரவேற்புரையாற்றினார். A. துரை நன்றி கூற முதல் நிகழ்வு முடிந்தது.

பின்பு பேரவையின் மாநில செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக கடந்த ஆண்டு பேரவையின் செயல்பாடுகளின் அறிக்கையும் அதைத் தொடர்ந்து வரவு செலவு அறிக்கையும் வாசிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பேரவையின் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. ஜனவரி மாதத்தில் பேரவையின் தேர்தல் நடத்தி புதிய நிர்வாகக் குழுவைத் தேர்வு செய்தல்.
2. SC/ST நலச்சங்கங்களுடன் இணைந்து தலித் எழுத்தாளர்களின் நூல்களை கொண்டுவருதல்.
3. மாவட்ட அளவிலான பேரவையின் கிளைகளை துரிதமாக அமைப்பது. அவற்றிற்கான பொறுப்புக்களை பகிர்ந்துகொள்வது. •



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தேசியம் யாருக்கு பயனளிக்கும்?

■ தி. ஸ்டாலின்

■■ சாதி ஒழிப்புக்கான அடிப்படைத் திட்டம் ஏதும் தமிழ்தேசியவாதிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் முன்வைக்கும் தமிழும், தமிழ் தேசியவாதமும் இதுவரை சாதியத்திற்கு எதிராக எதையும் செய்திடவில்லை. ■■

தமிழனை தமிழனே ஆள வேண்டும். தமிழ் மண்ணின் வளங்களையெல்லாம் வட இந்தியர்கள் சுரண்டுகிறார்கள். தமிழனின் பண்பாட்டையும் வாழ்வையும் வளப்படுத்தவேண்டும். இதுதான் தமிழ் தேசியத்தின் சாராம்சம் என்பது எல்லோரும் அறிந்ததே. தூசு படிந்திருந்த தமிழ் தேசியம் இன்று மீண்டும் மேலெழுகிறது. தலித்துகளை உள்ளிழுக்கும் முயற்சியில் இறங்கியுள்ள தமிழ் தேசியத்தை நாம் விவாதத்திற்குட்படுத்த வேண்டும்.

முதலில் திராவிட நாட்டு பிரிவினையையும், பிறகு தம் வாழ்நாளின் இறுதிவரை தமிழ்நாட்டு பிரிவினையையும் கோரியவர் பெரியார். அதே பெரியார்தான் "தேசாபிமானம், தேசபக்தி என்பதையெல்லாம் சுயநல சூழ்ச்சியென்றும், தனிப்பட்ட வகுப்பு மக்களால் தங்கள் வகுப்பு நலனுக்காகப் பாமர மக்களுக்குள் புகுத்தப்படும் ஒரு போதையென்றும்" கூறுகிறார்.

பெரியாரிடமிருந்து விலகி வந்த தி.மு.க-வினர் இந்தி எதிர்ப்பு பிரச்சினையின்போது தனிநாடு கோரிக்கையை உயர்த்திப் பிடித்தனர். பிறகு அவர்களே தனிநாடு கோரிக்கையை கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் கலந்தனர். அதன் பின்னும் தமிழ் தேசியவாதம் வலுவாக இல்லாமல் இருந்தாலும் புகைந்து கொண்டே இருந்தது. தமிழ்த் தனி நாடு கேட்டு தமிழரசன் போன்றோரால் தீவிர இயக்கங்கள் நடத்தப்பட்டன. இருந்தும் அவ்வியக்கங்களால் பாமரத் தமிழனிடம் பெரியதாக எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. அதற்குக் காரணம் தமிழன் மேல் சாதித் தமிழனாகவும், கீழ்சாதித் தமிழனாகவும் பிளவுபட்டிருப்பதுதான் என்பதை அவர்கள் உணர்ந்தாலும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். தமிழரசனின் மறைவுக்குப் பிறகு அந்த தீவிரத் தமிழ் இயக்கங்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் வெட்டி கொலை செய்து கொண்டனவே தவிர வேறெந்தச் செயலையும் அவ்வளவு வேகமாய் செய்ய முடியவில்லை. இதற்கிடையில் திராவிட அரசியல் வழி வந்தவர்களில் சிலர் தமிழ் தேசியத்தை முதன்மைப்படுத்தினர். மார்க்சியத்திலிருந்து விலகிச் சென்றவர்களும் தமிழ் தேசியத்தின் கோட்பாட்டில் பங்கேற்கத் துவங்கினர்.

இப்படி நெடுங்காலக் கோரிக்கையான தனித் தமிழ் தேசியவாதம் எந்தளவிற்கு அதன் இலக்கை அடைந்துள்ளதென்பது நாம் அறிந்ததுதான். தனித்தனிக் குழுக்களால் மட்டும் முன்னெடுக்கப் படுவதல்ல தேசிய இனப்பிரச்சினை. பெருந்திரளான மக்களின் தொடர் போராட்டத்தினால் மட்டுமே தேசியவாதம் கவனிக்கப்படும். இத்தனை ஆண்டுகளாக கேட்கப்படும் தனித் தமிழ்தேசியத் திட்டம் ஏன் இன்னும் வலுவடையவில்லை? தி.மு.க அக்கோரிக்கையை கைவிட்டதாலோ, புரட்சிகரத் தீவிர தமிழ் இயக்கங்கள் சிதைவுண்டதாலோ மட்டுமல்ல, அக்கோட்பாடு (தமிழ்தேசியக் கோட்பாடு) இங்குள்ள அடிப்படைப் பிரச்சினையான, சமூக இழிவான சாதியவாதத்தை கண்டு கொள்ளாமையே தமிழ் தேசியம் வலுப்பெறாததன் முக்கியக் காரணமாகும். சாதிப் பிரிவினையைப் பார்க்காமல் வர்க்கப் பிரிவினையை மட்டுமே பார்க்கும் மார்க்சியவாதிகளைப் போலவேதான் தமிழ் தேசியவாதிகளும் சமூகத்தைப் பார்த்தனர். தொழிலாளர் வர்க்கங்கள் தொழில் அடிப்படையில் தனித்தனி வர்க்கமாக அதாவது சாதியாகப் பிரிந்து கிடப்பதைக் கண்டுகொள்ளாமல் மார்க்சியவாதிகள் கம்யூனிசத்தை கட்டியெழுப்ப முயல்கிறார்கள். தமிழன் இன்னொரு தமிழனால் ஒடுக்கப்படுவதை சரி செய்யாமல் தமிழ் தேசியத்தை அமைக்க முயல்கிறார்கள். தமிழ் தேசியவாதிகள் தமிழகத்தில் சாதி ஒழிப்புக்காக செய்தது என்ன என்பதை பார்க்கும்முன் இவர்கள் முன்வைக்கும் தமிழீழ தேசிய அரசியலில் தலித்துகளின் நிலை என்ன என்பதை சுருக்கமாகப் பார்ப்போம்.

1984-இல் இலங்கையில் "கொடிகாமம்" என்னுமிடத்தில் 22 வயது தலித் இளைஞர் ஒருவர் ஒரு வேளாளத் தமிழரை கைநீட்டி அடித்ததற்காக பட்டப்பகலில் சந்தைக்குள் வைத்து 50 பேர்களால் துண்டு துண்டுகளாக்கி வெட்டி கொலை செய்யப்பட்டார். இதைப் பற்றி மறைந்த தலித் எழுத்தாளரும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முன்னணித் தலைவருமான



படிப்பகம்

www.padippakam.com

கே. டானியல், பேரா. அ. மார்க்சுக்கு எழுதிய கடிதத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இங்கு சமூக விரோதிகள் என்று பலர் அழைக்கப்படுகின்றனர். சாதி காரணமாக இந்த இளைஞனைத் துண்டு துண்டுகளாக வெட்டி எறிந்த சாதி வெறியர்கள் யாருமே இவர்களின் கண்களுக்கு சமூக விரோதிகளாகப் படவில்லை. இந்த லட்சணத்தில் இந்த மக்கள் கூட்டத்தை இவர்கள் தனி ராஜ்ஜியம் அமைக்கக் கேட்கின்றனர். இலங்கை நாட்டில் இதுவரை எந்த சிங்களனும் தமிழனை இத்தனைத் துண்டுகளாக வெட்டியதில்லை. தமிழர்களால்தான் இந்த சாதனையை செய்துகாட்ட முடிந்திருக்கிறது." *(கே. டானியல் கடிதங்கள் தொகுப்பு மார்க்ஸ், பக்.12)*

1982 ஜூனில் கே.டேனியல், அ. மார்க்ஸிடம் அளித்த ஒரு பேட்டியில் இன்னொரு கொடுமையையும் இப்படி விவரிக்கிறார்... 'எழுத்து மட்டுவாள்' என்ற இடத்தில் பள்ளிக் கூடம்போன தாழ்ந்த சாதிப் பிள்ளைகளின் புத்தகங்களை பிடுங்கி, கிழித்து, குவித்து எரித்திருக்கிறார்கள் உயர்சாதி வகுப்பு வெறியர்கள். யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை சிங்கள இன வெறியர்கள் கொளுத்துவதற்குக் காட்டுகிற நியாயம் - தமிழர்கள் படித்து முன்னேறி சிங்களர்களுக்கு மேலாக வந்துவிடுவார்கள் என்பது. தாழ்ந்த சாதி மக்கள் படித்து முன்னேறி உயர்ந்த சாதியினருக்கு மேலாக வருவதை தடுப்பதற்காக அவர்களது புத்தகங்களை பிடுங்கிக் கொளுத்துவது நியாயம் என்றால், யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை கொளுத்திய கொடுமையும் நியாயம்தானே! *(கே. டானியல் கடிதங்கள் தொகுப்பு, அ. மார்க்ஸ் - பக். 175)*

மேற்கண்ட பிரச்சினைகளெல்லாம் முன்பிருந்தன, இப்பொழுது இல்லையென்று யாரும் வாதிட முடியாது. இலங்கையிலிருந்து பிரான்சுக்கு புலம்பெயர்ந்து வாழும் இலங்கை எழுத்தாளர் சோபா சக்தி, ஜூலை 2004, தீராநதி நேர்காணலில்... "யாழ்ப்பாணத்தில் இன்றுவரை இந்த முப்பது வருட யுத்த அணர்த்தங்களுக்கு பின்பும் நூற்று ஐம்பது இந்துக் கோவில்கள் தலித்துகளுக்காக மூடப்பட்டே இருக்கின்றன" என்கிறார்.

மேலும் அவர் அதே நேர் காணலில் "தலித்துகளுக்கான இட ஒதுக்கீடு குறித்தும் தனி வாக்காளர் தொகுதி குறித்தும் பேசுவதற்கு நடந்துகொண்டிருக்கும் பேச்சு வார்த்தை நிகழ்ச்சி நிரலில் ஏன் இடம் வழங்கப்படவில்லை" என்கிற கேள்வியை எழுப்புகிறார்.

துப்பாக்கிகளின் முனையில் அங்கு வாழும் தலித்துகள் தங்கள் உரிமையைக் கோரமுடியாமல் அடக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள்.அவர்களை அடக்கி வைத்திருக்கும் துப்பாக்கிகள் சிங்களர்களுடையதல்ல, தமிழீழப் போராளிகளுடையது என்பதை யாரும் மறுதலிக்க முடியாது. அப்படிப்பட்ட அபாயகரமான தமிழ் தேசியத்தைத் தான் இன்று இங்குள்ளவர்கள் முன்வைக்கிறார்கள். சகபோராளிகளின் ஏக்கத்தை கழித்து மாற்றுக் கருத்துடைய போராளிகளை கடுமையான தண்டனைக்குட் படுத்தும் பிரபாகரன்தான் இவர்களின் தளபதி.

இப்பொழுது தமிழ் தேசியவாதத்தினரின் இன்றையப் பார்வையைப் பார்ப்போம். கடந்த பத்து ஆண்டுகளாக தமிழகத்தில் தமிழ் தேசியவாதம் மட்டுமல்ல, இன்னும் பல புரட்சிகர வாதங்களும் ஆட்டம் கண்டிருந்தன. அதற்கான காரணம் தலித் இயக்கங்களின் எழுச்சியே ஆகும். அம்பேத்கர் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகத்தில் தலித் இயக்கங்கள் புதிய உத்வேகத்தில் கிளம்பின. பிற சாதி இந்துக்களின் கட்சிகளையெல்லாம் (திராவிடக் கம்யூனிசக் கட்சிகள் உட்பட) தலித்துகள் நிராகரிக்கத் தொடங்கினர். தலித்துகளின் இந்த எழுச்சியால் பல அரசியல் தளங்களும் ஆட்டம் கண்டன. சேரியில் புரட்சி பேசி வந்த குழுக்களெல்லாம் முந்திரிக் காட்டுக்கும், சந்தனக் காட்டுக்கும் போயின. இந்த சலசலப்பில் தமிழ் தேசியத்தின் முனகல்களும் அடங்கிப் போயிருந்தன. இப்பொழுது தலித் இயக்கங்களிடையே ஒரு தேக்கம் ஏற்பட்டுள்ளது. தலித் இளைஞர்களை வெறும் இயக்கங்களின் கும்பலாக மட்டுமே திரட்டியதால். அவர்களுக்கு தத்துவார்த்தப் பயிற்சியை அளிக்காததால் இந்த தேக்கம் ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. இந்நேரத்தில், தூசு படிந்திருந்த தமிழ் தேசியமானது மீண்டும் (பழநெடுமாறன், வை.கோ போன்றோர்கள் கைதானதைத் தொடர்ந்து) மேலெழ முயல்கிறது. இந்த முறை அது புதிய உத்தியோடு வருகிறது. பொதுவாக தமிழர்கள் தனி தேசியத்திற்காக திரள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. அவர்கள் இந்திய தேசியத்தில் பற்று கொண்டுள்ளனர். கார்கில் போருக்கு நிதித் திரட்டித் தந்ததில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதை நோக்கும் போது இது புரியும். இதை உணர்ந்துள்ள தமிழ் தேசியவாதிகள், தமிழ் தேசியக் கோட்பாட்டை பிற இயக்கங்களினுள் (தங்களின் தமிழ் இயக்கங்களில் கூட்டம் இல்லாததால்) பாய்ச்சுகின்றனர். இப்படி தமிழ் தேசியவாதத்தை பாய்ச்சும் போது பிற ஆளுமைகள் மழுங்கி விடும் என்பது ,அவர்கள் கணக்கு. தப்புக் கணக்கும் கூட!

தமிழ் தேசியவாதிகள் தேசியவாதத்திற்கு புகலிடமாக தலித் இயக்கங்களை (தலித்துகளை) கருதுகின்றனர். இதன்மூலம் வளர்ந்து வரும் தலித்தியத் தாக்கத்தை முறியடிக்க முயல்கின்றனர். தமிழ் தேசியத்தில் தலித்துகளுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாக நாடகமாடுகிறார்கள்.

காந்தி தலைமையில் உருவான இந்திய தேசியத்தில் ஒழிக்கப்படாத சாதி, பழ. நெடுமாறன் தலைமையில் பெறும் தமிழ் தேசியத்தில் மட்டும் ஒழிந்துவிடும் என்பது வேடிக்கை. சாதி ஒழிப்புக்கான அடிப்படைத் திட்டம் ஏதும் தமிழ் தேசியவாதிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் முன்வைக்கும் தமிழும், தமிழ் தேசியவாதமும் இதுவரை சாதியத்திற்கு எதிராக எதையும் செய்திடவில்லை. தமிழைக் காப்பதாகக்கொண்டவர்களெல்லாம், தமிழை வைத்து தன்னைக் காத்துக்கொண்டதை மறுக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com



"ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற தொகுதிகளாக அச்சான பிறகு வேளாள திராவிட அரசியலுக்கு பெரிய உத்வேகம் கிடைத்தது. தமிழர்கள் அதாவது வேளாளரின் பொற்காலக் கனவை இது வளர்த்தது. மற்றொரு புறம் இக்கருத்தானவை ஏகாதிபத்திய எதிர்ப்புகளாக பாரதி, திரு.வி.க. போன்றோர்களால் பயன்படுத்தப் பட்டாலும் வேளாள மீட்புவாதத்திற்கே பெரிதும் பயன்பட்டது எனலாம்" *(தலித் விமர்சனக் கட்டுரைகள், ராஜ் கௌதமன், பக். 40)* என்று தலித் எழுத்தாளர் ராஜ் கௌதமனின் ஆய்வை தமிழ் தேசியவாதிகள் மறுக்கமுடியாது. தமிழ்தேசியமாக முன்வைக்கப்படும் தேசியமானது இன்னொரு சாதி இந்து தேசியமாகவே அமையும். ஒருபோதும் அது சாதியற்ற தேசியமாக ஆகிவிட முடியாது.

தமிழ் தேசியவாதிகள் தங்களை சாதிப்பற்றற்றவர்களாக கூறிக் கொள்வதெல்லாம் மட்டமான பொய். அவர்களின் சாதிப் பற்று - ஒருவகையில் அதுவும் சாதி வெறிதான் - பற்றி அவர்களின் செயல்பாடுகளே விளக்குகின்றன.

கள்ளத் தோணியில் கடல் கடந்து சென்று ஈழத்துப் போராளிகளுக்கு உதவும் தமிழ்தேசவாதிகள் தமிழ்நாட்டில் சாதி வெறியால் சாம்பலான சேரிகளுக்குச் சென்று பார்த்திருப்பதாக எந்தப் பதிவும் இல்லை.

கண்ணகி சிலை அகற்றப்பட்டதற்கு வானுக்கும் மண்ணுக்கும் குதித்த இவர்களுக்கு சாதி வெறியால் சீரழிந்து பலியாக்கப்பட்ட கோ. ஆதனூர் பொன்னருவியெல்லாம் கண்களுக்குத் தெரிவதில்லை.

தமிழனை தமிழனே ஆள வேண்டும் என்ற கொள்கையுடைய தமிழ்தேசியவாதிகள் 'மேலவளவு' படுகொலைக்கெதிராக எதையும் செய்யமாட்டார்கள். அவர்களின் இலக்கு தமிழ்தேசியம்தான். தமிழ் தேசியத்திற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். சூழ்ச்சியும் செய்வார்கள். இப்பொழுது அவர்கள் இறங்கியிருக்கும் பணி தலித்துகளை தன்வயப்படுத்துதல். மராத்தியர் என்று அம்பேத்கரை நிராகரிக்க முயன்ற தமிழ்தேசியவாதிகள்தான் இன்று தலித்துகளை, அவர்களின் தலைமையை குறிவைக்கின்றனர். இதன்மூலம் சாதி ஒழிப்பிற்கு முரணற்ற ஆயுதமான அம்பேத்கரியத்தை வடக்கிந்திய தத்துவமென அகற்ற முயலுகின்றனர். இதற்காக தலித்துகளை தன்வயப்படுத்துவதற்காக இன்று தலித் இயக்கமான விடுதலைச் சிறுத்தைகளை ஆயுதமாக்கியுள்ளனர். கடந்த பத்து ஆண்டு காலமாக தமிழகத்தில் சாதி ஒழிப்பை முன்னிலைப்படுத்தி சாதி வெறியர்களையும் அரசு ஒடுக்குமுறையையும் எதிர்த்து விடுதலைச் சிறுத்தைகள் செய்த் பணி இதுவரை தமிழகத்தில் வேறெந்த தலித் இயக்கமும் செய்யாதது. தமிழகத்தில் தலித் எழுச்சியை ஏற்படுத்தியதில் பெரும்பங்கு இவ்வியக்கத்தின் முன்னோடிகளுக்கு உண்டு. ஆனால் இன்று விடுதலைச் சிறுத்தைகள் வேறு தளத்தில் தமிழ் தேசியவாதத்தில் பயணிக்கத் தொடங்கியுள்ளனர். அம்பேத்கரை வழிகாட்டியாகக் கொண்டியங்கிய இவ்வியக்கம் இன்று வேலுப்பிள்ளை பிரபாகரனையும் இங்குள்ள சாதி இந்து தமிழ்தேசியவாதிகளையும்முன்னிலைப்படுத்துகிறது. இது தமிழ் தேசவாதி வியாபாரிகளுக்கு வேண்டுமானால் லாபத்தைத் தரலாம். தலித்துகளுக்கு எந்தப் பலனையும் அளிக்க வாய்ப்பில்லை. தலித்துகளுக்கு பயனளிக்கும் அம்பேத்கரியத்தை இன்னும் குறைந்த பட்சமாகக்கூட தலித் இளைஞர்களுக்கு கற்பிக்காத சூழலில் சாதி ஒழிப்புக் களத்திற்கு அப்பாற்பட்ட தலித் விரோத வாதமான தமிழ் தேசியத்தை அறிமுகப்படுத்துவது கடுமையான பின்விளைவுகளை உண்டு செய்யும். தமக்கு எந்த விதத்திலும் உதவாத தமிழ் தேசியம் என்னும் கூண்டிற்குள் தலித்துகளை சிக்கவைப்பது மோசமான பின்னடைவை சந்திக்க நேரிடும். மேலும் தென்மாவட்ட தலித்துகளுக்கு எதிரானவராக அறியப்படும் சேதுராமனோடும், வட மாவட்ட தலித்துகளிடம் பகைமையோடு உலா வரும் ராமதாசோடும் இணைந்து திருமாவளவனால் (பழ. நெடுமாறன்தான் தலைமை) ஒரு நியாயமான தேசியத்தை ஒருபோதும் கட்டியமைக்க முடியாது.

திருமாவளவன், ராமதாசோடும், சேதுராமனோடும் சமூகப் பிரச்சினையை முன்னிலைப்படுத்தி இணைந்திருந்தால் பல விமரிசனங்கள் இருப்பினும்கூட வரவேற்கலாம். ஆனால் தலித் பிரச்சினைகளை மறைத்து வைக்கும் தேசிய இனப் பிரச்சினையை முதன்மைப் படுத்துதலே தலித்துகளுக்கு, குறிப்பாக 'விடுதலைச் சிறுத்தை'களுக்கு ஆபத்தாக அமையும்.

சாதி ஒழிப்பை முன்னிலைப் படுத்தாத தமிழ் தேசியத்தில் தலித்துகளுக்கு எவ்விதத்திலும் பயனில்லை. ஒரு தமிழனே இன்னொரு தமிழனின் வாயில் பீயைத் திணிப்பது நிறுத்தப்படும் வரை தமிழ் தேசியத்திற்கு வெற்றி என்பதில்லை.

பின்குறிப்பு

தமிழ் திரைப்படங்களுக்கு தமிழில்தான் பெயர்சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை தற்பொழுதைய தமிழ் தேசியவாதிகளால் முன் வைக்கப்படுகிறது. திரைப்படங்களில் தலித்துகளின் வாழ்நிலை கேலிகளாகக் காட்டப்படுவதை, தலித்துகளை அடக்குவதை அழகியலாகக் காட்டப்படுவதை எத்தனை முறை தமிழ் தேசவாதிகள் எதிர்த்திருக்கிறார்கள்.

கிருஷ்ணசாமி என்ற தலித் தலைவரால் மட்டுமே அதை எதிர்க்கமுடிகிறது. மேலும் பாலியல் வக்கிரங்கள் வழிந்தோடும் திரைப்படத்திற்கு பெயர் 'நியூ' என்று வைத்தாலென்ன 'புதிது' என்று வைத்தாலென்ன.



படிப்பகம்

www.padippakam.com

■ எ.எம். சாலன்

# பிரபல மலையாள நாவலாசிரியை மாதவிக்குட்டியின் இலக்கியத்தடம்

மலையாள இலக்கிய உலகில் பிரபல இலக்கிய வாதிகளான பொற்றைக்காட், தகழி, கேசவதேவ், காரூர் நீலகண்ட பிள்ளை, பொன்குன்னம் வர்க்கி, வைக்கம் முகமது பஷீர், எம்.டி. வாசுதேவன் நாயர் போன்றவர்களுக்கு நிகரானவர் நம் நாவலாசிரியை மாதவிக்குட்டி அவர்கள்.

கேரள நிலவுடைமை சமூகத்திலுள்ள கொடுமை களுக்கு எதிராகவும், அக்காலத்தில் கோரதாண்டவம் ஆடிய வறுமைக்கு எதிராகவும், வீரமுடன் கிளர்ந் தெழுந்த தொழிற்சங்கப் போராட்டங்களைப் பற்றியும் மலையாள இலக்கியத்தில் பக்கம் பக்கமாக எழுதப் பட்டன. இவைகளெல்லாம் நம் மனிதகுலம் சமாதான மாகவும், சந்தோஷமாகவும், சமத்துவமாகவும் வாழ் வதற்காக வேண்டி இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்ட வைகளே!

இப்படி, மொத்தமாக மனிதகுல விடுதலையின் மீதும், சுரண்டலின் மீதும் கேரள இலக்கியவாதிகள் செலுத்திவந்த கவனம், இங்குள்ள பெண்கள் காலம் காலமாக அனுபவித்து வரும் கொடுமைகள் மீதோ அல் லது அவர்களுக்கு இந்த சமூகம் அளிக்க மறந்துபோன உரிமைகள், சம அந்தஸ்து போன்றவைகள் மீதோ செலுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது.

மலையாள இலக்கிய உலகைப் பொறுத்தமட்டில், இம்மாதிரி விஷயங்களில் முதன்முதலாக கவனம் செலுத்தியவர் நாவலாசிரியை மாதவிக்குட்டி அவர்கள் தான்.

ஒரு வார்த்தையில் சொல்வதானால், அவர் மலையாள இலக்கியத்தில் மொத்தப் பெண்களின் விடு தலைக்காக வேண்டி, ஆணாதிக்கத்திற்கு எதிராகக் குரல்கொடுத்துக் கொண்டிருப்பவர் என்றுகூடச் சொல்லலாம்!

நம் நாட்டுப் பெண்கள், குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அனுபவித்துவரும் துன்பங்கள், அவர் களின் மான அவமானங்கள், நம் சமூகம் அவர்களுக்கு அளித்துள்ள இடம், அந்தஸ்து என, இப்படி ஏராள மான விஷயங்களை நோக்கி மாதவிக் குட்டி அவர்கள் தன் இலக்கியப் பயணத்தைத் தொடர்கிறார். இவர் செல்லும் இந்தப் புதியபாதை இதற்கு முன்னால் எந்த வொரு மலையாள இலக்கியவாதியும் சஞ்சரிக்காத இலக்கியப்பாதை என்பதையும் நாம் இந்த இடத்தில் நினைவில்கொள்ள வேண்டும்.

மாதவிக்குட்டி அவர்களின் படைப்புகள் அனைத் தையும் நாம் தொகுத்துப் பரிசோதித்தோமானால், பெண்களின் உரிமைக்காக வேண்டி குரல் கொடுக்கும் அவர் அதே வேளையில், பெண்களின் சார்பாக பாலி யல் சுரண்டலை மிகவும் கடுமையாக விமர்சனம் செய் வதையும் காணலாம்! இவை மட்டுமல்ல; சமூகத்தில் அவர்களுடைய பங்களிப்பின் அவசியத்தைப் பற்றியும் அவர்களுடைய படைப்புகள் நம்மோடு பேசுகின்றன.

உதாரணமாக இவரது சிறுகதையான 'புளுகு' கதையில், ஒரு பெண்ணின் கணவன், தன் மனைவி வீட்டில் இல்லாத வேளையில் தன் காதலியை வீட்டுக்கு வரச்சொல்லி, அவளோடு சரச விளையாட்டில் ஈடுபடு கிறான். இந்த உண்மையை தன் தாயிடம் தெரிவிக்கும் பிஞ்சு மகனை 'இனி இப்படி பொய் சொல்லாதே!' என கண்டிப்பதாக கதை முடிவடைகிறது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நம் நாட்டில் எந்வொரு ஆணும் தன் மனைவியிடம் உண்மை பேசு வது கிடையாது என்ற கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது அந்தக் கதை. இதுநாள் வரையிலும் படைக்கப்படாத (குறிப்பாக மலையாளத்தில்) ஒரு புதிய கோணத்தில் படைக்கப்பட்ட சிறுகதையாகும். இதன் வாயிலாக மாதவிக்குட்டி அவர்கள், ஆண்களின் வக்கிரத்தனத்தை எடுத்துக்காட்டுவதோடு, பாதிக்கப் பட்ட பெண்ணின் சார்பாக குரல்கொடுப்பதையும் கேட்கமுடிகிறது.

இதேமாதிரி இன்னொரு கதையில், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி, தன் கணவனை காரில் ஏற்றிக்கொண்டு போய் அலுவலகத்தில் விட்டு விட்டு வீட்டிற்குத் திரும்பி வரும்போது, போலீஸ் காரர்களின் வேடத்தில் வந்த சில ரௌடிகளால் பலவந்தமாகக் கடத்தப்பட்டு அவர்களுடைய தலைவன் இருக்கும் ரகசிய இடத்திற்குக் கொண்டுபோகப்படு கிறாள்.

கடைசியில், அவன் அவளை மானபங்கப்படுத்தவே, 'இரு; என் கணவன் வரட்டும். உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்' என அவள் வெப்புராளத்தில் அழுது கொண் டிருக்க, அந்த வேளையில் அவள் கணவன் அங்கு வந்து சேருகிறான். அவள் நடந்தது முழுவதையும் அவனிடம் தெரிவிக்க, அவளது பேச்சு அங்கே எடுபடாமல் போய் விடுகிறது. அது மட்டுமின்றி கடைசியில் அவன் தன் மனைவியின் மீது சந்தேகம் கொண்டு அவளை வெறுத்து ஒதுக்கிவிட்டுப் போவதாக கதை முடிவடை கிறது (கல்யாணி சிறுகதையில்).



படிப்பகம்

www.padippakam.com

இக்கதையில் நம் நாட்டிலுள்ள கணவன்-மனைவி உறவு எடுத்துக் காட்டப்படுவதோடு, தன் சொந்த விருப்பத்துடனோ அல்லது பலாத்காரமாகவோ நம் நாட்டு பெண்களின் கற்புக்குக் களங்கம் ஏற்படுமானால் அவர்களின் கதி அதோகதிதான் என்பது இக்கதையின் மையக் கருவாக விளங்குகிறது.

வேறு ஒரு கதையில் வேலைக்காக வேண்டி முகவரி தேடியலையும் இருபத்தியேழு வயதுள்ள (திருமணமாகி குழந்தைக்குத் தாயானவள்) பெண்ணொருத்தியை தன்னுடைய பழைய காதலி என (தவறாக) எண்ணிக்கொண்டு ஆண் ஒருவன் அவளை மானபங்கப்படுத்த முயற்சிப்பது எடுத்துக்காட்டப்படுகிறது (பறவையின் வாசனை - கதையில்). இதில் வரும் ஆண் கதாபாத்திரத்தின் வருணனைகளும் வசீகரமான வார்த்தைகளும் நிஜவாழ்க்கையில் நம் ஆண்களிடம் காணப்படுவது மாதிரியே தோன்றும்!

இன்னொரு கதையில், ஒரு வீட்டில் தன் கணவனிடமும் குழந்தைகளிடம் அன்பு செலுத்தி, குடும்பக் காரியங்களை கரிசனையோடு நடத்திவரும் தாய் ஒருத்தி திடீரென்று இறந்துபோக, அந்தக் குடும்பம் முன்னே செல்ல இயலாமல் தட்டுத்தடுமாறுவதைக் காணமுடிகிறது. (நெய் பாயாசம் - சிறுகதையில்)

'இவ்வுலகில் எல்லாக் காரியங்களிலும், ஆணுக்குப் பிறகுதான் பெண்' என இந்த ஆணாதிக்கச் சமூகம் தம் பட்டம் அடித்துக்கொண்டு திரிந்தாலும் கூட, குடும்பத்தின் அச்சாணியான பெண்ணின் இழப்பால் ஒரு குடும்பம் எவ்வாறு நிலை தடுமாறும், குழந்தைகளும் ஆண்களும் எவ்வாறு அலைக்கழிந்து போவார்கள் என்பதை இன்றைய சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் சிறுகதை அது! மாதவிக்குட்டி அவர்களின் கதைகளிலேயே பெண்களின் முக்கியத்துவத்தை மிக அழகாகவும் ஆழமாகவும் எடுத்துக் காட்டும் சிறுகதையும் கூட!

இதுமாதிரி தன் மனைவி உயிருடன் இருக்க, அழகுள்ள தன்னுடைய வீட்டு வேலைக்காரியான நேப்பாள் பெண்ணுடன் உறவுகொண்டு மகிழும் ஆணை, தனது 'சித்தப்பிரமை' கதைமூலம் நமக்கு எடுத்துக் காட்டுகிறார் மாதவிக்குட்டி அவர்கள்.

பொதுவாக, நம் நாட்டுப் பெண்கள் நெஞ்சில் ஈரமுடையவர்கள் என்பதை அவரது 'கடலோரத்தில் ஒரு வீடு' சிறுகதை சுட்டுகிறது.

நம் ஆண்களின் வக்கிரத்தனத்தையும் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளையும் மாறி மாறி எடுத்துக்காட்டும் அவர், நம் புதிய தலைமுறையின் பொறுப்பற்றத் தன்மையினையும் சுட்டிப்பேசத் தவறவில்லை. (அம்மா சிறுகதையில்)

பொதுவாக நம்நாட்டில் இப்போது நாளுக்கு நாள் கற்பழிப்புக் கொடுமை அதிகரித்துக்கொண்டிருப்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்றே! ஆண்களைப் பொறுத்தமட்டில் இந்தச் சந்தர்ப்பத்தில் வயது பேதத்தைக்கூட கவனிப்பது கிடையாது. 50 அல்லது 60 வயது நிரம்பிய கிழவர்கள்கூட தங்கள் மகள் அல்லது பேத்தியின் வயதையொத்தக் கன்னிப் பெண்களோடு பாலியல் உறவில் ஈடுபடுவதைக் காண முடிகிறது. உதாரணத்திற்கு, இளம்பெண்களைக் கடத்திக்கொண்டுபோய் விபச்சார விடுதிகளில் வைத்து வியாபாரம் பண்ணும் கும்பல் இப்போது நம் நாடெங்கும் சங்கிலித் தொடர்போல் செயல்பட்டு வருவதைச் சொல்லலாம்! இங்கே அதிகமாகச் சென்று வருவது நம் நாட்டு இளைஞர்களைவிட வயதானவர்களும் வி.ஐ.பி-களுமே! இவைகளை மாதவிக்குட்டி தன் படைப்புகள் வாயிலாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார். (ருக்மிணிக்கு ஒரு பாவைக்குட்டி-யில்)

***நான் சமுதாயம்***
***அங்கீகரித்துள்ள பழைய***
***ஆசாரங்களை ஒருபோதும்***
***மதிப்பதில்லை. அதற்கு பல***
***காரணங்கள் உள்ளன.***
***இந்த ஆசாரங்களின்***
***அடிப்படையே***
***மனித சரீரம்தான்!***

நம் மனிதகுலத்தில் வந்து பிறந்து வளர்ந்தாலும் கூட தங்கள் தலைவிதியை சுயமாக நிர்ணயிக்க உரிமை இல்லாதவர்கள் நம் நாட்டுப் பெண்கள். உயிருக்கு உயிராகக் காதலித்த இளைஞனை சந்தர்ப்ப சூழலின் காரணமாக கணவனாக வரித்துக் கொள்ள இயலாமல் இன்னொருவருக்கு வாழ்க்கைப்பட்டு அந்த ஆணிடம் அப்பெண் மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் அனுபவித்துவரும் கொடுமைகளை அவரது நாவல்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

ஒற்றை நோட்டத்தில் 'இதென்ன அனைத்தும் செக்ஸ் கதைகளாக அல்லவா இருக்கிறது!' எனத் தோன்றும். ஆனால் உள்ளே போகப் போக ஆண்களின் வக்கிரத்தனத்தையும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நம் பெண்களை நிர்வாணமாக்கிக் கடித்துக்கீறும் ஆண்களின் கோரமுகங்களையும் தரிசிக்கலாம்.

நம் தமிழ்நாட்டுப் பெண் இலக்கியவாதிகளின் படைப்புகளோடு மாதவிக்குட்டி அவர்களின் எழுத்துக்களை ஒப்பிடுவதாக இருந்தால், பிரபல தமிழ் பெண் எழுத்தாளர்கள் பலரும் வழக்கத்திலிருக்கும் ஆணாதிக்கத்தை இதயப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதை இருகரம் கூப்பி வரவேற்று, மரியாதை செய்வதைப் பார்க்கமுடியும். தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகவும், ஆண் பெண் சமத்துவத்திற்காக வேண்டியும் உலகம் முழுவதும் இருக்கும் பெண் இயக்கங்கள் உரக்கக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் இக்காலத்தில்,

'கல்லானாலும் கணவன்,
புல்லானாலும் புருசன்'
'ஆம்பளை சேறுகண்ட இடத்தில் மிதிப்பான்,
தண்ணி கண்ட இடத்தில கழுவுவான்'



படிப்பகம்

www.padippakam.com

என்ற ஆணாதிக்கக் கருத்துகளுக்கு வக்காலத்து வாங்குபவர்கள் நம் பெண் எழுத்தாளர்களில் பலரும். மாதவிக்குட்டி அவர்கள் இதற்கு முற்றிலும் விதிவிலக்கானவர்.

ஆக இப்படி அவரைப்பற்றி இன்னும் அடுக்கிக் கொண்டே போகமுடியும். மொத்தத்தில் மாதவிக்குட்டி அவர்களின் படைப்புக்களைத் தொகுத்துப் பார்க்கும்போது கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வரமுடியும்.

1. இவரது படைப்புகள் அனைத்தும் ஆணாதிக்கத்தை மிகக் கடுமையாக விமர்சனம் செய்கின்றன.
2. பெண்களின் உரிமைக்காக வேண்டியும் சமத்துவத்திற்காக வேண்டியும் குரல்கொடுக்கின்றன.
3. பெண்களின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படுகின்றன.
4. பெண்களின் பிரச்சினைகளை பெண்களின் பக்கமாக நின்று அலசுகின்றன.
5. ஆண்களின் வக்கிரத்தனங்கள் பல படைப்புகளில் அப்பட்டமாக எடுத்துக்காட்டப் படுகின்றன.
6. பல கதைகளில் பெண்களுக்கேயுரிய உலகக் கண்ணோட்டம் வெளிப்படுகின்றது.

மாதவிக்குட்டியின் படைப்புகளைப் படிக்கும் போது நம் எல்லோருக்குள்ளும் ஒரு கேள்வி எழலாம். இந்த உலகிலுள்ள ஆண்கள் அனைவரும் மோசமானவர்களா? என.

அதற்கான பதிலைத் தெரிந்துகொள்வதற்கு முன்பாக சமூகத்தில் நம் பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகள் பற்றி சமீபத்தில் நடத்திய ஆய்வின் முடிவைத் தெரிந்துகொள்வது நல்லது. அதன் விவரம் பின்வருமாறு.

1. நம் பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகள் வருடாவருடம் 14.6 விழுக்காடு பெருகிக்கொண்டிருக்கின்றன.
2. பெண்களுக்கு உபத்திரவம் செய்வது போன்ற கேஸுகள் 24.9 விழுக்காடு. இவற்றுள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது கற்பழிப்புக் கொடுமைகளே! (1990 முதல் 1996 வரையிலுள்ள கணக்கெடுப்பின்படி)

1990-இல் பதிவு செய்யப்பட்ட கேஸுகளின் எண்ணிக்கை 9518. இது படிப்படியாக 1996-ஆம் ஆண்டு 12,661 ஆகக் கூடியிருந்தது .

மேலே கண்டவற்றுள் கற்பழிப்புக் கொடுமை வருடத்திற்கு 4.8 விழுக்காடு கூடிக்கொண்டிருப்பதாக அறிக்கை செய்யப்பட்டிருந்தது.

பெண்களுக்குக் கொடுமைகள் இழைப்பதில் மகாராஷ்டிரா மாநிலம் முதல் இடத்திலும், மத்தியப் பிரதேசம் இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன. இப்படி பெண்களைக் கொடுமைப்படுத்துவதில் நம் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருப்பதாக அந்த ஆய்வு வெளிப்படுத்தியிருக்கிறது.

ஆண்கள் நம் பெண்களுக்குச் செய்யும் கொடுமைகளைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதிவரும் மாதவிக்குட்டி அவர்கள் இங்குள்ள இலக்கிய ஜாம்பவான்களால் பல இடையூறுகளைச் சந்திக்கவேண்டியிருந்தது என்றாலும் அவர் தன் பாதையை விட்டு விலகவே இல்லை.

மாதவிக்குட்டி அவர்கள் தன் கருத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

"நான் சமுதாயம் அங்கீகரித்துள்ள பழைய ஆசாரங்களை ஒருபோதும் மதிப்பதில்லை. அதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்த ஆசாரங்களின் அடிப்படையே மனித சரீரம்தான்!

இந்த சமூக அமைப்பை நான் ஒரு கோரமான பாட்டியாக உருவகப்படுத்த நினைக்கிறேன். இந்தப் பாட்டியானவள் பொறாமை நிறைந்த மனது படைத்தவர்களையும்,பொய் பேசுபவர்களையும், சுயநலக்காரர்களையும், ரகசியமாகப் படுகொலையில் ஈடுபடுபவர்களையும் வாத்சல்யத்தோடு ஒரு போர்வை கொண்டு போர்த்திக் கொள்கிறாள்.

மேலேகண்ட நடவடிக்கைகளை வெறுப்பவர்கள், வெளியே கிடந்து 'வெடவெட'வென நடுங்கவேண்டி வரும்.

பொய் பேசியும் வஞ்சனை காட்டியும், எனக்கும் இந்தப் போர்வைக்குள் இடம்பிடித்திருக்கமுடியும்; ஆனால் நான் அவ்வாறு அதனுள் இடம் பிடித்திருந்தால் நானொரு இலக்கியவாதியாக வளர்ந்திருக்க முடியாது. நான் வெளிப்படுத்தியுள்ள இலக்கிய உண்மைகள் ஒருபோதும் வெளிச்சத்திற்கு வந்திருக்கவும் முடியாது." அவர்மேலும் தொடர்கிறார்...

"இலக்கியவாதிகள், சுயமாக பலிமிருகங்களாகிறார்கள். வாழ்க்கை அனுபவங்களை விலக்கித் தள்ளிக் கொண்டு அவர்களால் ஒரு போதும் ஒடி ஒளிக்க இயலாது; அப்படிச் செய்யவும் கூடாது. பெய்யும் பனியின் குளிரையும் நெருப்பின் சூட்டையும் அவர்கள் அனுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் ஓய்வெடுக்கக் கூடாது. அப்படி ஓய்வு எடுத்தால், அது அவர்களை கொலைகாரர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு இழுத்துக்கொண்டு போய்விடும்.

... அவன் உரையாடுவது உங்களோடு அல்ல; உங்களுடைய வருங்காலத் தலைமுறையினரோடு. அந்த உணர்வு அவன் மனதில் இருப்பதினால்தான் உங்களில் சிலர் எறிகிற கற்கள் அவனுடைய உடலை ரணப்படுத்தினாலும் கூட, அவன் மௌனமாகவே இருக்கிறான்." ("மலையாளம்" வாரப்பத்திரிக்கை, 15.11.2002)

ஆக, மலையாள இலக்கிய உலகில் ஆணாதிக்கத்திற்கு எதிராகவும், பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராகவும் இப்படி போர்க்கொடி உயர்த்திய பெண் இலக்கியவாதி மாதவிக்குட்டிக்கு நிகராக வேறு எவரும் கிடையாது என நாம் துணிந்து சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய கோடாங்கியின்

# தலித் - பழங்குடி - அரவாணிகள் - சிறுபான்மையினர்

## இரண்டாவது மாநில மாநாடு

**நாள் : 22,23 சனவரி, 2005** **இடம் : வஸந்த மஹால் திருமண மண்டபம், தேனி**

22.1.2005 சனி காலை மணி 9.00 - 10.00 ***தலித் சுப்பையாவின் இசை நிகழ்ச்சி***

முன்னிலை : **டாக்டர் பேரா. ராஜிகுமாரி** ● துவக்கவுரை : **சிவகாமி இ.ஆ.ப.**

சிறப்புரை : **கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப.** ● வாழ்த்துரை : **தலித் இயக்க ஆர்வலர்கள்,** தேனி

**எஸ்.டி. கல்யாணசுந்தரம்** ● V. **பாஸ்கரன்,** NCHDR ● **ஐயகரன்,** *தலித் ஆதார மையம்*

நன்றியுரை : **நிகழ் அய்க்கண்**

### அரங்கு 1 : முற்பகல் 10.30 - 12.00 மணி

**பெண் விடுதலைக் கல்வி** (பெண்கள் அரங்கு)

தலைமை : வழக்கறிஞர் **ரஜினி**

முன்னிலை : பேரா. **பர்வீன் சுல்தானா.**
*ஜஸ்டிஸ் பசீர் அகமத் சையத் பெண்கள் கல்லூரி, சென்னை*

ஒருங்கிணைப்பாளர் : பேரா. **ஆரோக்கியமேரி**

- பஞ்சாயத்து அமைப்புகளில் தலித் பெண்கள் - **இன்பக்குமாரி**
- மகளிர் சுய உதவிக்குழுக்களில் சாதியம் - **செங்கை மாவட்ட மகளிர் சுய உதவிக்குழு**
- பழக்கடை பசுபதி களப்போராட்டம் - **ரோஜாபீவீ**
- அரசியல் கலை இலக்கியத் துறையில் பெண்கள் பங்கு - பேரா. **நாகேஸ்வரி**
- பெண்கள் விடுதலைக் கல்வி - வழக்கறிஞர் **ரஜினி**
- தலித் மற்றும் இஸ்லாமிய பெண்களின் பொருளாதார மற்றும் சமூக நிலை - பேரா. **பர்வீன் சுல்தானா**

### அரங்கு - 2 : மதியம் 12.00 - 1.30

**கலாச்சார பாதுகாப்பு** (பழங்குடியினர் அரங்கு)

தலைமை : **பிரபா கல்விமணி**

முன்னிலை : **ஜெக்கம் பெல்லி**

ஒருங்கிணைப்பாளர் : **சிவகாமி**

தொகுத்து வகுங்குபவர் : **சந்தரகீதன்**

- சாதிச் சான்று - **சக்திவேல்,** ஆய்வாளர்
- நிலம், அடிப்படை வசதிகள் - **லீலாவதி** (பலியர்)
- கலாச்சார பாதுகாப்பு - **நீலாசின்** (தோடர்)
- வனத்துறையும் பழங்குடிகளும் - **கஜேந்திரன்**

### அரங்கு 3 : பிற்பகல் 2.30 - 4.00 மணி

**கோரிக்கைகள்** (அரவாணி அரங்கு)

தலைமை : **அருணா**

முன்னிலை : **ஆல்கா**

ஒருங்கிணைப்பு : **நீலு** (AHEAD)

- வீடு - ப்ரதிக்தா - செயலூர் -அரவாணிகள் சங்கம், கடலூர்
- நிரந்தர வருமானம் ஈட்டும் வழிகள் - **செந்தில்** TAI ஆலோசகர்
- கல்வி - **ஆஷாபாரதி**
- காவல்துறையும் அரவாணிகளும் - **பூமிகா,** தலைவர், தமிழ்நாடு அரவாணிகள் சங்கம்
- அரவாணிகளுக்கான திட்டங்கள் அரவாணிகளைச் சேர்வதில்லை - **துரிகா,** சென்னை

### அரங்கு - 4 : மாலை 4.00 - 5.30 மணி

**பள்ளர் - பறையர் - அருந்ததியர் இயங்கியல்**

(தலித் ஒற்றுமை அரங்கு)

தலைமை : **காளிமுத்து**

முன்னிலை : முனைவர் **ராஜிகுமாரி**

ஒருங்கிணைப்பாளர் - **சன்னா**

- அருந்ததியர் - பள்ளர் - பறையர் - இயங்கியல் - **சன்னா**
- தலித் ஒற்றுமையில் இந்துத்துவ அரசியல் கட்சிகளின் தலையீடு - **வேலுச்சாமி**
- தலித்துகளுக்கு தனி ஊராட்சி - **அகவி**



படிப்பகம்

www.padippakam.com

- தலித் நில உரிமை அறப் போராட்டம் - **சிவகாமி**
- இரட்டை வாக்குரிமை - **சிருந்துதாசு காந்தி**
- அம்பேத்கரியம் ஒன்றே தலித் விடுதலைக்கு வழிவகுக்கும் - **குடியரசன்**

மாலை 7.00 - 9.00 மணி கலை நிகழ்ச்சிகள்
பொது நிகழ்வு (தேனி பேருந்து நிலையம் அருகில்)

தலைமை : **இமயம்**
வரவேற்பு : **ஸ்டாலின் ராஜாங்கம்**
முன்னிலை : **லோகநாதன்,** D.R.O. (Retd.)
சிறப்பு அழைப்பாளர்கள் :
**எழில் இளங்கோவன், வேலு அண்ணாமலை,** டாக்டர் **ஜெயராமன், ஐகியமியன்,** பேரா. **நல்லுசாமி**
தொகுப்பு:
**அன்பழகன், பாரிசெழியன், பொன்னுதிதுரை,** பேரா. **பிரபாகரன்,** புதுக்கோட்டை **இளங்கோவன்**
நன்றியுரை : ஓவியர் **சந்ரு**
கலைநிகழ்ச்சி : "**மனிதம்**"
நர்த்தகி நட்ராஜ் அவர்களின் நாட்டிய நிகழ்வு

அரங்கு 5 : இரண்டாம் நாள் அமர்வு 23.1.2005
காலை 9.00 - 10.30 மணி
**தலித் ஆதரவாளர்களின் பங்கு** (தலித் ஆதரவாளர் அரங்கு)
தலைமை : பேரா. **அ. ராமசாமி**
முன்னிலை : **ஜே. சங்கரி**
ஒருங்கிணைப்பாளர் : **நிகழ் அய்க்கண்**

- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை அமல்படுத்தலில் - **பிரபா கல்விமணி**
- தலித்துகளுக்கு தனி ஊராட்சி அமைப்பதில் - **இன்பக்குமார்**
- தலித் கலை இலக்கிய வளர்ச்சியில் - பேரா. **க. பஞ்சாங்கம்**
- தலித் அரசியலில் - பேரா. **அ ராமசாமி**

அரங்கு 6 : காலை 10.30 - 12.00 மணி
**மதமாற்றம் சாதி ஒழிப்புக்கு தீர்வாகுமா?**
(சிறுபான்மையினர் அரங்கு)
தலைமை : அருட்பணி X.D. **செல்வராஜ்**
முன்னிலை : **முகமது இலியாஸ்**
ஒருங்கிணைப்பு : அயன்புரம் **ராஜேந்திரன்**

- தலித்துகளும் விடுதலை இறையியலும் - பேரா. **அந்தோணி குருசு**
- மதம் மாறியவர்களின் சமூக நிலை - பேரா. **லெனின்**
- மதமாற்றம் சாதி ஒழிப்புக்கு தீர்வாகுமா? - பேரா. **புனித ஜாரிஜ்**
- கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் இன்றைய பிரச்சினை - அருட்திரு **குமார், பீர் முகமது**

அரங்கு 7 : காலை 10.30 - 12.00 மணி
**தலித் எழுத்துக்களில் அம்பேத்கரியம்**
(தலித் கலை இலக்கிய அரங்கு)
தலைமை : ஓவியர் **சந்ரு**
முன்னிலை : **பிரதிபா ஜெயச்சந்திரன்**
ஒருங்கிணைப்பாளர் : **விழி.பா. இதயவேந்தன்**

- தலித் இலக்கியம் தேக்க நிலையை அடைந்துவிட்டதா? - **தமி. கந்தசாமி**
- புதிய கோடாங்கி சிறுகதைகள் ஆய்வு - **மீனாட்சி முருகரதினம்**
- தலித் கவிதைகளில் அரசியல் - **பிரதிபா ஜெயச்சந்திரன்**
- தலித் நாவல்களில் அம்பேத்கரியம் - **அபிமானி**
- தலித் ஓவியங்கள் - விமர்சனம் - **யாக்கன்**

அரங்கு 8 பிற்பகல் : 2.30 - 3.30 மணி
விவாத மேடை
• **சிவகாமி** • **சன்னா** • **குடியரசன்** • **சந்ரு**
தொகுத்து வழங்குபவர்
- அயன்புரம் **ராஜேந்திரன்**

முழு மாநாட்டு நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பு :
- **விழி.பா. இதயவேந்தன்**

மாநாட்டு மலர் பொறுப்பாளர்கள் :
பேரா. **ராஜ்குமார், இதயகீதன்**

பிற்பகல் 3.30 - 4.00
**தீர்மானங்கள் வாசித்தல்**
**நிறைவு விழா**

தலைமை : **ஸ்ரீதர கணேசன்**
முன்னிலை : **அருணா பீர்முகமது,** இந்தியாடுடே
வாழ்த்துரை: **உள்ளூர் பிரமுகர்கள்**
நன்றியுரை : **சிவகாமி**

இம்மாநாட்டில் அனுமதிக்கட்டணமாக
அரவாணிகள் : ரூ. 50
பழங்குடியினர் : ரூ. 50
தலித், பிறருக்கு : ரூ. 100

தொடர்புக்கு
பேரா. **டி. ராஜ்குமார்**
அன்னம் மெத்தைகள் & தலையணைகள்
9-A, சிட்கோ தொழிற்பேட்டை
மதுரை ரோடு
தேனி - 625 531
செல்பேசி : 0-93446-10700



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவில் வாழும் தலித் இன மக்களுக்கு இரட்டை வாக்குரிமை வேண்டும் என்பதற்கான ஓர் ஆய்வு

■ கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு)

இந்தியாவில் சாதிப் பெரும்பான்மை என்பது நிலையானது மட்டுமல்ல, நிச்சயிக்கப்பட்டதும் ஆகும் என்று மாமேதை, இந்தியாவின் சட்டத்தை அருளிய தந்தை முனைவர் அம்பேத்கர் சொல்லுகிறார். சாதிப் பெரும்பான்மை இந்தியாவில் சாதிச் சிறுபான்மை நிலை அடையாது. இதன் விளைவு சிறுபான்மையாக இருக்கும் தாழ்த்தப்பட்ட தலித் மக்கள் என்றுமே பெரும்பான்மை நிலையை அடைய முடியாது. இது தான் இந்தியாவில் உள்ள உண்மை நிலை.

இந்தியா ஒரு குடியரசு நாடு. இங்கு பெரும்பான்மையாக உள்ள சாதி இந்துக்கள்தான் அரசு ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க முடியும். கட்சியிலும் உயர்வான இடத்தைப் பிடிக்க முடியும். சிறுபான்மையான தலித்துகள் ஆட்சி அதிகாரத்தை பிடிக்க முடியாது.

சாதி இந்துக்கள் பெரும்பான்மை தேர்தலில் வாக்களிப்பதை மாற்ற முடியாது. இதன் காரணமாக இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் பெரும்பான்மை சாதி இந்துக்கள் ஆளுமையிலேயே உள்ளன.

இன்று இந்தியாவின் அரசியல் நிலை சட்டத்தை விருப்பு வெறுப்பு இன்றிச் செயல்படுத்தும் அரசு அலுவலர்களிடமிருந்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மந்திரிகள், முதல் மந்திரி போன்றவர் கையில் அதிகாரங்கள். செயல்பாடுகள் மாட்டிக் கொண்டுள்ளன. அரசு அலுவலர்கள் அந்த அரசியல்வாதிகள் இடுகிற கட்டளைகளை நிறைவேற்றும் கருவிகளாக மாறிவிட்டனர்.

சட்டமன்றங்களுக்கும் பாராளுமன்றங்களுக்கும் தலித் பிரதிநிதிகள் அந்த மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மை சாதி இந்து வாக்காளர்களும் சிறுபான்மை தலித் வாக்காளர்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவர்களது எண்ணிக்கைக்காகவும் உலகிற்கு இந்திய நாடு தலித்துகளுக்கு சமஉரிமை கொடுத்திருக்கிறது என்பதைக் காட்டவும் பயன்படுமேயல்லாது, தலித் சமுதாயத்திற்கு ஒரு பயனுள்ள பிரதிநிதிகளாக இருக்க வாய்ப்பில்லை.

இந்நிலையிலிருந்து விடுபடவும் தலித் பிரதிநிதிகள், சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும் சிறப்பாகவும் மரியாதையாகவும் நடத்தப்படவும், தனது பிரதிநிதித்துவத்தை பயனுள்ள வகையில் செயலாற்றவும், தாங்கள் யாருக்காக அப்பதவிகளை அலங்கரிக்கிறார்களோ அம்மக்களின் மேம்பாட்டிற்காக உழைக்கவும் தற்போது இருக்கும் நிலைமாறி சீர்படுத்தப்பட வேண்டும். தற்போது இருக்கும் நிலையை மாற்றியமைக்க மூன்று வகையான மாற்றங்களை ஆய்வு செய்யலாம்.

(1) ஜனாதிபதி நிர்ணயம் செய்தல். இதிலுள்ள குறை ஜனாதிபதி தன்னிச்சையாக யாரையும் நியமனம் செய்யமுடியாது. பிரதமரும், மந்திரி சபையும் யாரை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களோ, அவர்களைத்தான் அவர் நியமனம் செய்யமுடியும். அந்த பிரதிநிதிகள் கட்சிக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள்.

(2) தற்போதுள்ள பெரும்பான்மையான ஆதிக்கச் சாதியினரும், சிறுபான்மையான தலித் மக்களும் இணைந்து வாக்களித்தல். இதனால் பயனில்லை என்பதைப் பார்த்தோம்.

(3) ஆங்கில அரசால், வட்டமேசை மாநாட்டில் எடுத்து வைத்த கருத்துக்கு ஒப்பவும் - டாக்டர் அம்பேத்கரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான தனி இரட்டை வாக்காளர் தொகுதி. இதில் தலித் பிரதிநிதிகளை தலித்துகள் மட்டுமே தேர்ந்தெடுத்து சட்டமன்றங்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் அனுப்பிவைத்தல். இதன்மூலம் தலித்துகள் அரசியல் அதிகாரம் பெற பெரிதும் வாய்ப்புள்ளது. ஆனால் இதை காந்தியார் எதிர்த்து, இந்த முறையை மாற்றவில்லை என்றால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று எரவாடா சிறையில் இருந்தவாறே பிரகடனம் செய்தார். ஆங்கில அரசு இந்த இரட்டை வாக்குமுறை தலித்துகளுக்கு சமஉரிமை பெற வாய்ப்பளிக்கும் என்று நம்பியது. ஆகவே அதைக் கைவிட மறுத்தது. முடிவாக டாக்டர் அம்பேத்கர் ஏற்றுக் கொண்டாலொழிய மாற்ற முடியாது என்று சொல்லிவிட்டது.

காந்தியார் நினைத்தது, ஆதிக்கச் சாதியினர் சுதந்திரம் பெற்றுவிட்டால் தீண்டாமை ஒழிந்து தலித்துகளும் சரிநிகர் சமானமாக ஆதிக்க சாதியோடு வாழ்வார்கள் என நம்பினார். ஆனால் அவர் நம்பிக்கை வீணாகிவிட்டது. இம்மாதிரி சமுக சீர்திருத்தத்தில் காந்தியார் ஈடுபடுவதை சாதி இந்துக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் விளைவு அவர் சாதி இந்துவாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

காந்தியார் உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்துவிட்டார். ஆங்கில அரசும், டாக்டர் அம்பேத்கர் ஒப்புதல் இல்லாமல் இரட்டை வாக்குமுறையை மாற்ற முடியாது என்று கூறிவிட்டது. உண்ணாவிரதம் இருந்த காந்தியின் உடல்நிலை மோசமாகிக் கொண்டு வந்தது. அரசியல் தலைவர்கள் மதன்மோகன் மாளவியா, ராஜகோபாலாச்சாரி, ராஜேந்திர பிரசாத் என்று



படிப்பகம்

www.padippakam.com

ஏறக்குறைய 28 சாதி இந்துத் தலைவர்களும் டாக்டர் அம்பேத்கரை வற்புறுத்தி டாக்டர் அம்பேத்கரிடம் காந்தியை அவரது படுக்கை அறையில் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டனர். டாக்டர் அம்பேத்கர் அவர்களும் ஒப்புக்கொண்டு காந்தியாரை எரவாடா சிறையில் சந்தித்தார். அப்போது காந்தி மிகவும் பலவீனமாக இருந்தார். டாக்டர் அம்பேத்கரைப் பார்த்தவுடன் காந்தியார் "எனது உயிர் உங்கள் கையில்தான் உள்ளது, என்னைக் காப்பாற்றுவீர்களா? என் உயிர்மேல் உங்களுக்கு அக்கறை இருக்குமானால் அந்த உயிரைக் காப்பாற்ற நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நெருப்புக்குச் சமமான இந்தப் படுக்கையிலிருந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" என்ற கெஞ்சல் அம்பேத்கரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. காந்தி பகுத்தறிவுக்குப் புறம்பான உணர்ச்சி வசப்பட்ட உண்ணாவிரதத்தின் மூலம் 25 கோடி மக்களின் அரசியல் அதிகாரத்தைத் தட்டிப் பறித்து விட்டார். இருந்தாலும் டாக்டர் அம்பேத்கர் தன் கொள்கையில் உறுதியாக இருந்து பூனா ஒப்பந்தத்தில் சில வழிமுறைகள் செய்யவேண்டும் என்று ஒப்பம் அளித்தார். இந்நிலையில் இரட்டைமலை சீனிவாசன், எம்.சி. ராஜா போன்றோர்களும் வற்புறுத்தப்பட்டனர் முடிவாக அம்பேத்கர் "தலித் பிரதிநிதிகளை முதலில் தேர்வு செய்வது தலித்துகள் மட்டும்தான். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வரில் ஒருவரை பொதுத் தொகுதி வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கலாம்" என்பதை காந்தி அவர்களும் ஒப்புக்கொண்டார். இந்த ஒப்புதல் அடிப்படையில் 'பூனா ஒப்பந்தம்' செப்டம்பர் 24, 1932-ஆம் ஆண்டு கையொப்பமானது. இதில் காந்தி சார்பாக 34 தலைவர்களும், அம்பேத்கர் சார்பாக நால்வரும் கையெழுத்திட்டனர்.

அந்தச் சிறப்பு ஒப்பந்தத்தில் கீழ்க்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தலித் மக்கள் தொகையின் அடிப்படையில் சட்டமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் பிரதிநிதிகளை தேர்வு செய்ய தீர்மானிக்கப்படுகிறது.

2. தேர்தல் கூட்டுத் தொகுதி மூலம்தான் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தலித்துகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு முதலில் தலித்துகள் மொத்த வேட்பாளர்களில் 4 பேரைத் தேர்வு செய்வர். இந்த நால்வரில் ஒருவரை அந்தத் தொகுதி சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுப்பர். இது இருமுறை தேர்வு நடத்துவதற்கு ஒப்பாகும்.

3. சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் இந்த முறையில் தேர்வு செய்யப்படுவர். இதன் அடிப்படையில் தலித் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முதல் உரிமை தலித்துகளிடமே இருக்கும். (இந்த முறை ஒருமுறைகூடதேர்தலில்அமல்படுத்தப்படவில்லை.

4-5. மத்திய மாநில பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தலித் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு அதே சதவிகிதத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர். பாராளுமன்றத்திற்கு 22.5 சதவிகிதமும், சட்டமன்றங்களுக்கு 18 முதல் 24 சதவிகிதம் வரையும் ஒவ்வொரு மாநிலத்தின் மக்கள் தொகைக்கு தகுந்தவாறு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6-7. மேற்கூறிய முறை தேர்வுகள் பத்து ஆண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். இதன் பிறகு தலித்துகளின் பிரதிநிதிகளும், தலித் அல்லாதோர் பிரதிநிதிகளும் கலந்துபேசி அதை கலைக்கவோ அதிகப்படுத்தவோ, முறையாக முடிக்கவோ தீர்மானிக்கலாம்.

8. இந்த முறை லோதியன் கமிட்டி சிபாரிசுப்படி நடக்கும்.

இந்தக் கூட்டறிக்கையில் மதன் மோகன் மாளவியா மற்றும் 34 சாதி இந்துக்கள் தலித் அல்லாதவர்களுக்காகவும், டாக்டர் அம்பேத்கர், இரட்டமலை சீனிவாசன், எம்.சி. ராஜா போன்றவர்கள் தலித் சார்பாகவும் கையொப்பமிட்டனர். இந்த ஒப்பந்தம் 1935-ஆம் வருட சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் பகுதி இரண்டில் குறிப்பிட்டபடி இந்த முறை ஒரு தடவை கூட பரிசீலிக்கப்படவில்லை.

இந்தியாவில் சாதி ஒரு நிரந்தர நிலையை அடைந்து விட்டது. ஒவ்வோரு சாதியும் தங்கள் சமூக இணைவில் ஒரு கட்டாயமான நிலையை எடுத்துக் கொண்டுள்ளது. இந்த சாதி இணைப்புகள் ஒன்று சேர்ந்து தலித்துகளை அரசியல் அதிகாரம் பெறவிடாமலும், பொருளாதார வளர்ச்சியடைய விடாமலும், சமூக அந்தஸ்து பெறமுடியாமலும் தடுக்கின்றன. தலித் அல்லாதவர்கள் தலித்துகள் அரசியல் பொருளாதார, சமூக வளர்ச்சியடையாமல் இருக்க கூட்டுச் சதி செய்து, அவர்களைத் தாழ்ந்த நிலையிலிருந்து மேல்வராமல் தடுக்க வழிவகை செய்கின்றன. தலித் அல்லாதவர்கள் தலித்துகளை தங்களது கட்டுப்பாட்டிற்குள்ளேயே நிரந்தர அடிமைகளாக வைத்திருக்க விரும்புகிறார்கள். இந்திய அரசியல் சட்டம் அளித்துள்ள குடியுரிமையை பெறமுடியாமல் தலித்துகள் தடுக்கப்படுகின்றனர். என்று தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமை மறுக்கப்பட்டதோ, அன்றே அவர்கள் அரசியல் சக்தி அழிக்கப்பட்டுவிட்டது.

தலித்துகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப பெரும் தொழிற்சாலைகளோ, அதிக அளவு நிலங்களோ அல்லது வேறு பணப்புழக்கம் மிகுந்த வங்கிகளோ இல்லை. அவர்களுக்கு இருப்பதெல்லாம் அரசின் பதவிகள். அரசியல் சட்டம் 15 (4), 16(4) கல்வி வளர்ச்சிக்கும் அலுவலகப் பதவி பெறுவதற்கும் இட ஒதுக்கீடு செய்ய முறைப்படுத்துகிறது. ஆனால் இந்த



படிப்பகம்

www.padippakam.com

துக்கீடும், கல்வியிலும் சரி, அரசு அலுவலகங்களிலும் சரி, முழுமனதோடு செயல்படுத்தப்படுவதில்லை. சுதந்திரம் பெற்று 57 ஆண்டுகள் ஆகியும், கல்வி நிலையங்களிலும், அரசு அலுவலகங்களிலும் உரிய இடத்தைப் பெற முடியவில்லை. விட்டுப்போன இடங்களைப் பூர்த்தி செய்ய அரசிற்கு இன்றும் மனமில்லை.

அரசியல் சட்டம் 17-இன் மூலம் 1950-ஆம் ஆண்டே தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் கிராமங்களில் அது இன்றும் நடைமுறையில் உள்ளது. தலித் மக்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றனர். கொலை செய்யப்படுகின்றனர். சட்டம் போட்டும் அது முறையாக செயல்படுத்தப்படவில்லை. அதை திறமையாகச் செயல்படுத்த அரசிற்கு மன உறுதியும் இல்லை. வடகிழக்கு மாநிலங்கள் தவிர இந்தியா முழுவதிலும் தீண்டாமை பலவழிகளில் கையாளப்படுகிறது. அரசியல், பொருளாதார, சமூக அந்தஸ்து பெற இரட்டைவாக்கு முறைதான் சரியான வழி யென்றால் அது மிகையில்லை. இப்படி இரட்டை வாக்குரிமை கேட்பது பிரிவினை வளர்க்கும் ஒரு பிற்போக்குச் சிந்தனை எனவும், இரட்டை வாக்கு முறை நிரந்தரமாக தலித்துகளையும் மற்றவர்களையும் பிரித்து தனிமைப்படுத்தி இந்திய மக்கள் நீரோட்டத்தில் இருந்து தனியாகிவிடும் என்கிற கருத்தும் ஏற்புடையதல்ல. அரசியல் அதிகாரம் பெற ஒரே வழி இரட்டை வாக்குரிமை.

ஆகவே அரசியல் சட்டம் பிரிவுகள் 330, 332 ஆகியவற்றைத் திருத்தி இரட்டை வாக்குரிமைக்கு வழிவகை செய்வதே சமூக நீதி கிடைக்க வழிவகை செய்யும். இதைச் செய்ய வைக்கவேண்டியது தலித்துகளின் கடமை. தனி வாக்காளர் தொகுதி, இரட்டை வாக்குரிமை தலித் மக்களுக்கு அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க சிறந்த வழியாகும்.

# சடங்குகளின் விரலில்...

■ தமிழ்மகன்

சடங்குகளின் விரலில்
வளரும் நகம்
நறுக்கிடு நார்த்திகனாய்...

கற்க கசடற
கல்வி நிறுவனங்கள்
படிக்கவில்லை

புள்ளிகளை மறைத்த கோலம்
மக்களை மறக்கும் பதவிகள்
காய்ந்துபோன விரல் மை.

தலித் நூலகத்தில்
சேரிப் புத்தகத்தின்
போராட்ட தேடல் வார்த்தைகள்

தீண்டாத இனத்தின்
கூர் பறை
அம்பேத்கர்.

சமூகக் கட்டமைப்பு
நாட்டைப் புண்படுத்தியது
டிசம்பர் 6

அனைத்து வினாக்களுக்கும்
சந்தேகமாய் முடிவடையும்
விதியின் பெயரால்...

## சட

மண் களைந்து
உயிர் வேரைத்தேடு

சொல் பதித்த
அச்சு தாளாய்
இருள் சுருட்டு
மெற்குறி விளக்காய்

தோல் மேய்ந்த வயிறு
நெருப்புப்பசிக்கு உணவிடு

காவி பாலியலை
தோட்டாக்களால் தீர்வு காண்

மரம் கொத்தியாய்
தீவிரவாத புளியமரத்தை சாய்

நூலில் ஆடும் பொம்மலாட்டம்
இந்த செம்மறிக் கூட்டம்

மனுநீதி குப்பைக் கூளங்களை
அப்புறப்படுத்து

கட்டவுட்டுக்கு பாலூத்தும்
கலாச்சாரத்தை மாற்று

அடையாள சேரியை
இரத்தத்தால் கழுவு

மகுடிக்காடும் பாம்புகளை
கழுகாய் விரட்டு.



படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வு

புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம் கீழ்செங்கா நத்தம் மலை கிராமத்தில் 5.12.2004 அன்று நடைபெற்றது. இந்தப் பகுதி வேலூர் சத்துவாச்சாரியை அடுத்துள்ளது. அப்பகுதிக்கு காலை 9 மணிக்கெல்லாம் கௌதம சன்னா, குடியரசன், திருமதி சிவகாமி ஆகியோர் சென்றடைந்தனர். மேடம் அவர்களின் வருகையை ஒட்டி நேரடியாக விழா நடக்கும் இடத்திற்குச் செல்லாமல் நம் மக்கள் வாழும் தொகுப்பு வீடுகள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டோம். மேடம் அவர்களை வரவேற்கும் விதமாக அனைத்து வீடுகளின் முகப்பிலும் பெரிய கோலம் போடப்பட்டிருந்தது. அங்கிருந்த சுமார் 100 தொகுப்பு வீட்டு மக்களும், அருகாமையில் உள்ள நமது மக்களும் முகாமில் ஆர்வமாய் கலந்து கொண்டனர்.

முகாமின் துவக்கத்தில் குடியரசன் அறிமுக உரையாற்றினார். அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாய் பேசினார். இதைத் தொடர்ந்து வந்திருந்த மக்களிடையே ஏதேனும் கேள்விகள் கேளுங்கள் என்று சொல்லப்பட்டது.

தங்கள் பகுதியில் சாதி - தீண்டாமைக் கொடுமை இல்லை என வந்திருந்த மக்கள் தெரிவித்திருந்தனர். இது குறித்து மேடம் பதில் கூறவேண்டும் என க. லோகநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

உங்களுக்கு சொந்தமாக நிலம் இல்லை. தங்குவதற்கு போதுமான வசதியுள்ள வீடு இல்லை. உங்கள் பிள்ளைகள் முறையாக கல்வி கற்க வசதியில்லை. ஆனால் உங்கள் தொகுப்பு வீடுகளுக்கு அருகாமையில் உள்ள ஊர்ப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு சொந்தமாக நிலம், வீடு, தேவைக்கேற்ப வசதி உள்ளது. இந்த ஏற்றத் தாழ்வுக்கு மூல காரணம் சாதிதான். இந்த ஏற்றத் தாழ்வை தொடர்ந்து பாதுகாத்து வைத்திருப்பதும் சாதிதான். சாதி - தீண்டாமை என்பது புதிய வடிவில் இப்பகுதியில் உள்ளது. நான் தனி ஊராட்சி (எ) அப்னா பஞ்சாயத்து என்று கட்டுரை ஒன்றை பதிவு செய்துள்ளேன். தலித்துகளுக்கு என்று அரசின் சார்பில் 1500 கோடிரூபாய் செலவு செய்யப்பட வேண்டும். மாறாக 300 கோடி ரூபாயை மட்டும் செலவு செய்துவிட்டு, மீதம் ரூ. 120 கோடியை பொதுச் செலவில் காட்டி விடுகின்றனர்.

தனி ஊராட்சி மூலம் குறைந்தது 500 பேர்கள் கொண்ட ஒவ்வொரு சேரிப்பகுதியையும் தனி ஊராட்சியாக அறிவிக்கலாம். அதற்கு அரசாங்கத்தால் செய்யப்படாமல் தவிர்க்கப்படும் தொகையான ரூ. 1200 கோடியை ஒதுக்கி தலித்துகள் பயன்பெற தேவையான திட்டங்களை நிகழ்த்தலாம். இத்தகைய மாதிரி திட்டத்தை பரவலாக்குவதன் மூலம் தலித்துகள் நிலம், வீடு மற்றும் அடிப்படை கல்வி வசதி பெற எளிதாக சாத்தியமாகும் என்று மேடம் தன்னுடைய பதிலாகக் கூறினார். இந்த பதிலால் கூட்டம் உற்சாகம் அடைந்தது. பிறகு கௌதம சன்னா பேசுகையில், "உங்களுக்கு அரசு கட்டித் தந்துள்ள தொகுப்பு வீடுகள் யாவும் குடிசைகள் போல மேற்புரம் சரிவாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு மாடி வீடுகளாக நீங்கள் கட்டிக் கொள்வதைத் தவிர்க்கவே இவ்விதம் அமைக்கப்பட்டுள்ளன. இது அரசு அதிகாரிகளால் கையாளப்பட்ட தீண்டாமை" என்றார். நிகழ்வில் க. லோகநாதன், சி. ராஜசேகரன், கவிஞர் தமிழ் மறையான், டாக்டர் புகழேந்தி மற்றும் பொறியாளர் சுப்பிரமணியம் (திருவள்ளூர்) கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். மக்கள் உற்சாகத்துடன் நிகழ்வு முடியும் வரையில் இருந்து பங்கேற்றனர்.

அன்றைய மாலையே வேலூர் அருகே சேனூரில் அம்பேத்கர் மற்றும் புத்தர் உருவச் சிலைகள் திறப்பு விழாவில் மேடம் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார். ஊரின் துவக்கத்திலிருந்து விழா மேடைவரை பேண்டு வாத்தியங்களுடன் விழாக்குழுவினர் அவர்களை அழைத்துச் சென்றனர். தமிழகம் முழுவதும் பல ஊர்களிலிருந்து மக்கள், பேச்சாளர்கள், தலித் ஆர்வலர்கள் திரளாக வந்து கலந்துகொண்டனர்.

பிற்படுத்தப்பட்ட சமூகத்திலிருந்து முன்னாள் அமைச்சர், தற்போதைய துணைவேந்தர் திரு. விஸ்வநாதன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இறுதியாக மேடம் அவர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் சிலையைத் திறந்துவைத்து ஆற்றிய உரையில், "தலித் அல்லாதவர்கள், தலித் மக்களுக்கு அறிவுரை கூறும்போது நீங்கள் அம்பேத்கர் போல படித்து முன்னேறுங்கள் என்கின்றனர். நாம் அம்பேத்கரை வழிகாட்டியாகக் கொண்டதற்கு அவருடைய கல்வி, அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு, பணிஆகியனவே காரணங்கள். எனவே அம்பேத்கர் போல தலித் சமூகத்திற்கு உழைக்க வேண்டும் என தலித் அல்லாதவர்கள் சிந்திக்க வேண்டும்" என்றார்.

தலித் விடுதலை என்பது யாரோ ஒருவர் நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்தது போல அல்ல. அது ஒவ்வொரு தலித்தும் தன்னை உணர்ந்து, தன் பங்கிற்கான பணியை சமூகத்திற்கு தருவது, சக தலித்துகளையும் அதை நோக்கி இயங்க வைப்பதில்தான் உள்ளது என்றார்.

மக்கள் இந்த உரைக்கு நீண்ட கரகோசம் தந்து தங்களது ஒப்புதலை வெளிப்படுத்தினர்.

அம்மையாரின் உரைக்குப் பின்னர் கூட்டம் நடுநிசியைத் தாண்டி முடிவடைந்தது.

•



படிப்பகம்

www.padippakam.com

# மலையாளிகள்

■ கௌதம சன்னா

**ரம்மிய காட்டு வாழ்க்கை இவர்களுக்கு உவப்பளிப்பதாக இன்று இல்லை. பெரும் பொருளாதாரச் சிக்கல், பண்பாட்டுச் சிதைவு என வாழ்க்கை நகர்கிறது. இவர்களிடையே தலித் அமைப்புகளின் செல்வாக்கினைக் காணமுடியாது. ஏனெனில் அவர்களுக்குக் கீழான தலைமையையோ அல்லது கூட்டினையோ அவர்கள் ஏற்க விரும்புவதில்லை என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதான்**

மெல்லிய தூறல் தூவிக்கொண்டிருந்த வேளையில் காலை புலர்ந்தது. சில்லிட்ட குளிர். மேகம் கடக்கும் மண் தட்டிய சாலைகள். கழுதைகளும், பன்றிகளும் உறக்கத்தைவிட்டு கலையாமல் மந்தமாய் உலவிக் கொண்டிருந்த ஏலகிரி மலையின் காலைத் தோற்றமிது. ஏலகிரியில், அரசின் பராமரிப்பில் உள்ள ஏரியில் பனி படர்ந்து, படகுகள் அமைதியாக அங்கு வரும் வெளியூர் உல்லாசப் பயணிகளுக்காக காத்துக்கொண்டிருந்தன. மலை முகடுகளில் எதிரொலிக்கும் பறவைச் சத்தங்கள், எப்போதாவது வந்து செல்லும் வாகன இரைச்சல் பாறைகளில் சிதறி மரங்களில் அடங்கிவிடுகிறது. கண்ணுக்கெட்டும் தொலைவு வரை சூறையாடப்பட்ட பசுமை தெரிகிறது.

புதிதாக நுழையும் எந்த பயணிக்கும் ஏலகிரி தொடர் இன்பம் அளிக்கத் தவறுவதில்லை. அதன் தட்ப வெப்பத்தின் இதத் தன்மையும், பசுமைக் காட்சியும் யாருக்குத்தான் மகிழ்வை அளிக்காது. மலைகள் தரும் மகிழ்வை அங்கிருக்கும் மனிதர்களிடம் எதிர்பார்க்கலாமா? ஏலமலை செல்லும் எந்த பயணியும் யோசிக்கத் துணியாத கேள்வி இது. ஆனால் நாம் தவிர்க்க முடியாதல்லவா?

ஏலகிரியில் மலையாளிகள், இருளர்கள் (36 வகை இருளர்கள்), பறையர் என பழங்குடிகளும், தலித்துகளும் வசிக்கின்றனர். இங்கு முக்கியமாக எடுத்துக் கொள்ளப்படுவது மலையாளிகள்.

மலையாளிகள் - தமிழகப் பழங்குடிகளில் அதிக எண்ணிக்கை கொண்ட பழங்குடிகள். இவர்கள் மக்கள் தொகை சுமார் 8 லட்சம்.

### பூர்வீகம்

மலையாளிகளின் பூர்வீகம் குறித்து அவர்களிடம் அறிவது கடினமாக இருக்கிறது. எனினும் அவர்களிடம் இருக்கும் செவி வழி கதையின்படி அவர்கள் காஞ்சீவரத்திலிருந்து வந்தவர்கள். காஞ்சீவரத்தில் அவர்களது முன்னோர்கள் வசித்து வந்தனர். கால்நடைகளை மேய்த்துக்கொண்டு அவைகளை பின்பற்றி வந்தபோது அவை இந்த மலைமீது ஏறின. எனவே அவர்களும் அவைகளைப் பின்பற்றி ஏறினர். பின்பு மலையை அடைந்து பார்த்தபோது, அதன் பசுமையும், புல்வெளியும் அவர்களைக் கவரவே அங்கேயே தங்கிவிட்டனர். இப்படி தங்கியவர்கள் ஏலமலை முழுவதும் வியாபித்தனர், பின்பு ஜவ்வாது மலையிலும் பரவினர். இதைத் தவிர இவர்களது பிரிவினர் விழுப்புரம் பகுதிகளிலும் வசிக்கின்றனர். இருப்பினும் இவர்களுக்கும், ஜவ்வாது மலை, விழுப்புரம் பகுதிகளில் இருக்கும் மலையாளிகளுக்கும் கொள்வினை ஏதும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். பலபேர் ஜவ்வாது மலைகள் பக்கம்கூட போனதில்லை.

### கிராம அமைப்பு

கிராம அமைப்பு முறை பழங்குடிகளுக்கே உரிய தனித்தன்மையுடன் இருக்கிறது. இவர்களது வீடுகள் அந்தரத்தில் தரையிலிருந்து சுமார் 2 அடி உயரம் இருக்கிறது. 6 அல்லது 8 தூண்களில் அமைக்கப்பட்டுள்ள அவ்வீடுகள் அந்தரத்தில் இருப்பது போல இருப்பதால்,அதனடியில்ஆடுகள்படுத்துக் கொள்கின்றன. ஆனால் இதே அமைப்பை உடைய வீட்டை இன்று அதிகம் காணமுடியாது. ஒரு கிராமத்தில் ஒன்றிரண்டு வீட்டைத்தான் காணமுடியும். ஏனெனில் நகர முறைப்படி இன்று மாடிவீடுகளும், ஓட்டு வீடுகளும், சோளத் தட்டு வீடுகளும் என கட்டிவிட்டனர். வரிசையாக நேர்த்தியாக அமைந்த தெருக்களை இன்று காணமுடியும். நகர வாழ்க்கையின் பாதிப்புகள் இவையென உணர முடியும்.

வசதியான வீட்டை அவர்கள் கட்டிக் கொண்டிருந்தாலும், பெரும்பாலும் அவர்களில் பலர் கிராமத்தில் வசிப்பதில்லை. தங்களது விவசாய நிலங்கள் அமைந்திருக்கும் இடத்திலேயே வீட்டிற்கென சிறு சிறு இடம் ஒதுக்கி அதில் சிறு குடில் கட்டி அங்கும் வசிக்கின்றனர். வருடம் முழுதும் விவசாயத்தில் ஈடுபடுவதாலும், கிராமத்திற்கும் விளைநிலத்திற்கும் தூரமிருப்பதாலும் இந்த ஏற்பாட்டை அவர்கள் செய்துள்ளனர். இதனால் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இருமுறையோ கிராம வீட்டிற்கு வந்து தங்குவதுண்டு. இது தவிர திருவிழா, வீட்டு விசேஷங்கள், இழவு நேரம் ஆகிய காலங்களில் இவர்கள் ஒன்று கூடிவிடுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

இவர்களுக்கு பணிவிடை செய்யும் மக்களாக அங்கு பறையர்கள் இருக்கின்றனர். கிராமத்தைவிட்டு தூர அமைந்திருக்கும் அவர்களது சிறு குடியிருப்பில் பழைய அந்தர வீடுகளில் சிலவற்றை இன்றும் காண லாம். இவர்களும், மலையாளிகள் காஞ்சீவரத்திலிருந்து வந்தபோது, அவர்களது உதவிக்காக வந்தவர்களாக நம்புகின்றனர். மலையாளிகளுக்கு பறையர்களே சேவக சாதியினர்.

கிராம நிர்வாகம் எல்லாப் பழங்குடியினரைப் போலவே தெளிவாக இருக்கிறது. கிராமத்தின் தலை வர் நாட்டாண்மை. இவரது தலைமையிலேயே வழக்குகள், திருவிழாக்கள், பிரச்சினைகள் கவனிக்கப் படுகின்றன. திருமணத்தில் முக்கிய அங்கம் வகிப்பவர். இவருக்கு கட்டுப்பட்டவர்களாக கிராம மலையாளி கள் உள்ளனர்.

## கிராமமும் - தெய்வமும்

மலையாளிகளின் கிராம அமைப்பு முறையில் அவர்களது தெய்வங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. ஏலகிரியில் உள்ள ஒன்பது கிராமங்களின் தெய்வங் களைப் பார்ப்போம்.

| கிராமம் | தெய்வம் |
|---|---|
| கொட்டையூர் | பெரியநாச்சி |
| புங்கனூர் | புங்கனாச்சியம்மா |
| நிலாவூர் | கதவநாச்சியம்மா |
| மங்களம் | இளவநாச்சியம்மா |
| மங்கன் | மைதேரப்பன் |
| பள்ளக்கனியூர் | கூத்தண்டய்யன் |
| அத்னாவூர் | மலைநாக்சி |
| கோட்டூர் | மலையம்மா |
| மேச்சேரி | காளியம்மா |

கிராமமும் தெய்வமும் எவ்வாறு தனித்தும் - பிணைத்தும் இருக்கிறது என்பதை இவ்வட்டவணை விளக்குகிறது. மேலும், இத்தெய்வங்கள் அனைத்தும் உறவுமுறைக்குட்பட்டவை. மாமன்-மச்சான், ஆக்கா- தங்கை உறவுடையவை. இரு கிராமத்திற்கு இடையில் அக்கிராம கடவுள்களின் உறவுமுறை திருமண உறவுக்கு பொருத்தமாக இருக்கும் நிலையில்தான் மலையாளிகளின் திருமண உறவும் நிச்சயமாகிறது. கிராமத் தெய்வங்களுக்கு பூசாரி கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுகிறார். ஒரு வேளை அவர் இறந்துபோனால் அவரது வாரிசு அவ் விடத்துக்கு பூசாரியாக வரலாம். வாரிசு இல்லை யெனில் புதிய நபர் தேர்ந்தெடுக்கப்படுவார். இப் பூசாரிக்கு முழுநேரத் தொழிலாக இது இருப்பதில்லை. விவசாயம் மற்றும் காட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டே அவர் இதை மேற்கொள்கிறார்.

இக்கிராம தேவதைக்கு சிறப்பான கட்டிடக் கோயில் முன்பு ஏதும் இல்லை. ஆனால் இன்று அவைகளுக்கு பெருமத இந்துக் கோயில்களைப் போன்று பெரிய கட்டிடக் கோயில்கள் கட்டப்பட்டுள் ளன. அக்கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் பெரிதும் நகரத்தம்சம் கொண்டவையாக உள்ளன. நாங்கள் பார்த்த ஒரு பழைய கோயிலின் முன்பு வரிசையாக செதுக்கு வேலைப்பாடமைந்த மரத் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இத்தூண்கள் அக்கோயிலுக் காக முன்பு நேர்ந்து விடப்பட்ட மாடுகளின் நினைவுத் தூண்களாகும். நேர்ந்து விடப்பட்ட மாடு ஒன்று தானாக இறந்த பிறகு அதன் நினைவாக ஒரு தூண் நடப்படும். பின்பு புதிய மாடு நேர்ந்து விடப்படும். இப்படி இறந்த மாடுகளின் நினைவுத் தூண்களின் கூட்டம் அக்காட்டுக் கோயிலின் முன்பு உள்ளது. இத்தூண்கள் வண்ணம் தீட்டப்பட்டு அழகாக இருந்தாலும், பலது ஈர்த்துப்போய் சிதைந்து கிடப்பது பழைய மாடுகளின் வயதை கணிக்க உதவுகிறது.

ஜவ்வாது மலையில் உள்ள ஜம்னாமரத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இக்கிராம தேவைதைகளின் பெயர்கள் மங்கி மறைந்து கொண்டிருப்பதுடன், அவைகளின் இடத்தில் பெருந்தெய்வங்கள் ஆக்கிர மித்துள்ளதை கண்கூடாக காணமுடியும். எனினும் காளியம்மாள், முனி போன்ற பழைய தெய்வங்களை இப்பகுதியில் காணமுடியும்.

## திருவிழா

இத் தெய்வங்களுக்கு இக்கிராம மக்கள் எடுக்கும் திருவிழா பழங்குடி மக்களின் வழக்கமான திருவிழாப் போலத்தான். திருவிழாவிற்கு சுற்றுவட்ட உறவினர் கள் அழைக்கப்பட்டு விருந்து வைக்கப்படுகிறது. இதில் இறைச்சி முக்கியமானது.இருப்பினும் இத்திரு விழாவின் சிறப்புகளில் ஒன்றை ஜம்னாமரத்தூரில் கேட்க நேர்ந்தது. இங்கு காளியம்மாவுக்கு மட்டுமே திருவிழா எடுக்கப்படுகிறது. கோயில் பூசாரி திருவிழா விற்கான நாளை புரட்டாசி மாதத்தில் குறிப்பிட் டதுமே திருவிழாவிற்கான ஏற்பாடுகள் துவங்கிவிடு கிறது. இருப்பினும் தேவதை வரம் தந்தால் மட்டுமே திருவிழா நடைபெறும். அதற்கு பூசாரி மூலமாக சமிக்கை கிடைக்கிறது. அவர் மருளாடி மான் வேட் டைக்கு திசையை குறிப்பார். அதன்படி மலையாளிகள் மான் வேட்டைக்கு காட்டுக்குள் செல்கின்றனர். எப்படியாவது அலைந்து திரிந்து ஒரு மானைப் பிடிக்க வேண்டும். ஒருவேளை மான் கிடைக்கவில்லை எனில் திருவிழா அடுத்த ஆண்டு தள்ளி வைக்கப்படும். அடுத்த ஆண்டும் மான் கிடைக்கவில்லையெனில் மீண்டும் தள்ளிவைக்கப்படும். ஜம்னாமரத்தூரில் 1999-ஆம் ஆண்டு கோயில் அருகிலேயே மான் வந்து சேர்ந்தது. இதை காளியம்மாளே அழைத்து வந்ததாக இம்மக்கள் நம்புகின்றனர். ஆனால் 1999-க்குப் பிறகு மான் அகப் படாததால் இன்னும் திருவிழா நடைபெறவில்லை.

இறுதியாக, திருவிழா முடிய மூன்று நாட்களுக்கு முன்பே ஒரு பட்டியில் மாடு அடைக்கப்பட்டு, திருவிழா வின் கடைசி நாளன்று அம்மாடு திறந்து விடப்படும். அது வேகமாக ஓடும்போது அதை மலையாளிகளின் இளவட்டங்கள் தழுவுவார்கள் - ஏறுதழுவல். இப்படி அம்மாடு களைத்து ஓயும் வரையோ அல்லது அது ஓடிவிடும் வரையோ நடக்கும். பின்பு திருவிழா முடிந்ததாக அறிவிக்கப்படும். தேவதைக்கு நைவேத் தியமாக வெல்லமும், பொரியும் பிரதானமாக படைக்



படிப்பகம்

www.padippakam.com

டுகிறது இப்பகுதியில்: வெள்ளாண்டப்பன், ...யப்பன், முனீஸ்வரன், காளியம்மா, மாரியாத்தா ...வங்களும், கணபதி போன்ற பெருதெய்வ வழி ...ம் உண்டு.

...ப்பிரிவு

மலையாளிகளுக்குள் கிராம தேவதைகளின் உறவு ...பாட்டின் பேரில் அவர்களுக்குள் பிரிவினை ...ருக்கிறது. ஜவ்வாது மலை, ஏலகிரி, விழுப்புரம் போன்ற ...திகளில் இவர்கள் வசித்தாலும் கொள்வினை - ...காடுப்பினை ஏதுமில்லை. ஏனெனில் இப்பிரதேச ...ரிவுகளினால் தொடர்பற்று வாழுகின்றனர்.

மலையாளிகள் தங்களை 'கவுண்டர்கள்' என அழைத்துக்கொள்கின்றனர். சிலர் தங்கள் பேருக்குப் பின்னாலே கவுண்டர் என சேர்த்துக் கொள்வதும், ஒருவர் மற்றொருவரை அழைக்கும்போது 'கவுண்டரே!' என அழைப்பதையும் காணமுடியும். அதோடு கோயமுத்தூரில் வசிக்கும் கவுண்டர்கள், பிற பகுதியில் வசிக்கும் கவுண்டர்கள் மலையாளிகள் வகுப்பைச் சேர்ந்தவர்களாக உறுதியாக நம்புவதோடு அவர்கள் தங்களை ஒதுக்கி வைத்திருப்பதாகவும், அதற்கு தங்களிடம் உள்ள பன்றியிறைச்சி சாப்பிடும் வழக்கமே காரணம் என்றும் கூறுகின்றனர்.

மலையாளிகளின் வாழ்க்கைச் சூழலோடு இருக்கும் பிற குடிகளான பறையர், ஒட்டர், இருளர், குறவர் ஆகியோரிடத்திலிருந்து விலகியே இருக்கின்றனர். பெரும்பான்மையாக மலையாளிகள் இருப்பதா... மேலாண்மைப் போக்கு இவர்களிடம் ...ண்டு. அத்துடன் தங்களது சாதி உயர்ந்த அந்தஸ்த்துடையது என ஒவ்வொரு மலையாளிக்கும் வலுவான நம்பிக்கையும் உண்டு.

திருமணம்

மலையாளிகளில் பால்ய வயது திருமணம் முன்பு வழக்கத்தில் இருந்தது. தற்போது அந்தப் பழக்கம் மறைந்துவிட்டது என்றே சொல்லலாம். பால்ய திருமணத்தில் மணமக்கள் இருவரும் சிறுவர் - சிறுமியராகத்தான் இருப்பது வழக்கம். இதே போக்கு மலையாளிகளிடம் இருந்த போதிலும், சிறுமியை வயதான மணமகனுக்கு மணம் முடிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. நான் சந்தித்த ஒரு பெண்மணி சிறுமியாய் இருந்த போது ஒரு முதியவருக்கு மணம் முடிக்கப்பட்டவர். பின்பு அம்முதியவரிடமிருந்து அவர் தப்பித்து ஓடிவந்துவிட்டார். இதனால் திருமணம் முறிந்து விட்டது. பின்பு வயது வந்த பிறகே அவர் தகுந்த துணை வரை திருமணம் செய்துகொண்டார்.

மலையாளிகளிடம் முன்பு பலதார மணம், பல கணவர் மணம் வழக்கத்தில் இருந்தது. இன்றும் அது சிலபேரிடம் காணப்பட்டாலும், பொதுவான வழக்கத்தில் இல்லை என்றே கூறுகின்றனர். இருப்பினும் அவர்களது திருமண முறைகள் எளிமையும், விசேஷமும் நிறைந்தவை.

ஒரு குடும்பத்தில் இருக்கும் பெண்ணை மணம் முடிக்க விரும்பும் ஒரு ஆண், அப்பெண்ணை மணம் முடிக்க அப்பெண் வீட்டிற்கு நடையாய் நடக்க வேண்டும். பலமுறை நடந்து பெண் கேட்ட பிறகே மண முடிக்க சம்மதம் கிடைக்கும். இந்த அலைச்சல் நாள் கணக்கிலும், பலருக்கு வருடக்கணக்கிலும் நீள்வதாக அப்பகுதி மக்கள் கூறினர். அதனால்தான் அவர்களிடையே மாப்பிள்ளைகளை கிண்டல் செய்யும்போது "எத்தனை செருப்பு தேஞ்சி கல்யாணம் பண்ணே" என கூறுவது வழக்கம். திருமண உறவு முடிவான பிறகு, மணமகன் மணப்பெண்ணுக்கு பரிசு கொடுக்க வேண்டும்.

ஏலகிரியில் இப்பரிசுப் பொருட்கள் : பணம் ரூ. 200, 40 மரக்கால் சாமை அதாவது 2 புட்டி சாமை (அல்லது அரிசி) ஒரு பன்றி.

ஜவ்வாது மலையில் : பணம் ரூ. 250, 40 மரக்கால் அரிசி, ஒரு பன்றி. உப்பு, மிளகாய் உட்பட மசாலா பொருட்கள் கொடுக்கவேண்டும்.

திருமணம் நிச்சயமானதும் அவர்களுக்கு 3-ஆம் நாள், அல்லது 7-ஆம் நாள் நலங்கு வைக்கப்படுகிறது. ஏலகிரியில் திருமணத்திற்கு முன்பே மெட்டியும், வளையலும் மாட்டப்படுகிறது. திருமணச் சடங்குகள் எளிமையானவை. திருமணத்திற்கு ஊர் நாட்டாண்மை முன்னிலை வகிக்க, மூப்பர் மந்திரம் சொல்லி முடிக்க தாலி கட்டப்படுகிறது. திருமண மந்திரம் தூய தமிழில் இருக்கிறது.

இத்தி...மணத்திற்கு இசைப்பவர்கள் அங்கு ...பர்கள். இவர்கள் தங்களது 'தப்பு' - வைக் ...ண்டு மங்கள இசை இசைக்கின்றனர். பறையர்களின் இசையின்றி மலையாளிகளின் எந்த நிகழ்வும் முழுமை பெறுவதில்லை. தற்போது அவர்கள் நகரத்திலிருந்து தவில், நாதஸ்வர வாத்தியக்காரர்களையும் அழைத்து வருகின்றனர்.

திருமணம் முடிந்த பிறகு பரிசாக வந்த பொருட்கள் சமைக்கப்பட்டிருக்க அவை பரிமாறப்படும். பன்றி இறைச்சி பிரதானமாக பரிமாறப்படும். திருமணம் முடிந்தபிறகு, மணமகனையும் - மணமகளையும் ஓர் இரும்புக் கட்டிலில் வைத்து 20 பேர் உயரத்தூக்கிக் குலுக்குவர். இதனால் மணக்கள் நிலைகுலைந்து ஒருவரையொருவர் கட்டிக்கொள்வர். புதுமண தம்பதியிடையே இணக்கத்தை உண்டாக்குவதற்கான ஒரு விளையாட்டு நிகழ்ச்சி இது.

திருமணமானது பெரும்பாலும் பெண்வீட்டில் தான் நடைபெறும். பெண்வீட்டில் திருமணம் முடித்துக்கொண்டுதான் அழைத்துச் செல்லவேண்டும்.

பிறப்பு

குழந்தை பிறந்தவுடன் அதற்கு குலதெய்வத்தின் பெயரே முதலில் வைக்கப்படுகிறது. அதன்படி முன்பு குறிப்பிட்ட தெய்வங்களின் பெயர்கள் மற்றும் நாசி. வேடி, பெரியநாச்சி என பல பெயர்களில் ஒன்று வைக்கப்படுகிறது. இப்பெயர் ஒரு மாத காலத்திற்கு அழைக்கப்படவேண்டும். பிறகு பெற்றோரின் விருப்பத்தைப் பொறுத்து புதிய பெயர் வைப்பதோ அல்லது அதே பெயரோடு நிலைப்பதோ இருக்கும். புதிய பெயர்கள் தாதி, வெள்ளையக்கா, பலிச்சி எனவும் மேலும் நவீன பெயர்களும் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

குழந்தை பிறந்தவுடன் மூங்கிலால் புதிய தொட்டில் செய்து அதில் கிடத்த வேண்டும் என்பது ஏலகிரியில் வழக்கமாக இருந்தது.

### இறப்பு

மலையாளிகளில் எவரேனும் இறந்துவிட்டால் அனைவரும் ஒன்று கூடுகின்றனர். பக்கத்து கிராமங்களுக்கு ஆட்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். பிணத்தின் அருகே மலையாளிப் பெண்களின் ஒப்பாரிப் பாடல்களும், பறையர்களின் பறை இசையும் இருக்கும்.

உறவினர்கள் வந்த பிறகு மூப்பர் சடங்குகள் முடிக்க பிணம் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். கிராமத்தை விட்டு தூரத்தில் இருக்கும் இடுகாடு பெரும்பாலும் கிராமத்தின் வட திசையிலேயே அமைந்திருக்கிறது. தப்பு மேளத்தோடு இடுகாடு சென்றதும் பறையரில் ஒருவர் அரிச்சந்திரன் பாடல் பாடி முடித்ததும் இசை நிறுத்தப்பட்டு, பிணம் குழியில் வைக்கப்படும். இந்த இறுதிச் சடங்கினை மலையாளிகள் மட்டுமே செய்வர். பறையர் மேளம், பாட்டுகளோடு முடித்துக்கொள்வர். பின்பு 16-ஆம் நாள் காரியத்திலும் பறையரின் இசை உண்டு.

### மேலும் சில குறிப்புகள்

■ மலையாளிகளின் உடையில் ஏதும் விசேஷமில்லை. முன்பு பெண்களுக்கு உடையில் ஒரு தனித்தன்மை இருந்தது. ஒரு புடவையை இரண்டாகக் கிழித்து பாதிப் புடவையை பாவாடையைப் போலவும், மீதி பாதியை மேலாடை போலவும் அணிவர். ஜாக்கட் பழக்கம் அன்று இல்லை. இப்போது புடவை, ரவிக்கையும், ஆண்கள் வேட்டி சட்டை, நவநாகரிக உடைகளையும் அணிகின்றனர்.

■ இவர்களது வாழ்வில் பறையரின் தப்பு இசை முக்கியமானது. பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து நிகழ்வுகளுக்கும், கோயில் திருவிழாவிற்கும் தப்பு இசையே பிரதானப் பங்கு வகிக்கிறது. எனினும் பறையர் இங்கு தாழ்ந்த சாதியே. அவர்களை அரிசனர் என்றே அழைக்கின்றனர்.

■ மலையாளிகளின் கலைவடிவமாக தெருக்கூத்து இருக்கிறது. இத்தெருக்கூத்தினை தங்கள் பகுதியில் நிகழ்த்துவதோடு பிற கிராமங்களிலும் நிகழ்த்துகின்றனர். இத்தெருக்கூத்தினை இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தபோது கற்று வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் இன்று அவர்களில் தெருக்கூத்துக் கலைஞர்கள் அரிதாகவே இருக்கின்றனர்.

■ ஏலகிரியில் உள்ள மலையாளிகளுக்கு தேனீர் பழக்கம் தாமதமாகவே வந்துள்ளது. ஆரம்பத்தில் தேனீர் இலவசமாக இவர்களுக்கு காலையில் வழங்கப்பட்டு வந்தது. பின்பு அவர்கள் அதற்கு பழகிவிடவே, அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டது இப்படித்தான் தங்களிடம் தேனீர் பழக்கம் வந்ததாக கூறுகின்றனர்.

■ மாடு, கழுதையே இவர்களது முக்கிய கால் நடைகள். பொதி சுமப்பதற்கு இன்றும் கழுதைகள் பயன்படுத்தப்படுகின்றன. மாடுகள் விவசாயத்திற்குத் தவிர பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். ஏலகிரி மலையில் கழுதைகளைக் கண்டாலும் முன்பு போல் அவ்வளவு எண்ணிக்கையில் இல்லை. மாடுகள் குறைந்து போனதற்குக் காரணம் மேய்ச்சல் நிலம் குறைந்து போனதுதான்.

■ உணவில் கைக் குத்தல் அரிசியும், சாமை, தினை, கேழ்வரகு உட்பட பழைய தானியங்களையும் காண முடியும். சாமையும் - புளிச்சகீரையும் இவர்களது விசேஷ உணவு.

■ சுமார் 35 வருடத்திற்கு முன்புதான் இங்கு மாட்டுவண்டி அறிமுகமானது என ஜவ்வாது மலை மக்கள் கூறினர். இந்த மாட்டு வண்டிகளைப் பார்க்க கிராமங்களிலிருந்து மக்கள் கூடுவது உண்டு. பின்புதான் பஸ் வழக்கத்திற்கு வந்தது.

■ முன்பு இவர்கள் வசம் இருந்த நிலங்கள் கீழே இருந்து வந்தவர்களால் பணத்திற்கும், பொருளுக்கும் வாங்கப்பட்டுள்ளது. இதனால் பெரும்பான்மை கூலி விவசாயிகளே. விவசாய வேலை இல்லாதவர்கள் கேரளா, பெங்களூர், குடகு போன்ற பகுதிகளில் தேயிலை, காப்பி பறித்தல், கட்டுமானப் பணிகளில் ஈடுபடுதல் என பிழைப்பு நடத்துகின்றனர். விவசாயத்தில் சாமை, எள், உளுந்து; உளுவல் (கொள்ளு), கேப்பை, தினை (தற்போது இல்லை), மக்காச் சோளம், சிலம்ப சோளம் (முத்துச்சோளம்), கீரை பயிரிடுதலோடு ஆற்றோரத்தில் மத்திமா தேன் வளர்ப்பு இருந்தது.

■ ஜம்னா மரத்தூரில் பெரும்பாலும் நிலங்கள் முஸ்லீம் வணிகர்களால் வாங்கப்பட்டுள்ளது.

### இறுதியாக

மலையாளிகளிடையே பெரும்பாலும் நகரத் தாக்கம் அதிகரித்துள்ளது. அதற்குக் காரணம் இவர்கள் வாழும் பகுதிகளில் வெளியூர் சுற்றுலாப் பயணிகளின் வருகையே. மேலும் பெரும்பாலானவர்கள் விவசாயக் கூலிகளாக இருந்தாலும் கல்வி கற்றவர் விகிதம் குறைவாகவே இருக்கிறது. அரசின் திட்டங்கள் அவர்களை சென்றடைவதில்லை. வனத்துறையின் தொல்லை வேறு அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.

முன்பு இம்மலைகளில் காணப்பட்ட மிருகங்கள் எவையும் இங்கு இல்லை. சந்தன மரங்கள் செழித்து வளர்ந்த இப்பகுதியில் அவை அடியோடு அழிக்கப்பட்டுள்ளன.சமூக விரோதிகளின் செயல்பாடே இதற்குக் காரணம். ஒரு ரம்மிய காட்டு வாழ்க்கை இவர்களுக்கு உவப்பளிப்பதாக இன்று இல்லை. பெரும் பொருளாதாரச் சிக்கல், பண்பாட்டுச் சிதைவு என வாழ்க்கை நகர்கிறது. இவர்களிடையே தலித் அமைப்புகளின் செல்வாக்கினைக் காணமுடியாது. ஏனெனில் அவர்களுக்குக் கீழான தலைமையையோ அல்லது கூட்டினையோ அவர்கள் ஏற்க விரும்புவதில்லை என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதான். ●



படிப்பகம்

www.padippakam.com

யரசன்

# மலையாளிகள்

## உண்மை நிலைமையும் தேவையான பணிகளும்

ஜவ்வாது மலையை அடுத்துள்ள பழங்குடியின மலையாளி இன மக்கள் மற்றும் அவர்களது ச்சாரம் பற்றி அறிந்துகொள்ளும் விருப்பத்தில் அம்மக்களை, 24 நவம்பர் 2004 அன்று காலை 10 ரி அளவில் சந்தித்தோம். அடர்ந்த மரங்களிடையே வனப்பள்ளி.

(அ) இங்கு வனப்பகுதியில் வாழும் மாணவர்கள் டுமே படிக்கின்றனர். அப்பள்ளியில் இரண்டு றைகளை ஒதுக்கி மலையில் வசிக்கும் மலையாளி க்கள் 30 பேரை வரவழைத்து பேட்டி கண்டோம். ந்திருந்தவர்களில் பாதிக்கு மேற்பட்டவர் பெண்கள். லையாளி இன பஞ்சாயத்துத் தலைவர், ஊர்ப் பெரிய ர்கள் பேட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். தியம் நான்கு மணி அளவில் பேட்டிகளை முடித்துக் கொண்டு ஓய்வெடுத்தோம்.

(ஆ) மாலை ஆறு மணிக்கு மலையாளி மக்களுக்கு அரசு கட்டித் தந்துள்ள தொகுப்பு வீடுகளுக்குச் சென்றோம். காலையில் எங்களுடன் கலந்துரையாடிய பெண்களுடன், அதிக மக்கள் மிகுந்த ஆர்வமுடன் எங்களை வரவேற்றனர். குடியரசன், கவுதம சன்னா, வேலுச்சாமி மற்றும் மேடம் திருமதி. சிவகாமி ஆகிய நால்வரும் தொகுப்பு வீடுகள் நிறைந்த பகுதிகளைக் கண்டோம். இந்த நேரத்தில் தொகுப்பு,

(இ) மறுநாள் காலை 7 மணிக்கு மலைமேல் அம் மக்கள் அடர்ந்து வாழும் பகுதிக்குச் சென்றோம். அப்பகுதியில் உள்ள அனைத்து மலைவாழ் மலை யாளிகளும் எங்களை ஒன்று திரண்டு வரவேற்றனர். அவர்கள் எங்களுக்கு தங்களின் காலை உணவான கூழ், அதற்கு தொட்டுக்கொள்ள வெங்காயம், பச்சை மிளகாய் தந்து உபசரித்தனர். எங்களின் காலை உணவு இவ்வாறாக நிறைவுபெற்றது.

முதல்நாள் கலந்துரையாடலுக்கு முன்னர் மேடம் அவர்கள் மலையாளி மக்களிடம் பொதுவாக பேசிக்கொண்டிருந்ததிலிருந்து திரட்டிய குறிப்புகள், நான் தனிப்பட்ட முறையில் இரண்டு நாட்கள் மக்களிடம் பேசி சேகரித்த தகவல்களை அடிப்படை யாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

I. ராமசாமி என்ற 55 வயதுடைய மலையாளி. இவரின் தந்தை முத்து, தாய் மஞ்சன், மனைவி சீட்டை, மாமனார் வெள்ளையன், மாமியார் சின்ன கண்ணி. இவரின் சமகால உடன்பிறந்தவர்கள் கமலா, கோவிந்தன், மங்கை, வெங்கடேசன்; பழைய (இறந்த) உறவினர்கள் சின்னத் தம்பி, குப்பு, பட்டு, சின்னப்புள்ள, பேட்டை யான், குப்பன், முத்தி. இவர் வாழும் பகுதிகளுக்கு அரு காமையில் உள்ள ஊர்ப் பெயர்கள் குட்டக்கரை, பட்டரக்காடு (கிழக்குப் பகுதிகள்), சாராமத்தூர் (மறுதிசையாகிய போளூர்).

II. இவர் பெயர் குப்பு. தாய் மஞ்சன், தந்தை பெருமாள், உறவினர் தஞ்ஞான்.

III. தஞ்ஞான். இவரின் தந்தையின் உடன் பிறந்த வர்கள் சின்னக்கா, வெள்ளச்சி, குப்பன், குப்பு, அம்மன் ஜாதி, குட்டை

IV. இவர் பெயர் லெட்சுமணன். தந்தை பூச்சி, தாய் உப்பு, அத்தை சின்னதாயி.

V. இவர் பெயர் முத்தான். தந்தை பட்டு, தாய் பெரிய தாதி, தாத்தா தாதன்.

VI. கமலா. இவரின் கணவர் சின்னப்பையன், அப்பா பெரிய பையன், அம்மா பெயர் தெரியாது, பாட்டி பார்த்ததுண்டு, பெயர் தெரியாது (இவர் இறந்து 8 ஆண்டுகள் ஆகின்றன).

VII. இவர் பெயர் முத்தான். தந்தை பட்டு, தாய் பெரிய தாதி

VIII. இவர் பெயர் கோவிந்தன். இவர் தற்போது பாமக கட்சியின் பொறுப்பாளராக உள்ளார். தந்தை சின்னப்பையன், தாய் பட்டு

IX. இவர் மலையாளி அல்ல. இங்குவாழும் பறையர் இனத்தைச் சேர்ந்த வெட்டியான் தொழில் செய்பவர் இவர். பெயர் அருள் குமார். தந்தை கோவிந் தசாமி, தாய் இந்திராணி.

இங்கு அம்பேத்கர் நகர் என்ற நகர் உள்ளது. இங்கு 200 வீடுகள் உள்ளன. இங்கு இவர் வசிக்கிறார்.

பெரும்பாலான இடங்களில் மின்சாரம் இல்லை. மக்கள் மின்சாரம் இல்லாததை பெரும் குறையாக எடுத்துக்கொள்ளவில்லை.

மலையாளி மக்கள் அடிப்படையில் பழங்குடி யினர் பட்டியலில் உள்ளனர். பொதுவாகவே தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் என்று நகரத்து தலித்துகள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மலையில் வாழும் பழங்குடியின மலைவாழ் மக்களோ, தங்களை மிக உயர்ந்த இனமாகக் கருதிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

மாட்டின் மாமிசத்தை உண்பதை மிகவும் பாவச் செயலாகவும் பறையர்களை தீண்டத்தகாதவர்களாக வும் நம்புகின்றனர். பிணம் சுடுதல், பிணம் புதைத்தல் ஆகியன பறையர்களுக்கான தொழிலாக இவர்கள் நம்புகின்றனர். பன்றி மாமிசம் உண்கின்றனர். திருமணம் மற்றும் பெண்கள் வயதிற்கு வருதல், காது குத்துதல்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற சுப நிகழ்விற்கு பன்றி மாமிசம் சமைத்து விருந்து தருகின்றனர். திருமணத்திற்கு சீதனமாக பன்றிகளை வழங்குதல் இன்றும் நடைமுறையில் உள்ளது. கடன் வாங்கியாவது பன்றிகளை சீதனமாக வழங்குதலை தங்களின் கவுரவமாக இவர்கள் கொண்டாடுகின்றனர்.

தொடர்ந்து திமுக, அதிமுக, காங்கிரசு கட்சிகளுக்கு ஓட்டுப்போட்டு வருகின்றனர். தங்களின் பெயருக்குப் பின்னால் "கவுண்டர்" என்ற அடைமொழியை இணைத்துக் கொள்வதை பெருமையாக நம்புகின்றனர். தற்போது பா.ம.க.வைச் சேர்ந்த MLA-க்கள் இப்பகுதிகளின் அருகாமைப் பகுதிகளுக்கு வருகை புரிந்துள்ளதால் இப்பகுதியில் உள்ள விவரம் அறிந்தவர்கள் பா.ம.க. கரை வேட்டி கட்டிக்கொண்டுள்ளனர். தங்களை பா.ம.க. அரசியல் படுத்தியுள்ளதாகவும், அக்கட்சி தங்களுக்கு நல்லது செய்யும் என்றும் கருதுகின்றனர்.

எண் IX-இல் குறிப்பிட்டுள்ள அருள்குமாரை இவர்கள் தங்களின் அசுப நிகழ்விற்கு பணியாற்றுபவராக மட்டுமே பார்க்கின்றனர். பறையர்கள் வீட்டில் உணவு, தண்ணீர் வாங்கி உண்பது தீட்டு மற்றும் பாவம் என்று நம்புகின்றனர்.

மேடமிடம் பேசும்போது மலையாளி ஒருவர் குறிப்பிட்டார்: "உங்களை நாங்கள் என்ன சாதி என்று கேட்டா பழகுகிறோம்? கலக்டர்கிட்ட சாதி கேட்டுத்தான் ஊருக்குள் விடுவோம் என்றால் முடியுமா?" என்றார். அவருக்கு பதில் சொல்லும்போது மேடம் அவர்கள், "நீங்கள் கலக்டரை (அதாவது தன்னை) சாதி கேட்டால் கலக்டர் போலீசில் புகார் செய்வார்" என்று குறிப்பிட்டார்.

இவ்வளவு தெளிவாகப் பேசியும் திருமதி. சிவகாமியால் தான் ஒரு தாழ்த்தப்பட்டவர் என்று அந்த மலையாளியிடம் சூழல் காரணமாகத் தெரிவிக்க முடியவில்லை. இவர் தெரிவித்திருந்தால், அந்த மலையாளி இவரிடம் சமமாக பேசுவாரா என்றால் பதில் எதிர்மறையாகத்தான் இருக்கும் என்று அங்கு நிலவிய சூழல் காட்டியது.

மேலும் மேலே குறிப்பிட்டுள்ள I, II, VIII பகுதிகள் வரையிலும், இன்றைக்கு வாழும் மலையாளிகளின் பெயர்களில் ராமசாமி, கோவிந்தன், வெங்கடேசன், லெட்சுமணன் என்று இந்து மதத்தின் பாதிப்புத் தெரிகிறது. மாறாக இவர்களின் முந்தைய தலைமுறையின் பெயர்கள் மஞ்சன், சீட்டை, சின்ன கன்னி, முக்தி, குட்டை, உப்பு என்ற இயற்கையை ஒட்டிய மலைவாழ் மக்களின் பெயர்களாக இருந்தன. அதாவது இன்றைய தலைமுறை சாதி இந்துக்களின் சமூக நிலைபோல தங்களின் வாழ்க்கை முறையை வடிவமைத்துக் கொள்கின்றனர்.

நகர வாழ்க்கையின் வேகம் இவர்களிடம் இல்லை. ஆனால் கருத்தியல் ரீதியாக தீண்டாமையை இவர்கள் நம்புகின்றனர். அதைச் சுமப்பவர்களாக தாழ்த்தப்பட்டவர்களை இவர்கள் நடத்துகின்றனர்.

இம்மக்களுக்கு முறையாகச் சேரவேண்டிய அரசு வேலைவாய்ப்பு, அரசுக் கடன் நிலம், கல்வி, அரசியல் அங்கீகாரம், மருத்துவ வசதி ஆகியன கிடைப்பதில்லை. இவைகளை கவனத்தில் கொண்டு இயங்குவதாக NGO-க்கள் இங்கு பணிபுரிகின்றன. ஒன்றிரண்டு NGO-க்களைத் தவிர பிற NGO-க்களை இம்மக்கள் நம்புவதில்லை. இதை மனதில் கொண்டு NGO-க்களின் கடை நிலை ஊழியர்களான Animater-கள் மக்களிடம் பழகும் வாய்ப்பு பெற்றவர்களாக NGO-க்கள் மலையாளிகளையே நியமித்து பணம் சம்பளமாகத் தருகின்றது.

இந்த NGO பணியாளர்கள் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளாக பாடல், ஆடல், நாடகம், கூத்து, கோலம் போடுதல், கும்மிப்பாட்டு போன்ற கலையுணர்வு கலைகளைக் கற்றுத் தந்துள்ளனர். இந்த புதிய கல்விப் பயிற்சியால் இம்மலைவாழ் மலையாளிகள் தங்களின் பூர்வ கலைகளை மறந்து, ஏதோ இவர்கள் மூலமாகத்தான் தங்களின் கலாச்சாரத்தை தெரிந்துகொண்டதாக நினைக்கின்றனர். சில NGO-க்களை அங்குள்ள படித்த மலையாளிகள் குறிப்பிடும்போது, இவர்கள் புதிய புதிய திரைப்படப் பாட்டு மெட்டில் எங்களுக்கு பாடல் சொல்லித் தருகின்றனர். இதனால் எங்களின் பூர்வீகப் பாடலை நாங்கள் பயிற்சி செய்ய இயலாமல் போகிறது. எங்களின் பூர்வ பாடல்களை இவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. இந்த நிலை தொடர்ந்தால், இவர்கள் இந்த மலைகளில் வாழும் பறவைகளுக்குக் கூட "பறக்கும் பயிற்சி" என்ற புதிய Project போடுவார்கள் என்றார்.

குயில் தன்னுடைய முட்டையை காக்கை கூடுகளில் இட்டுவிடுகிறது. அதற்குக் காரணம், அடைகாக்கும் பருவம் என்று ஏதும் குயிலுக்குக் கிடையாது. மீண்டும் அதன் வயிற்றில் உடனே முட்டை உருவாகிவிடுகிறது. தன்னுடைய முட்டையை தன்னால் அடைகாக்க இயலாததால்தான் குயில் சோகக் குரலால் பாடுகிறது என்று விஞ்ஞான இலக்கியம் கூறுகிறது. இப்படித்தான் ஒவ்வொரு மலைவாழ் மக்களின் வாழ்சூழலைக் கண்டு மனம் கனத்துப்போகிறது. என்னுள் சோகம் குவிக்கப்படுகிறது. குவிந்த சோகத்தை, குயிலின் செயலைப் போலவே, அங்குள்ள NGO-க்களிடமும், சில அரசியல் கட்சிகளிடம் விட்டு வந்துவிட்டேன். இதற்கான தீர்வை நோக்கியே என் பயணம். இதன் வெற்றி, எங்களது கோடாங்கிக் குழு அதிக வலுப்படும்போது கைவரப் பெறும். தலித் விடுதலை ஆர்வலர்கள் கோடாங்கி குழுவிலோ அல்லது இதுபோன்ற குழுக்களை உருவாக்கி நகரும்போது அம்பேத்கரிய சிந்தனை வெளிச்சம் விரவிப்பரவும். இந்துத்துவ இருட்டு பலவீனப்படும். இதைநோக்கி நம் பயணம்.

இதையெல்லாம் கருத்தில்கொண்டு, திருமதி. சிவகாமி அவர்கள் மலையாளி மக்கள் இடையில் நிறைவு உரை நிகழ்த்தும்போது,

1. மலைவாழ் மக்களின் நலனையும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலனையும் இணைத்து SC/ST நலத் திட்டங்களை அம்பேத்கர்தான் சட்டமாக்கினார்.

2. இந்திய அளவில் பூர்வகுடிகளின் இணைப்பு என்ற வகையிலாவது SC/ST இணைந்து தங்களின் உரிமைக்காக போராடவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

3. பாதிக்கப்பட்டவர்களின் இணைப்புப் போராட்டம்தான் சாத்தியப்படும் என்னும்போது, பிற்படுத்தப்பட்ட கட்சிகளின் ஊடுருவல் அவர்கள் சுயநலன்களுக்காக (அ) போலி சாதிச் சான்றிதழ், (ஆ) லோன் ஏமாற்றுதல் போன்றவை நிகழும். இதை தலித் இயக்கங்கள் உணர்ந்து இனி ST மக்களையும் இணைத்து போராட முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார். இதன் உண்மை செயலாக விரைவில் நிலைக்கும்.

## நாங்களன்றி ...

ஊரோரக் குடிசையில்
சோரம் போவதற்கு
ரவிக்கையின்றியொரு சிகப்பியும்
முதுகு வளைந்த முக்கால் நிர்வாணிகளாய்
கட்டப்பஞ்சாயத்துகளில்
நிற்பதற்கு நாங்களுமன்றி
உங்கள் புரட்சி இயக்குநனின் கலைப்படம்
விலைபோவதெப்படி?

ஏய்த்த கணக்கை
எழுதி வைத்திருக்கும்
நமத்துப்போன நாட்குறிப்பை சூடாக்கவும்
நரைதட்டிப்போன பழைய மீசை முறுக்கி
பாரம்பரிய பராக்கிரமம் காட்டவும்
கொழுந்து விட்டெறியக் காத்திருக்கிறது
கூரைவேய்ந்த எம் குடிசைகள்...

தறிகெட்ட மூர்க்கத்தில் சரியும் ஆடைகள்
சரியாய் மூடாத அருவருப்பினை மறைக்கவும்
காலியான அம்பறாத்தூணியிலிருந்து
கவனத்தை திசைதிருப்பவும்
நாங்கள் யாராவதொருவர்
நரகல் தின்னவேண்டும்

விசிறியடிக்கும் வெகுமதிக்கு
விசுவாசமாய்
கொள்கையற்ற கூட்டணிக்கு ஓட்டளிக்கவும்
பரம்பரைச் சொத்தைப் பகிர்வதைப் போல்
இலவசத்திட்டம் அறிவிக்கும்
அரசு விழாவில் விசிலடிக்கவும்
வேறுயார் உங்களுக்கு
விலைக்குக் கிடைப்பார்கள்?

எங்களை விட்டால்
உங்களுக்கு இயக்கமேது?
நாங்களன்றி
உங்களுக்கு நாதியேது?

தலித் கிறித்துவ மனப்பான்மையுடன் தீவிரமற்றவனாகத் திரிந்துகொண்டிருந்த எனக்குள் 'புதிய கோடாங்கி' சில மாற்றங்களைச் செய்துகொண்டிருப்பது நிஜம். அது தங்கள் ஆதரவால் மேலும் வலுப்பெறும் என நம்புகிறேன்.

● ப. வில்லியம் அந்தோனி

## அறியாத முகம்

நமக்குள்ளான கருத்தாடலிலும்
அதன்பின்னான
அசைவாடலிலும்
அவன் எவனென்ற கேள்வி
அரும்பிக் கொண்டேயிருக்கிறது

சேகரித்த தகவல்களை
ஓரளவு சரிபார்த்தபின்
திடீர்ப்பரிவோ
திட்டமிட்ட புறக்கணிப்போ
நிச்சயமாய் நிகழ்கிறது

இறுதியில்
நட்பாய் மாறும் காதலுக்கோ
காதலாய் மாறும் நட்புக்கோ
அதுவொரு காரணியாய்
அமைந்துவிடுகிறது
அறிவின் எல்லைக்கு
அப்பாற்பட்டு
எல்லோர் மனங்களிலும் இருக்கிறது
ஊதினால் பற்றிக்கொள்ளும் அந்த நெருப்பு



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்தலையும் வாழ்தல் நிமித்தத்தையும் பாடுகின்ற கனவின் தூரம்

■ அன்பாதவன்

நூல் மதிப்புரை

நூலின் பெயர் : கனவின் தூரம் (கவிதைகள்)

ஆசிரியர்: ப. வில்லியம் அந்தோணி

"கவிதை, மொழியிலே விழி கொள்கிறது. மொழியின் விடியலிலே பள்ளி எழுகிறது. மொழியின் வீச்சிலே நடம் பயில்கிறது. கலையின் ஆற்றலும் மொழியின் தளமும் ஒருசேரக் கூடிப்பிறந்த கவிதை, மானிட சமூகத்தின் உணர்வுக்கும் உயிர்ப்புக்கும் ஒரு வெளியையும் ஒரு காலத்தையும் சமைத்துத் தருகின்றது. தோளோடு தோள் சேர்ந்து மனிதனுக்குத் தோழனாய் இருக்கிறது. குழம்பிக் கிடக்கும் இன்றைய நிலையிலிருந்து மனித உருவத்தைச் சிதைந்து போகாமல் மீட்டுருவாக்கம் செய்கிற வியத்தற்குரிய சக்தி கலையினுடையது; கவிதையினுடையது. தெளிவற்ற நிலையிலிருந்து கவிதை நம்மை உயர்த்துகிறது" எனக் கவிதை உருவாகிற கலை குறித்து குறிப்பிடுவார் விமர்சகர் தி.சு. நடராசன் (கவிதையெனும் மொழி : பக். 11). புதிய பாடு பொருள்களோடு புதிய படைப்பாளிகள் தோன்றி எழுதிக் கொண்டே இருக்கிறார்கள்; கவிதை உலகமும் சங்கப் பலகையாய் விரிந்து அவர்களை வரவேற்று, வழிகாட்டி இயங்கச் செய்கிறது. 'கனவின் தூரம்' - வில்லியம் அந்தோணியின் முதல் கவிதைத் தொகுப்பு. புதிய நாகரீகத்தின் பக்க விளைவுகளாய் ஏற்பட்டுப் போன பண்பாட்டுச் சிதைவுகளையும், உறவுச்சிக்கல்களையும் கவிதைகளாக வார்க்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறது காலம். வர்த்தகமாகிவிட்ட வாழ்க்கையில் அர்த்தமிழந்துவிட்ட மனித மதிப்பீடுகள், இயந்திரங்களை நம்புமளவிற்குக்கூட இதயங்களை நம்பாத இறுக்கம்... இதற்கு நடுவில் சகமனிதன் குறித்த கவலையோடு தன் கவிதைகளைத் தந்திருக்கும் வில்லியம் அந்தோணியின் கவிதைகள் மனிதம் நிரம்பியவையாகவும் சமூகப் பொறுப்புடனும் தன் பணிகளைச் செய்கின்றன

"மணல்கூட விற்றுத் தீரும் - இந்தக்
கடலின் கண்காட்சியில்
எங்காவது மறைவாய் நிற்கும்
என் கூழாங்கல்"

எனத் தன் கவிதைகளின் உருவாக்கம் குறித்து தன் னடக்கத்தோடு குறிப்பிடும் கவிஞரின் 'கூழாங்கல்' என்கிற படிமம் காட்டுகிற அற்புதம் பிரமிக்க வைப்பது.

நம்பிக்கையில் ஓடும் மணல் நதியைப் படம் பிடிக்கிறது தண்ணீர்த்திரை.

செறிவான மொழியோடு சுவையான சொல்லாட்சியோடு படைக்கப்பட்டுள்ளது 'சார்புகளற்று'

"எரியூட்டாதது இன்றின் விறகாகி
இரவுச் சிதை இன்னும் கசியும்
இசையற்ற மர்மத்தின்
ஒரு துணுக்குறுதலாய்
மௌனத்தின் கருவிலிருந்து
மரணங்கள் உதிரும்"

பீடங்கள் கிடைக்கும் வரை அதற்கான போராட்டம். கிடைத்தவுடன் கீழே தான் ஏறிவந்த வழி பார்க்க மறுக்கும் மமதை.

"கவனம் தேவை
கால் தவறினால் பாதாளம்"

அகங்கார உயரங்களை எச்சரிப்பது இலக்கியம், அரசியல் என எத்துறைக்கும் பொருந்துவது.

'பேட்டிகளில்' கவிதையின் இறுதி வரியான 'வாழ்க்கையில் நடிக்கிறாயா' என்ற கேள்வி பொது வாழ்க்கை மனிதர்கள் அத்துனைப் பேருக்குமானது.

'புதிதாயொன்றை படைக்கும்
கண நேரத்துக்குள்
சற்றைக்கு முன் சமைத்ததெல்லாம்
பழசாகி விடுகிறதெனில்
எது புதுசு'

என்கிற கேள்வி-2 என்கிற கவிதை ஆனந்த்-தின் புகழ்பெற்ற கவிதையான 'சற்றைக்கு முன்'னின் சாயலைக் கொண்டதாக இருக்கிறது.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகிறவர்களைப் புரிந்தும் உறவு கலக்க வருபவரிடம் நடிப்பு சுதேசிகள் பிடிபட்டு விட ஆற்றாமையில் வெளிப்படுகிறது கவிதை.

'வெறுப்பின் வெறுமைகளை
கனிகளால் நிரப்பலாமெனில்
நகர்ந்து சென்றபின்
காலடிமண் தேடுகிறீர்கள்'

சூழலியல் குறித்த அக்கறையோடு 'தேசப்பற்று.' 'ஜன்னல் கவிதை'யோ சிறுகதைத் தன்மையோடு எழுதப்பட்டிருப்பது.

கண்வழி புகும் காட்சியின் வன்மம் குறித்துக் கவலை கொள்கிற கவிஞர் வில்லியம் அந்தோணியின் புதிய சொல்லாட்சிகள்,

கவிதைக்கும் தமிழுக்கும் வளம் சேர்ப்பது, கவிஞரின் பலம் கூட்டுவது. ■



படிப்பகம்

www.padippakam.com

# தினசரி கொஞ்சமாவது

■ பொன். குமார்

நூல் மதிப்புரை

ஆசிரியர் : பூமா ஈஸ்வரமூர்த்தி
வெளியீடு : பொருநை இந்தியா
கிழக்குத் தாம்பரம்
சென்னை - 600 059.
விலை : ரூ. 8

மரணம் குறித்து எல்லாக் கவிதைகளும் அடங்கிய ஒரு தொகுப்பு 'தினசரி கொஞ்சமாவது.' இதன் ஆசிரியர் பூமா ஈஸ்வரமூர்த்தி. மரணம் பற்றியது என்பதாலோ இத்தொகுப்பை 'சடலங்களை அப்புறப் படுத்துபவர்களுக்கு' சமர்ப்பணம் செய்துள்ளார். 'மரணம் பற்றின எண்ணங்கள் பெரும் பதட்டம் தருவனவாகவே இருக்கிறது. மரணம் ஒரு வித அச்சத் துடனேயே அணுகப்பெறுகிறது' என்னும் முன்னுரை யுடன் தொடங்குகிறது தொகுப்பு.

"முத்துக்கள் போன்றதொரு
வெள்ளை நிறத்தில்
வீதியின் மறுபக்கத்தில்
தனித்த புறா"

என காட்சி விவரிப்புடனே தொடங்கி முடிவில்

"கவனமாய் புறாவை
உள்வாங்கிக் கொண்டிருந்தேன்
அப்போதுதான்
உன் மகனிடமிருந்து
தொலைபேசி வழியே
உன் மரணம்
என்னை வந்தடைந்தது"

என அதிர்ச்சி ஊட்டுகிறார். கவிஞர் புறா பார்த்த வேளை வந்த மரணச் செய்தி போல, 'பச்சை தேவதை' என்னும் தொகுப்பில் கவிஞர் சல்மா எழுதிய 'மரணக் குறிப்பு - 1' கவிதையில்

"அவன் கொல்லப்பட்ட நாளில்
மழை பெய்து கொண்டிருந்தது
பெரும் கருணையுடன்"

என்னும் வரிகளை நினைவூட்டியது.

கவிதை நான்கில் தொடர்வண்டி விபத்தில் பலியானவர்களை பட்டியலிட்டவர் கவிதை ஏழில் கப் பலில் ஏற்பட்ட மூழ்கலைக் குறிப்பிட்டு

"ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு நகர
தீர்மானித்தவர்கள்
ஒருவர்கூட மீதமில்லாமல்
மறுநாள் கூடவின் சடலங்கள்"

என்கிறார். எதில் பயணித்தாலும் விபத்து ஏற்படு வது வழக்கே. முன்னதில் 'உடல்கள்' என்றவர் பின்னதில் 'சடலங்கள்' என்கிறார்.

மரணம் மனிதர்களுக்கு வழக்கமாகிவிட்டது என மிக இயல்பாக உணர்த்தியுள்ளார். இந்நிகழ்வுகள் கிரா மங்களில் மிகமிக செயற்கை. மனிதர்கள் இறப்பை பிறப்பைப் போல மறக்கமாட்டார்கள். ஒவ்வொரு நிகழ்வுக்கும் இறப்பைச் சுட்டிக் காட்டுவர். இதை கவிதை பதினொன்றில் சில சம்பவங்களோடு கவிதை புனைந்துள்ளார்.

"ஒவ்வொரு மைல் கற்களிலும்
சாவு மட்டுமே அமர்ந்திருக்கிறது"

என எழுதியது குறிப்பிடத்தக்கது. கவிதை எண் 13-இல்

"சாவு
சாலப்பரிவுடன் சொன்னது
போதும் ஓய்வு எடுத்துக்கொள்"

என்பது வித்தியாசமான கற்பனை.

"மதுவருந்த
துவங்கியிருக்கிறேன்
தினசரி கொஞ்சமாவது"

என்றவர் தொடர்து

"மரணத்தை விரும்பத்
துவங்கியிருக்கிறேன்
தினசரி கொஞ்சமாவது"

என்கிறார் கவிதை பதினாறில். மரணத்தை விரும்புவது சரி, மது ஏன் அருந்தவேண்டும். மதுவே மரணத்தின் வாசல் என்பதாலா? கவிதை இருபதில்

"மரண தேவதை எப்படியிருப்பாளாம். உன்னைப்
போலவும் என்னைப் போலவும் தான்"

என்கிறார். மேலும் இது மற்ற கவிதைகளிலிருந்து மாறு பட்டுள்ளது. கவிதைக்கான கட்டமைப்பை உடைத் துள்ளது. சோதனை முயற்சியாக செய்துள்ளார். மரணம் என்பது அச்சுறுத்தும் நிகழ்வு எனினும் கவிதைகள் எளிமையாக இயல்பாக வாசகரை வசீகரிக்கின்றன. சற்றும் பயமுறுத்தவில்லை. ஒருபொருள் குறித்த தொகுப்புகளில் பூமா ஈஸ்வரமூர்த்தியின் 'தினசரி கொஞ்சமாவது' குறிப்பிடத்தக்கது. மனித மரணம் மட்டுமின்றி எறும்புகள், பூனைகள் இறப்பு குறித்தும் பதிவு செய்துள்ளார். நேரடியாக மரணம் பற்றியே இல்லாமல் முன்னும் பின்னுமாய் எதிர்பார்ப்புகளையும் தொகுத்து வழங்கியுள்ளார். ●



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

# தொலைந்துபோகும் கையிருப்புகள்

நூல் : தொழுவு (கவிதை) ஆசிரியர் : அன்பழகன்

வெளியீடு : கரம்பை விலை : ரூ. 30 பக்கம் : 80

■ மகாராசன் - செல்வம்

ஒரு மனிதனின் நடத்தைகளுக்கும் சிந்தனைகளுக்கும் மண்ணில் நிகழும் சூழல் துணைபுரியும். இந்த மண்தான் நம் தொன்மங்களின் குடியிருப்பாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த மண்தான் மொழியைக் கொண்டு தன்னைத் துலக்குகிறது. காற்றும் தீயும் மழையும் மண்ணைப் புள்ளியாக வைத்தே சுழலும். வாழ்வைக் கற்றுத் தரும் இந்த மண், வாழ்வைச் செதுக்கும் இந்த மண், வரலாற்றை நிகழ்த்தும் இந்த மண் இன்று எப்படி இருக்கிறது? எங்கே போனது உயிருள்ள மண்ணின் அடையாளம். மண்வாசம் நுகர்ந்தவன் மண்ணின் அழுகுரல் கேட்ட பின்பும் சும்மா இருக்க முடியுமா? என்ற வினாவை எழுப்பி விடுவதில் நிகழ்கிறது 'தொழுவம்'.

தொழுவத்தில் தன் தொன்ம வேர்களை அடையாளம் தேடிச் சுற்றியலைந்து சோர்வு கொள்கிறது ஒரு கிராமிய மனசு. ஒரு கிராமத்தின் நீள அகலங்களுக்குள் பிரயாணித்தால் அதன் கூறுகளை 'பொது கிராம அட்டவணை'யிலும், 'தனி கிராம அட்டவணை' யிலும் வரிசைப்படுத்திவிட முடியும். தொழுவம் பொது கிராம அட்டவணையிலும் இடம்பெறுகிறது. அதே சமயம் தனக்கான வீச்சோடு நிகழ்கிறது. எலும்புக் கூடுகளாகிப் போன கிராமங்களுக்குள் தன் கனவுகளால், நினைவுகளால் இரத்தத்தையும், நிணத்தையும், நரம்புகளையும், சதையையும் பொருத்திப் பார்த்திருக்கிறார் அன்பழகன்.

வேலிக் கருவக் காட்ல சாவும் ஆடு மேய்ப்புமாக இருக்கிற சிறுவனின் ஏக்கப் பெருமூச்சு, 'என் வயசு / பயகெல்லாம் / பள்ளிக் கூடத்துல / நானெப்ப / பொறப்பேன் / படிக்கப்போகுங் குடும்பத்துல' என்று கேட்கும் போதும், 'எப்படியோ / பகல் முழுசுங் கழியுது / ரவைக்கு ஒறங்கப் போறேன் / புத்தகஞ் சுமக்கும் கனவோட' என்ற குரலும், 'மரத்தடியில் குத்தாச்சியிருந்த / பயகிட்ட / 'என்னவேணும்'னு / கேட்டதுக்கு / "நா ஒரு நாளைக்காவது / பொஸ்தகப் பையத்தூக்கி / தோள்ல போட்டுட்டு / பள்ளிக்கொடம் போனும்"ன்னான் என்ற பதிவும் வாசகர்களின் புரிதல் தளங்களை பல்திசைகளுக்கு நகர்த்துபவை. இவற்றிற்குள் பொழைக்கும், வறுமை பேசுகிற பன்மை நகர்வுகளில் காடுகளை வெட்டி மூட்டஞ்சுட்டு பொழைக்க வேண்டியதாகப் போனதைப் பேசும் குரல் உசுரத் தொடுற வறட்சியையும் பேசுகிறது. மேலும் இக்கவிதைகளில் வரும் கிழவிக்கு, கணக்குப்பாத்து பொருள் மாத்த முடியாது எனில் பஞ்சம் தீராதுதான். நகரில் பழுத்துக் கிடக்கும் 'சேட்டு'க் குணங்கள் கிராமத்திலும் சிலந்திக் கூடு அமைத்திருந்ததை நேற்றும், இன்றும், நாளையும் காணலாம். சிலந்தி வேர்களின் நிகழ்த்தலை கவிஞரால் களை பிடுங்க முடியாது என்பதற்கு பார்வையாளராய் நிற்கும் மற்றொரு கவிதையே பொருண்மை சொல்கிறது. வீதியில் கூத்தாடும் இளைத்த தேகத்திற்கு 'தான மிட்டேன் காசோடென்னையும் / தாபத்தையும் / என் தாபம் என்ன செய்ய முடியும் / தீர்ந்து விடுமா யானைப் பசி' என்று காட்சியை அகலவிரித்து ஓரத்தில் நின்று தனையாற்றும் கவிமனசு செயற்கையாகிப் போகிறது. இதே செயற்கையில், 'இடப்பற்றாக்குறையால் / மரமிருந்தயிடத்தில் / மேடை நின்றது' என்ற அடிப்படை கட்டமைத்த மேல்கட்டுமான வரிகள் புளித்த வீச்சமடிக்கிறது.

இறைச்சலின் எச்சில் இலைக்கு கிராமம் புகுத்தப் பட்டுக் கொண்டிருக்கிறபோது, தகர டின்னை தட்டின போது பறந்த குருவிகள் இப்போது 'கல்யாண வீட்டு / 'ஸ்பீக்கர்' செட்டோனு / பயமில்லாமப் பெரக்குதுக.' கிராமத்தைத் தொலைக்கும் நகரங்களின் உலகம் முற்றிலும் வித்தியாசமென்பதை 'வெளங்காத டவுண்ல / வெவரஞ் சொல்ல / ஆளுல்ல' வரிகள் பேசுகிறது. 'நான் / பரவாயில்லை / எம்மகள் / கம்மங் கஞ்சி பத்தி / தெரிஞ்சிக்கிறது / கதை சொல்லித் தானோ?' கிராமம் மாறிவிட்டது. ஆமாம். கூடவே புதிய கிராமத்திலும் மாறாதிருக்கிறது "சாமீய.. ஊ"னு / கேட்டு கையேந்தும் / பொன்னுசாமிக்கு / பல நெளிசலோடு / ஈய லோட்டா. தர்மகர்த்தா வேட்டைகளை அதிகாரங்களை திரைபோட்டு வேரறுக்கும் ஆட்டக்காரியின் செயல் 'ஆட்டத்தளத்தில் முதல் ரவுண்டு / ஆட்டக்காரி / வாழைக்காய் / வெட்டிக் கொண்டிருந்தாள்'.

யசோதா செத்துப்போனாள் என விரியும் கவிதையில் 'யாராவது / அறிந்திருப்பார்களா? / சாவதாராயிருந்தாலும் / நானழுவது மட்டும் / உனை நினைத்தென்று' வரும் செய்திக் குறிப்பு கவிஞரின் சுயபிழையைச் சொன்னாலும் கிராமப்புற கூறுகளின் (இழவு வீட்டுக்கு அழுகவே காசு கொடுத்து கூட்டி வந்த ஒப்பாரிமார்கள் அடிப்படைச் சார்ந்தவையாகலாம்.

மூச்சு

ஒரு கிராமம் என்பது தன்னைக் கீறி கீறி மடிகட்டி கணத்து பால்பீச்சும் தன்மையுடையது. ஓடும் நீர் நரம்புகளுக்கும், வேர் நரம்புகளுக்கும் பிணை உண்டு. ஓயாத புணர்ச்சியுடன்தான் அவை சாத்தியம்; பழங்களுக்கு நிகராய் நிழல்களும் போற்றப்படுபவை. பொன்னை வார்க்கும் மண் பொதி. எச்சங்கள் பச்சைய பளபளப்புக்கு. இவையெல்லாம் இன்று அறுந்து வெந்து சாம்பலாகிப் போய்விட்ட சோகத்தை மரங்களும் வற்றிய சுனைகளும் வெக்கைக் காற்றும் கட்டிடக்காடும் தொழுவத்தில் ஊடிழையாக்கி எழுந்து நிற்பவை.

நகரங்களுக்குத் தீண்டத்தகாதவையான கிராமங்களில் - அதிகாரத்தின் கருத்தியலைக் காயடிக்க 'தொழுவு' உதவும் என்பதில் ஐயமேதுமில்லை. வாழ்த்துக்கள் அன்பழகன். ●



படிப்பகம்

www.padippakam.com

■ ஆ. வெங்கடேஷ்

# 2005-ஆம் ஆண்டின் தலித்திய அரசியல் இலக்குகள்

வரலாற்றின் கொடும் நினைவுகளை 2004-ஆம் ஆண்டு நம்மீது பொதியேற்றி வைத்து சென்றுள்ளது. இதுவரை ரத்தக் கவுச்சியான நமது வரலாற்றில் கடந்த ஆண்டு மட்டும் சில நிகழ்வுகள் நமது எதிர்கால சந்ததிகள் வரை குமட்டுமளவிற்கு கோரங்களை சாதி வெறியர்கள் நம்மீது நிகழ்த்தினார்கள். திண்ணியத்தில் மலம் திணித்த கொடுமை... முத்துமாரி மீது மலம் கரைத்து ஊற்றியது... திண்டுக்கல்லில் தலித்தின் வாயில் சிறுநீர் கழித்தது... இப்படியாய் வெறியுடன் காயப்படுத்திக் கடந்தது கடந்த ஆண்டு.

தலித்திய அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏதும் நிகழாத நிலையில் கடந்த ஆண்டின் (2004) இறுதியில் தனியார்துறையில் இடஒதுக்கீடு குறித்த விவாதம் தலித்திய அரசியல் அரங்கில் குறிப்பிடத்தக்க அதிர்வுகளை ஏற்படுத்தியது. தலித்திய மையநீரோட்ட அரசியல் இயக்கங்களான விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற நிலையில் மீண்டும் இரட்டை வாக்குரிமை மீது கவனம் கொண்டிருப்பது ஆரோக்கியமான விஷயமாகக் கருதலாம். இருந்தபோதிலும் மக்கள் கூட்டணியுடன் அரசியல் கூட்டணிகள் ஜார்ஜ் பெர்னான்டசுடன் கூட்டு சேர்ந்தது நிதி ஆதாரத்திற்கு மட்டுமானதன்று என்று இயக்கங்கள் விளக்கம் அளித்தாலும், பலரால் அதை அறிவார்ந்த செயல் தந்திரமாகக் கொள்ளமுடியவில்லை. அதற்குப் பதிலாக மாயாவதி, ராம்விலாஸ் பாஸ்வான் கட்சிகளில் கூட்டணி வைத்து தோல்வியுற்று இருந்தாலும் இந்திய அளவில் ஒரு திடமான தலித் வலைப் பின்னலை (Network) உருவாக்கி இருக்க வாய்ப்பு இருந்திருக்கும்.

வட இந்திய தலித் அரசியலின் உருவாக்கமானது தொடக்கத்திலிருந்தே தேர்தல் அரசியலுடன் உடனிணைந்துபோய் உள்ளதால் (மராத்திய சிறுத்தை இயக்கம் தவிர), 1984-இல் உருவான BSP ஆனது 1989-ஆம் ஆண்டுதான் உத்திரப்பிரதேசத்தில் இரண்டாவது பெரிய அரசியல் கட்சியாக உருவாக முடிந்தது. ராம்விலாஸ் பாஸ்வான் 1987 வரை நான்குமுறை தேர்தலில் நின்று பல பின்னடைவுகளுக்குப் பிறகுதான் பெரிய கட்சியாக பரிணமித்தது. இருந்தபோதிலும் வட இந்திய அரசியலானது தொடக்கத்திலிருந்தே பிற்படுத்தப்பட்டோர் அடையாள அரசியலாக உருவானது. (நித்திஷ் குமார் - குர்மி / நட்வர்சிங் - ஜாட்/ முலாயம் சிங் - யாதவ்) மண்டல் அறிக்கையின் ஆரம்பத்திலிருந்தே வடக்கு இந்திய பிற்படுத்தப்பட்டோரின் அரசியலுடன், தலித்திய அரசியல் கட்சிகளும் பிரச்சினை அடிப்படையில் ஒன்றிணைந்த நிலையை உருவாக்கியது. ஆனால் தென்னிந்திய அரசியல் நிலைமை இதிலிருந்து மாறுபட்டு பிராமண எதிர்ப்பு (தமிழ் நாட்டில் மட்டும்), மொழிப்பின்புல அரசியல் என்று தோற்றம் கொண்டாலும், இறுதியில் கலை ஆளுமைகளே (நாடகம், திரைப்படம்) தென்னிந்திய அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக உருவாகியுள்ளன. இப்படிப்பட்ட அரசியல் நிலைமையில் பொதுவான தலித் செயல் திட்டங்களை கவனம் கொள்வோம்.

**I. தலித் மாணவர்களும் கல்வியும்**

செத்த செய்தியைச் சொல்ல மரப்பலகையின் மீது மாட்டுத்தோலைப் போர்த்தி ஓசைகளை ஒலிபரப்பி தகவல் தொழில்நுட்பத்திற்கு தாய்வித்துப் போட்டவர்கள் அறிவு புறக்கணிக்கப்பட்டவர்களாய் ஆக்கப்பட்டது எவ்வாறு? இந்த கேள்விக்கு விடையாய் நின்று இறந்துபோனாள் கேரள தலித் மாணவி ரஜனி. கல்விக்கடனுக்கு வங்கிகள் கைவிரித்து விட்ட நிலையில் சாவை மட்டுமே பரிசாய் கொடுத்தது இந்த அரசு. நிதியமைச்சர் சிதம்பரம் வங்கிகளில் கல்விக்கடன் குறித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த நிலையில் தான் இது நடந்தது.

தலித் கல்வி குறித்த புள்ளிவிவரங்கள் பல நமக்கு வருத்தமூட்டுகின்றன. 1931-இல் 1.19 விழுக்காடாய் இருந்த தலித்துகளின் கல்வி நிலையானது, 1981-இல் 21.38 விழுக்காடு மட்டுமே உயர்ந்தது. இன்று குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்ணாகக் கருதும் 35 விழுக்காடு அளவிற்குக் கூட எட்டாதது அரசின் செயலின்மையையே காட்டுகிறது.

1986-இல் உருவாக்கப்பட்ட இந்திய கல்விக் கொள்கையில், 1992-இல் உருவாக்கப்பட்ட கல்வித் திட்டத்தில்தான் SC/ST கல்வி முன்னேற்றத்திற்கான பிரிவுகள் வகுக்கப்பட்டன. அதில் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு ஒரு தொடக்கப்பள்ளி, இலவச நோட்டுப் புத்தகம் போன்றவை மட்டுமே உள்ளதே தவிர, கல்வி கற்பிப்பதில் சிறப்புப் பயிற்சி / ஆசிரியர்கள் எண்ணிக்கை / ஊட்டச்சத்து மிக்க உணவு போன்றவை குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை. 1995-இல் வகுக்கப்பட்ட தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டத்தில் ஒரு மாணவருக்கு ஒரு வேலைக்கு 100 கிராம் உணவாக



படிப்பகம்

www.padippakam.com

மாதம் மூன்று கிலோ அரிசி என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுவது வேதனை. 2000-ஆம் ஆண்டில் உருவான சர்வசிக்ஷா சுபியன் கல்வித் திட்டத்திலும், தலித்துகளுடைய கல்விநிலை குறித்து எந்த கவனமும் கொள்ளப்படவில்லை. விவசாய நிலங்களை மட்டுமே நம்பியுள்ள தலித்துகளின் வாழ்நிலையானது குடும்பத்திலுள்ள பெற்றோர் மட்டுமின்றி குடும்பமே கூட்டாக உழைத்தால் மட்டுமே ஜீவனிக்க முடியும் என்ற சூழ்நிலையில் பள்ளி இடை நிறுத்தம் என்பதும் ஒரு பொருட்டாகக் கொள்ளப்படவில்லை. எனவே தலித் இயக்கங்கள் இதுகுறித்து கவனம் கொள்ள வேண்டும்.

**II. சிறப்புக்கூறு திட்டமும் தலித்துகளும்**

ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தில் உருவாக்கப்பட்ட சிறப்புக் கூறு திட்டமானது தலித்து களின் புறக்கட்டுமான வளர்ச்சிக்கென்று தொடங்கப்பட்டது. இதில் மத்திய அரசு நிதி உதவியானது மானியமாக வழங்கப்படும் நிலையில் ஒரு திட்டம் இருக்கிறதா என்று யாருக்கும் தெரியாத நிலையில் இந்த திட்டத்தின் செயல்பாடு தன்மை உள்ளது. 2003-04-இல் மட்டும் மத்திய அரசானது 61 கோடியை மானியமாக அளித்துள்ளது.

ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட தொகை

1997 - 98 = 558 கோடி
1998 - 99 = 643 கோடி
1999 - 00 = 840 கோடி
2000 - 01 = 887 கோடி
2004 - 05 = 1363 கோடி

இந்த சிறப்புக்கூறு திட்டத்தில் பிரிக்கக்கூடியது / பிரிக்கப்படக்கூடாதது என்று ஒரு பகுதி இருப்பதின் அடிப்படையில் ஒதுக்கப்படும் நிதியானது 50 சதவீதம் தலித் மக்களின் வளர்ச்சிப் பணிகளுக்கும் மீதமுள்ள 50 சதவீதமானது அரசின் பொதுச் செலவுக்கும் செலவிடப்படுகின்றது. எனவே மேற்குறிப்பிட்ட பகுதி சிறப்புக்கூறு திட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும். மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் பணத்தை மாநில அரசுகள் பெரும்பாலும் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பி விடுகின்றன. இந்த அடிப்படையில் இதுவரை 7, 143 கோடி வரை பறிபோய் உள்ளது.

**III. தனியார் துறையில் இடஒதுக்கீடும் தலித்துகளும்**

அரசு தனது கடமையிலிருந்து கழன்று கொண்டிருக்கும் இந்த நிலையில் தனியார் துறை இட ஒதுக்கீடானது தலித் இளையோர்களின் உயிர்த்தேவையாக உள்ளது. ஐக்கிய முன்னேற்றக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல்திட்டத்தில் கூறப்பட்ட தனியார் துறை இட ஒதுக்கீடு குறித்து அடிக்கடி அமைச்சர்களின் உத்தரவாத அளிப்பு மட்டுமே நடக்கின்றதே ஒழிய சட்டம் கொண்டுவருவதற்கான ஒரு முகாந்திரமும் தென்படவில்லை. தமிழை செம்மொழியாக்க குரல் கொடுத்தவர்களும், தமிழின் வேலைவாய்ப்பு குறித்து ஒன்றும் பேசவில்லை.

அப்படி சட்டம் கொண்டுவருவதாக இருந்தால் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ராமசாமி போன்றோர் ஒன்றிணைந்து உருவாக்கிய மாதிரி சமவாய்ப்பு மற்றும் பன்மைத்துவ (SC/ST உறுதிப்படுத்தல்) சட்ட மசோதாவின் அடிப்படையில் கொண்டுவர நிர்பந்திக்க வேண்டும். ரிலையன்ஸ் போன்று இந்திய அரசிற்கு பத்து விழுக்காடு வருமானம் வரும் முதலாளிகளின் நலனுக்கேற்ப சட்ட வரையறை உள்ளடக்கிக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ள நிலையில் நாம் பெங்களூர் துவக்க முயற்சியில் உருவாக்கப்பட்ட மாதிரி சட்ட மசோதா அடிப்படையில் கொண்டுவர நிர்பந்திக்க வேண்டும். தற்போது பெருமளவு வேலை வாய்ப்பு பெருக்கமடைந்துள்ள துறைகளான அந்நிய வேலை ஒப்பந்த நிறுவனங்கள் (BPO), அழைப்பு நிறுவனங்கள் (Call Centre) போன்றவற்றிற்கு தகுந்தாற் போல் தலித்துகளுக்கு பயிற்சி அளிக்க அரசிடம் கோரிக்கை வைக்க வேண்டியது அவசியம்.

**IV. நில உரிமையும் தலித்துகளும்**

பிரிட்டிஷாரால் அமைக்கப்பட்ட இந்திய சட்டக் கமிஷன் இந்தியாவில் இருந்த அடிமைகளைப் பற்றிய பரிந்துரை அறிக்கை ஒன்றை 1841-இல் அரசிடம் சமர்ப்பித்தது. அதில் அடிமைகளை மூன்று வகைகளாகப் பிரித்து இருந்தது. சுதந்திரத் தொழிலாளர்கள், அடிமைகள், விற்கப்பட்ட அடிமைகள். இவை மூன்றும் தலித்துகளின் நிலையையே எடுத்துக்காட்டுவதாய் உள்ளன. ஐரோப்பிய மிஷனரிகள் முதன்முதலில் போதகர் ஆண்ட்ரூ என்பர் தலைமையில் ப்ரீ சர்ச் ஆப் ஸ்காட்லாண்ட் என்ற மிஷனரி மூலம் செங்கல்பட்டில் இருந்த பறையர்களின் நிலைகுறித்து ஆராய்ந்தார். 1891 ஏப்ரலில் போதகர் கௌடி என்பவர் பறையர்களின் துன்பநிலை என்ற அறிக்கை ஒன்றை சென்னை மிஷனரி மாநாட்டில் வைத்து அரசு உடனே இதுகுறித்து விசாரணை செய்ய வேண்டுமென்றார்.

பிறகு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளரான ட்ரீமன்கீர் விசாரணை செய்து பறையர்களின் இழிந்த நிலையை விளக்கினார். சென்னை மிஷனரி மாநாட்டு அறிக்கையும், ட்ரீமன்கீர் விசாரணை அறிக்கையும் செய்தித்தாளில் வந்ததன் விளைவாக லண்டனில் அரசமைப்பின் பொது அவையில் (House of Commons) கேள்வி எழுப்பப்பட்டதன் மூலம் இதர மக்களைப் போல் தலித்துகளுக்கும் நிலங்களை அளிக்கும் உரிமையை அளிக்க வேண்டுமென்று கூறியது. இந்த நிர்பந்தத்தின் மூலம் 1892 செப்டம்பர் 30-இல் அரசாணை எண். 1010 (வருவாய்)-உம், 1893-இல் அரசாணை எண் 68 (கல்வி)-யும் பிறப்பிக்கப்பட்டன. இதன் மூலம் தலித்துகளுக்கு சுமார் மூன்று லட்சம் ஏக்கர் அளவு நிலங்கள் வழங்கப்பட்டன. பஞ்சமி நிலம் குறித்த விவரங்கள் 1405-ஆம் ஆண்டு பசலி கிராம கணக்குகளில் 'A' பதிவேட்டில் இருந்தன. 1972-க்குப் பிறகு புதிய பதிவேடுகளில் மாற்றியதால் பல குறிப்புகள் தொகுக்கப்படவில்லை. இந்த பஞ்சமி நிலத்தின் முக்கிய அம்சமாக வருவாய் வாரிய அரசாணை எண் 15 பத்தி 9 சிறப்பு பிரிவு 'D'-இன் கீழ் பஞ்சமி நிலங்களை தலித் அல்லாதவர்கள் வாங்கி



படிப்பகம்

www.padippakam.com

னாலும் அது செல்லாது. இதனை 1991-இல் துரைசாமி எதிர் தமிழ்நாடு அரசு என்ற வழக்கில் சென்னை உயர்நீதி மன்றமும்; மனாச்சர்கௌடா எதிர் கர்நாடக அரசு என்ற வழக்கில் உச்சநீதிமன்றமும் உறுதிப்படுத்தின. எனவே பஞ்சமி நிலத்துடன் நில உச்ச வரம்பு சட்டத்தின் அடிப்படையில் கையகப்படுத்தப் பட வேண்டிய 40 லட்சம் ஏக்கர் நிலங்களில் 2 லட்சம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டு நிலமற்றோர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில் எல்லா தலித் இயக்கங்களும் தமது உயிர் ஆதாரமான உடைமையான நிலஉரிமை குறித்த விழிப்புணர்வையும் போராட்டங் களையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமான தாகிறது.

**V. பூனா - ஒப்பந்தமும் சட்ட தடுநிலையும்**

பூனா ஒப்பந்தம் நடந்தேறிய சூழலை ஆராய்ந்தால் உண்மையிலே அங்கு நிறைவேற்றப்பட்டது ஒப்பந்தம் தானா? என்ற கேள்வி எழுகின்றது. இந்திய ஒப்பந்தச் சட்டமே இதற்கு பதிலாய் அமையும். பொதுவாக ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டால் ஒப்பந்தத் தரப்பாளர்களிடையே ஒத்த சம்மதமும், எந்த நிர்ப்பந்தமும் இல்லாமல் நடந்திட வேண்டும். ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக மிரட்டியோ, வலுக்கட் டாயப்படுத்தியோ, ஒப்பந்தத்தின் கருப்பொருளை திரித்துக் கூறியோ ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் அது செல்லாத ஒப்பந்தமாகும்.

இந்த அடிப்படையில் பூனா ஒப்பந்தமானது ஒப்பந்த சட்டப்பிரிவு 15-இன் கீழ் சட்டத்திற்குப் புறம்பாக உண்ணாவிரதமிருந்து, வலுக்கட்டாயப் படுத்தி நடந்தேறியுள்ளதால், இதனை செல்லாது என அறிவிக்கப் போராட்டங்களையும், நீதிமன்றம் நோக்கி பொதுநலன் வழக்குகளையும் போட வேண்டும். காந்தி யாரின் 21 நாள் உண்ணாவிரதமானது ஒப்பந்த சட்டத் திற்கு எதிராக உள்ளதாலும், இந்திய ஒப்பந்த சட்டம் 1872-லிருந்து நடைமுறையில் இருந்து வருவதாலும் அதனை செல்லாது என அறிவிக்க அனைத்து முகாந் திரமும் உள்ளது. ஒப்பந்த தரப்பினர்கள் இருவரும் இறந்துவிட்ட நிலையில் ஒப்பந்தத்தின் அடிப்படைகள் அமலில் இருந்துவிடுவதால் அதனை செல்லாது என அறிவிக்க வேண்டுவது அவசியமானதாகின்றது. எடுத் துக்காட்டாக பாலஸ்தீனப் பிரச்சினையில் உருவான ஓஸ்லோ ஒப்பந்தத்தை அந்த மக்கள் ஏற்காத நிலையில், பூனா ஒப்பந்தமும் ஒரு விவாதப் பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும்.

## புரட்சி விதை

புதுக்கவிதை புனைவது
பூக்களை வாணிக்க மட்டுமல்ல
பலயுகப் புரட்சிகளை செய்யவும்தான்.

இங்கே நாம்
காந்தியின் கந்தையையும்
பாரதியின் மீசையையும் மட்டுமே
பேசிக்கொண்டிருந்தால்
புரட்சி என்பது எழுத்தில் எழுதப்பட்டு
ஏட்டில் மட்டுமே வாழும்.

தோழர்களே...
சம உரிமையைக் கேட்டு நாம்
சமாதானப் புறாக்களை
பறக்கவிட்டுக் கொண்டிருந்தால்
சரித்திரத்தை மாற்றிவிட முடியாது.
அரசர் "அமுராபியின்"
ஆட்சி முறையைக் கொஞ்சம்
அமலுக்கு கொண்டுவருவோம்.

"கண்ணுக்குக் கண்"
"பல்லுக்குப் பல்"
என்கின்ற புதிய
பாடத்திட்டத்தை புகுத்திடுவோம்.

நீதியே கிடைக்காத
நீதிமன்றங்களையும் - நமக்கு
காவலே இல்லாத
காவல் நிலையங்களையும்
இனியும் நாம்
நம்பிக்கொண்டிருந்தால்
இளிச்ச வாயர்களாகுவோம்

இனி உன் குடிசை எரிவதற்கு முன்
எரிக்க முயன்றவனின்
மாளிகை மண்மேடாக வேண்டும்

நமது சகோதரி
கற்பழிக்கப்படும்முன்
கற்பழிக்க முயன்றவனின்
ஆண் குறி அறுத்தெரியப்படவேண்டும்

உன்னை 'மலம்'
தின்ன வைத்தவனின் உடலை
'மண்' தின்னவைக்க வேண்டும்
உன்னை சிறுநீர்
குடிக்கவைத்தவனின்
செந்நீரை நீ குடிக்கவேண்டும்.

உயர் சாதித் திமிரில்
உன்னை ஒடுக்க நினைப்பவனின்
உயிர் துடிப்பை நீ
அடக்கவேண்டும்

இவைமட்டும் போதாது...
இனிமேல் நீ
"அவன் அடிமை என்பதை
விளக்கிச் சொல்
அவனே புரட்சி செய்வான்"
என்கின்ற நமது
வீரியம் மிக்க விதைகளை
வீதிதோறும் விதையுங்கள்

விதைத்தவர்கள்
புதைக்கப்பட்டாலும்
விதைக்கப்பட்டவைகள்
நிச்சயம் நாளை
வேர்கொண்டு வெளிவரும்

அன்று அந்த விடியலில்
இந்த பார்ப்பனிய பதருகளும்
அதற்கு பக்கபலமாய் நின்ற
ஏவல் இலைச்சருகுகளும்
பறந்தோடும்...

■ வீ. ஏழுமலை



படிப்பகம்

www.padippakam.com

# புதிய கோடாங்கியின் டிசம்பர் டயரி

டிச. 1 : சென்னை, கிறிஸ்துவ தொண்டுக்குழு ஏற்பாடு செய்த உலக எய்ட்ஸ் தினத்தில் கலந்து கொண்டு மனிதச் சங்கிலியை துவக்கி வைத்தது புதிய கோடாங்கிக் குழு.

டிச. 3: சென்னை, லயோலா கல்லூரியில் 'தமிழகம் 2005' கருத்தரங்கில் 'பெண்ணிய நோக்கில் சாதி' என்ற தலைப்பில் எழுத்தாளர் சிவகாமி உரை யாற்ற, பேரா. லெனின், அரங்க மல்லிகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

டிச. 4 : சமரசம் பத்திரிக்கை ஏற்பாடு செய் திருந்த ஈத் நோன்புப் பெருநாளில் அழைப்பின்பேரில் அடையாளம் சாதிக், அயன்புரம் ராஜேந்திரன், எழுத் தாளர் சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

டிச. 5 : வேலூர் மாவட்டம் கீழ் செங்கானத் தூர் கிராமத்தில் கிராம மக்களுக்கான மருத்துவ முகாமும், தலித் எழுச்சி முகாமும் புதிய கோடாங்கி ஏற்பாட்டில் நடந்தது. DRO லோகநாதன் ஒருங் கிணைத்தார். எழுத்தாளர் சன்னா, குடியரசு, சுந்தரகீதன், சிவகாமி கலந்துகொண்டனர். இரவு வேலூர் மாவட் டம் சேனூர் கிராமத்தில் புத்தர், அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில் எழுத்தாளர் சிவகாமி கலந்து கொண்டு அம்பேத்கர் சிலையை திறந்துவைத்து உரையாற்றினார். S.G. வேலு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய் திருந்தார்.

டிச. 6 : அன்னை தெரசா பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த 'நிர்வாகத்தில் பெண்கள்' என் னும் தலைப்பில் குத்சியா காந்தி, இ.ஆ.ப., சிவகாமி, இ.ஆ.ப. ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பகல் 1 மணிக்கு நேரு ஸ்டேடியத்தின் அம்பேத்கர் சிலை அருகில் தன்மானம் தயாளன் ஒருங்கிணைத்த புத்திஸ்ட் கல்ச்சுரல் மூவ்மென்ட் நடத்திய அம்பேத்கர் நினைவு நாள் விழாவில் எழுத்தாளர் சிவகாமி, பேரா. பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு உரை யாற்றினர்.

டிச. 7 : தேசிய தலித் மனித உரிமை மையம் (NDHRC), தென்மண்டலம் ஏற்பாடு செய்திருந்த தலித் பெண்களுக்கான முகாமில் கருப்பன், இ.ஆ.ப. (ஓய்வு), பாஸ்கர், எழுத்தாளர் சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டனர். அன்று பரமக்குடி அருகிலுள்ள இராம நாதபுரம் எஸ். காவனூர் என்னும் கிராமத்தில் சக்கிலியருக்கும் பள்ளருக்கும் ஏற்பட்ட தகராறு குறித்து புதிய கோடாங்கி சார்பில் எழுத்தாளர் சிவகாமி, கருப்பன், இ.ஆ.ப., (ஓய்வு), பாஸ்கரன், S.T. கல்யாணசுந்தரம் ஆகியோர் உண்மை அறியும் குழுவாக அங்கு சென்று விசாரணை செய்தனர்.

டிச. 11, 12 : புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அபெகா நூலகமும், புதிய கோடாங்கியும் இணைந்து தலித் மாணவிகளுக்கான எழுச்சி முகாமை நடத்தின. டாக்டர் ஜெயராமன், பேரா. நல்லுச்சாமி ஆகியோர் ஒருங்கிணைக்க, எழுத்தாளர் சிவகாமி, குடியரசு, வேலுச்சாமி, பேரா. பு. ஜார்ஜ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். துணைப் பதிவாளர் ரமணி, அருள்மேரி உலகநாதன், சதாசிவம், ஏபி. வள்ளிநாயகம் மற்றும் பலர் சிறப்புரையாற்றினர்.

டிச. 13 : மத்திய அரசின் சுங்கவரி ஆய்வாளர் களுக்கு Gender Awareness குறித்து புதிய கோடாங்கி சார்பில் எழுத்தாளர் சிவகாமி உரையாற்றினார்.

டிச. 15 : புதிய கோடாங்கியின் 2-வது மாநில மாநாடு, தேனியில் நடக்க இருப்பது குறித்த விவாதம் நடத்தப்பட்டு, அது குறித்து அனைவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இன்பக்குமார், வாணிதாசன் மற்றும் பலரைக் கலந்து ஆலோசித்து தலித் நில உரிமை அறப் போராட்டக் கூட்டம் குறித்து விவாதம் நடத்தப்பட்டு, அடுத்த கூட்டத்திற்கான முன்னேற் பாடுகள் செய்யப்பட்டன.

டிச. 16 : ஆதிவாசி பெண்கள் தலைமைத்துவ பயிற்சி முகாமை சி.எஸ்.ஐ-யும் புதிய கோடாங்கியும் இணைந்து நடத்தின. ஜேக்கப் பெல்லி, ஜீவா, எழுத் தாளர் சிவகாமி, சன்னா ஆகியோர் கலந்துகொண் டனர்.

டிச. 17 : தய். கந்தசாமி, அயன்புரம் ராஜேந்திரன், சன்னா, வாணிதாசன், முனைவர் ராஜ்குமார் ஆகியோர் சேர்ந்து நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து 2005-2006 பட்ஜெட் முன் விவாதத்திற்கான கோரிக்கையை முன்வைத்தனர்.

டிச. 19, 20 : சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மின்னாட்சியில் பெண்களின் பங்கு என்னும் தலைப்பில் நடத்திய தேசிய கருத்தரங்கில் புதிய கோடாங்கியின் எழுத்தாளர்கள் குடியரசு, வேலுச்சாமி, பரமானந்தம் மற்றும் சிவகாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

டிச. 21 : சென்னை எழும்பூரில் கே.எஸ். ஜகந்நாதன் அவர்களுக்கு நினைவு அஞ்சலியை அறிவு ஒளி உறவின் முறைச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சியில் அந்தோணிராஜ், ஜகந்நாதன் துணைவி யார், கிருத்துதாசு காந்தி, புதிய கோடாங்கி எழுத்தா ளர்கள் நிகழ், வேலுச்சாமி, குடியரசு, பரமானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

டிச. 22 தேசிய பழங்குடி கொள்கை குறித்த விவாதம் மத்திய அரசினரால் உதகையில் ஏற்பாடு



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் புதிய கோடாங்கி சார்பில் எழுத்தாளர் சிவகாமி அவர்கள் கலந்து கொண்டார்.

டிச. 23 : சென்னை எழும்பூரில் ICSA-வில், பட்ஜெட் முன் விவாதக் கூட்டத்தை புதிய கோடாங்கி, அனித்ரா டிரஸ்ட், தலித் மக்கள் முன்னணி, பாலம் ஆகியோர் இணைந்து நடத்தினர். ரூ. 1122 கோடிக்கு சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் திட்டங்கள் தெரிவு செய்யப் பட்டன.

டிச. 26 : பொறியாளர்களுக்கான தலித் எழுச்சி முகாம் சென்னையில் நடைபெற்றது. எழுத்தாளர்கள் சன்னா, சிவகாமி, பரமானந்தம் மற்றும் எஸ். இராமச் சந்திரன் NIC, ஆறுமுகம், Broadline Computers Systems (P) Ltd., என்.ஆர். மனோகரன், Infotech India, எஸ். பிரபாகரன் மேலாளர், ELCOT ஆகியோர் கலந்து கொண்டு பொறியியல் துறையின் எதிர்காலம் குறித்தும், பொறியியல் வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு சமூக விழிப்புணர்வு குறித்தும் உரையாற்றினர்.

டிச. 27 : சுற்றுப்புறத் தூய்மைக்கு தீர்வு என்னும் வகையில் சென்னை தியாகராய நகரில் உள்ள GRT Grand ஹோட்டலில் Bio-degradable Resin Technology என்ற மண்ணோடு கரைந்துவிடக்கூடிய பிளாஸ்டிக் தயாரிப்பை (கொரிய நாட்டின் கண்டுபிடிப்பு) இந்தியாவில் அறிமுகம் செய்யும் விழா நடந்தது. அத் தயாரிப்பை எழுத்தாளர் சிவகாமி துவக்கி வைத்தார்.

டிச. 28 : விழுப்புரத்தில் தனியார் துறையில் இடஒதுக்கீடு மற்றும் மண்ணுரிமை கோரிக்கைகள் குறித்து டாக்டர் அம்பேத்கர் பேரவையின் அமைப் பாளர் சி. நிக்கோலஸ், எம்.சி. கலியன், சைதை அன்பு தாசன், துரை. மெல்க்கியூர், அம்பேத்கர், விழுப்புரம் மாவட்டத் தலைவர், எழுத்தாளர் சிவகாமி, டாக்டர் வள்ளல்பெருமான், நீலகங்காதரன், பூ. மூர்த்தி, நிகழ், குடியரசன், சன்னா ஆகியோர் கலந்துகொண்டு உரை யாற்றினார்கள்.

இரவு திருநீர்மலையில் பௌர்ணமி விழா நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள் சன்னா, குடியரசன், நர்த்தகி, எழுத்தாளர் சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டனர். துடி ராஜவேலு ஒருங்கிணைத்தார்.

டிச. 29 : புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 49-வது நினைவு நாளை முன்னிட்டு தென்னிந்திய தலித் எழுத்தாளர் சங்கம் மற்றும் புதிய கோடாங்கி மாத இதழ் இணைந்து நடத்திய கல்லூரி மாணவர்கள் மற்றுத் தலித் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் திருத்தணி பிரைட் கல்வி மையத்தில் நடந்தது. அதில் எழுத்தாளர் சிவகாமி, இன்பக்குமார், திருநாவுக்கரவு, தா. முத்து, சாமிதாஸ், கே.எம். சேகர், கவிஞர் மு. அய்யாக்கண்ணு, குடியரசு, சன்னா, சுந்தர கீதன் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை ஞானப்பிரகாசம் மற்றும் சுந்தரகீதன் ஏற்பாடு செய் திருந்தனர்.

## காலை வணக்கம்

■ புதிய மாதவி

மாப்பிள்ளை வீட்டில்
வசதியானவர்கள்
என்றார் அப்பா.
அப்படி என்ன
கொட்டிக்கிடக்கிறதாம்
அலுத்துக்கொண்டாள்
அம்மா.
அடப்போடீ
வீட்டோடவே இருக்கே
கக்கூசு
இதைவிட என்னடி
பெரிய வசதி வேணும்...
டப்பாவுடன்
வரிசையில் காத்திருக்கும்
அக்கா
ஒலிம்பிக்கில்
வெள்ளிப்பதக்கம் வாங்கிய
இந்தியனைப் போல
வெற்றி நடையுடன்.

தங்கமெடல்
எனக்கு வரும்
நாள்வரும்
நம்பிக்கையில்
நான்.
எங்கள் நம்பிக்கை
கனவுகளுக்காய்
நித்தமும்
டப்பாவுடன்
ஓடிக்கொண்டிருக்கும்
அம்மாவும் அப்பாவும்.
எங்கள் சால்வீடுகளின்
காலைவணக்கம் கேட்டு
கண்விழிக்கிறது
கழிவறைச் சூரியன்.

## அம்மாக்களின் அவஸ்தை

■ புதிய மாதவி

இரண்டு நிமிஷத்திற்கு
ஒரு இரயில்
அறிவித்தார் அமைச்சர்.
அச்சப்பட்டார்கள்
எம் அம்மாக்கள்.
அடிக்கடி
எழுந்துநிற்கும்
அவஸ்தையை நினைத்து.



படிப்பகம்

www.padippakam.com

■ பாரி. செழியன்

# ஊடறுப்பு

சமத்துவம் சகோதரத்துவம் பேசுகின்ற இசுலாமிய இதழான 'புதியகாற்று'-வில் "தாய்மண், புதிய கோடாங்கி, உலக தமிழர் சக்தி போன்ற தலித் இதழ் களில் தமிழ் எழுத்தாளர்கள் எழுதக்கூடாது" என்ற மிக மோசமான பாசிசக் குரலை பதிவு செய்திருக்கக் கூடாது. தலித் அரசியலை இழிவாக விமர்சிக்கும் 'புதிய ஜனநாயகம்,' பெரியாரிஸ்ட் ஆனைமுத்துவின் 'சிந்தனையாளன்,' இசுலாமிய இதழ் 'உணர்வு' போன்ற இதழ்கள் நடந்த நிகழ்வை பதிவு செய்தன. 'புதிய காற்று' மட்டுமே தலித் இதழ்கள் புறக்கணிப்பு, தலித் தலைவர் அவமதிப்பு போன்ற தலித்துக்கு எதிரான செய்திகளை எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் பகிரங்கமாக பதிவு செய்துள்ளது. அப்படியான பதிவை தகவல் அடிப்படையில் எடுத்துக்கொண்டு, வேலைசெய்த அம்பேத்கர் படிப்பு வட்டத்தினுடைய மறுப்புக் குரலையோ, கிட்டத்தட்ட 27-க்கும் மேற்பட்ட தமிழக அளவில் தலித் படைப்பாளிகள் கையொப்பமிட்ட எதிர்ப்பு அறிக்கையையோ, அது சார்ந்த பொறுப்பு உணர்வையோ 'புதிய காற்று' வெளியிடவில்லை. தலித் படைப்பாளிகளை மட்டுமல்ல, ஒட்டு மொத்த தலித் குரல்களை அவமானப்படுத்துகின்றது. சகோதரத்துவத்தின் மீது சாதி ஆதிக்கம் செலுத்துவது எப்படி சமத்துவமாகும்?

ஒரு பாசிசக் குரலைக் கூட இயல்பானதாகவும் சனநாயகமாகவும் பதிவு செய்யமுடியும் போது, அதற்கு விளக்கம், மறுப்பாக வந்த தலித் குரலை பதிவு செய்வதுதான் அடிப்படையான சனநாயகம். தங்களின் சனநாயக ரீதியான எதிர்ப்பைக்கூட வெளிப்படுத்தக் கூடாது, அதை 'புதிய காற்று' பதிவு செய்யக்கூடாது என்று சாதி ஆதிக்க, அதிகார சக்திகளுக்கு துணை நிற்கிறது. ஊர்க்காரர்கள் சேரிகளை ஒதுக்குவதுபோல கருத்து தளத்திலும் ஒதுக்குதலை புதியகாற்று நடைமுறைப்படுத்துகின்றது. அ. மார்க்ஸ் போன்ற தனிநபர் விருப்பு வெறுப்புக்கு அடிபணிந்து ஒரு அமைப்பின் தலைவரையும் இதழையும் அவமதிக்கின்றது.

பெரியார் அல்லது வேறு எவராக இருந்தாலும் அறிவியல் பூர்வமாக விமர்சனம் செய்யக்கூடாது, தலித் இதழ்களில் எழுதக்கூடாது என்ற மிரட்டலுக்கு ஆதரவளிக்கின்றது. யார் யாரை விமர்சிப்பது என்று தீர்மானிப்பது யார்? பெரியார் வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானிப்பது தலித்துகளுடையவை. அவ்வளவு ஏன், அறிவியல் பூர்வமானவர் காரல் மார்க்ஸ் என்பதைக்கூட யார் தீர்மானிப்பது? இந்திய, தமிழக வரலாற்றை அறியாதவர்கள், தலித்துகளுக்கு கற்றுக் கொடுப்பதுபோல பாவலா செய்யலாம். இதுவரை சாதிய இழிவுகளுக்காகப் போராடி செத்த தலித் போராளிகள் எந்த மார்க்ஸை படித்துவிட்டு போராடினார்கள்? இடதுசாரி உட்பட அனைத்து கட்சியிலும் செத்தவர்கள் தலித்துகள். காஞ்சி சங்கராச்சாரியர் கைதானபோது செத்தவர் தலித் மட்டும்தான். இதன் பின்னணி, அரசியல் காரணங்களை எழுத்துப் பூர்வமாக விளக்கமுடியுமா?

இந்துத்துவத்தை அரசியல் எதிரியாக பிரகடனப் படுத்தி அதைத் தகர்த்தெறியும் வியூகங்களை வகுத்து செயல்படும் தலித் அரசியலுக்கு ஒரு இசுலாமிய இதழ் தலித்துகளுக்கு எதிராக இவ்வாறு பாரபட்சம் காட்டக்கூடாது. தலித் - இசுலாமியர் இணைவை அதன் தேவையை ஊக்குவிப்பதில்லாமல் தலித்துகளை முன்நிறுத்தி ஊடறுப்பதை தவிர்க்கவேண்டும். •

## தவறிப் பிறந்துவிட்டோம் அரவாணிகளாய்...

■ செல்வகாந்தன்

உறவுகளை
உணரமுடியாமல்
உறவுகளும் உறவாடாமல்
ஒதுக்கி விடுகின்றன
ஒதுங்கி விடுகின்றன
அரவணைக்க மறுத்து...

ஓயாமல் மனதில்
அலையடிக்க
ஓய்ந்து கிடக்கிறோம்
ஒதுங்கி தவிக்கிறோம்
சருகாய்...

பறப்பது சாத்தியமா?
பூப்பது சாத்தியமா?
முற்றுபெறா
இக்கவிதையைப் போலவே
நாங்களும்...

## அறிவிப்பு

சந்தாவினைப் புதிப்பிப்பது சம்பந்தமாக அனைவருக்கும் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு விட்டது. இன்னமும் புதுப்பிக்காதவர்களுக்கு பிப்ரவரி 2005 முதல் இதழ்கள் அனுப்பப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# ஜாதியும் அதன் அழிவும் – எதிர் விவாதம்

■ செங்கை மோ. ஜேம்ஸ்

"நாங்கள் முற்றுகையிடப்பட்ட மக்களைப் போல் வாழ்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள் தம்முடைய உரிமைகளைப் பேசினால் மேல் சாதிக்காரர்கள் தங்களுடைய பொருளாதார ஆயுதத்தை பயன்படுத்தி அவர்களை பழிவாங்குகிறார்கள். நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். விவசாயக் கூலிகளாகக்கூட அவர்களை பயன்படுத்திக் கொள்வதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்நோக்கியுள்ள மற்றொரு துன்பம் பொருளாதார நிலையும் ஆகும்"

சாதிப் பெயர் நீக்குவது நீதியல்ல...! அல்லது சமத்துவத்திற்கெதிரான சனாதனம்...! அல்லது ஒதுக்கீட்டிற்கு எதிரான கருத்தியல் யுத்தம்...!

தலித் தளங்களில், அம்பேத்கரியத்திற்கு பொருத்தமில்லாத தலித் விடுதலைக் கூறுகள் குறித்தான புரிதலின்றி தன்னிச்சையான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஒதுக்கீட்டிற்கு எதிரான வாதங்களை அப்போதும் இப்போதும் வர்ணாசிரம அடிப்படையில் தூக்கிப் பிடிக்கும் சக்திகளுக்கு இணக்கமான குரல் தலித் வட்டாரத்திலும் ஒலிக்கத் துவங்கியுள்ளது. இது தவறு என தெரியாமல் செய்யப்படுவதாகவே கருதலாம்.

உழவுத் தொழில், தோல் தொழில் உட்பட சில தொழில்கள் ஒரு தரத்திலும், ஏனைய பகுதியினரை தனிப்பிரிவாகவும் பிரித்து, இரண்டு நிலையில் மட்டுமே சமூகத்தை அடையாளப்படுத்த வேண்டும் என திரு. எஸ்.டி. பாலையா முந்தைய இதழில் தனது வாதத்தை முன்வைத்திருந்தார்.

A, B பிரிவுகள் பற்றியும், ஆவணங்களில் சாதிப் பெயர் நீக்கம் குறித்தும் அவர் வைக்கும் வாதங்கள், ஆதிக்க சாதிப் பிரிவிலிருந்து ஏற்கனவே வைக்கப்பட்ட வாதங்களிலிருந்து சிறிது மாறுபட்டது. அவ்வளவுதான். ஆனால் தின(மல)ர், மங்குனி துக்ளக், பல நேரங்களில் அய்யங்கார் தினமணி, அருண்ஷோரி உட்பட இவர்களுக்கு கீழிருக்கும் பல முப்பிரிநூல் கும்பலும் ஏற்கனவே எழுப்பி வரும் பிரச்சினைகள் தான் இது.

சாதி, மதத்தை கேட்பது எதுவும் சான்றிதழில் இருக்கக்கூடாது, இந்தியன் என்று இருந்தால் மட்டுமே போதும் என திட்டமிட்டப்படி மேலான பார்வையில் அப்பாவித்தனமாகவும், தேசபக்தி பொங்குவதான வாதமாகவும் இது முன்வைக்கப்பட்டு வருகிறது.

பல நேரங்களில் பகுத்தறிவு, தமிழ் நினைவுகளில் முத்தெடுக்கும் சன் பரிவாரங்களின் அரட்டை அரங்கங்கள் வரை இந்த கருத்து ஆழமாக விதைக்கப்படும். ஒதுக்கீட்டிற்கெதிரான கருத்தியல் போர் இது.

தமிழக திரைச் சூழலிலும் ஒதுக்கீடு அளிப்பது தான் சமூகத்தின் எல்லா சீர்கேடு, முரண்களுக்கும் காரணம் என்பதான கருத்துருவாக்கத்தை கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு விரோதமாக திரையில் நிழல் நாயகர்கள் உரத்து முழங்கிடும்போதும், தனது வாழ்நிலைக்கு எதிரான அழித்தொழிக்கப்பட வேண்டிய கருத்து இது என்பதைஅறியாமல் கை தட்டிடும் ஒடுக்கப்பட்ட இளைஞர்களின் மூளையை தன் வயப்படுத்தும் ஆரிய சூழ்ச்சியாகவே இது சதி செய்கிறது.

மனித சமூகம் உலகளவில் கருப்பர், மங்கோலியர், செவ்விந்தியர், வெள்ளையர் என்பதாக அடையாளப்படுத்தப்படுகிறது. உலகம், புவியியல், நிறம், பண்பாடு என்பதான கூறுகளில் மாறுபட்டது.

இந்தியச் சூழலில் நிறம், நிலம், சாதி, மதம், பண்பாடு, கலாச்சாரம், மொழி என்பதான பல்வேறு கூறுகளில் பிரதானமாக பிராமணிய மதம் அனைத்திற்குமான முரணான காரணியாக முதலிடம் வகிக்கிறது.

அனைத்துத் தத்துவங்களையும் உள்வாங்கி தன் வயப்படுத்துவதில் நீழ்ச்சியான போக்கு கொண்ட பிராமணிய மதம், சாதியப் படிநிலை காரணமாகவே நீடித்த நிலை கொள்கிறது.

உலகில் சில இடங்களில் மட்டுமே கருப்பர், வெள்ளையர் அல்லது வேறு இனத்தினர் என்பதான இரட்டை பாகுபாடு மட்டுமே மதம் தவிர்த்த நிலையில் உற்று நோக்க முடியும்.

இந்தியாவில் அக்ரஹாரம் (பிராமண குடியிருப்பு), ஊர் (ஆதிக்க சாதியினர் வசிக்குமிடம்), காலனி (தலித் மக்கள் வசிக்குமிடம்) என்பதான வாழ்விடம் கிராமங்கள் தோறும் கட்டாய கட்டமைப்பாக இருக்கிறது.

சில இடங்களில் மூன்றும் அதற்கு மேலும் வாழுமிடங்கள் வர்ணங்களுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டுள்ளது. மனிதர்களில் பெயர் கூட மனு விதிகள் படியே நிலவுகிறது.

A, B என்று பிரிக்கப்படும் சூழலில் சாதியே ஒழிந்துவிடும் என்பது கற்பனையான வாதம், தலித் காலனியை அப்படியே ஆதிக்கச் சாதி அருகில் இருத்தி விடுவது சாத்தியமானதுதானா?



படிப்பகம்

www.padippakam.com

முனுசாமி, முனியாண்டி, முனியம்மா, மூக்கா என்பதான பெயர்கள் குறிப்பிடும்போது கணேஷ், கண்ணன், கௌசல்யா, காயத்திரி என அதன் வர்ணத்தில் புலப்படுத்துவதிலிருந்து மாற்று ஏற்பாடு என்ன?

ஏற்கனவே தமிழ் பெயர் மீதான பற்றில் பிரதான தலித் இயக்கம் ஒன்று நிலபிரபுத்துவ சமூகத்தின் வெளிப்பாடாக கோயில்களை கட்டி அதன் வெளியே தலித்துகளை தீண்டாமை காரணமாக நிறுத்தி வைத்த மன்னர்களின் பெயரை வைப்பது நோக்கிய நிலையில் இருக்குமோ?

தலித் சமூகத்தில் ஒதுக்கீடு பெற்று சிறிய நிலையில் வளர்ந்தவர்கள் ஐந்து சதவீதத்திற்கும் குறைவு. அரை நூற்றாண்டு காலத்தின் தொய்வான வளர்ச்சி இது. ஒதுக்கீட்டில் பொருளாதார வளர்ச்சி மட்டுமே அளவுகோல் அல்ல. கல்வி, கலாச்சார வளர்ச்சி மட்டமும் அடங்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக முதலிடத்தில் கல்வியில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட ஆரியர்களின் கலாச்சார மூளை வளர்ச்சியும், இரண்டு தலைமுறைக்கும் குறைவான காலஅளவில் அறிவை நுகரும் தலித்துகளின் அறிவு நுட்பமும் அதிக பின் தங்கிய நிலையில் இருப்பது இயல்பானது. (மரபியல் ரீதியான பின்னடைவு அல்ல)

தலித்துகளுக்கிடையேயும் இன்றும் அருந்ததியர், தோல் தொழிலில் ஈடுபடுவோர் இடையே அறிவை நுகரும் வாய்ப்பு குறைந்த நிலையில் இருப்பது உண்மை.

சமீபத்தில் தொழில்சார்ந்த வளர்ச்சியில் தங்களை தகவமைத்துக்கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களில் உயர்ந்து நிற்பவர்களின் குழந்தைகள் மட்டுமே முழுவதுமான ஆங்கில, விஞ்ஞான தொழில்நுட்ப அறிவை பெறமுடிகிறது.

அதிலும் புலம் பெயர்ந்த தலித் நிலை அங்கிருக்கின்ற சாதிய படிநிலைகள் அப்படியே நீடித்து, அங்கும் சாதிய பாகுபாடு தொடர்கிறது.

எனினும் அவர்களது கலாச்சார அளவுகோலும் இந்தியாவிலிருக்கும் தலித்துகளில் உயர் நிலையிலிருப்பவர்களுக்கும் வேறுபாடுகள் இருக்கத்தானே செய்கிறது.

இன்றும் இந்திய தலித்துகள் படைக்கின்ற தலித் இலக்கியத்தை, சொல்லாடல்களை மேல்தட்டு தலித்தின் அடுத்த தலைமுறைகள் முகச்சுழிப்போடு தானே அணுகமுடிகிறது.

இத்தனை கூறுகளிலிருந்து தலித்துகளிடையே கூட கலாச்சார வேறுபாடுகள் முரண்பட்ட நிலையில் இருக்கிறது. அதிலும் சமீபகாலமாக தலித் உட்பிரிவுகளிடையே பல இயக்கங்கள் தங்களது விடுதலைக்கான தளமாக உருப்பெற்று வருகின்றன.

இதை தலித் விடுதலைக்கான பின்னடைவான போக்காக மட்டும் கொள்வது முழுவதுமாக சரியல்ல என்றாலும், வெளிவட்டத்திலிருப்பதை விட இவர்கள் தலித்துகளிடையே வேறு ஒரு உட்பிரிவினர் தங்களது சலுகைகளைப் பறித்துக் கொண்டதாகவும், அதன் காரணமாக தாங்கள் உங்களால் ஒடுக்கப்படுகிறோம் என்று உட்பிரிவுகளுக்கிடையே மோதல் போக்குகளை, முரண்பாடுகளை கிளரச் செய்யும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தீராத பகை முரண்பாடாக நிலைத்திட தன்னார்வ குழுக்கள் செய்யும் முயற்சிகளை காலப்போகில் ஒடுக்கப்பட்ட மக்கள் உணர்வார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கவேண்டும்.

அதே வேளையில் தலித் மக்களுக்கான ஒதுக்கீடு ஒவ்வொரு பத்தாண்டுகளும் நீடிப்பதற்காக தலித் மக்களின் ஜனநாயக சக்திகள், தலித் விடுதலையில் அக்கறை கொண்டோர் நாடாளுமன்றத்திற்குள்ளேயும், வெளியேயும் ஒதுக்கீடு மேலும் நீடிக்கவேண்டும் என்பதற்காக தீவிரமாக போராட வேண்டிய நிலையும் உள்ளது.

ஒதுக்கீடு தேவையில்லை, எல்லோரும் சமம் என்பதான கருத்து உயர்ந்து சென்ற சாதியினரின் வாதமாக அனைத்து தளங்களிலும் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது என்பதை, ஒரு கீழான வாய்ப்புக் குன்றிய தலித்தாக நின்று பார்ப்பது அவசியம்.

உண்மையில் நம் அனைவரையும் ஒரே இனத்தில் பிணைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லாதிருந்தும் நாம் அனைவரும் ஒரு சேர பிணைக்கப்பட்டுள்ளோம். ஏனெனில் நாம் அனைவரும் ஒன்றே என்று கூறிக் கொள்ள என்னதான் விரும்பினாலும், நாம் நிச்சயமாக ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டே இருக்கிறோம் என்பதுதான் அண்ணல் அம்பேத்கரின் வாதம்.

மேலும் அதற்கான அளவுகோலை துறை சார்ந்த அதிகாரிகள் நிர்ணயிப்பார்கள் என 'ஜாதியும் அதன் அழிவும்' கட்டுரையில் எழுதியுள்ள திரு. பாலையா அனுபவ ரீதியாக அதிகாரிகள் பற்றி போதிய புரிதல் இல்லாமலேயே எழுதுகிறாரோ என்ற ஐயம் எழுகிறது.

இந்த அரசு அதிகாரிகள்தானே இந்தியா முழுவதும் அரசியல் சட்டப்படி பெற்ற உரிமைகளை மறுக்கின்ற விதமாக தலித் மக்களுக்கு, பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டு இடங்களை நிரப்ப ஆட்கள் இல்லை என்று அந்த நிலையிலேயே வைத்து துரோகம் இழைத்து வருபவர்கள்.

பார்ப்பானுக்கும், ரெட்டிக்கும், முதலிக்கும் ஆதி திராவிடர் என்று போலிச் சான்றிதழ் தந்து பலரை வாழ வைத்து வருபவர்களும் இவர்களில் பலரே.

ஒவ்வொரு சமூகத்தினருக்கும் தனித்தனியே திட்டவட்டமாக ஒதுக்கீட்டை செய்யவேண்டும். அப்போது தான் இடைநிலை இந்துக்கள், பிற்படுத்தப்பட்ட இந்துக்கள், முஸ்லீம்கள் ஆண்டுதோறும் எப்படி முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்பதை நாம் கண்டுகொள்ள முடியும் என்று டாக்டர் அம்பேத்கர் எழுப்புகின்ற வாதம் சாதி மட்டுமல்ல, சிறுபான்மை மக்களின் சமூக முன்னேற்றத்தையும் அறிவது அவசியம் என்பதாக உள்ளது.

1950-இல் அண்ணல் அம்பேத்கர் போராடி



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் சட்ட ஒதுக்கீட்டு உரிமை பெற்ற பின்னரும், அரசியல் சட்டம் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் தந்துள்ள சம வாய்ப்பு உரிமை பறிக்கப்படுவதாக செண்பகம் துரைராஜன் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

அப்போது இந்து நாளிதழ் ஒதுக்கீட்டை எதிர்த்து எழுதியது. உயர்த்தப்பட்ட சாதிகளுக்காக அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் மனுதாரருக்கு ஆதரவாக வாதாடினார். வகுப்புவாரி ஒதுக்கீட்டு சட்டம் அரசியல் சாசனத்திற்கு முரணானது என்பதாக தீர்ப்பு எழுதப் பட்டது. உச்சநீதி மன்றத்திற்கு அரசு சார்பில் செய்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்தது.

பெரியார் தலைமையில் எழுச்சிமிகு போராட்டம் நடைபெற்றது. அப்போதிருந்த பிரதமர் ஜவஹர்லால் நேரு அரசியல் சட்டதிருத்த மசோதா 15 (4) கொண்டு வந்து ஒதுக்கீட்டிற்கு எதிரான உச்சநீதிமன்றத் தீர்ப்பை செயலற்றதாக்கினார்.

அரசியல் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட முதலாவது திருத்தம் இதுதான்.

சமுதாய ரீதியிலும், கல்வி ரீதியிலும் பின் தங்கிய சாதிப் பிரிவினரை முன்னேற்ற எடுக்கும் நடவடிக்கை அடிப்படை உரிமைகளை மீறியதாக கருதப்பட மாட்டாது என்று அந்த அரசியல் திருத்தம் கூறியது.

ஒதுக்கீட்டு உரிமைக்காக 1900-இல் முஸ்லீம் தனித் தொகுதி கேட்பதை ஆதரித்தும், எதிர்த்தும் கிளர்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

1910 - தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மட்டுமல்லாமல் பிராமணர் அல்லாதவருக்கும் வேலை, கல்வி கேட்டு தமிழகத்தில் போராட்டம் நடைபெற்றது.

1916 - பிராமணர் அல்லாதாருக்கு 50 சதம் வேலை ஒதுக்கீடு தரவேண்டும் என காங்கிரஸ் பிரிட்டிஷ் அரசிடம் மனுபோட்டது.

1922 - காஞ்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ஒதுக்கீடு குறித்து தீர்மானம் நிறைவேற்றாததால் அப்போது காங்கிரஸ் செயலாளர் பதவியை துறந்து கட்சியிலிருந்து வெளியேறியவர் பெரியார்.

இவ்வாறான போராட்டங்கள் நடைபெற்றாலும் 1900 முதல் 1936 வரை பத்து சதம் மட்டுமே கல்வி உயர் பதவிகளில் பிராமணர் அல்லாத முஸ்லீம், ஆங்கிலோ இந்தியர், கிருஸ்தவர் பதவிபெற முடிந்தது.

அன்று மகாராஷ்டிர சட்டமன்றத்தின் நீதிமன்றத்திற்குப் பதில் குற்றங்களை விசாரிக்க பஞ்சாயத்து நிர்வாகத்திற்கே அதிகாரம் வழங்கும் மசோதா கொண்டு வரப்பட்டது. அப்போது அண்ணல் எங்களது நிலைமை தனித்தன்மை கொண்டது, பரிதாபத்திற்குரியது. எங்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு. கிராமத்தில் ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டிருக்கும், கிராம சமுதாயத்தின் அங்கமாக நாங்கள் கருதப்படுவதில்லை நாங்கள் கிராமத்தில் வசித்தபோதும் அந்நியர்கள் போலவே நடத்தப்படுகிறோம் என வேதனையாக பல ஆதிக்கச் சாதியினர் சட்டமன்றத்தில் கேலி பேசிய போதும் உறுதியாக கிராம ஆதிக்க நீதி மன்றத்தை எதிர்த்தார்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினை நேற்று தோன்றி நாளைக்கு மறையக் கூடியதும் இல்லை. சில தனி நபர்கள் சம்பந்தப்பட்ட தனிப் பிரச்சினையும் அல்ல.

“நாங்கள் முற்றுகையிடப்பட்ட மக்களைப் போல் வாழ்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள் தம்முடைய உரிமைகளைப் பேசினால் மேல் சாதிக்காரர்கள் தங்களுடைய பொருளாதார ஆயுதத்தை பயன்படுத்தி அவர்களை பழிவாங்குகிறார்கள். நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். விவசாயக் கூலிகளாகக்கூட அவர்களை பயன்படுத்திக் கொள்வதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்நோக்கியுள்ள மற்றொரு துன்பம் பொருளாதார நிலையும் ஆகும்” என அரை நூற்றாண்டுக்கு முன் பீமாராவ் அடைந்த வேதனை இன்று துளியும் மாறிவிடவில்லை.

இந்த ஒதுக்கீட்டு முறை முழுவதுமாக அமல்படுத்தப்பட வேண்டும் என தலித் மக்கள் இன்றும் போராட வேண்டிய நிலை தொடர்கிறது.

1979 மார்ச் மாதம் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு நீட்டிப்பு சம்பந்தமான மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது, ஆதிக்க சாதியினர் எதிர்த்து வாக்களித்தனர். அதிமுக-வின் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்ஜிஆரின் உத்தரவுப்படி பாராளுமன்றத்திற்கே வரவில்லை. ஆர்எஸ்எஸ். ஜனசங்கம் ஒதுக்கீட்டை எதிர்த்தன.

போதுமான வாக்கு கிடைக்காததால் மறுமுறையும் வாக்கெடுப்பு நடத்தி, குறைந்த அளவில் வாக்குகள் பெற்று மசோதா வெற்றிபெற்றது.

தமிழகத்தில் 1979 ஜூலை 2-ந் தேதி பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி, வேலைவாய்ப்புக்கான ஒதுக்கீடு ரூபாய் மூன்றாயிரத்திற்கு அதிகமான வருமானம் உள்ளவர்கள் பொதுவாக ஒதுக்கப்பட்டுள்ள 51 சதவீதத்தில்தான் போட்டியிட வேண்டும் என்ற முடிவு அடிப்படையிலேயே பாராளுமன்றத்தில் அதிமுக ஒதுங்கி நின்றது.

பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடுதானே என தலித்துகள் ஒதுங்கி இருப்பது அடுத்தபடியாக தலித்துகளுக்கும் எதிரானதாக நின்றதை அனுபவம் காட்டுகிறது.

ஒரு தலைமுறையாக அரசு பணியில் இருக்கும், பொருளாதாரத்தில் முந்திய ஒருசில தலித்துகளை முன் வைத்து ஒதுக்கீட்டு உரிமையை தலித்துகளுக்கு பறித்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதையும் சீர் தூக்கிப் பார்க்கும்போது, A, B பிரிவு தற்போது இந்திய சாதியச் சமூகத்திற்கு உகந்ததல்ல.

கணக்கிற்கு வேண்டுமானால் சரியாக இருக்கும். நடைமுறைக்கு ஏற்றதல்ல.

■



படிப்பகம்

www.padippakam.com

# மண்முகம்

(தலித் கலைஞர்களின் குறிப்பேடு)

கலாச்சார சீரழிவுகளைத் துணிந்து செய்யும் பிரபலங்களுக்கு மத்தியில் மண்ணுக்குரிய கலைகளை இன்னும் கலகத் தன்மையோடு மண்வாசனையில் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் தலித் கலைஞர்களின் முகவரிகளைத் தொகுத்து சிறுநூலாக வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

எனவே உங்கள் பகுதிகளில் வசிக்கும் மண்ணின் கலைகளை நிகழ்த்தும் கலைஞர்களின் (பார்ப்பனிய, மேற்கத்திய கலைகளை நிகழ்த்துவோரை அல்ல) முகவரிகளை எழுதி 2005 சனவரி 20-ஆம் தேதிக்குள் எங்கள் முகவரிக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இசைக் கலைஞர்கள் பட்டியலில் பறை (தப்பு), தவில், பம்பை, தமுக்கு, உறுமி, சட்டிமேளம், மேளம், பெரிய மேளம், நகரா, செண்டை, தபேலா, டோலக், மிருதங்கம், உடுக்கை, தாளம், புல்லாங்குழல், நாயனம், ஒத்து, சத்தக்குழல், கொம்பு, தாரை, சங்கு, கிண்டிமணி இன்னும் பகுதிவாரியான மண்ணிசைக் கருவிகளை இசைக்கும் கலைஞர்களையும்,

நடனக் கலைஞர்கள் பட்டியலில் கரகாட்டம், குதிரையாட்டம், ஜிம்லாட்டம், மாடாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், பொய்க் கால் குதிரையாட்டம், ஜிக்காட்டம், கோலாட்டம், கழிலாட்டம், கும்மியாட்டம், குறவன், குறத்தி ஆட்டம், சக்கைகுச்சியாட்டம், சிலம்பாட்டம், காவடியாட்டம், கரடியாட்டம், ராசா ராணி ஆட்டம், மகுடாட்டம், சாமியாட்டம் இன்னும் அந்தந்த பகுதி சார்ந்த தலித் கலைகளை நிகழ்த்துவோரையும், நாடகக் கலைஞர்கள் பட்டியலில் கூத்து, தெருக்கூத்து, பாரம்பரிய நாடகங்கள், வீதி நாடகம் அல்லது தெரு நாடகம், மேடை நாடகம் நிகழ்த்தும் கலைஞர்களையும்

குரலிசைக் கலைஞர்கள் பட்டியலில் தலித் எழுச்சிப் பாடல்கள், கிராமத்துப் பாடல்கள், தெம் மாங்குப் பாடல்கள் பாடும் சமூக மாற்றுக் குரலிசைக் கலைஞர்களையும், இசைத்தாடும் கலைஞர்கள் பட்டியலில் பறையாட்டம், ஜிக்காட்டம், ஜிம்லாட்டம் இன்னும் வட்டார அளவில் கருவிகளை இசைத்துக் கொண்டு ஆடும் கலைஞர்களின் முகவரிகளையும் எழுதி அனுப்பிட வேண்டுகிறோம்.

தொடர்புக்கு

இயக்குநர்
தலித் ஆதார மய்யம்
32, பாரதிதாசன் சாலை
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை - 16
தொலைபேசி : 0452 - 2302 199, 2602 352

## தலித் கலைஞர்கள் குறிப்பேடு

● இசைக்கலைஞர்கள் ● நடனக் கலைஞர்கள் ● நாடகக் கலைஞர்கள் ● குரலிசைக் கலைஞர்கள் ● இசைத்தாடும் கலைஞர்கள்

| வ. எண் | பெயர் / முகவரி தொலைபேசி / அலைபேசி | நிகழ்த்தும் கலை இசைக்கும் கருவி என்ன? | ஒருநாள் ஊதியம் உள்ளூர் / வெளியூர் எவ்வளவு? | நலிந்த கலைஞர்களுக்கான அரசு உதவித்தொகை பெறுபவரா | பயணம் அரசு நிகழ்ச்சி வெளிமாநிலம் வெளிநாடு | பெற்ற விருதுகள் | பிறந்த தேதி வயது அனுபவம் (ஆண்டுகள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |



படிப்பகம்

www.padippakam.com

# திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், மாவட்டங்களில் பழங்குடி இருளர்கள் கட்டிவைக்கப்பட்டு சித்திரவதை

**சம்பவம் 1**

**27.11.2004 மேல்வில்லிவனம் கிராமம் - சேத்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம்**

செஞ்சி வட்டம் வளத்தி அருகேயுள்ள அன்னமங்கலம் கிராமத்தில் தண்டபாணி என்பவருக்குச் சொந்தமான செங்கற் சூளையில் வேலை செய்துவரும் பழங்குடி இருளரான ஏழுமலை (33) த/பெ. வீரப்பன் என்பவர் ருதுவான தன் மூத்த மகள் செந்தாமரையை பார்க்க வேண்டி 27.11.2004 அன்று மாலை தன் சொந்த கிராமமான மேல்வில்லி வனத்துக்கு வந்துள்ளார். ஊர்க்கட்டுப்பாட்டை மீறி இவன் எப்படி கிராமத்திற்குள் வரலாம் என்று சொல்லி அக்கிராம பஞ்சாயத்துத் தலைவர் த. ராமமூர்த்தி உள்ளிட்ட சாதி இந்துக்கள் மேற்படி ஏழுமலையின் இரு கைகளையும் ஒரு மின்கம்பத்தில் கட்டிவைத்து சித்திரவதை செய்துள்ளனர். கருணா, தேசிங்கு போன்றோர் அவரை செருப்பால் அடித்துள்ளனர். சேகர் என்பவரின் மனைவி ஆனந்தி, கருணாநிதி என்பவரின் மனைவி, கிருஷ்ணசாமி என்பவரின் மனைவி சந்திரா ஆகியோர் மேற்படி ஏழுமலையை துடப்பத்தாலும், கல்லாலும் அடித்துள்ளனர். மேலும் அவரை கட்டாயப்படுத்தி பிராந்தி குடிக்கவைத்து கடுமையாக அடித்துள்ளனர்.

ஏர் ஓட்டின கூலி வாங்குவதற்காக வீரப்பன் ஊருக்குள் வந்தபோதுதான் தன் மகன் சித்திரவதை செய்யப்படுவதை பார்த்துள்ளார். பஞ்சாயத்துத் தலைவர் ஊர் மக்களைப் பார்த்து, நமது சொல்லை மீறி மகனை வரவழைத்த இவனைப் பிடித்துக் கட்டுங்கள் என்று கூறியதோடு, சேத்பட்டு காவல்நிலையத்திற்கு அப்பனும் பிள்ளையும் குடித்துவிட்டு கத்தியால் ஊர் சனங்களை மிரட்டுவதாக தொலைபேசியில் புகார் செய்துள் ளார். மேற்படி வீரப்பன் அங்கிருந்து தப்பித்துச் சென்று, தலித் இயக்க அமைப்பாளர் ரவி என்பவர் துணையோடு இரவு 10 மணிக்கு சேத்பட்டு காவல் நிலையம் சென்று புகார் செய்துள்ளார். இதற்குள்ளாக மேற்படி வில்லி வனம் சாதி இந்துக்கள் ஏழுமலையை கைகட்டோடு அடித்துக் கொண்டே காவல் நிலையத்திற்கு இழுத்து வந்துள்ளனர். காவல் நிலையத்தில்தான் ஏழுமலையின் கைக்கட்டு அவிழ்க்கப்பட்டிருக்கிறது. பின்பு மேற்படி ஏழுமலை போளூர் அரசு மருத்துவ மனையில் 8 நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுள்ளார். இது தொடர்பாக திருவண்ணா மலை மாவட்ட காவல் கண் காணிப்பாளருக்கும் 1.12.2004 அன்று புகார் அனுப்பப்பட்டிருக் கிறது.

மேல்வில்லிவனம் ஊர்க்கட்டுப்பாடு

மேல்வில்லிவனம் கிராமத்தில் 200 சாதி இந்துக் குடும்பங்களும், 35 இருளர் குடும்பங்களும் உள்ளன. சுமார் 8 மாதங்களுக்கு முன்பு 11.4.2004 அன்று இருளர் பகுதியில் மேற்படி ஏழுமலை மற்றும் அவர் அத்தை மகன் ஏழுமலை, த/பெ. முனுசாமி ஆகிய இருவருக்கும் இடையில் சண்டை நடந்துள்ளது. இருளர் குடியிருப்பு அருகில் வசிப்பவரும் மேற்படி சண்டையை விலக்கிவிட்டவருமான சேகர், த/பெ. வேலுக் கவுண்டர் என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. சேத்பட்டு காவல் நிலையக் குற்ற எண். 264/04 இ.த.ச. 324, 325, 506(ii). இதில் ஆத்திரம் அடைந்த சாதி இந்துக்கள் இச்சண்டையில் சம்பந்தம் இல்லாத ஏழுமலையின் தந்தை வீரப்பன் என்பவரையும் சேர்த்து புகார் கொடுத்து சிறையில் அடைத்ததோடு, ஊர்ப்பஞ்சாயத்தில் ரூபாய் 50,000 அபராதமும் வசூலித்துள்ளனர். இதோடு மட்டுமில்லாமல் மேற்படி ஏழுமலை எக்காரணம் கொண்டும் கிராமத்திற்குள் நுழையக் கூடாது என ஊர்க்கட்டுப்பாடு விதித்துள்ளனர். அதன்படி, மேற்படி ஏழுமலையும் கடந்த 8 மாதங்களாக வெளிப்படையாக ஊருக்கு வரவில்லை. ஒரு சில தடவை இரவு நேரங்களில் யாருக்கும் தெரியாமல் தன் குடும்பத்திற்கு வந்துபோயுள்ளார். மேலும் இந்த ஊர்க்கட்டுப்பாட்டை மீறக்கூடாது என்பதற்காக மேற்படி வீரப்பன் என்பவர் தனது 2-வது மகன் சமுத்திரம் (24) திருமணத்தை கடந்த 18.11.2004 அன்று அவலூர்பேட்டை கிராமத்தில் வைத்து நடத்தியுள்ளார்.

இடஒதுக்கீட்டுக்காக சித்திரவதை

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு கிராம பஞ்சாயத்தில் தலித்துகளுக்கு இடஒதுக்கீடு கொண்டுவரப்பட்டபோது மேல் வில்லிவனம் பஞ்சாயத்துத் தலைவர் பதவி பழங்குடியினருக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை அறிந்த அக் கிராம சாதி இந்துக்கள் பழங்குடியினரைக் கூட்டி எங்களுக்கு இடஒதுக்கீடு வேண்டாம் என்று எழுதிக்கொடுங்கள் என்று கட்டாயப்படுத்தியுள்ளனர். இதனை எதிர்த்த மேற்படி வீரப்பன் குடும்பத்தினரை சாதி இந்துக்கள் பொது இடத்தில் வைத்து கடுமையாக அடித்து சித்திரவதை செய்துள்ளனர். அப்போது பழங்குடியினருக்கு ஆதரவாக சி.பி.எம். கட்சியினர் வந்த போதும், புகார் கொடுக்க பழங்குடியினர் மறுத்துவிட்டனர். பின்பு சாதி இந்துக்கள் முயற்சி செய்து மேற்படி இட ஒதுக்கீட்டை ரத்துசெய்து விட்டனர்.

**சம்பவம் 2**

**1.12.2004 ஸ்ரீசாமிநகர், சேடப்பாளையம் பஞ்சாயத்து, கடலூர் மாவட்டம்**

ஸ்ரீசாமிநகர் என்ற இருளர் குடியிருப்பில் மணி (30), த/பெ. மாரியப்பன் கூலிவேலை செய்து பிழைத்து வருகிறார். மேற்படி குடியிருப்பு அருகில் மணி படையாச்சி என்பவர் மளிகைக் கடை வைத்திருக்கிறார்.அவர் வீட்டில் அவருடைய கொழுந்தியாள் மகள் (வயது சுமார் 16) தங்கியிருக்கிறாா். இந்தப் பெண்ணுடன் மேற்படி இருளர் குடியிருப்பைச் சேர்ந்த பெருமாள் என்பவருடைய மகன் குமார் சகஜமாகப் பழகி வந்திருக்கிறார். சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ஒருநாள் இரவு மேற்படி குமார் மேற்படி ஸ்ரீசாமிநகருக்கு அருகில் உள்ள சவுக்குத்தோப்பு வழியே வரும்போது அடையாளம் தெரியாத சிலரால் தாக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மணி படையாச்சிதான் ஆள்வைத்து குமாரை அடித்துவிட்டார் என்று மேற்படி பழங்குடி இருளரான மணி சிலரிடம் கூறியுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் 1.12.2004 அன்று மாலை ஏழு மணிக்கு மேற்படி மணி என்ற



படிப்பகம்

www.padippakam.com

இருளரை தன் வீட்டிற்கு வரவழைத்த மணி படையாச்சி, இருளர்கள் முன்னிலையிலேயே அவரது இரு கைகளையும் பின்புறமாக வைத்துக்கட்டி அவமானமாகத் திட்டியுள்ளார். தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு வந்த மணி படையாச்சியின் அண்ணன் ஜெயராம படையாச்சி மணியின் கன்னத்தில் ஓங்கி அடித்துள்ளார். இதில் மணியின் ஒரு கண் கலங்கி விட்டது. மேலும் மணியிடம் அபராதமாக ரூபாய் 101-ஐ வசூலித்துள்ளார். 5.12.2004 இரவு கடலூர் பழைய நகரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.அன்றே கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் புகார் அனுப்பப்பட்டுள்ளது.

**சம்பவம் - 3**

**2.12.2004 பொம்பூர் கிராமம்**
**விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்**

பொம்பூர் கிராமத்தில் இருளர் குடியிருப்பில் திருமதி. கன்னியம்மா (55), க/பெ. ஆறுமுகம் கூலிவேலை செய்து பிழைத்துவருகிறார். 2.12.2004 அன்று உடல் நலம் இல்லாமல் அவர் அருகில் உள்ள வீடூர் கிராமத்திற்குச் சென்று தனியார் மருத்துவரிடம் வைத்தியம் பார்த்துவிட்டு வீடூர் காலனி வழியே திரும்பிவரும்போது, அங்கு வசிக்கும் செங்கற்சூளை மேஸ்திரி வீரமணி, அவர் மனைவி மற்றும் நாட்டாமை கதிர்வேல் ஆகிய மூவரும் கன்னியம்மாவை இழுத்துக் கொண்டுபோய் மேற்படி வீரமணி என்பவரின் வீட்டுத்தூணில் சங்கிலியால் கட்டிப் போட்டுள்ளனர். உன் சின்னப்பொண்ணு எல்லம்மா வந்தால் தான் உன்னைவிடுவேன் என்று கூறிய வீரமணி என்பவர் பொம்பூருக்கு தன் மகன் மூலம் செய்தி அனுப்பியுள்ளார். மேற்படி எல்லம்மா மற்றும் அவர் கணவர் குமார் இருவரும் மேற்படி வீரமணியிடம் செங்கற்சூளையில் வேலை செய்வதற்காக வாங்கிய முன்பணத்தில் பாக்கி கொடுக்கவேண்டியுள்ளது என்ற குற்றச்சாட்டின் பேரில்தான் மேற்படி கன்னியம்மா கட்டிப்போடப்பட்டுள்ளார். தெருச்சனங்கள் எல்லாம் வேடிக்கை பார்த்துள்ளனர். சிறுநீர் கழிக்க பிற்பகல் 3 மணிக்கு சங்கிலியை அவிழ்த்துவிட்டுள்ளனர். அதன் பின்பும் மேற்படி கன்னியம்மா வீட்டுக் காவலில்தான் வைக்கப்பட்டுள்ளார். அன்று இரவு அவர்களுக்குத் தெரியாமல் தப்பித்து கன்னியம்மா பொம்பூர் வந்துள்ளார். 3.12.2004 மற்றும் 6.12.2004 ஆகிய இரு நாட்கள் காலையிலும் மேற்படி நபர்கள் பொம்பூர் இருளர் குடியிருப்புக்கு வந்துபழங்குடி இருளர்களை மிரட்டி விட்டு சென்றுள்ளனர். இதுதொடர்பாக 4.12.2004 அன்று மாலை விக்கிரவாண்டி காவல் நிலையத்திலும், 7.12.2004 அன்று மயிலம் காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கப் பட்டுள்ளது.

தமிழக அரசுக்கு வேண்டுகோள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கொடுமை இழைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பத்திரிக்கைகளில் அறிக்கை வெளியிட்டு வருகின்றனர். ஆனால், நடவடிக்கை எடுக்கவேண்டிய காவல் அதிகாரிகளோ இதற்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. புகார் கொடுக்கப்பட்டு பல நாட்கள் ஆனநிலையிலும், காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கைகூட பதிவு செய்யாதது மிகவும் வேதனைக்குரியதாகும். இரண்டு வாரங்களாகியும் சேத்பட்டு காவல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் அகில உலக மனித உரிமை நாளான 10.12.2004 அன்று மேல்வில்லிவனம் இருளர் குடியிருப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட சாதி இந்துக்கள் புகுந்து இருளர்களை மிரட்டி கையெழுத்து வாங்கியதோடு, சாதி இந்துக்கள் நிலத்தில் ஆடு மாடு ஓட்டக்கூடாதுஎனகட்டுப்பாடு விதித்துள்ளனர். •

## உடைந்து சிதறிய சமூகத்திற்கு...

■ அன்பாதவன்

உடைந்து சிதறிய என் சமூகத்தை
ஒன்று சேர்க்க யத்தனிக்கிறேன்

நெஞ்சுக்கு நெருக்கமான
எம்பாடல்களினால்...
காற்றும் புன்னகைக்கும்
எம் பழமொழிகளின் செறிவுகளோடு...
காதுகள் ரசித்து சுவைத்த
எம் கதைகளூடாக...

திசைகளின் இண்டு இடுக்குகளில்
சிதறிக் கிடக்கிறதெம் சமூகம்
விரட்டிய சக்திகளின்
பெயர்களும் தெரியாமல்

பெருநகர நடைபாதைகளில்
நகரங்களின் வீதிகளில்
தேசப் படத்தில் பெரும்பகுதியை
அடைத்துக் கொண்டிருக்கும் கிராமங்களில்
முகமும் முகவரியுமற்று
மண்ணின் பூர்வகுடிகள்

அவர்களை இணைப்பதெம்
இன்றைய சமூகக் கடனாகிறது

தேடுதல் சிரமந்தான்
என் கூக்குரல் கேட்குமா...?
தூரங்கள் அதிகந்தான்
இணைப்படுதென் கடமையாக
தூதுப் புறாக்களாகின்றன எமது
படைப்புகள்
•

## நானில்லா நான்

■ எ.மு. இராதா

நானும் விளக்குத்தான்
என்னைத் தூண்டிவிட
தூண்டுகோல் எதற்கென்றெண்ணி
என்னைத் தாங்கியிருக்கும்
தளத்தைப் பார்க்கின்றேன்
அதிரும் படியாய் அடிக்கடி
தாளமிட்டுக் கொண்டுதான் இருக்கிறது
இயற்கைச் சீற்றங்களாய்!
நானும் அதிர்ந்தேன்
தன் 'தலைகணம்' உதிர்த்தேன்
இப்பொழுது அரங்கேற்றி இருக்கும்
என் சுடரைப் பார்!



படிப்பகம்

www.padippakam.com

# சேர - சோழ - பாண்டிய மூவேந்தர்கள் மரபினர் குடும்பர், மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர்

■ முனைவர் குருசாமி சித்தர்

வரலாற்று நூல்களில், தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்பு தொடங்கி கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முதல் கால்பகுதி வரை ஆட்சிபுரிந்த சேர, சோழ, பாண்டிய மூவேந்தர் வம்சத்தினர் பற்றிய செய்திகள் இல்லை. ஆனால் தமிழகத்தில் மராட்டியர் வாரிசுகள், ஆற்காட்டு நவாப்பு வாரிசுகள், தெலுங்கு கட்டபொம்மன் வாரிசுகள் பேசப்படுகின்றனர். தற்போது தமிழ் மூவேந்தர்களும் குடும்பர் குலத்தினர் என்ற செய்தி பழைய கல்வெட்டுக்களிலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது தெரியவருகிறது. குடும்பர் எனும் சொல் பல திரிபுகளில் குடுமி, குடும்பிகன், குடும்பிய குலம், குடுபர், குடுமர், குடுமிச்சி, குடுமியார், குடும்பன், குடும்பி, குடும்மி எனப் பல கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றது.

பழனிச் செப்பேடு

கி.பி. 1995 வாக்கில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 1528-ஆம் ஆண்டைச் சேர்ந்த பழனிச் செப்பேடானது "குடும்ப(னா)ர்கள், பன்னாடிகள், காலாடிகள், மூப்பன், பலகாளென்கிற அய்ந்து வகுப்பும் பன்னீராயிரம் கோத்திரமுடைத்தாகிய தெய்வேந்திர வமிசத்தரனை வோரும்" என தேவேந்திர வம்சத்தார்களை அடையாளப்படுத்துகிறது.

சேரர் குடும்பர் குலத்தினர்

கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் பத்தேரி என்ற நகரத்திற்கு ஆறு கிலோமீட்டர் தென்மேற்கில் உள்ள எடக்கல் மலைக் குகையில் கற்கால ஓவியங்களுக்கு இடையில் உள்ள கல்வெட்டில் "விஷ்ணு வர்ம்ம குடும்பிய குல வர்த்த நஸ்ய விகித" என்று சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம்,

"விஷ்ணுவர்மனின் குடும்பர் குலம் வளர எழுதியது" எனலாம். விஷ்ணுவர்மன் என்பது சேர வேந்தனின் பெயர்.

அதே குகையில் இன்னொரு கல்வெட்டை "கடும்மி புத சேர" என்று வாசித்தனர். கடும்மி என்பதற்குப் பொருள் இல்லை. குடும்மி என்பதுதான் க-வில் உகரத்திற்கான குறி விடப்பட்டு தவறாகக் கடும்மி என்று படிக்கப்பட்டுள்ளது. குடும்மி புத சேர என்று கொண்டால் "குடும்மியின் புதல்வர் சேரர்" என்று தமிழில் பொருள்படும். எனவே சேரர்கள் குடும்பர் குலத்தினர் என்பதை இரண்டு கல்வெட்டுகளும் தனித்தனியாகக் குறிப்பிடுகின்றன.

சோழர் குடும்பர் குலத்தினர்

கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் கடத்தூர் திருமருதுடையார் கோயிலில் உள்ள கோமாறவன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீவீரநாராயண தேவரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 13-14 நூற்றாண்டு) கரைவழி நாட்டு ஊராளி தென்குடும்பரில் சிங்கன் சோழனான இராஜராஜதேவன் கோயிலுக்கு நிலம் தானமாகக் கொடுத்த செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டு தென்குடும்பரான இராஜராஜதேவன் சோழர் வம்சத்தில் வந்தவர் என்று கூறுகிறது.

கோயமுத்தூர் மாவட்டம் சூலூர் அருகிலுள்ள செலக்கிரிசல் எனும் ஊரில் உள்ள கல்வெட்டு குடுமிச்சி சோழ வம்ச அரசி எனக் கூறுகிறது. குடுமிச்சி என்பது குடுமி, குடும்பன் என்பதின் பெண்பாற் பெயர்.

கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் கீரனூர் திருவாகீசுவரமுடையார் கோயில் கல்வெட்டு (தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 5, எண் 278) குடும்பரில் சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளர் கோயிலுக்கு நட்டுவப்புறமாக நிலம் தானம் கொடுத்ததைக் கூறும். குலோத்துங்க சோழ இருங்கோளர் குடும்பர் என்றும் சோழ வம்சத்தினன் என்றும் கூறப்பட்டுள்ளது.

தென்னாட்டுக் கொடும்பாளூரை மையமாகக் கொண்ட கோனாட்டுப் பகுதியிலிருந்து வந்த கொங்குச் சோழர்களான இருங்கோளர் கூட்டத்தினரை, கொங்கு நாட்டுக் குடும்பரிலிருந்து வேறுபடுத்திக் காட்டத் தென்குடும்பர் என்றனர். உத்திரமேரூர் குடும்பு ஆட்சி முறை பற்றிய சோழன் ஸ்ரீவீரநாராயண ஸ்ரீபராந்தகதேவர் காலத்திய கல்வெட்டுக்கள் அந்தச் சோழரை தேவேந்திரன் சக்கரவர்த்தி என்றும் குஞ்சரமல்லன் என்றும் கூறுகிறது. (Archaeological Survey of India - Annual Report 1904-05pp 136-142). எனவே சோழர்கள் மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தவர் என்பது தெரிகிறது.

பாண்டியர் குடும்பர் குலத்தினர்

கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் கடத்தூர் கொங்கவிடங்கேசுவரர் கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் (கி.பி. 1226 & 1233) கீரனூர் முதலி வீரராசேந்திர அனுத்திரப் பல்லவரையரைத் தென்குடும்பர் என்றும் பாண்டிய வம்சத்தினன் என்றும் கூறுகின்றன. மேலும் அவரை யாழ்வல்லான் என்றும் ஆரியன் என்றும் உலகுய்யவந்தான் என்றும் புகழ்கின்றன. வீரராசேந்திர அனுத்திரப் பல்லவரையன் பாண்டிய வம்சத்தினன் என்று கூறப்படுகிறது.

இரண்டாவது கல்வெட்டில் அதே பாண்டியனான வீரராசேந்திர அனுத்திரப் பல்லவரையர் தென்குடும்பர் எனப்படுகிறார். கரைவழிநாட்டு ஏழூரில் இருக்கும் இவர் பொங்கலூர்கால் நாட்டுக் கீரனூர் முதலிகளில் ஒருவராக இருக்கிறார். இரண்டும் பக்கத்து பக்கத்து ஊர்கள். வேள்விக்குடிச் செப்பேடு பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பற்றிக் கூறும். முதுகுடுமி என்பது பழமைவாய்ந்த குடும்பர் குலத்து வேந்தன் எனப் பொருள்படும். அதே வேள்விக்குடிச் செப்பேடு, பாண்டிய வேந்தரை இராசமல்லன் என்றும் குறிப்பிடும். எனவே பாண்டியர்கள் குடுமி, குடும்பர், மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தினர் என்பது பெறப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# தனியார் துறைகளில் இடஒதுக்கீடு

■ தய். கந்தசாமி

தனியார் துறைகளில் இடஒதுக்கீடு கோருவதும் அளிப்பதும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான தல்ல. அது அடிப்படை உரிமைகள் போன்ற ஒன்றுதான் (Quasi - fundamental right). மேலும் பொதுத்துறைகளில் மட்டுமே இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என அரசிய லமைப்பின் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. கூடு தலாக தனியார் துறைகளில் இடஒதுக்கீடு என்பது அர சால் இயலக்கூடிய ஒன்றே. ஆனால் இத்தகைய பெரும் பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து அரசு நழுவிக்கொள்கிறது.

அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங் களை தனியாருக்கு விற்பதாலும் பன்னாட்டு நிறுவனங் களின் வருகையாலும் இடஒதுக்கீடு எனும் சமூக நீதி நடவடிக்கையில் மிகப்பெரிய சரிவு ஏற்பட்டுள்ள துடன், தனியார்மய செயற்பாடுகள் இட ஒதுக்கீட்டை அபகரித்துவிட்டன.

தனியார்துறைகளில் இடஒதுக்கீடு கோரும் வேளை யில் இதுவரையிலான அரசுத்துறைகளில் இடஒதுக் கீடு முழுமையாக நடைமுறைப்படுத்தாமையும் அதிர்ச்சியூட்டுவதாகவே உள்ளது. முதல்நிலை பணி இடங்களில் SC/ST 7 - 8%மும், இரண்டாம் நிலை அரசுப்பணிகளில் 8 - 10%மும், மூன்றாம் நிலையில் 10-11%மும் நிரப்பப்பட்டுள்ளது. ஆனால் நான்காம் நிலை பணிகளில் 25-26% நிரப்பப்பட்டுள்ளதை வைத்து நியாயப்படுத்திவிட முடியாது. ஏனெனில் சந்ததி சந்ததியாக இழிவாகக் கருதப்படும் தொழில்களில் தலித்துகள் மட்டுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள். உதா ரணமாக பம்பாய் மாநகராட்சியில் பணிபுரியும் 37,000 துப்புரவுத் தொழிலாளர்கள் அனைவருமே தலித்துகள்.

இடஒதுக்கீடு என்பது ஏதோ இங்கே இந்தியாவில் மட்டுமிருப்பதாக கருதவேண்டியதில்லை. உலகம் முழுக்க சமூக, அரசியல், பொருளாதார தளங்களில் பின் தங்கியுள்ள மக்களின் சமூக மேம்பாட்டுக்காக Positive discrimination, Comparative plans, Affirmative actions என்ற பெயர்களால் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அதன்படி இங்கே இடஒதுக்கீடு முறையாக நடைமுறைப் படுத்தப்படாவிட்டால் பின் தங்கிய நிலையிலுள்ள தலித்துகள் மைய நீரோட்டத் துடன் கலப்பது கானல் நீராகவே போய்விடும்.

இந்திய பொருளாதார செயல்பாடுகளில் 94% மரபுசாரா துறைகளின் வழியாகவே நடைபெறுகிறது. அதில் 50% விவசாயம் சார்ந்த துறைகளாகும். ஆனாலும் விவசாய நடவடிக்கைகளில் 50%-க்கும் மேல் உள்ள தலித்துகளுக்கு எந்த தொழிலாளர் சட்டமும் எந்த பாதுகாப்பையும் வழங்கவில்லை என்பது மிகப்பெரிய கொடுமையாகும்.

தனியார் துறைகளில் இடஒதுக்கீடு வழங்கப்பட் டால் பொதுத்துறை நிறுவனங்கள் போல நட்ட மடைந்து நலிந்தழிந்து விடும் என சிலர் கூச்சலிடுகிறார்கள். அரசுத் துறைகளில் 10% மட்டுமே வாய்ப்பளிக்கப் பட்டவர்கள் அவற்றை அழித்திருக்க வாய்ப்பில்லை. 90% உள்ளவர்களே அதை செய்திருக்கமுடியும். தகுதி, திறமை பேசும் இவர்கள் இடஒதுக்கீட்டை எதிர்க்க எந்த தார்மீக அடிப்படையும் இல்லை.

இவ்வாறான சூழலை ஆராய்ந்து தேசந்தழுவிய பொருளியல் சீர்திருத்தங்களை பரிந்துரைக்க அர்ஜுன் சென் குப்தா தலைமையில் மத்திய அரசு நியமித்துள்ள குழு அநேகமாக ஒரு மாதத்தில் அறிக்கை அளிக்கும். அதன் பிறகு மத்திய அரசு இவ்விவகாரத்தில் ஒரு நல்ல முடிவை அறிவிக்கும்.

(சென்னைப் பல்கலையில் நடந்த தனியார் துறையில் இடஒதுக்கீடு கருத்தரங்கில் மத்திய திட்டக்குழு உறுப்பினர் திரு. பால்சந்ர முங்கேகர் ஆற்றிய உரையிலிருந்து...)

## அறிவிப்பு

விழி.பா. இதயவேந்தன், அபிமானி, பாரதி நிவேதன், பரிக்கல் சந்திரன் மற்றும் பவானி எழுதிய சிறுகதைகளும், சன்னாவின் தலித் தேசியம் தொடரும், இதர கவிதை-கட்டுரைகளும் இடப் பற்றாக்குறை காரணமாக இந்த இதழில் இடம்பெறவில்லை..அவை அடுத்து வருகின்ற இதழ்களில் வெளியிடப்படும்.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பகுதி

நமது தமிழ்நாட்டில் தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், தருமபுரி, ஈரோடு மாவட்டங்களில் பரவலாக 'தெருக்கூத்து' என்னும் அரிய கலைக்கு உயிரூட்டி வாழ்ந்துவரும் கலைஞர்களின் வாழ்வாதாரம் சிதைந்து வருகிறது. அக்கலைகளும் அழிந்து வருகிறது. அவர்கள் பிரச்சினைகளைக் குறித்து இக் கடிதம் உங்கள் முன் வைக்கப்படுகிறது.

வருடத்தில் மார்கழி தொடங்கி ஆனி வரை அவர்களின் தொழில் மும்மரம். பிறகு கிடைக்கும் கூலி வேலைகளுக்கு செல்கிறார்கள். வருமானம் இல்லை, சொந்த வீடு இல்லை, சமுதாயத்தில் அவர்களுக்கும், அவர்தம் கலைக்கும் சரியான அங்கீகாரம் இல்லை. சரியான படிப்பறிவில்லை. அவர்களின் கலைத்திறமையோ சொல்லிலடங்காது. சம்பந்தப்பட்ட இலாக்காவில் இக்கலைஞர்களுக்கு அரசு அளித்துள்ள சில சலுகைகள் பெற்றுக்கொள்ள அவர்களுக்கான ஒரு அமைப்பு இல்லை.

இந்நிறுவனம் கலை - பண்பாட்டுத்துறை கண்காணிப்பாளர் திரு. பாலகிருஷ்ணன் என்பவரிடமும் மேலும் இயல், இசை மன்ற கண்காணிப்பாளரிடமும் தொடர்பு கொண்டு கோரிக்கைகளை வைத்தும் பலனில்லை. தெருக்கூத்துக் கலைஞர்களுக்காக அரசு அளிக்கும் குறைந்த பட்ச சலுகைகளை யாவது பெற்றுத்தர புதிய கோடாங்கி ஆவண செய்ய வேண்டுமாய் மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மு. ஹரிகிருஷ்ணன், ஏர்வாடி.

விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் ஒன்றியம் சின்னக் கள்ளப்பட்டி கிராமத்தை மய்யமாகக் கொண்டு மாலைப்பள்ளி நடத்தி வருகிறோம். இதில் 65 மாணவ மாணவியர்கள் படிக் கின்றனர். எங்களுக்கு சொந்தக் கட்டிடம் ஏதும் இல்லை. மாலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட உதவ வேண்டுகிறோம்.

பட்டதாரி இளைஞர்கள், சி.க. பட்டி.

ஆணங்கூறான் குச்சிப்பாளையம் சேரியில் வசிக்கும் எங்களுக்கு இலவச மனைப்பட்டாவும் தொகுப்பு வீடும் கட்டித் தர உதவவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இரா. மீனாம்பாள் (மகளிர் சங்கத் தலைவி)
சி.க. பட்டி, விழுப்புரம் மாவட்டம்.

உதவியற்று வாழும் விதவைப் பெண்களான எங்களுக்கு "விதவை உதவிப் பணம்" பெற உதவி செய்ய வேண்டுகிறோம்.

கோ. ஜானகி, சே. ராணி
ஆணங்கூறான்குச்சி பாளையம் (சேரி)

தமிழகத்தில் 25 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இந்த பல்கலைக்கழகங்களில் பணிபுரியும், பல்கலைக்கழகத்தில் பயிலும் SC/ST மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், SC/ST மக்களின் கோரிக்கைகளை அரசுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் எடுத்துச் செல்லும் வகையிலும் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் SC/ST பிரிவு (Cell) அமைக்கப்பட வேண்டுமென பல்கலைக்கழக மாநிலக் குழுவால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. நடைமுறைப் படுத்தலுக்கு உதவிடுமாறு புதிய கோடாங்கியை கேட்டுக் கொள்கிறோம்.

தலித் விடுதலை மனித உரிமை அமைப்பு,
மயிலாடுதுறை.

கடலூர் மாவட்டத்தில் வாழும் ஆதியன் பழங்குடி மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்க வழி செய்யுமாறு வேண்டுகிறோம்.

A. சின்னப்பூங்காவனம் & மு. பெருமாள்.

வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையிலுள்ள அத்தலைஊரில் வாழும் மலையாளி இன மக்களாகிய எங்களுக்கு வீட்டு மனைப் பட்டா கிடைத்திட ஆவன செய்ய வேண்டு கிறோம்.

செல்வி, ஆதிவாசி கூட்டமைப்புத் தலைவி

சேலம் மாவட்டம் கருங்கல்பட்டி கிராமத்தில் நாங்கள் வாழும் நரிக்குறவர் காலனியில் கடந்த ஆண்டு 96 வீடுகள் தீயில் எரிந்துவிட்டன. அதில் 20 வீடுகளுக்கு CSI அருட்பணி திட்டத்தின் சார்பாக ஓடு போட்டுத் தந்துள்ளார்கள். மீதமுள்ள 76 வீடுகளுக்கு ஓடு போட்டுத்தர ஆவண செய்ய வேண்டுகிறோம்.

ப. கணேசன், நரிக்குறவர் சங்கத் தலைவர்.

பழனிமலைப் பகுதியிலும் கொடைக்கானல் வட்டத் திருத்தப்பட்ட பகுதியிலும் புலையன் இனக்குழு மக்கள் 32 கிராமங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகிறோம். 1976-ஆம் ஆண்டில் இந்த புலையன் இனக்குழு மக்கள் S.T. யிலிருந்து S.C. பட்டியலுக்கு மாற்றப்பட்டதால், இவர்களின் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் இவைகளின் எந்தவிதமான அரசுத் திட்டங்களும், உதவிகளும் கிடைக்கவில்லை. வனப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களையும் வனத்துறையினர் வன விலங்கு சரணாலயம் என்ற பெயரில் விவசாயம் செய்து வாழும் இடத்தை விட்டு வெளியேற்றி வருகிறார்கள். வனத்தில் கிடைக்கும் மூலிகை இலை மற்றும் சிறு வன மகசூல் பொருட்களை எடுக்கத் தடையும் விதிக்கிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கு வனப் பொருட்களை குத்தகைக்கு விட்டு வனத்துறையினர் ஆதாயம் பெற்றுக்கொள்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இதனால் எங்கள் வாழ்வு ஆதாரம் பாதிக்கப்பட்டு வாழ் வுரிமையை இழந்து வருகிறோம். எங்களின் பூர்வீக கால உணவு வகைகள் வள்ளிக் கிழங்கு, மலைத்தேன், வனத்தில் கிடைக்கும் பழங்கள், கீரை இவைகள்தான். அதன் பின் சிறு விவசாயம் செய்து தினை, கேப்பை, சாமை போன்ற பயிர் களை விவசாயம் செய்து வாழ்ந்து வந்தோம். அந்த நிலங் களையும் தற்போது வனத்துறையினர் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். இதனால் எங்களிடம் இருந்த நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளோம். S.T. பட்டியலில் 1976-இல் உள்ளபடி எங்களை ஐந்தாவது அட்டவணைப் பட்டியலில் சேர்த்திட வேண்டும்படி மிக பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆர். நாகராஜன், பழனிமலை ஆதிவாசிகள் சங்கம்

கடந்த 1884-இல் இந்திய அரசால் பழங்குடியினர் ஆகிய எங்களுக்கு விவசாய நிலங்கள் நிபந்தனை அடிப்படையில் வழங்கப்பட்டன. இதில் முக்கிய நிபந்தனையானது எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களை எக்காரணத்தைக் கொண்டும் பழங்குடியினர் அல்லாதவர்கள் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்பது. இந்நிபந்தனை முற்றிலும் மீறப்பட்டுவிட்டதால் நிலமீட்பு பிரச்சினைக்காக நாங்கள் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லாத காரணத்தால் 08.11.2004 அன்று எங்களது ஏழு ஊர்கள் (1. சேனூர் கோக்கால், 2. கொல்லிமலை, 3. குந்தா கோத்தகிரி, 4. திருச்சிகடி, 5. கோத்தகிரி, 6. கீழ்கோத்தகிரி,7. கூடலூர்) சார்பாக ஒரு நாள் உண்ணா விரதப் போராட்டம் நடத்தினோம். இந்த போராட்டத்தினை கவனத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து சுமூகமாக விரைவில் முடித்தருவார் என்று நம்புகின்றோம். மேலும் தாமதம் ஏற் பட்டால் எந்தவித முன் அறிவிப்பும் இல்லாமல் எங்களது சமூகத்தினர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அலுவலகம் முன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம் என் பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

கோத்தர் பழங்குடியின பொதுமக்கள்,
நீலகிரி மாவட்டம்.

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் பாலக்கோடு, பெண்ணகரம், டெங்கனிகோட்டை, ஓசூர் வட்டங்களில் உள்ள குரிச்சான் இன மக்களுக்கு (ST) சாதிச் சான்று பெறுவது குதிரைக் கொம்பாக இருக்கிறது. 10, +2, B.A., B.Sc., படித்தவர்கள் சாதிச்சான்று இல்லாததால் வேலைக்குப் போக இயலாமல் வீட்டிலேயே உள்ளார்கள். இதனால் நீங்கள் எங்கள் இன மக் கள் மீது கருணை வைத்து தயவுசெய்து தகுந்த நடவடிக்கை எடுத்து எங்கள் இன மக்களுக்கு (குரிச்சன்) சாதிச்சான்று கிடைத்திட உதவிடுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழ்நாடு குரிச்சன் சங்கம், பெண்ணகரம்.

■ க. ஜெயபாலன்

# தீட்சைபூமி

## குறும்படம்

இந்தி எழுத்தாளர் பிரேம்சந்த் பற்றியும், சந்திரசேகர ஆசாத் பற்றியும் குறும்படங்கள் சில மாதங்களுக்கு முன் சென்னை திரையரங்குகளில் திரையிடப்பட்டன. இவ்வகையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு குறும்படமே 'தீட்சை பூமி' என்பதாகும். பிஆர். அம்பேத்கரைப் பற்றிய இப் படம் சில சிறப்புக்களை உள்ளடக்கியிருக்கிற தெனலாம்.

திரைப்படப் பிரிவின் தயாரிப்பான இப்படம், அம்பேத்கர் பௌத்த மதத்திற்கு மாறிய இடத்தை தீட்சை பூமியாக மக்கள் கொண்டாடுவதில் தொடங்குகிறது. ஓவியக் காட்சிகளும், உண்மை வாழ்க்கைப் பதிவுகளும் (Stock shots) கலந்து அம்பேத்கரின் வாழ்க்கை சொல்லப்பட்டிருக்கிறது. அம்பேத்கரின் வாழ்க்கையை கவிதை நயமான தமிழில் வர்ணணையாகக் (Voice Over) கொடுத்துள்ளனர்.

அம்பேத்கரின் பள்ளிப் படிப்பு, அமெரிக்கப் பல்கலையில் முனைவர் (Phd.) பட்டம் பெறுதல், சௌதார் குளப்போராட்டம், வட்டமேசை மாநாடு, அரசியல் சாசனம் படைத்தல், பௌத்த மதமாற்றம், பரிநிர்வாணம் அடைதல், இறுதிச் சடங்கில் நேரு உள்ளிட்டோர் பங்கேற்றல் என்று முக்கிய நிகழ்ச்சிகளை இக்குறும்படம் காட்டுகிறது. சுமார் 20 நிமிடங்கள் ஓடக்கூடிய இப்படத்தின் சிறப்பம்சம் அம்பேத்கர் வாழ்ந்த காலத்தின் அரிய பதிவுக் காட்சிகளை உள்ளடக்கியிருப்பதேயாகும்.

அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளும் செயல்பாடுகளும் மட்டுமே சமூகத் தளத்தில் விழிப்புணர்ச்சி ஊட்டக்கூடியவை என்ற வகை யில் இப்படம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட் டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



தாங்கள் புதிய கோடாங்கியின் சார்பாக பழங்குடியினரின் மாத இதழ் ஆரம்பிப்பதற்காக ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்தீர்கள். தற்சமயம் இதழ் ஆரம்பிப்பதற்கான வேலைகளில் 'பழங்குடியினரின் வரலாறும் வாழ்க்கை பாரம்பரிய முறைகளும்'என்ற தொகுப்பாய்வும்,'தற்போதைய சூழ்நிலையில் பழங்குடியினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் தீர்வுக்கான நடை முறை செயல்பாடுகளும்' பற்றிய ஆய்வும் தயாரிக்கப்பட்டு அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. காரணம் ஆய்வு செய்த விவரங்களை பத்திரிக்கை வடிவமைக்கத் தேவையான பொருளாதார பின்னடைவு இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இருப்பினும் கூடிய விரைவில் பழங்குடியின மாத இதழுக்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு இதழ் வெளியீட்டு விழாவிற்கான திட்டமிடல் கூட்டத்திற்கான தகவலை தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

லீலாவதி,
தமிழ்நாடு பழங்குடியினர்
மற்றும் தலித் அமைப்புக்களின்
கூட்டமைப்பு, மூலையாறு.

அக்டோபர் மாத புதிய கோடாங்கி இதழ் மெருகுடனே காணப்படுகிறது. அட்டைப்படத்தின் மேல் செதுக்கிய வாக்கியங்கள் ஒரு கேள்வியாக அமைந்திடாமல் தலித் விடுதலைப் போராட்டத்திற் குரிய பதிலாகவே அமைந்திருக்கிறது.

புதிய கோடாங்கிக்கு புதுச்சேரியின் 'கரிசல் கட்டளை' சார்பில் இந்த ஆண்டின் சிறந்த விருது கிடைத்தமைக்கு எங்களின் மனம் மகிழ்ந்த வாழ்த்துக்கள். இது எழுத்தாளர்களுக்குக் கிடைத்த புதிய ஊட்டச் சக்தியாகும்.

தமிழ்மகன், மேட்டூர்.

வணக்கம். அமெரிக்க தலைநகர் வாசிங்டனில் இருந்து மயிலாடுதுறை சிவா எழுதும் மடல்.

தங்களது புதிய கோடாங்கி இதழை இரண்டு மாதங்களாக படித்து வருகிறேன். பல சுவையான கட்டுரைகள் பலவற்றை ரசித்து இருக்கிறேன். இந்த ஆண்டு நடந்த வட அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவை விழாவிற்கு திருமதி சிவகாமி அக்காவைப் பார்த்து பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அக்காவின் தைரியமும், தன்னுடைய கருத்துக்களை மிக ஆழமாக எடுத்து வைக்கும் பாங்கும் என் மனதைத் தொட்டது. அடுத்த ஆண்டு தமிழகம் வரும்பொழுது அக்கா மற்றும் உங்கள் அனைவரையும் சந்திக்க ஆவலாக உள்ளேன்..

கடைசியாக, தலித் மக்கள் எல்லோரையும் போல சுதந்திரமாக, எல்லா விதமான உரிமைகளோடு சமுதாயத்தில் சம உரிமையோடு வாழ வேண்டும். அதற்கு உங்கள் கோடாங்கி இதழ் உதவ வேண்டும்.

திருமதி சிவகாமி அக்காவிற்கும் புதிய கோடாங்கி குழுவிற்கும் எனது பணிவான வணக்கங்கள். நன்றி. வாழ்க உங்களது பணி, வளர்க அதன் புகழ்!!!

மயிலாடுதுறை சிவா.

அன்புடையீர் வணக்கம். ஜெயேந்திரர் கைது பற்றிய கேள்விக்கு 'வெள்ளைத்துரையும், விஜயகுமாரும் அனுப்பப்பட்டிருந்தால் என்னவாயிருக்கும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்' என்று முனிமாவின் பதிலைப் படித்து சிரித்து சிரித்து மகிழ்கிறேன்.

ம. செயபாரதி, மயிலாடுதுறை.

ஒரு கருத்தின்பால் தீர்மானமாகியுள்ள மனிதனை எந்த நிலையிலும் அவனின் தீர்மானத்தில் இருந்து மாற்ற இயலாது. உலகின் வெகு ஜன சந்ததிகளின் யதார்த்த வாழ்க்கை இக்கூற்றின் அமைப்பை ஒட்டியே காலங்காலமாய் நடைமுறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஏதோ மக்களின் அறிவு வளம் வளராத கால கட்டத்தில் ஒரு கபட தர்க்கவாதியின் கூற்று என இதன் மதிப்பின் நிர்ணயம் குறைக்கப்பட்டாலும், இதோ, தற்பொழுது இன்னொரு குற்றச் சந்நியாசியின் இருப்பிடப் பீடம். ஆம், கொடூரமான கொலைக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெகத்குரு (?) ஜெயேந்திர சரஸ்வதி கடந்த 21.11.2004 அன்று இவரை கைது செய்திருப்பது ஏதோ தர்மத்தையே காராகிரகத்திற்கு அனுப்பிவிட்டது போன்ற நோக்கில், அனைத்து செய்தித்தாள்களிலும் வெளியிட்டுள்ள விளம்பரத்தில் அதே அறிவுக்கு "முற்றுப்புள்ளி" வைக்கும் விதமாக கீழ்க்கண்ட வாதத்தை விளம்பரப் படுத்தியுள்ளது.

"ஒரு விஞ்ஞானவயப்பட்ட மனம் எல்லா நடப்புகளுக்கான காரணத்தை தேடித் திரியும். 'காரணத்தின் அடிப்படையிலான இயக்கம்' என்பது விஞ்ஞானத்தின் மாற்றப்பட முடியாத அடிப்படைத் தத்துவமாகும். சில நேரங்களில் விடைகாண இயலாத நிகழ்வுகளின்போது மனம் சலனத்திற்கு ஆட்பட்டு விடும். இதுபோன்ற சூழல்களில் மக்கள் ஜோசியம், மாந்தரீகம், தந்திரம் போன்ற உபாயங்களுக்கு தங்களை ஆட்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்தச் சூழலில் இருந்து விடுபட ஒரே சரியான தீர்வு பிரச்சினையை கடவுளிடம் விட்டுவிட்டு தொடர்ந்து நம்பிக்கையுடனும் பக்தியுடனும் இயங்கி வருவதுதான்." புரிகிறதா? இந்த காவிக்கூட்டம் தன் விஷத்தின் வீரியத்தை எத்தனை நூற்றாண்டுக் காலமானாலும் நீர்த்துப்போகாமல் "காபந்து" செய்துகொண்டு தொடர்ந்து தனிமனித சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்து வருகிறது என்கிற கபட சரித்திரம்.

க. லோகநாதன்



படிப்பகம்

www.padippakam.com




Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்

www.padippakam.com




Postal Regn.No. TN/PMG(CCR)/842/03-05 Registrar of Newspapers for India Regn. No. TNTAM/2001/4926.

படிப்பகம்